ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

2278-7550

# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

ஜூலை- 2017

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC RECOGNISED JOURNAL



| visit us: www.pallavipathippakam.in |

# ஆய்த எழுத்து

பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்

**INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES . ISSN : 2278-7550**

மலர் : 5 | ஜூலை- 2017 | இதழ் : 3



**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

**ஆசிரியர்குழு**

**முனைவர் சி. தியாகராசன்**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**முனைவர் உ. அலிபாவா**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

**முனைவர் சு.அரங்கநாதன்**
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.

**முனைவர் ச. கவிதா**
கற்பகம் பல்கலைக்கழகம், கோவை.

**வெ.ச.சீனிவாசன்**
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**முனைவர் தா.க.அனுராதா**
பி.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி, நாமக்கல்.



## பல்லவி பதிப்பகம்

118,மேட்டூர் சாலை,கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com

**0424 -4562211**
**94422 51549**
**97919 51549**
**89251 45386**

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - *காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.*

*கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.*

ஆய்த எழுத்து – தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013 ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

**1. பொருள்:** சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

**2. அளவு:** எம்.எஸ். வேர்டில் (MS Word),ல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில்(Lining Space), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஆறு பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

**3. முகவரி:** கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரை முடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெற வேண்டும்.

**4. கட்டுரை அனுப்பும் முறை:** கட்டுரையை pallavipublications@gmail.com (Or) ayidhaezhuthu @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

**5.** தனி இதழ் விலை ரூ. 200/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 4 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | ரூ. 800/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம்/ கல்வி நிறுவனங்கள்/ | ரூ. 1000/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 5000/- |
| புரவலர் கட்டணம் | ரூ. 10, 000/- |

**6. கட்டணம் செலுத்தும் முறை:** உறுப்பினர் (சந்தா)/ கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக**(DD)** ஈரோட்டில் மாற்றிக்கொள்ளத்தக்க வகையில் **(Payable at ERODE)** அனுப்பலாம். இணையவழி, **(Net Banking),** அலைபேசி **(Mobile Banking)** வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம். **A/C Name: PALLAVI PATHIPPAKAM. A/C Type: CA, A/C No : 33679969977. Bank: STATE BANK OF INDIA, Sathy Road, Erode -638 011. IFSC : SBIN0016100.**

## பல்லவி பதிப்பகம்

194, கண்ணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011.
பேசி: 0424-2251545, 94422 51549,
97919 51549.
மின்னஞ்சல்: ayidhaezhuthu@gmail.com
pallavipublications@gmail.com

**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் – ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம்(Download) செய்து கொள்ளலாம்.

# பொருளடக்கம்


1. பரமத்திவேலூர் வட்டார, தொட்டிய நாயக்கரின் நடுகல் வழிபாடு

*அன்பழகன்.ப., (மற்றும்) *முனைவர் இரா.மதன்குமார் - 5

2. நரிக்குறவர்களின் வாழ்க்கைச் சுழற்சிச் சடங்குகள் (இறப்பு –மரிக்யூ) திருவாரூர் மாவட்டம்

*மா.கண்ணாயிரமூர்த்தி - 9

3. இரேயூனியன் தீவில் தமிழரும் தமிழும் – ஒரு வரலாற்றுப் பார்வை

*கிருட்டிணம்மா முனிகாடு - 14

4. தமிழ் மரபில் கலையுணர்வு

*முனைவர் மோ.லூர்துமேரி - 21

5. வைரமுத்து சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

*கு.நித்யா - 24

6. ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் சமூகச் சிந்தனைகள்

*ரா.தமிழரசன் - 27

7. ஏறுதழுவுதல்

*முனைவர் கோ. வாசுகி - 30

8. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கதைக்கருக்கள்

*வ. மணிகண்டன் - 34

9. அகத்திணையில் பாணர்

*த.காந்தி கௌசல்யா - 42

10. சு. தமிழ்ச்செல்வி புதினங்களில் காணலாகும் வறுமை நிலை

*நெறியாளர், முனைவர் சி. வாசுகி (மற்றும்) *ஆய்வாளர், மு. வசந்தி 45

11. விளிபு நிலை மனிதர்களின் எதிர்பண்பாடு

*முனைவர் கா. காந்தி - 50

12. கலித்தொகையில் அறச் சிந்தனைகள்

*க. பூங்கொடி - 56

13. வாணிகச் செக்கார்களின் வாழ்வியல் சார்ந்த அறிவியல் முன்னேற்றம்

*ர.பிரியா - 59

14. சங்க இலக்கியத்தில் அருந்ததி நட்சத்திரம்

* பா.ஷியாமளாதேவி - 63

15. ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள்

* M.M.ஷியாமளாவள்ளி - 66

16. இயற்கை பற்றிய இறையன்புவின் புலப்பாடு

*மு.ராஜலெட்சுமி - 69

17. கைக்கிளை

*சா.ஸ்டெல்லா - 73

18. தற்கால தமிழ்ச் சிறுகதைகளில் பண்பாடு எனும் அறிவியல் தொழில் நுட்பம்

*முனைவர் சு. அரங்கநாதன் - 77

19. மருதக் கலியில் பண்பாட்டுக் கூறுகள்

*ஆ.மனோகரன் - 83

20. கர்நாடக இசை வளர்ச்சியில் சபாக்களின் பங்கு

*தி.சங்கர நாராயணன் - 87

21. பாரதியும் பெண்மையும்

*முனைவர் ஆ. அறிவுமொழி - 90

22. முல்லைப்பாட்டும் மனிதநேயமும்

*முனைவர் ப.இராஜேஷ் - 93

23. அற இலக்கியங்களில் கல்வி

*து.விஜயராணி - 96

24. நச்சினார்க்கினியிரின் குறிக்கத்தகுந்த சில இலக்கணக்கூறுகள்:
பத்துபாட்டினை முன்னெடுத்து

*முனைவர் கி. சங்கர நாராயணன் - 99

25. பத்துப்பாட்டில் இயற்கை வளங்கள்

*முனைவர் சி.யோகலாவண்யா - 103

26. அகநானூற்றுப் பாடல்களில் கற்பு நிலை

*முனைவர் பொ.செந்தில்குமார் - 106

27. சங்ககால தொழிற்நுட்பக் கலைச்சொற்கள்

*கா. சௌந்தரராஜன் - 112

28. சைவசித்தாந்த நெறி

*'சித்தாந்த ரத்தினம்' முனைவர் இராம.மோகன் - 116

29. அகிலனும் இலக்கியப் படைப்பும்

*மா. புவனேஸ்வரி - 120

30. மானிடவியல் நோக்கில் ஐங்குறுநூற்றுத் திருமணம்

*தா.ரா.ராமலட்சுமி - 122

31. தமிழ் இலக்கியங்களில் கூத்துகள்

*முனைவர் வீ.ஜோதிமணி - 127

# பரமத்திவேலூர் வட்டார, தொட்டிய நாயக்கரின் நடுகல் வழிபாடு

*அன்பழகன்.ப., *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர் - 21.*

*முனைவர் இரா.மதன்குமார்., *உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம், கோயம்புத்தூர் - 21.*

**முன்னுரை:**

நடுகற்கள், பண்டைய தமிழரின் வரலாற்றுச் சான்றுகளாகத் திகழ்கின்றன. வீர மாட்சியைப் பறைசாற்றுவனவாகவும், 'முன்னோர்கள், மரணத்துக்குப் பின்னும் தம்முடன் இருந்து வழிகாட்டுவர்' என்ற நம்பிக்கையினை வலியுறுத்துவனவாகவும், 'பிறருக்கு உற்ற துணையாக இருத்தல்', 'இன்னுயிர் தந்தும் பிறர் துயர் தீர்த்தல்', 'பிறருக்கு வழிகாட்டியாகப் பண்படுதல்' போன்ற வாழ்வியல் மதிப்புகளைப் பறைசாற்றுகின்ற பண்பாட்டு ஆவணங்களாகவும், நடுகற்கள் விளங்குகின்றன. அவ்வகையில், நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூரிலுள்ள மேலப்பட்டி தொட்டிய நாயக்கரின் நடுகல் வழிபாட்டு மரபுகள் குறித்தும், அவற்றின் வழியான வாழ்வியல் மதிப்பாக்கம் குறித்தும் இக்கட்டுரை ஆய்ந்துரைக்கிறது.

**தமிழகத்தில் நடுகல் மரபு:**

இந்தியாவில் நடுகல் மரபு பழங்காலந்தொட்டே பரவலாக இருந்துவருகிறது. இமாச்சலப் பிரதேசம், குஜராத், மஹாராஸ்டிரம் போன்ற வட மாநிலங்களிலும், தென்னிந்தியாவின் ஆந்திரா, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்களிலும் இவ்வழக்கம் நிலவிவருவதைக் காணலாம். 2008-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற, ஆய்வாளர் கேசவராஜ் அவர்களின் தென்னிந்திய நடுகற்கள் என்னும் நூலில், தமிழகத்தில் 202 நடுகற்களும், ஆந்திராவில் 126 நடுகற்களும், கர்நாடகத்தில் 397 நடுகற்களும் கண்டறியப் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

**நாமக்கல் வட்டார நடுகற்கள்:**

நிலத்தைக் கைப்பற்றுவதன் தொடக்கமாக, ஆநிரைகளைக் கவர்வது, வெட்சிப் போர் எனப்பெறும். ஆநிரைகளை மீட்டல் என்பது, கரந்தைப் போர் எனப்பெறும். தமிழகத்தில், இவ்வகை நடுகற்கள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. தருமபுரி, செங்கம் பகுதிகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ள நடுகல் கல்வெட்டுகள் இச்செய்தியினை உறுதிசெய்கின்றன. நாமக்கல் வட்டாரத்திலிருந்து சேகரிக்கப்பெற்ற இவ்வகையான மூன்று நடுகற்கள், 'வீரக்கல்' என்னும் பெயரில் சேலம் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பெறுகின்றன.

புலியுடன் வேட்டையாடி உயிர்த் துறந்த வீரனின் நினைவாக அமைக்கப்பெற்ற புலி கொல் வீரனின் நடுகல் ஒன்றும் நாமக்கல் வட்டாரத்திலிருந்து சேகரிக்கப்பெற்று, சேலம் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பெறுகிறது. மேற்கண்ட வகையல்லாத, வீரவணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட,

தலைபலி தருதல் என்னும் நவகண்ட நடுகற்களும் வீரருக்குரியதாகத் தமிழ்நாட்டில் பரவலாகக் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. பத்தினிக்கல் என்னும் நடுகற்களும், சதிக்கல் என்னும் உடன்கட்டை ஏறியோரின் நடுகற்களும், பெண்களுக்குரியவையாகத் தமிழகத்தில் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. சாதிக் கட்டுப்பாடுகள் மிகுதியாக பின்பற்றப்பட்ட சோழர் காலத்தில், நடுகல் மரபு சற்றே செல்வாக்குக் குறைந்தது. ஆயினும், இவ் வழக்கமானது, தமது முன்னோரை நடுகல்லாக்கி வணங்குகின்ற மரபாக மக்களிடையே நிலைகொண்டது. அந்நடுகல் இடங்களே, மாளாகோயில் என்னும் பெயரில் இன்றும் பாதுகாக்கப்பெறுகின்றன.

மாளுதலாவது, சாதல். இதிலுள்ள 'மாள்' என்னும் வினையடியானது, செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சச் சொல்லாகி, ஆர் என்னும் விகுதி ஏற்று, 'மாண்டார்' என்னும் சொல்லாக அமைகிறது. நம்முடன் வாழ்ந்து மாண்ட முன்னோர்கள், நம்மைக் காப்பர் என்பது, ஆவி சார்ந்த நம்பிக்கையாகும். இறந்தவர்கள் தெய்வமாக விளங்குகின்ற இடமும் கோயில் என்னும் பெயர் பெற்று, 'மாளா கோயில்' என்னும் பெயர் உடையதாயிற்று எனலாம்.

**நாமக்கல்லில் தொட்டிய நாயக்கரின் நடுகல் கோயில்கள்:**

நாமக்கல்லில் வாழ்கின்ற தொட்டிய நாயக்கர்கள் தமக்குள் முதன்மையான பதினோரு குலப்பிரிவுகளைக் கொண்டுள்ளனர். இக் குலங்களைச் சார்ந்தோரின் நடுகல் கோயில்கள், அவரவரின் குலதெய்வக் கோயில்கள் உள்ள ஊர்களில் அமைந்துள்ளன. இங்குள்ள நடுகற்கள் அனைத்தும், தமது குடும்பத்து முன்னோர்களைத் தெய்வமாக வழிபடுதல் என்னும் அடிப்படையில் அமைக்கப்பெற்றவையாகும்.

**நடுகல் அமைவு விதிகள்:**

அந்தந்தக் குலத்தாரின் குலதெய்வங்கள் உள்ள ஊர்களிலேயே, நடுகல் நடப்பெறுவதும் வழக்கம். சிலருக்கு அவர்கள் எரியூட்டப்பெற்ற சுடுகாட்டிலேயே நடுகற்கள் நடப்பெறுவது உண்டு.

கணவர் முன்பே இறந்திருந்தால் அவரது கல்லுக்கு அருகிலேயே, மனைவிக்கும் நடுகல் நடப்பெறுவது வழக்கம்.

ஒரு குடும்பத்தாரின் நடுகற்கள் அனைத்தும், ஒரே இடத்தில் உள்ளவாறு இடம் தேர்வு செய்யப்பெறும்.

**நடுகல் அமைவு நடைமுறைகள்:**

இறந்தவரை எரியூட்டிய இடத்திலிருந்து சேகரிக்கப்பெற்ற எலும்புகள் மற்றும் சாம்பலுடன், சில நாணயங்களையும் சேர்த்து நடுகல் குழியில் புதைப்பர். நடுகல்லுக்கெனத் தேர்வு செய்யப்பெற்ற கல்லானது, ஆட்டுப்பாலால் தூய்மை செய்யப்பெற்றிருக்கும். எலும்புடன் சாம்பலும் சேர்த்துப் புதைக்கப்பெற்ற இடத்தில் நடுகல்லானது நடப்பெறும். நடுகல்லுக்கு மாலை சூட்டல் முதலானவற்றுடன் தேங்காய், பழங்கள் படைத்தல் முதலான நடைமுறைகளும் நிகழ்த்தப்பெறும். அதன் பின்னர், இறந்தவரின் நினைவாகப் பெண்கள் கூடி, நடுகல்லைச் சூழ்ந்துநின்று அழுவர்.

**தை மாதத்தில் மாளா கோயில் வழிபாடு:**

தொட்டிய நாயக்கர்கள், தைப் பொங்கலன்று நடுகல் வழிபாட்டினைப் பெரு விழாவாகக் கொண்டாடுகின்றனர். பிற சமுதாயத்தினரைப் போன்று, இறந்த நாளை, அல்லது நட்சத்திரத்தைக் கொண்டு முன்னோர்களின் நினைவுநாளைக் கடைபிடிக்கின்ற வழக்கம் இவர்களிடத்தில் இல்லை. பொங்கலன்று மாளா கோயிலிலுள்ள நடுகல்லைத் தூய்மையாக்கி, மாலையுடன் புத்தாடைகளையும் சார்த்தி வழிபடுவர். அவரவர் குடும்பத்து நடுகற்களைச் சூழ்ந்து நின்று பெண்கள் அழுவர். அதன் பின்பு, நடுகற்களுக்கான வழிபாட்டினைப் பூசகர் முன்னின்று நடத்திவைப்பார். அவர், அங்குள்ள அனைத்து நடுகற்கள் மீதும் மஞ்சள் நீரினைத் தெளித்து, வழிபாட்டினை நிறைவுசெய்வார்.

**மஞ்சு விரட்டு:**

நடுகல் கோயிலில் நடத்தப்பெறுகின்ற வழிபாட்டின் நிறைவாக, மஞ்சுவிரட்டு

எனப்பெறுகின்ற காளைவிரட்டு நடத்தப்பெறுவது வழக்கம். இச் சமுதாயத்தார் வாழ்கின்ற ஒவ்வோர் ஊரிலும், ஊருக்கு ஒன்றாகக் காளைகள் வளர்க்கப்பெறுகின்றன. குறித்த நேரத்தில் நடுகல் கோயிலின் மைதானத்தில் வரிசையாக அவை நிறுத்தப்பெறுகின்றன. நடுகல் கோயிலருகே அமைக்கப்பெறுகின்ற எல்லைக்கோட்டினை முதலாவதாகக் கடந்து வருகின்ற காளைக்குப் பட்டம் கட்டுதல் என்னும் வெற்றி விழா கொண்டாடப்பெறும். காளையின் காதினைச் சிறிதே அறுத்து, மாலை அணிவித்து, பட்டம் கட்டப்பெறும்.

காளையுடன், அதன் உரிமையாளருக்குமான மரியாதைச் செயல்பாடுகள் என்னும் வழக்கம், சங்ககாலப் புறத்திணையியலின் வெட்சி,கரந்தைப் போரின் எச்சங்களை நினைவூட்டுகின்ற நடைமுறையாக அமையக்கூடும். குறிப்பிட்ட குழுவினரின் வலிமையும், வெற்றியும் அவர்களது காளையின் வெற்றியால் நிர்ணயிக்கப்பெறுகிறது. 'வீரத்தின் வழியாகக் கூட்டுவாழ்வில் நிலைத்தல்' என்னும் சமூகவியல் நடைமுறைத் தத்துவத்தை இவ்வழக்கம் விளக்குகிறது எனலாம்.

**மேலப்பட்டியில் வீரசின்னு, வீரநல்லு நடுகற்கள்:**

வீரசின்னு மற்றும் அவரது மகன் வீரநல்லு ஆகியோர், மேலப்பட்டியைச் சேந்தவர்கள். வீரசின்னுவின் மகள், நாகம்மாள், தங்கவேல்சாமி என்பவரை மணந்தாள். அதன் பின்னர், வீரசின்னு உட்பட, நாகம்மாள் குடும்பத்தினர் மோகனூர் அருகேயுள்ள மணப்பள்ளி கிராமத்திற்குக் குடிபெயர்ந்தனர். அங்கு சொக்காயி அம்மனுக்குப் பெருந்திருவிழா நிகழ்த்தப்பெற்றது. அதில் கலந்துகொள்வதற்காக நாகம்மாளின் தந்தையும், சகோதரனும் வருகைபுரிந்தனர். சுற்றம் தழுவுதல் என்னும் பண்பாடற்ற, நாகம்மாளின் கணவனால் அவர்களுக்குத் தாங்கொணாத அவமானம் நிகழ்ந்தது. இதைத் தாளாத அவர்கள், மீண்டும் மேலப்பட்டிக்கே குடியேறினர். இதனிடையே, தனது கணவனின் பண்பற்ற பல செயல்களால் நாகம்மாள் மனம் வெதும்பினாள். அவனைப் பிரிந்து, மேலப்பட்டியிலிருந்த தனது தந்தை மற்றும் சகோதரனிடம் அடைக்கலம் புகுந்தாள்.

சிறிதுகாலம் சென்ற நிலையில், மனைவியைப் பிரிந்திருந்த தங்கவேல்சாமிக்கு உடல்நலம் பாதிக்கப்பெற்றது. அதனால், மேலப்பட்டியிலிருந்த தன் மனைவி நாகம்மாளைச் சந்தித்து அவளிடம் ஆதரவு வேண்டினார். கண்ணகி நல்லாளின் மனமொத்த அவள், கணவனை அன்புடன் ஆதரித்தாள். இதைக் கண்டு பொறாத வீரசின்னுவும், வீரநல்லுவும், நாகம்மாளிடத்தில் தீராத சினம் கொண்டனர். தகாத சொற்களால் அவமதித்தனர். நாகம்மாள், அவர்களது சுடுசொற்களால் நிலைகுலைந்தாள். சீரழிந்த தன்மானத்தைச் சீர்செய்ய வேண்டி, தன்னையே நெருப்பிலிட்டு மாய்த்துக்கொள்வதற்குத் துணிந்தாள். ஆறுதலற்றவளாக, வாழவந்தி நாட்டைச் சார்ந்த ஊர்களில் மூன்று மாதங்கள் அலைந்து திரிந்தாள். அங்கிருந்த தம் இனத்தாரிடம் தான் தீயில் பாய்வதற்காக நெருப்பு வேண்டினாள். அங்கிருந்தவர்கள் அதற்கு மறுத்தனர். இருப்பினும், கொண்ட கொள்கையின் உறுதியால், தீயில் பாய்ந்து தன்னுயிரை அவள் மாய்த்துக்கொண்டாள். நாகம்மாள் இறந்த செய்தி கேட்டு, வீர சின்னுவும், வீர நல்லுவும் உயிர் துறந்தனர்.

நாகம்மாளின் உயர்பண்பைப் போற்றும்வகையில் எடுக்கப்பெற்ற சிலையானது, இன்றும் வாழவந்தி குளத்தில் அமைந்துள்ளது. தானும் தெய்வமாகி, தன்னைச் சார்ந்தார்க்கும் தெய்வநிலை தந்துள்ள நாகம்மாளின் மனத்திட்பம், கண்ணகி நல்லாளை நமக்கு நினைவூட்டுவதாக உள்ளது. வீரசின்னு மற்றும் வீரநல்லு ஆகியோருக்கு நடுகல் நட்டு வழிபடுவதை, இன்றும் மேலப்பட்டியில் காணலாம். நாகம்மாளின் கணவன் தங்கவேல்சாமிக்காக நல்லையகவுண்டன்புதூரில் நடுகல் நடப்பெற்றுள்ளது.

**மேலப்பட்டியில் ஈரவல்லன் நடுகல்:**

ஆநிரைகளைப் பேணிய ஈரவல்லன் என்பவர், கூகலூரில் வாழ்ந்துவந்தார். ஆநிரைகளாகிய பெருஞ்செல்வத்துக்காக எதிரிகள் அவரிடத்தில் காழ்ப்புணர்வு கொண்டனர். வயல்வெளியில் அவரைத் தாக்கிக் கொன்றனர்.

ஆனால் அவரோ பெரிதும் போராடி ஆநிரைகளைக் காத்தார். அவரைக் காக்கவேண்டி, பசுவொன்று அவரைச் சுமந்தவாறு, மேலப்பட்டியை நோக்கி வந்தது. இருப்பினும், இடைவழியிலேயே அவர் இறந்தார். அவ்விடத்திலேயே அவருக்கான நடுகல்லும் நடப்பெற்று வழிபடப்பெறுகிறது. இவரது வரலாறு, பண்டைய கரந்தைப் போரினை அடிப்படையாகக் கொண்டுள்ளது எனலாம்.

**முடிவுரை:**

நாமக்கல் மாவட்டம், மேலப்பட்டியில் ஏறத்தாழ 400 நடுகற்கள் உள்ளன. அவற்றுள், பத்தினித் தெய்வ வழிபாட்டை முன்னிருத்துவதாக, நாகம்மாள் என்னும் பெண்ணின் வரலாற்றுடன் தொடர்புடைய நடுகல்லும் ஒன்று. தன்மானம் மிக்க தமிழர்கள், மானத்தையே தமது உயிராகப் போற்றிய மேன்மைக்குச் சான்றாக அப்பெண் உயிர் நீத்த வரலாறு திகழ்கிறது.

பெற்ற மகளுக்குக் களங்கம் ஏற்படுத்திய வீரசின்னுவும், உடன்பிறந்தாளுக்குத் தீமை தேடித்தந்த சகோதரன் வீரநல்லுவும், தமது தவறுணர்ந்து மனம் திருந்தியநிலையிலும், வாழ வகை தேடாமல், தவறுக்குக் கழுவாய் தேடி உயிர்விட்ட நிலையினை மேலப்பட்டியிலுள்ள அவர்களது நடுகற்கள் நினைவூட்டுகின்றன.

கரந்தைப் போரினை நினைவூட்டுகின்ற நடுகல்லின் பின்புலத்தில், பசுக்களின் உயிர்நேயத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வு உள்ளது. ஈரவல்லன் தேனி மாவட்டச் சிற்றூரைச் சேர்ந்தவர் என்றும், பகைவரிடமிருந்து அவரைக் காப்பதற்காக பசுக்கள் அவரை நெடுந்தொலைவு சுமந்து வந்ததாகச் செவிவழிச் செய்தியும் மேலப்பட்டியில் கூறப்பெறுகிறது. மேலப்பட்டியில் ஈரவல்லானுக்கு உரியதாக நடுகல் நடப்பெறுவதற்குக் காரணமாக அமைந்த பசுக்கூட்டத்தின் உயிர்நேயம் போற்றுதற்குரியதாக உள்ளது. இவ்வாறு வாழ்வியல் சார்ந்த ஒழுக்கம், அன்பு முதலான மதிப்புகளை வலியுறுத்துகின்ற முன்னோர்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டுகின்ற பண்பாட்டு ஆவணங்களாக மேலப்பட்டி தொட்டிய நாயக்கரின் நடுகல் வழிபாட்டு மரபுகள் அமைந்துள்ளன.

**களஆய்வு நாள்:** 15-01-2017,

**இடம்:** பரமத்தி வேலூர்.

**தகவலாளர்கள்:**

1. திரு. க. இராமசாமி, வயது: 70, பரமத்தி வேலூர்.
2. திரு மு. பழனிசாமி, வயது: 55, பரமத்தி வேலூர்.
3. திரு சு. முத்துவேல், வயது: 55, பரமத்தி வேலூர்.
4. திருமதி ச. இராசம்மாள், வயது: 65, பரமத்தி வேலூர்.
5. திருமதி ம. பார்வதி, வயது: 60, பரமத்தி வேலூர்.

# நரிக்குறவர்களின் வாழ்க்கைச் சுழற்சிச் சடங்குகள் (இறப்பு –மரிக்யூ) திருவாரூர் மாவட்டம்

*மா.கண்ணாயிரமூர்த்தி, *முனைவர் பட்ட ஆய்வாளர், அகராதியியல் துறை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

தமிழகத்தின் ஆதிகுடிகளாக நரிக்குறவ இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பண்டைய தமிழ்ச் சமூகத்தின் திணை வகைப்பாட்டில் ஒன்றாக குறிஞ்சி நில மக்கள் தம் இன்றைய குறவர்கள். குறவர் இன மக்கள் பல்வேறு பிரிவுகளில் இன்று வாழ்ந்து வருகின்றனர். அவையாவன: உப்புக்குறவர், கறிவேப்பிலைக்குறவர், கேப்மாரிக்குறவர், பச்சைக்குத்திக் குறவர், குஞ்சுக்குறவர், காதுகுத்தி குறவர், அம்மிகுத்திக் குறவர், கூடைமுறம் கட்டும் குறவர், ஊரக்குறவர் வாழும் இட அடிப்படையில் அழகர் மலைக்குறவர், பச்சை மலைக்குறவர், பவழ மலைக்குறவர், மலைக்குறவர், இந்துக்குறவர், நரிக்குறவர், குறவர்கள் எனப் பல பிரிவுகளாகச் சிதறியிருப்பினும் இவர்கள் மலையின மக்களேயாவர்.

குறவர் இன மக்களின் மையத் தொழிலாக மரபுக்கலை பொருளாகப் பண்பாட்டு அடையாளமாகக் கூடை முடைதல் தொழிலைக் கூறலாம். தஞ்சை, திருவாரூர் நகரப் பகுதிகளில் பல்லக்கு செய்யும் வேலையைக் குறவரின மக்கள் மேற்கொள்கின்றனர். திருவிழாக் காலங்களில் தை மாதம் தொடங்கி வைகாசி வரை பல்லக்கு செய்யப்படுகிறது.

பச்சைக்குத்துதல் என்பது இனக்குழுக்களின் மரபுகளில் ஒன்று. இம்மரபு இக்குறவர்களிடம் காணப்படுகிறது. செம்பு, பித்தளைப்பாத்திரங்கள், வாளிகள், இரும்பு வாளிகள் முதலியவற்றுக்குத் தகட்டை வெட்டி அடிபோட்டுச் செப்பனிட்டுத் தருவது போன்ற வேலைகளைக் குறவரின மக்கள் பெரும்பான்மையாகச் செய்து வருகிறார்கள். குடும்பத்துடனோ, தனியாகவோ ஊர் விட்டு ஊரோ, மாநிலம் விட்டு மாநிலமோ சென்று ஈயம் பூசி வாழ்க்கை நடத்துகிறார்கள். காது வளர்த்தல் பணியையும் குறவரின மக்கள் செய்து வந்தனர். மேலும் ஜோசியம் பார்த்தல், குறி சொல்லுதல் என மரபுத் தொழிலையும் செய்து வருகின்றனர். கரகாட்டம், குறவன் குறத்தி நடனம் போன்ற மக்கள் கலைகளிலும் இவர்கள் பங்கேற்றுவருகின்றனர்.

சீலைக்காரி, மதுரைவீரன், பாப்பாத்தியம்மன், பேச்சியம்மன், நரசிம்மன், முனி, அய்யனார் போன்ற தெய்வங்களை இக்குறவரின மக்கள் வணங்கி வருகின்றனர். இவர்களிடம் குலப்பிரிவுகளும் உள்ளன. இதனடிப்படையில் பங்காளி, மாமன், மச்சான் உறவைத் தீர்மானிக்கிறார்கள்.

**நரிக்குறவரின் சமூக அமைப்பு**

நாகரிகம் தொடர்ந்து உயர்ந்து கொண்டே செல்லும் இக்கால கட்டத்தில் மரபு வழிப்பட்ட பண்பாட்டுப் பழக்க வழக்கங்களோடு புதிய சமூக நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் நரிக்குறவர்கள் உள்ளனர். இதனால் இவர்கள் தொழில் அடிப்படையில் மாநில வாரியாகப் பிரித்துள்ளனர் என்றாலும் தெய்வத்தை வழிபடும் முறையில் ஒத்த வகையினைக் கொண்டுள்ளனர்.

1. தமிழ்நாடு – வேட்டையாடுதல், மணி விற்றல்

2. ஆந்திரம் – பலவித மணிவிற்றல், சீப்பு விற்றல்

3. கர்நாடகம் – மணி விற்றல், அரசுப்பணியை பார்த்தல், பலவகையான கைவினைப் பொருட்கள் (பிளாஸ்டிக் பூக்கூடை தயாரித்து விற்றல்)

4. மகாராஷ்டிரம் – காய்கறி விற்றல்

5. மும்பை – பழைய துணிகளை வாங்கி விற்றல்

போன்ற பல்வேறு விதமான தொழில்களைச் செய்து வருகின்றனர். உடை அலங்காலம் மாநிலத்துக்கு ஏற்ப செய்யும் தொழிலுக்கு ஏற்ப மாறுபட்டு அமையும். வேட்டையாடி விற்பவரின் உடைகள் அழுக்குப் பிடித்தும், பழைய துணி, காய்கறி, பிளாஷ்டிக் பூக்கூடை ஆகியற்றை விற்பவரின் உடைகள் தூய்மையாகவும் இருக்கின்றன. எல்லா மாநிலத்திலும் வாசம் செய்யும் இந்த நாடோடிக்கூட்டம் தங்களுக்குள் வாக்ரி என்றே அழைத்துக் கொள்கின்றனர் மற்றவர்கள் தான் இவர்களை ஹக்கி பிக்கி நரிக்குறவன், பாரத்திலோஷ், பிள்ளைகுத்து, அம்மு போன்ற இன்னபிற பெயர்களால் அழைத்து வருகின்றனர். பொதுவாக நரிக்குறவர்களின் சமூகப் பிரிவுகள் தாங்கள் வணங்கும் தெய்வங்களினால் வேறுபடுத்தப்படுவதால் சமூகத்தை அடிப்படையாக வைத்துப்பார்க்கலாம்.

நரிக்குறவர் சமூகத்தில் பின்வரும் பிரிவுகள் உள்ளன.




மேலே கூறப்பட்ட எருமை பலியிடுவோர், ஆடு பலியிடுவோர் ஆகிய இரு பெரும் பிரிவுகள் நரிக்குறவச் சமூகத்தில் உள்ளன. குஜராத்தி, மேவாடோ, டாபி, சேளியோ, ஜோகண் போன்ற ஐந்து சிறு பிரிவுகள் உள்ளன. இந்த ஐந்தையும் சாதிகளாக எடுத்துக்கொள்ளலாம். இந்த ஐந்து சாதிகளைக் கொண்டே உட்பிரிவுகள் காணப்படுகின்றன.

**உட்பிரிவுகள்**




ஒவ்வொரு நரிக்குறவர் கூட்டமும் தாம் வணங்கும் தேவதைகளைக் கொண்டும், பலியிடும் மிருகங்களைக் கொண்டும் வேறுபடுத்தப் படுகின்றனர். வல்லாட்டுகடா என்பது தமது தெய்வத்துக்கு வல்லாட்டுக்கடாவைப் பலியிடுவதைக் குறிக்கும். எருமைக்கடா என்பது தமது தெய்வத்துக்கு எருமைக்கடாவைப் பலியிடுவதைக் குறிக்கும். நரிக்குறவர்கள் முதல் கடவுள் தாதாஜி என்ற பெயரில் சிவனை வணங்கி வருகின்றனர். வல்லாட்டுக்கடா, எருமைக்கடா என்று இரண்டு ஐந்து வகை கால்வழிகளாகப் பிரிந்து ஒவ்வொரு கால்வழியும் சிறுசிறு உட்பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இக்குறவரின் மக்களிடையே வேட்டையாடும் வழக்கம் இன்றளவும் உள்ளது. அணில், பூனை, கீரிப்பிள்ளை, உடும்பு, ஆமை, நரி போன்ற உயிரினங்களை வேட்டையாடி உண்ணுகின்றனர். பூனை வேட்டையைக் குறித்த பழமொழி ஒன்றும் உள்ளது.

**“குறவனுக்கு பூனை, புலவனுக்கு யானை”**

பூனை குத்தும் வழக்கமுள்ள குறவரினத்தைச் சேர்ந்த கணேசன் பூனை குத்துக்குறவர் என்பதற்குப் பின்வரும் கதை ஒன்றைக் கூறினார்.

ஒருமுறை கிருஷ்ண பரமாத்மா பூனைமீது அமர்ந்து தவம் புரிந்து கொண்டு இருந்தார். அப்போது கிருஷ்ணனைச் சோதித்தறிய சிவபெருமான் எலி ஒன்றை ஏவினார். எலியைக் கண்டதும் பூனை எலியைப் பிடிக்க முயன்றது. இதனால் தவம் கலைந்த கிருஷ்ணன் எதிரே

கையைக் காட்டினார். கொம்பு முளைத்த அரக்கர்கள் வந்தனர். பூனையைக் கொன்று தின்ன கிருஷ்ண பரமாத்மா ஆணையிட்டார். அரக்கர்கள் தயங்கி நின்றனர். உடனே கிருஷ்ண பரமாத்மா **“கொன்றாய் பாவம் தின்றாய் போச்சு”** என்றார் பிறகு அரக்கர்கள் பூனையைக் கொன்று சமைத்துண்டனர். அதிலிருந்து பூனைக்குத்தி குறவர் உருவாயினர். **(ச.கணேசன், திருத்துறைப்பூண்டி, வயது.60)**

திருவாரூர் மாவட்டப் பகுதியான திருத்துறைப்பூண்டி, இடும்பாவனம், ஆப்புரக்குடி, ஏறிக்கரை, மன்னார்குடி ஆகிய பகுதிகளில் வாழும் நரிக்குறவ மக்கள் வேட்டையாடும் பழக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் பன்றி வளர்ப்பதும் அப்பன்றியைக் கொன்று இறைச்சிக்கடை நடத்துவதும், அதை உணவாகவும் இக்குறவர்கள் உண்கின்றனர். குறவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ள அரைகுறையான சில பேச்சு வழக்கைக் கொண்டுள்ளனர். இப்பேச்சு மொழி **“குற பாஷ அரை பாஷ”** என்கிறார் நரிக்குறவரினத்தைச் சார்ந்தவர்கள் **(வீ.வடிவேலு, திருவாரூர், வயது-49)** இவ்வாறாகக் இக்குறவரின் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். திருவாரூர் பகுதியில் நரிக்குறவரின மக்களிடம் சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு அவர்களின் இறப்புச் சடங்குகள் இக்கட்டுரையில் விவரிக்கப்படுகின்றன.

### இறப்புச் சடங்கு (மரிக்யூ)

நரிக்குறவ மக்கள் இறந்தவர்களை எரிக்காமல் புதைப்பார்கள். விதையானது மண்ணுக்குள் புதைக்கப்பட்டு மறுவாழ்வு பெறுவது போல இறந்தவர்களை மண்ணில் புதைத்து மறுவாழ்வு பெறச்செய்யும் சடங்குதான் இறப்பு சடங்கு. அதனால் இறந்த மூதாதையரின் பெயர்களை குழந்தைகளுக்கு வைக்கிறார்கள். இறந்த உடலை வைத்து அழுவார்கள். அப்பா இறக்கும்போது பிள்ளைகள் குறிப்பாக மகன் கீழ்கண்டவாறு அழுவான். தன்னுடைய கையறுநிலைய ஒன்றுமில்லாதத்தன்மையை, மிகப்பெரிய இழப்பை தன்னுடைய ஒப்பாரியில் வெளிப்படுத்துவான். தனக்கும் தந்தைக்குமிடையே உள்ள உறவையும், பாதுகாப்பையும், வளமையையும் ஒப்பாரியில் தெளிவுப்பட வெளிப்படுத்துவான்.

**“பைய் காக்ரோ மாமோ சூக்கரிசே**
**பா தாராணுக்ஹோணி கோன் அவுசே**
**கோன் மனா தேக்சே**
**அலா பா மெ ஜெய்ஸ்**
**தூ கொய்நத் வகத் மன கோன் தேச்சே**
**பா சாரபேனே, சாரபேனே கெஜி கோலி ஜாவ்னு**
**பா தூ கொய்நத் வகத் மே கி ஜெய்ஸ்**
**மே சூ க்கரிஸ் – பா, மெகி கெய்ஸ்**
**அநேர மோ தூ பா கஜீகோ ஜலகேய்லா பா”**
**(கொ.கருப்பன்-ஆப்புரக்குடி, வயது-35)**

அண்ணன், தம்பி, மாமா இருந்து எனக்கு என்ன செய்வாங்க. அப்பா உன்ன மாதிரி இனியாரு கிடைப்பாங்க, யாரு என்ன பார்ப்பாங்க. அப்பா நான் எங்கே போவேன்? நீ இல்லாத நேரத்தில் என் குடும்பத்தை யாரு பாப்பா? அப்பா நாலு அக்கா தங்கைகளை எங்கே கொண்டுகிட்டு போவேன்? அப்பா நீ இல்லாத நேரத்தில் நான் எங்கே போவேன்? அப்பா நான் என்ன செய்வேன்? உன்னை இழந்த நேரத்தில் எங்கு செல்வேன்? என்று கூறி மகன் அழுவான்.

சில குடியிருப்புகளில் இறந்த உடலை வைத்து ஆடல் பாடல் கொண்டு மகிழ்ச்சியடைவார்கள். சிலர் இறந்த உடலைச் சுற்றி நின்று வாயிலடித்துக் கொண்டு பெருங்குரலெழுப்புவார்கள். இறந்தவர் ஆவி உலகிற்குள் செல்கிறார் என்பதை இறந்தவரின் மூத்தமகன் சமையலுக்குப் பயன்படும் பானைகளை உடைப்பதன் வழியாக வெளிப்படுத்தி, ஆடிப்பாடி மகிழ்வார்கள். முன்னோர்கள் வளமை, இறப்பு ஆகிய இரண்டோடு தொடர்புடையவர்களாக இருப்பதால் முன்னோர் வழிபாட்டை மங்களமானது என்றும், அமங்களமானது என்றும் கூறுவர். **(பக்தவச்சல பாரதி, தமிழர் மானிடவியல், ப.211)**

நரிக்குறவர்கள் இறந்தவர்களை இழப்பாகக் கருதி இறப்போடு தொடர்புபடுத்தாமல் சொத்து (சாமி சொத்து) போலக் கருதி வளமையோடு தொடர்புபடுத்துகிறார்கள். ஆதலால் தான்

அதிகமான முன்னோர்களை வைத்திருப்பவர்கள் சாமிசொத்து வைத்திருக்கிறார்கள். அதிக சாமி சொத்து வைத்திருப்பவர்கள் வசதி படைத்தவர் என்றும், நரிக்குறவ கூட்டத்தின் தலைவர், பஞ்சாயத்தார் எனவும், மதிப்பு மரியாதை பெற்றவர் என்றும் கருத முடிகிறது. எனவே முன்னோர்களால் இன்று வாழ்கிறவர்கள் வளமையும் அதிகாரமும், ஆளுமையும், மதிப்பு மரியாதையும் பெறுகிறார்கள். திருவிழா, திருமணம் போன்ற மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளைத் தொடங்குவதற்கு முன் முன்னோர்கள் எல்லோரையும் நினைத்து வேண்டி வணங்கி தொடங்குவார்கள். அவர்களுடைய ஆசியும் ஆதரவும் தேவை என்று நரிக்குறவர்கள் கருதுகிறார்கள்.

நரிக்குறவர்கள் பிணத்தைப் புதைப்பதால், **"குரங்கின் பிணத்தையும் குறவன் பிணத்தையும் காணமுடியாது"** என்ற பழமொழி வழக்கத்தில் இருக்கிறது. பிணத்தை புதைத்த இடத்தில் எந்த ஒரு அடையாளமும் வைப்பதில்லை. புதைக்கப்பட்ட இடத்தையும் புனிதமாகக் கருதி எந்த சடங்கும் செய்வதில்லை. அதனால் குறவன் பிணத்தை பார்க்க முடியாது எனக்கூறலாம். ஒருவர் இறந்தவுடன் பஞ்சாயத்தாரிடம் தெரிவித்தபிறகு உறவினர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். இறந்த உடலை இருநாட்கள் வைத்திருந்து ஆணுக்கு வெள்ளைத் துணியையும், பெண்ணுக்கு சேலையையும் கோடியாக கொடுத்து மாலையிடாமல் பிணத்தின் இருபக்கமும் விளக்குகள் ஏற்றி வைத்து ஒன்று கூடி மகிழ்வார்கள் பிணத்தின் மீது மாலை போட்டு மூங்கிலால் அல்லது கட்டையால் கட்டப்பட்ட பாடையில் நீள வடிவில் இரண்டு கோடிகளையும் கட்டி, ஏழு அல்லது ஒன்பது குறுக்கு வடிவிலும் கட்டி அதன்மேல் வெள்ளைத் துணியைப்போட்டு தவறு செய்யாதவராக இருந்தால் பரத் மாலை போட்டு பிணத்தை சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வார்கள். **(கொ.சீனிவாசவர்மா- நரிக்குறவர் இன வரைவியல், ப.138)** பிணத்தின் கால், தலை ஆகிய இரு உறுப்புகளுக்கு கீழ் இரு கற்கள் வைப்பார்கள். இறந்தவனின் மனைவி தாலி கட்டியவனே தாலியை திருப்பி எடுத்துச் செல்ல வேண்டுமென்று தாலியைக் கழற்றி பிணத்தின் மார்பில் வைத்து உறவை முறித்துக் கொண்டு மறுமணம் செய்து கொள்வாள். தாலி கழற்றியவனை **"தாலி தோடிபைக்கோ"** என அழைப்பார்கள் **(ச.கணேசன், திருத்துறைப்புண்டி)** இறந்தவரின் ஆவி மீண்டும் வீட்டிற்கு திரும்பி வராமலிருக்க பாடையை வீட்டிலிருந்து நேராக இடுகாட்டிற்கு தூக்கிச் செல்லாமல் வளைந்து வளைந்து பிணத்தை எடுத்துச் செல்லும்போது பிணத்தின் தலைக்குக் கீழ் உள்ள கல்லை காலுக்கும், காலுக்குக் கீழ் உள்ள கல்லை தலைக்கும் மூன்று முறை மாற்றி வைத்து இடுகாட்டிற்குக் கொண்டு சென்று புதைப்பார்கள். பிணத்தை புதை குழியில் வைத்தபிறகு மூத்தமகன் ஒரு பிடி மண்ணுக்காசும், பங்காளிகள் *மண் மட்டும் எடுத்து* ***"முட்டினு மாட்டி லீஜா"*** என்று சொல்லி போட்டுவிட்டு, குளித்து விட்டு வீடு திரும்புவார்கள். ஆண் இறந்தால் 12 நாட்களுக்கும், பெண் இறந்தால் 11 நாட்களுக்கும், மாமிசம் சாப்பிடமாட்டார்கள். ஆண் இறுதிச்சடங்கு ஆண்களுக்கு 11 நாட்களும் பெண்களுக்கு 10 நாட்களும் நடைபெறும்.

**பூசை**

ஒவ்வொரு நாளும் இறந்தவரின் ஆவிக்காக ஒரு பிடி சோறும் ஒருகுவளை தண்ணீரும் இறந்தவரின் இடத்தில் வைத்து வணங்கி கடைசி நாளில் எல்லோரும் சேர்ந்து ஒரு பிடி சோறு எடுத்து பெரிய இலையில் வைத்து அதன்மீது கறி குழம்பு ஊற்றி, கள், சாராயம் போன்ற மது பானங்களை வைத்து வணங்கிவிட்டு உண்பார்கள். இறந்தவர்கள் பயன்படுத்திய பொருட்களை குழியில் போட்டு புதைத்துவிடுவர். ஆண் இறந்ததால் ஏற்பட்ட தீட்டினைப் போக்க **"சாரரோ அசுனாய் சாரரோ கடாய், சாரரோ டோகிடோ, ஹாதி அசுனாய், காதி பூஜா"** போன்ற சடங்குகளை செய்ய வேண்டும். அவ்வாறு சடங்குகளைச் செய்து தீட்டைப் போக்கிய பிறகு தான் குலதெய்வத்திற்கு பலியிட்டு பூசை செய்யமுடியும்.

**நம்பிக்கைகள்**

இறந்தவர்களின் ஆவி, இருக்கிறவர்களைப் பிடித்துக் கொள்ளாமல் இருக்க காலையிலும், மாலையிலும் கருவாட்டுக்குழம்பு வைத்து சோற்றொடு கலந்து ஒரு பிடி சோற்றை காகத்திற்கும், நாய்க்கும் வைப்பார்கள். இறந்தவர்கள் காகம் அல்லது நாய் வடிவில் வந்து சோற்றை

உண்பார்கள் என நம்புகிறார்கள். இறந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய ஒவ்வொரு நாளும் பால் ஊற்றுகிறார்கள். பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு சாமி மூட்டையை ஊருக்கு வெளியே வைத்து மூன்று கருங்கல்லில் பெரிய பானை வைத்து பொங்கல் வைப்பார்கள். அதோடு ஒன்பது சிறிய பானைகளில் நான்கு சிறிய பானைகளில் கருமாதியின் முதல் நாளிலிருந்து கவிழ்த்துப் போட்டு அவைகளின் மீது சிறிய கற்களை வைப்பதன் வழியாக இறந்தவர்களின் ஆவி தண்ணீர் வழியாக வந்து போய்விட்டதெனக் கருதுகிறார்கள். நரிக்குறவர்களின் வாழ்வில் புதைத்தல் போன்ற நீர் குறியீடு மிக முக்கியமானது. பிறப்புக்கும் வளிமைக்கும் இறப்புக்கும் உரிய காலச் சுழற்சியை நீர் நிறைந்த ஆறுகள் குறியீடாக்குகின்றன. ஜீவ ஓட்டம் என்பது கால ஓட்டத்தோடு ஒப்பிடக்கூடிய ஓர் உருவாக்குறியீடாகும் **(பக்தவபாரதி, தமிழர் மானிடவில், ப.212)** முன்னோக்கிய காலச்சுழற்சியை உருவகமாக்கும் மங்களத்தன்மையோடு நீர் இருக்கிறது. மீதமுள்ள 5 பானைகளில் நான்கு பானைகளை மண்ணில் ஊன்றப்பட்ட கம்பில் கட்டப்பட்டிருக்கும். மீதமுள்ள ஒரு பானையில் நான்கு குச்சிகளை வைத்து அதன்மீது ஒன்பது ரொட்டிகள் வைப்பர். பிறகு ஒரு இலையில் பழவகைகளும் இனிப்பு வகைகளும், எண்ணெய் பலகாரங்களும் வைத்து படைப்பர். இவற்றை நாயை தவிர வேறு யாரும் உண்ணக்கூடாது.

## முடிவுரை

இறந்தோரது ஆவி பல இன்னல்களை விளைவிக்கும் என எண்ணுகின்றனர். நன்மை செய்தவர் சொர்க்கத்திற்கும் தீமை செய்தவர் நரகத்திற்கும் செல்வதாக நம்புகின்றனர். பேய், பிசாசு, மறுபிறவி ஆகியவற்றில் அதிக அளவு நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர். நல்லது செய்தால் சொர்க்கம் (உப்பர்தேவு) செல்வர். தீமை செய்தால் நரகம் செல்வர். நரகத்தில் தீமை செய்தவர்களைச் செக்கு இழுக்கச் செய்தல், சாட்டையால் அடித்தல், சுடு எண்ணெயில் போட்டு வறுத்து எடுத்தல் போன்ற நம்பிக்கைகள் இன்னும் இம்மக்களிடையே நிலவுகின்றன.

# இரேயூனியன் தீவில் தமிழரும் தமிழும் – ஒரு வரலாற்றுப் பார்வை

*கிருட்டிணம்மா முனிகாடு, *முனைவர் பட்ட ஆய்வாளர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

**முன்னுரை**

உலகில் கற்காலம் தொட்டு இன்றுவரை மனிதன் பல்வேறு காரணங்களுக்காக நாடுவிட்டு நாடு சென்று குடியேறுவது இயல்பான நிகழ்ச்சியாகும். மக்கள் குடியேற்றம் உலகளவில் பரப்பினாலும் மிகப் பெருந்தொகையாகத் தென்னிந்தியா பகுதியிலிருந்து குடிபெயர்ந்தோர் கணக்கிடப்படுகின்றனர்.

**“யாதும் ஊரே யாவரும் கேளீர்”** என்ற உயரிய கொள்கையினைப் போற்றி வாழ்ந்து வந்த தமிழர்கள் தற்காலத்தில் அயல்புலத்தில் தொண்ணுற்றுக்கு மேலான நாடுகளில் குடியேறியுள்ளனர். எனவே, உலகத் தமிழர் வரலாற்றில் புலம்பெயர்ந்த தமிழரின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியப் பெருங்கடலில் எரிமலைக் குழம்பினால் உருவாக்கப்பெற்று, இரேயூனியன் மற்றும் மொரீசியசு தீவுகள் இரட்டைச் சகோதரி தீவுகளாக விளங்கும். 17ஆம் நூற்றாண்டில் பிரஞ்சு காலனித்துவ ஆளுமையின்கீழ் அமைந்த இரேயூனியன் தீவுக்குத் தமிழர்கள் கணிசமான அளவில் புலம் பெயர்ந்தனர். அவ்வாறு புலம்பெயர்ந்த அத்தமிழர்கள் இரேயூனியன் தீவைப் புதிய தாயகமாக ஏற்றுக்கொண்டு அயராது உழைத்து அத்தீவு வளர்ச்சிக்குப் பெருந்துணையாகத் திகழ்ந்தனர். இரேயூனியன் தமிழர்கள் புலம்பெயர்ந்த வரலாற்றினை அறியும் தேவையை உணர்ந்து இதனை மக்களிடம் வெளிப்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்குமாகும்.

**இரேயூனியன் தீவுப் பின்னணி**

இந்தியப் பெருங்கடலில் இயற்கை எழில் சூழ்ந்த அழகிய தீவு இரேயூனியன் தீவாகும். புவியியல் மையக் கோட்டிற்குக் கீழ் மஸ்கரீன் (Mascarenes) என்ற தீவுகளின் கூட்டத்தில் அடங்கம் இரேயூனியன் தீவு மடகாஸ்கர் தீவிற்கு வடக்கு 480 கீ.மீ. தொலைவிலும் மொரீசியசு தீவிற்குத் தெற்கு 144 மைல் தொலைவிலும் காணப்படுகிறது. பூர்போன் என்ற பெயர் பெற்று, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்குப்பெற்ற இரேயூனியன் தீவின் பரப்பளவு 2510 சதுர மீட்டர் ஆகும். “சென்ட் டேனி” தலைநகரமாகக் கொண்ட இத்தீவு நான்கு மாவட்டங்களாகப் பிரிந்துள்ளது. இரேயூனியன் தீவு 1947 ஆம் ஆண்டில் கடல் கடந்த பிரஞ்சுப் பகுதியாக மாறிவிட்டதால் அங்குள்ள மக்கள் தனிக் குடியுரிமை பெறாமல் பிரஞ்சு ஆளுமையின் கீழ் இயங்கி வருவதெனக் காணலாம்.

**இரேயூனியன் தீவின் வரலாறு**

இந்தியப் பெருங்கடலில் ஒரு புள்ளி போல் காட்சியளிக்கின்ற இரேயூனியன் தீவு கடல் கடந்த பிரஞ்சு பகுதியாக விளங்கியதால் அதனைப் பற்றி உலகளவில் பலர் அறியாமல் இருக்கின்றனர் என்றார் பேராசிரியர் வி.குமாரசாமி (V. Coumarasamy).

கி.பி.16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடும் மாபெரும் வாணிப ஆற்றல் கொண்டன. இந்தியப் பெருங்கடலில் தீவுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தமக்குள்ளேயே போட்டி போட்டு வந்தன. அவ்வாறு ஆக்கிரமித்து வந்த தீவுகளில் இரேயூனியன் தீவும் ஒன்றாகும். போர்த்துக்கீசியர் என்ற இனத்தவரே முதன்முதலில் கைப்பற்றிய இரேயூனியன் தீவில் தங்கள் ஆட்சியைச் செலுத்தி வந்தனர் என்றார் ஐவன் சாசெ (Ivan Saché). புனிதமான மனிதன் ஒருவரைப் பின்பற்றியே அத்தீவுக்கு சாந்தா அபொலொனியா என்ற பெயரைச் சூட்டினார். ஒரு நூற்றாண்டுக் காலமாக இத்தீவில் ஆட்சி புரிந்த போர்ச்சுக்கீசியர்கள் வீழ்ச்சியுற்ற பின் பிரஞ்சுக்காரர் அத்தீவைக் கைப்பற்றினர். பிரஞ்சு ஆட்சிக்காலத்தில் இரேயூனியன் தீவில் அழைக்கப்பட்ட அடிமைகள் பிற்காலத்தில் தங்கள் ஒப்பந்தம் மறுக்கப்பட்ட காரணத்தினால் வயலில் ஆள் பற்றாக் குறையினால் பிரஞ்சுக்காரர்களின் பார்வை இந்தியா நாட்டின்மீது திரும்பியது. 1827ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் ஆறாம் தேதியன்று பூர்போன் தீவிலுள்ள தனித்த ஆலோசனைக் குழு இந்தியத் தொழிலாளர்களைக் கொண்டு வரத் தீர்மானித்தது. இவ்வாறு 1829 ஆம் ஆண்டில் திரு.டெ.மெலே (DeMelay) என்பவர் தமது ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் ஏழு ரூபாய் ஒரு நிலத் துண்டு தங்கள் வீடுகளைக் கட்டுவற்கான பொருட்கள் ஆடை அளிப்பதோடு தங்கள் சம்பளத்தில் ஒரு பங்கு யானன்(Yanon)ஊரைச் சேர்ந்த தங்கள் குடும்பங்கட்கும் அனுப்பியும், தங்கள் சமயத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை தமக்கு அடிமையில்லாத வாழ்வு அளிப்பதாகக் கூறினர்.

அக்குறிப்பிட்ட காலத்தில் தமிழகத்தில் பல்வேறு கொடும் பஞ்சங்கள் சமூகக் கொடுமைகள் பொருளாதாரச் சுரண்டல் ஆகிய இடித்தல் காரணங்களால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டுத் தங்கள் தாயகத்தின் கிராமப் புறங்களிலிருந்து இரேயூனியன் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாறு தங்கள் தாயகத்தில் துன்பத்துடன் வாழத் தலைப்பட்ட அத்தமிழர்கள் கடல் கடந்த பிரஞ்சு பகுதியாக விளங்கும் இரேயூனியன் தீவிலும் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். எனவே 1828-1830 குடியேற்றுக் காலக்கட்டத்தில் 3211 கூலியாட்கள் ஒரிசாவிலிருந்து பூர்போன் தீவில் குடியேறினர்.

17ஆம் நூற்றாண்டு முற்பட்ட காலத்தில் எந்தக் குடிமக்களுமின்றியும் மக்கள் பார்வைக்குப் படாமலும் பாறைகளின் குவியலாக இரேயூனியன் காட்சியளித்தது. அவ்வாறே 17ஆம் நூற்றாண்டின் இடைப்பட்ட பகுதியில் போர்த்துக்கிசியர் ஆங்கிலேயர் மற்றும் பிரஞ்சு மாலுமிகள் உணவுக்காகவோ தண்ணீருக்காகவோ அத்தீவில் நிறுத்தி வந்தனர் என்று வரலாற்றாசிரியரின் கருத்தாகும்.

1948 ஆம் ஆண்டு முதல் 1860 ஆம் ஆண்டு வரையிலான காலக்காட்டத்தில் தமிழ்க் கூலிகள் பெரும் எண்ணிக்கையாகப் பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய பகுதியிலிருந்து பூர்போன் தீவிற்குப் புலம்பெயர்ந்தனர் என்று கீழ்வரும் அட்டவணையில் காண்க.

| **ஆண்டு** | **ஒப்பந்தக் கூலிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 1848 | 1621 |
| 1849 | 8078 |
| 1850 | 6598 |
| 1851 | 4407 |
| 1852 | 3383 |
| 1853 | 3179 |
| 1854 | 9135 |
| 1855 | 3097 |
| 1856 | 1444 |
| 1857 | 1449 |
| 1858 | 1256 |
| 1859 | 2346 |
| 1860 | 1292 |
| **மொத்தம்** | **47,285** |

மூலம் :**Les Engagés Indiens, p.83**

1874 ஆம் ஆண்டில் லோத் லையன்ஸ்(Lord Lyons) என்ற ஆங்கிலத் தூதுவர் அயல்நாட்டு அமைச்சராகிய மாண்புமிகு லெ துக் டெகாழ் (Le Duc Decazes)என்பவரிடம் கடந்த ஜூலை மாதத்தில் உரோழ் என்ற கப்பல்வழி அழைகக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்களுக்குப் போதிய உடல்நல வசதியின்மையினைக் குறித்துப் புகார் செய்தார். அச்செய்தியைச் செவிமடுத்த ஆங்கிலேய அரசு பிரான்சு நாட்டை விசாரணை செய்ய வற்புறுத்தியது. இதன் விளைவாக 1882 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் 11ஆம் தேதியன்று இந்தியக் குடியேற்றம் நிரந்தரமாகத் தடுக்கப்பட்டது. ஆனால், அது வரைக்கும் மொத்தமாக 1,20,000 தொழிலாளர்கள் தமிழகத்திலிருந்து பூர்போன் தீவிற்கு அழைக்கப்பட்டனர்.

### இரேயூனியன் குடிமக்கள்

16ஆம் நூற்றாண்டில் இரேயூனியன் தீவு கண்டுபிடிக்கப்பட்ட காலந்தொட்டு வாழ்ந்து வரும் மக்கள் பிரஞ்சுக் குடிமக்களாகவே மதிக்கப்படுகின்றனர். அத்தீவில் 2003 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 7,53,813 மட்டுமே. பல்வேறு இனங்கள் சேர்ந்து இத்தீவில் இத்தீவில் வாழ்ந்தாலும் மக்கள் தொகையில் இரண்டாவது பெரிய இனமாகத் தமிழினம் விளங்குகிறது எனலாம். இரேயூனியன் பிரான்சு நாட்டின் பகுதியாக விளங்கிய காரணியால் இரேயூனியன் குடிமக்கள் அனைவரும் பிரஞ்சு குடிமக்களாக ஆக்கப்பட்டனர். இத்தீவில் மக்கள் தொகைக் அனைவரும் பிரஞ்சு குடிமக்களாக ஆக்கப்பட்டனர். இத்தீவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படாததால் இனவாரியான மக்கள் தொகை அறிய முடியாத சூழல் ஏற்பட்டது. எனினும் இந்தியர்கள் சுமார் 25% சீனர்களின் வம்சாவழியினர் சுமார் 3% எனக் கணக்கிடுபவர்கள். மலகாசி, மலபாரிகள் (தமிழர்கள்), சாராபுகள் (zarabes), காதுகள்(zoreilles), காப்பிரிகள்(caffres),கிரியோல்கள்(créoles) ஆகியோரும் அத்தீவின் குடிமக்களாக விளங்குபவர்கள்.

மக்கள் தொகையில் முசுலீம் என்றழைக்கப்பட்ட சாராபு விழுக்காட்டினராக விளங்குவதாகத் தெரிகிறது. 6% விழுக்காட்டினராக விளங்கிய காதுகள் என்பவர்கள். பிரான்சு நாட்டிலிருந்து இரேயூனியன் தீவிற்கு வந்து குடியேறிய மக்களே ஆவர். காப்பிரி (caffres-Africans) கரும்புப் பயிர் செய்வதற்காக ஆப்பிரிக்க நாட்டிலிருந்து வந்த ஆட்கள் எனலாம். மக்கள் தொகையில் கிரியோல் 40 விழுக்காட்டினராதலால் அதன் செல்வாக்கு உணர முடிகிறது. எனவே இன்று பிரான்சு, சீனா ஆகிய நாடுகளிலிருந்து வந்த குடியேறிகளின் கலப்பினமே மலபாரிகள் அங்குள்ள மக்களுடன் இனம், பண்பாடு, சமயம் ஆகியவற்றினால் கலந்து விட்டனர். இன்று மலபாரிகள் தமிழர்களின் வம்சாவளியினராக அடையாளம் காட்டுகின்றனர். அத்தீவில் பிரஞ்சு செல்வாக்கு நிலவியதால் பிரஞ்சு மொழியே அனைத்துச் சூழல்களிலும் கையாளப்பெற்று வருகிறது.

### இந்திய அடிமைகள்

இரேயூனியன் தீவில் 17ஆம் நூற்றாண்டு முதல் இந்தியர்களின் வருகை குறிக்கப்பட்டுள்ளது. அத்தீவின் வளர்ச்சிப் பணிக்காக 1678ஆம் ஆண்டில் பாண்டிச்சேரியில் இயங்கி வந்த பிரஞ்சு கிழக்கிந்திய கம்பெனி போர்ச்சுக்கீசியரின் காலனியாகிய கொஅ (Goa)என்ற பகுதியிலிருந்து பதினான்கு பெண்மணிகள் அத்தீவிற்கு அனுப்பியது. நாளடைவில் பணி ஆற்றுவதற்காக ஆள் தேவையாதலால் 45 இந்திய அடிமைகள் இரேயூனியன் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று எ. பூசர் (A. Boucher) என்பவரின் ஆய்வு வெளிப்படும் செய்தியாகும். பிளாங்கெ டே லா ஹாய் (Blanquet de le Haye)என்பவரின் அரிய முயற்சியினாலும் 1672ஆம் ஆண்டில் மயிலாப்பூர் பக்கத்தில் உள்ள சான் தொம் (San Thome) என்ற இடத்திலிருந்து பதினைந்து இந்தியக் கைதிகள் இரேயூனியனில் அழைக்கப்பட்டனர் என்று ஆர். இராமசாமி லா துர்குவாழ் (La Turquoise) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இரேயூனியன் தீவில் அடிமைகளின் தொகை ஏராளமாக இல்லையெனினும் அவ்வப்போது வாய்ப்பு கிட்டும்போதெல்லாம் சிற்சில அடிமைகளை அனுப்பி வந்தனர் பிரஞ்சுக்காரர்கள். அத்தீவில் சிதறி வாழ்ந்த அடிமைகளின் இடங்களுள் செண்ட் லெ (Saint Leu) ஒன்றாகும். அங்கு 1811 ஆம் ஆண்டில் அடிமைகளின் கிளர்ச்சியால் குற்றம்

சாத்தப்பட்டவர்களில் சில இந்தியர்களும் கணக்கிடப்பட்டனர். இவர்கள் ஐரோப்பியர்களால் பணியாட்களாகக் குடியேற்றப்பட்டதாகத் தெரிகிறது.

## இரேயூனியன் தீவில் தமிழர் குடியேற்றம்

இரேயூனியன் தமிழர் குடியேற்றம் சுமார் முன்னூறு ஆண்டுகள் வரலாறுடையது. கொஅ என்ற பகுதியிலிருந்து பிரஞ்சு ஆட்களுக்குப் பொழுழபோக்குவதற்காக இரேயூனியன் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட இந்தியப் பெண்களுடன் தமிழர் குடியேற்றம் தொடங்கியது என்றார் பியர்மன் லக்பத்தியர் (Firmin Lacpatia).

இரேயூனியன் குடியேற்றத்தை மூன்று பெரும் காலக் கட்டங்களில் அடக்கலாம்

### முதல் கட்டம்

1703 ஆம் ஆண்டில் இரேயூனியன் தீவில் முதலாளிகளின் வேண்டுகோளுக்கிணங்க சூரத், மகே, பாண்டிச்சேரி ஆகிய ஊர்களிலிருந்து வரவழைக்கப்பட்ட இந்திய அடிமைகளின் வருகையினால் இந்தியர்களின் முதல் குடியேற்றம் நிகழ்ந்ததெனலாம். எனினும், 1707 ஆம் ஆண்டில் பாண்டிச்சேரியிலிருந்து துலிவியர் (Dulivier) ஆளுநர் முதல் அடிமைகளை இரேயூனியன் தீவிற்கு அனுப்பினார். ஆனால், சிறு தொகையினராகத் தொடங்கிய அவ்வடிமைகளின் எண்ணிக்கை. 1708 ஆம் ஆண்டில் காப்பி பயிர் அறிமுகப்படுத்திய போது கூடுதலான வேலையாட்கள் தேவைபட்டதால் இன்னும் அடிமைகள் இத்தீவில் அழைத்துச் செல்லப்பட்டனர். 1737 ஆம் ஆண்டு முதல் 1738 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் சுமார் 200 அடிமை இந்தியர்கள் இரேயூனியன் காலனியில் கணக்கிட்டப்பட்டனர். எனினும், 1827, 1828 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ரீவியர் டெ உரோக (Rivière des Roches) மீது பாலத்தைக் கட்டும் பணிக்காகப் பாண்டிச்சேரி ஆளுநர் திரு அரிபாத் (Arifat) சுதந்திர ஆட்களை அழைக்கும் பொறுப்பேற்றார்.

### இரண்டாம் கட்டம்

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் காப்பி, கரும்பு, தேயிலை, ரப்பர் போன்ற பணப்பயிர்களைப் பிரிட்டிஷ், பிரஞ்சு ஆகிய இரு பேரோதிக்க நாடுகள் தங்கள் வசத்திலிருந்த காலனி நாடுகளில் தொடங்கியபோது அந்தந்த வயல்களில் பணியாற்ற, ஏராளமான கருப்பின மக்களை அடிமைகளாக அங்கு அனுப்பின. 1833 ஆம் ஆண்டில் அடிமை ஒழிப்புச் சட்டம் அமுல் செய்யப்பட்டபோது பிரிட்டிஷ், பிரஞ்சு காலனிகளின் ஆட்சியாளர்கள் தோட்டங்களில் வேலை செய்ய ஆட்கள் பற்றாக்குறையினால் இந்தியா நாட்டில் தொழிலாளர்களை நாடினார். இரேயூனியன் தீவு பிரஞ்சு காலனியாக விளங்கியதால் பிரஞ்சு ஆட்சிக்குட்பட்ட இத்தீவிலும் தொழிலாளர்கள் தாய்நாடான தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்த வரத் தொடங்கினர். 1848 ஆம் ஆண்டு முதல் 1849 ஆம் ஆண்டு வரை இக்குடியேற்றம் இரண்டாம் காலக்கட்டத்தில் அதிக அளவில் நிகழ்ந்தது. அப்போது இரேயூனியன் இந்தியா நாடு குறிப்பாகப் பாண்டிச்சேரி பிரஞ்சு ஆளுமைக்கீழ் இருப்பதால் அங்கிருந்து தேவையான கூலி ஆட்கள் கிடைப்பது எளிமையாக இருந்தது. எனவே, இரேயூனியன் தீவை வளமாக்கும் நோக்குடன் அத்தீவுடன் பிரஞ்சுக்காரர்கள் தாம் செய்த ஒப்பந்தத்தின் கீழ் பிரஞ்சு ஆளுமையின்கீழ் இருந்த பகுதிகளான பாண்டிச்சேரி, காரைக்கால், மதராஸ் ஆகிய பகுதிகளிலிருந்து இரேயூனியன் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவ்வாறு இரேயூனியன் தீவில் பெரும் எண்ணிக்கையாகக் குடியேறிய தமிழர்கள் 11,309 எனக் கணக்கிடப்பட்டனர்.

### மூன்றாம் கட்டம்

1954ஆம் ஆண்டில் பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் இந்திய குடியரசுடன் இணைந்த காலத்தே இரேயூயின் தீவில் மூன்றாம் கட்ட குடிபெயர்வு நிகழ்ந்தது. ஆனால், அத்தீவில் இந்தியர்களோடு பிரஞ்சு தமிழர்களும் குடிபெயர்ந்தனர். அக்காலத்தில் குடியேறிய தமிழர்கள் காப்பி, புகையிலை முதலிய தோட்டங்களில் பணியாற்றுவதை ஒழிய தீவின் பொதுப் பணிகளில் ஈடுபடுவதற்காகவும் வாழ்வின் மேம்பாட்டிற்காகவும் புலம்பெயர்ந்தனர்.

## இரேயூனியன் தமிழர்கள்

தமிழகத்தில் வாழத் தலைப்பட்ட தமிழர்கள் தங்கள் புலம்பெயர்வுக்கு முற்பட்ட காலத்தில் அடிமைகள் போல விளங்கினர். அவ்வாறு

வாய்ப்பினைக் கிட்டடியபோது வயிற்றுப் பிழைப்புக்காகவோ தமக்கென நல்வாழ்வு வாழும் காரணத்துக்காகவோ இரேயூனியன் உள்ளிட்ட நாடுகளில் குடியமர்ந்தனர். அத்தமிழர்களில் பலர் இரேயூனின் தீவில் தோட்டத் தொழிலாளர்களின்றி முதலாளிகளின் இல்லங்களிலும் சமையற்காரர்களாகவும் மெய்க்காப்பாளராகவும் மேஸ்திரிகளாகவும் பணியாற்றி வந்தனர். அத்தமிழர்களுள் பலர் அத்தீவின் பண்பாட்டுடன் ஒன்றிக் கலந்யிடது வாழத் தலைப்பட்டபோது தங்கள் தாயகத்திற்குத் திரும்பிச்செல்ல மனமிருக்கவில்லை. அவர்கள் தீவின் குடிமக்களாக மாறி, தீவின் பழக்க வழக்கங்களையும் சமயத்தையும் ஏற்றுக்கொண்டு அமைதியாக வாழ்ந்து வந்தனர். தாயகத்தை விட்டு அந்நிய நிலமான இரேயூனியன் தீவில் குடிபுகுந்த அத்தமிழர்கள் தங்கள் இனப்பண்பாட்டு அடையாளங்களைக் காப்பாற்றத் தவறி விட்டனர். அவர்கள் பிரஞ்சு ஆதிக்கச் சமுதாயமான இரேயூனியன் சமுதாயத்தைச் சார்ந்த வாழ்ந்த வருவதால் தங்கள் பண்பாட்டு அடையாளங்களை இழந்து விட்டதாகத் தெரிகிறது. 18 நூற்றாண்டில் இரேயூனியன் தீவு பிரஞ்சு அரசு வசத்தில் வந்த காரணத்தால் பிரஞ்சு நாட்டைச் சார்ந்த பல்வேறு பிரஞ்சு சட்டங்கள் இங்கும் அமுலாக்கப்பட்டன. தமிழர்கள் இதனால் தத்தம் மொழியையும் இன நலன்களையும் காப்பாற்றுவதில் சிரமம் கொண்டுள்ளனர். அங்குள்ள தமிழர்கள் பிரஞ்சு பண்பாட்டில் முற்றிலும் ஈடுபட்டதன் விளைவாகத் தமிழ்ச் சமுதாயம் ஒரு கலப்புச் சமுதாயமாகவே மாறிவிட்டது. இக்காரணத்தினால் இன்று இரேயூனியன் தீவில் தமிழர்களில் 95 விழுக்காட்டினர் தம் தமிழப் பெயரோடு ஒரு கிறுத்துவப் பெயரை ஏற்றி வருகின்றனர். அந்துவான் சமூகம்பிள்ளை (Antoine Samourgampoullé),எர்வே சிதம்பரம்பிள்ளை (Hervé Sidambarompoullé),லெஓ மாரிமுத்து (Léo Marimoutou), லுயி கந்தசாமி (Louis Candasamy),ஜான் பப்திஸ் சவரியம்மா (Jean Baptiste Savriama),பொல் பொன்னுசாமி (Paul Ponnusamy)மற்றும் பிறரும் தம்மையே கிறித்துவராகக் கருதியதால் கிறித்துவப் பெயரைக் சூட்டி, கிறுத்துவ மதத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தனர். 1870 ஆம் ஆண்டு முதல் 1898 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் 271 தமிழர்களுக்குச் செண்ட் டோனி ஊரிலுள்ள செண்ட் தொமாசு கிறித்துவத் திருச்சபையில் (Chapel of St Thomas) கிறித்தவப் பெயர் சூட்டப்பட்டதாக ஆர். இராமசாமி கூறியுள்ளார்.

**பிரஞ்சுத் தாக்கம்**

இரேயூனியன் தீவுச் சமுதாயம் ஒரு கலப்பினச் சமுதாயமாக விளங்கியதால் அங்கு ஐரோப்பிய, ஆப்பிரிக்க, தமிழ், சீன ஆகிய பல்வேறு பண்பாடுகள் நிலவுவதைக் காணலாம். அங்கு வாழ்தமிழர்கள் உண்ணும் முறை, ஆடை உடுத்தும் முறை திருமண முறை முதலிய அனைத்து முறைகளிலும் பிரஞ்சுத் தாக்கம் உணர முடிகிறது.

இரேயூனியன் தீவில் பிரஞ்சு ஆட்சி தொடங்கிய காலந்தொட்டு இந்றை நாள் வரைக்கும் பிரஞ்சு மொழிக்கம் பண்பாட்டுக்கும் ஓரினமாக்கும் முயற்சிகள் கண்டுணரலாம். இக்காரணத்தினால் இரேயூனியின் தீவில் அதிகமாக மேற்கத்திய சாயல் துறைகளிலும் இடம் பெறுவதாகத் தெரிகிறது. அந்நிலையில் தமிழர்கள் பெரும்பாலான இனமாக வாழும் இரேயூனியன் தீவில் அயல் பண்பாடுகள் பிரஞ்சுப் பண்பாட்டினால் கவரப்பட்டன. தமிழர்களும் பிரஞ்சுக் சூழலில் ஈடுபட்டு, பிரஞ்சு மொழியைப் பேசுவதோடு கிறித்துவத் தாக்கம் தமது அன்றாட வாழ்விலும் தென்படுகிறது. இன்று இரேயூனியன் தீவில் ஐரோப்பியர் செல்வாக்கு அதிகமாக இருப்பதால் தமிழர்களின் அடையாளத்தைக் கண்டுபிடிப்பது சிறிது அரிதாகும்.

**தமிழரின் இன்றைய சமயம்**

இடைக்காலத்தில் இரேயூனியின் தமிழரின் திருமணம், ஈமச் சடங்கு ஆகிய சடங்குகள் கிறித்துவ முறையில் நடந்தது குறைந்து, இப்பொழுதெல்லாம் இந்து சமய முறைப்படி நடப்பது பெருகி வளர்ந்து வருகின்றது. பெண் பிள்ளையும் சந்தித்துப் பழகிய பிறகு, பெற்றோருக்க அறிமுகமாகிய பின்னரே இரு வீட்டினரும் இணைந்து திருமணம் முடித்து வைக்கின்றனர்.

பிறந்த குழந்தைக்கு உரிய காலத்தில் முடியிறக்கித் தெய்வ வழிபாடு நிறைவேற்றுவது வழக்கமாய் உள்ளது. ஆனால், காதுகுத்துதல் வழக்கொழிந்து விட்டது.

**தமிழ்மொழி**

தமிழ் மூதாதையர்கள் இரேயூனியன் தீவில் கால் பதித்தவுடன் தங்கள் தாய்மொழியான தமிழ்மொழியைப் பின்பற்றுவது தடுக்கப்பட்டது. அத்தீவில் பிரஞ்சு ஆட்சி நிலவிய காரணத்தினால் தமிழ் மூதாதையர்கள் தம்மீது விதிக்கப்பட்ட பிரஞ்சு மொழியும் கிறித்துவச் சமயத்தையும் ஏற்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அவர்களின் வழித்தோன்றல்கள் பிரஞ்சு பண்பாட்டில் மிக ஆழ்ந்து பதித்ததால் தங்கள் தாய்மொழியான தமிழ்மொழி அந்நிய மொழியாக மாறிவிட்டது.

1980களில் மொரீசியசில் தமிழ்மொழி விழிப்புக்குப் பிறகுதான் இரேயூனியன் திருக்கோயில்களில் தமிழில், வடமொழியில் வழிபாடு செய்கிறார்கள். அதற்கு முன்பு பிரஞ்சு மொழிதான் இத்தீவில் உள்ள தமிழர்கள் கோயில்களின் ஆட்சி மொழியாக விளங்கியது.

**அன்றாட வழக்கில் வழங்கும் தமிழ்ச் சொற்கள்**

தமிழர்கள் அன்றாட வழக்கில் தாம் பேசி வருகின்ற கிரியோல் மொழியில் தமிழச் சொற்கள் அங்கங்கே புகுத்திருப்பதுண்டு. துறைதோறும் வழங்கும் சில சொற்களின் பட்டியல் கீழ்வருமாறு காண்க:-

| துறைகள் | வழங்கும் தமிழ்ச் சொற்கள் | கிரியோல் மொ வழங்கும் முறை |
|---|---|---|
| | | Cari<br>Larson<br>Massalé |
| | னி<br><br>ல | Moultani<br>Rougaille<br>Kadou<br>Karpoullé<br>aplon |
| உறவுமுறைப் பெயர்கள் | மாமன்<br>பிள்ளை<br>அண்ணன் | Marmin<br>Pilé<br>anin |
| சமயம் | கோயில்<br>செம்பு<br>கரகம்<br>காப்பு<br>தேர்<br>பூசை<br>சாம்பிராணி<br>படையல்<br>சூலம்<br>மாலை | Coilou<br>Sembou<br>Karlon<br>Kap<br><br>Thel<br>Poussé<br>Sanblani<br>Padèl<br>Soulon<br>marlé |
| கலை | வாத்தியார்<br>பாரதம்<br>நாடகம்<br>நாதசுரம் | Vartial<br>Baldon<br>Narlégon<br>Naslon |
| ஆடை | புடவை<br>பொட்டு | Polvé<br>poutou |

அச்சொற்கள் அனைத்தும் தமிழ்ச் சொற்களாக இருப்பினும் பிரஞ்சு ஒலி பெற்று திரிந்து வழங்குவதைக் காணலாம். அச்சொற்களில் சில ஒலியில் விரவி இருப்பதால் அவை யாவும் சொற்கள் எனக் கூறுவது கேள்விக் குறியாக உள்ளது.

**பண்பாடு**

இரேயூனியன் தீவில் இன்று தமிழர்கள் கிறித்துவப் பழக்க வழக்கங்களையும் சமயத்தையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு. பிரஞ்சு பண்பாட்டில் மிகக் குறிப்பிட்ட அளவில் ஈடுபட்டு வாழ்ந்து வருகின்றனர். தமிழர்களில் 50 விழுக்காட்டினர் இரு மதங்களான தமிழும் கிறித்துவமும் பின்பற்றியதால் கிறித்துவ மதத் திருச்சபைக்கும் கோயிலுக்கம் செல்வதுண்டு என்றார் திருவாட்டி அனிக்.

இரேனியன் தீவில் பண்பாட்டுக் கூறுகள் சில மறைந்தொழிந்தன வாழ்வியல் முறையிலும் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றன. கோயில் வழிபாட்டில் தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டாலும் அவர்களிடம் மூடநம்பிக்கைகள் நிறைந்ததால் குடும்ப அளவில் பலியிடுதல் மிகத் தீவிரமாக நடத்தி வருகின்றனர்.

**முடிவுரை**

இரேயூனியன் தீவில் பிரான்சு நாடு இன்று வரைக்கும் நிரந்தர ஆளுமை செலுத்தி வருகிறது. கரும்பு, காப்பி போன்ற வயல்களில் பணியாற்றுவதற்காகக் கொணரப்பட்ட தமிழர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் நிரந்தரமாக அத்தீவில் தங்கினர். பிரஞ்சக்காரர்கள் தமிழர்கள்மீது கிறித்துவராக்கம் முயற்சிகள், நடைமுறையில் அமுலாக்கப்பட்ட சட்டங்கள் ஆகிய முறைகள் இருந்தாலும், தமிழ் மூதாதையரின் தடங்கள் எடுத்துக் காட்டும் பண்பாட்டுக் கூறுகள், சமயம், பழக்க வழக்கங்கள் ஆகியவை முற்றிலும் மறைந்து போகவில்லை. தமிழ்மொழி பெரிய நிலைத்திருக்கின்றன. இக்காலத்தில் மொழி மற்றும் பண்பாடு மீட்பதற்குப் பலர் முயற்சி செய்கின்றனர். மொரீசியசு, தமிழகம் ஆகிய நாடுகளோடு அதிகத் தொடர்பு ஏற்படுவதால் இரேயூனியன் தமிழர்கள் தமிழ்த் தனித்துவத்திற்குப் பாடுபடும் பணியில் இறங்குகின்றனர்.

**துணைநூல் பட்டியல்**


**1.** நாகராஜன் எஸ்., (1989) அயல்நாடுகளில் தமிழர் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**2.**Lacpatia, F., ( deuxième Edition : Juillet 2009) 'Les Indiens de la Réunion', Sundaram Art Printing Press, Mumbai, Inde.

**3.** Marimoutou Oberlé, M., ( 2012 ) 'Marliepou – l'engagisme Indien à la Reunion'

**4.** Ramsamy Nadarassin, J. R., (2006) 'La Galaxie des Noms Malbars', Azalées Editions, La Réunion.

**5.** Ramsamy Nadarassin, J. R., (Octobre 2014) 'La Turquoise, une Histoire des Réunionnais d'origine indienne' Imprimerie Ah – Sing – maquette : Ilfrid Dorval (KOM.ID), Réunion

**6.** Govindin.S. S. ( 2010 ) Les engagés Indiens, l'île de la Réunion- XIXe siècle,

**7.** Lacpatia, F., (2009) Les Indiens de la Réunion – Origine et Recrutement.

Nagarajan, S., (1ere Edition: 1995) 'Tamils Abroad : Non Asian Countries', Tamil University, Thanjavur, Tamil Nadu, India

**9.** Ramsamy Nadarassin, J. R., (2012) 'Les travailleurs Indiens sous contrat à la Réunion (1848- 1948): entre le Retour programme et le début des intégrations.

**10** http://en.reunion.fr

**11.** http://indereunion.fr

# தமிழ் மரபில் கலையுணர்வு

*முனைவர் மோ.லூர்துமேரி, *உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்.*

அழகைப் பற்றிய நவரச உணர்வு மற்றும் கற்பனையின் வெளிப்பாடு கலை. கற்பனை, அனுபவம், எண்ணங்கள், அறிவு ஆகியவற்றால் மனிதனில் உருவாகுவது நவரச உணர்வு. இவ்வுணர்வின் வெளிப்பாடே கலை, கற்பனை, அனுபவம், எண்ணங்கள். அறிவு மூலம் உருவாகும் பலவிதமான கலைகள் நாடகம், நடனம், இசை, பாடல், ஓவியம், சிற்பம் போன்றவையாகும்.

இதைத் தவிர்த்து "மனிதனில் எல்லாவித படைப்புச் செயல்களும் கலையே" என தத்துவ அறிஞர் அரிஸ்டாட்டில் கூறுகிறார். சீரான நல்வாழ்விற்கு மகிழ்ச்சி, கோபம், நகைச்சுவை, இரக்கம், அன்பு, பாசம், நட்பு, பொறாமை, மோகம் போன்ற பலவிதமான உணர்ச்சிக் கலவையை நம் எண்ணத்திலும், உள்ளத்திலும் உருவாக்குவது, இத்தகைய பல்சுவை உணர்ச்சிகளை நம்மில் ஏற்படுத்துவது பல்வேறு கலைகளும் அவை வெளியாகும் வடிவங்கள் ஆகும்.

கலைகள் நம் உள்ளத்திலும், எண்ணத்திலும், வாழ்விலும் புதிய உணர்வுகளையும், அனுபவத்தையும் ஏற்படுத்துகின்றன. சுருங்கக்கூறின் கலைகள் சமுதாயத்திலும், தனிமனித வாழ்விலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவது வெள்ளிடை மலை. பண்டைய "தமிழ்" மரபில் கலையை தமிழ் என்று அழைத்தார்கள்.

இத்தமிழை மூன்று வகையாகப் பிரித்தார்கள். முறையே இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ். தமிழிலுள்ள தொன்மை நூலான தொல்காப்பியத்தின் பொருளாதிகாரத்தில் கலையும், உணர்வும் பற்றித் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் "அகம்" பாரம்பரியத்தில் மூன்று கலையுணர்வு கூறுகளை காண்கிறோம்.

**மெய்ப்பாட்டியல்:** மெய்ப்பாட்டிலில் ரசிகர்கள் மனதில் உருவாகும். மெய்ப்பாடு அதாவது (ரசனை அல்லது சுவையுணர்வு) பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ரசிகர்கள் உள்ளத்திலும், உடலிலும் ஏற்படும் கலையுணர்வுகள் ஏற்கெனவே மனதில் உள்ள பழைய அனுபவ சிந்தனைகளோடு இணைந்து நவரசம் எனக் கூறப்படும் ஒன்பது விதமான சுவைகளை உருவாக்குகிறது. அவையாவன: அச்சம், நகை, வெகுளி, அழுகை, உவகை, பெருமிதம், இளிவரல், மருட்கை, சமநிலை ஆகியவை.

**உவமையியல்:** உவமையியல் உவமை, ஒப்புமையணி ஆகியவற்றைப் பயன்படுத்தி ரசிகர்கள் எண்ணத்தில் காட்சியின் பின்னணியை விவரித்து கற்பனைத் திறனை ஆழப்படுத்தி உணர்ச்சிகளைத் தூண்டுகிறது.

**செய்யுளியல்:** செய்யுளியலில் கவிதையின் வழியாக வாசகர்களுக்கு சொல் நயம், பொருள் வளம், காட்சியின் இடம், உணர்ச்சி, ஏவல் ஆகியவற்றை உருவாக்குகிறது.

கதை, நாடகம், நாட்டியம், காவியம் போன்ற கலைகளில் காணப்படும் கதாபாத்திரங்கள் உருவாக்கும் பல்வேறு உணர்ச்சிகள் ஒன்பது விதமான சூழல்களுக்கு ஏற்ப ஒன்பது விதமான சுவைகளை ரசிகர்கள் உள்ளத்தில் தூண்டுகின்றன. உணர்ச்சியல்லாதவன் நடைப்பிணமாக இருப்பதைப்போல பல்வேறு உணர்ச்சிகள் மற்றும் ஒன்பது வித சுவைகள் ஆகியவற்றில் ஒன்றையேனும் உருவாக்காத கலைப்பொருட்கள் கலைக்குரிய அடிப்படைத் தன்மையை இழக்கின்றன.

மக்கள் உள்ளத்தில் அதிகமான, ஆழமான, வித்தியாசமான அனுபவத்தை ஏற்படுத்தும் கலைப்பொருளை உருவாக்குகிறவனே மிகச்சிறந்த கலைஞனாக போற்றப்படுகிறான். எடுத்துக்காட்டாக பரதன், காளிதாசன், கம்பன், அஜந்தா குகை ஓவியம் தீட்டியவர்கள், தாகூர், சீனிவாசன், ரவிவர்மா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

அதேபோல் ஒரு காட்சியை அல்லது கலைப்பொருளை நன்கு சுவைத்து, ரசித்து அனுபவிக்கத் தெரிந்தவனே சிறந்த ரசிகனாகவும் இருக்க முடியும். அதே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட கலைப்பொருளை காணும் அனைவரும் தங்கள் ஆழ் மனதில் புதைந்திருக்கும் பழைய முன் அனுபவம், எண்ணங்கள், கலையை ரசிக்கும் திறன் அல்லது மதிப்பீட்டுத் திறன், உணர்ச்சிகளின் வெளிப்பாடு, மனப்பக்குவம் ஆகியவற்றின் அடிப்படையில் பல நிலைகளில் கலை அனுபவத்தைப் பெறுகிறார்கள்.

**கலையுணர்வும் அறநெறியும்**

எந்த ஒரு கலைப்பொருளும் தன்னிலே நிறைவு பெறுவதில்லை. காரணம் அவை ரசிகர்களின் மனதை ஈர்க்கும் நோக்கத்தை மையமாக வைத்துத்தான் படைக்கப்படுகின்றன. எனவே, ரசிகர்களின் எண்ணங்கள், ரசனை மற்றும் சிந்தனை கலைப்பொருட்களுக்கு இறுதி வடிவம் தருகிறது என்று தத்துவ அறிஞர் தன்னுடைய **"Aesthetik in Werke"** என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

கலைகள் மற்றும் கலை வடிவங்களின் தாக்கத்தால் ரசிகர்களின் உணர்வுகளும் எண்ணங்களும் தூண்டப்பட்டு அவரை நீதி நேர்மையான வாழ்விற்கோ அல்லது ஒழுக்கமற்ற செயலுக்கோ இட்டுச் செல்கிறது. சோகக் கதைகளினால் ரசிகர்கள் இரக்கம், பரிதாபம், கருணை அனுதாபம், சகோதரத்துவம், தைரியம், ஊக்கம், நம்பிக்கை, மனித வாழ்வின் உண்மை நிலை போன்ற உணர்வுகளையும், நற்பண்புகளையும் கற்றுக்கொள்கிறார்கள்.

கிரேக்க தத்துவ அறிஞர் பிளேட்டோ தன்னுடைய **"The Republic"** என்ற நூலில் ரசிகர்களை தவறான வழிக்கு இட்டுச் செல்லும் உணர்வுகளைத் தூண்டும் கலை வடிவங்களை விமரிசிப்பதோடு அல்லாமல் கண்டிக்கிறார். எனவே, கலைகளால் சமுதாயத்தையும், தனிமனித வாழ்வையும் வளமாக்கவும் முடியும், அதேசமயம் சீரழிக்கவும் முடியும். குலைகள் மனிதனின் வாழ்வை வளமாக்க வேண்டுமானால் அவை தணிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். சமுதாயத்தைச் சீரழிக்கும் கலை வடிவங்களை தடைசெய்ய வேண்டும். கலைகளை மதிப்பிடும் விழிப்புணர்வை ரசிகர்களுக்குத் தரவேண்டும். இங்கே ஒரு கேள்வி எழுகிறது. கலைஞர்கள் கலைத் திறனையும், கற்பனைத் திறனையும் தங்கு தடையின்றி முழுமையாக வெளிப்படுத்த சுதந்திரமில்லையா?

கலைப்பொருட்களின் நோக்கமே ரசிகர்களில் பல்வேறு உணர்வுகளைத் தூண்டுவதாக நிரந்தரமான உணர்வுகளை ஏற்படுத்தும் கலைப்பொருட்கள் வழியாக ஒரு கலைஞர் என்றென்றும் வாழ்கிறார் என்று நீட்சே **(Nietzsche) " The Birrth of Tragedu"** என்ற தன் நூலில் குறிப்பிடுகிறார். உணர்வுகள் நவரசங்களாக, புதிய அனுபவங்களாக உருவெடுக்கின்றது.

இந்த அனுபவங்கள் மனித நல்வாழ்வின் வளர்ச்சிக்கும், அறநெறி உயர்வுக்கும், மதிப்பீட்டுக் கல்விக்கும் வழிவகுத்தல் அவசியம். மாறாக கலைப்பொருட்கள் வன்முறை, ஆபாசம் போன்ற உணர்வுகளைத் தூண்டினால் அது சமுதாயம் மற்றும் தனிமனித வாழ்வின் சீரழிவிற்கு வழிவகுக்கிறது.

நுஸ்பாம் பியாட்சம் போன்ற தத்துவ அறிஞர்கள் “எந்த ஒரு கலைப்பொருளும் அடிப்படையில் ஒழுக்கத்தை கற்றுத் தருகின்றன. அதே நேரத்தில் ஒழுக்கவியலார் அழகுணர்வு கொண்டவர்களாக ஒரு கலையைத் திறனாய்வு செய்ய வேண்டும்” என்று வலியுறுத்துகிறார்கள். எனவே, ஒரு கலைப்பொருளை மதிப்பிடும்போது ஒழுக்கத்தை மட்டுமே அல்லது அழகை மட்டுமே மையப்படுத்தாமல் இரண்டையும் ஒருங்கிணைத்துப் பார்க்க வேண்டும்.

ரஷ்யக் கவிஞர் லியோ டால்ஸ்டாய் தன்னுடைய **“What is Art”** என்ற புத்தகத்தில் ஒரு கலையின் மதிப்பீடு அது உருவாக்கும் மகிழ்ச்சி மற்றும் தெய்வீக ஒருமைப்பாடு போன்ற உணர்வுகளில் இடங்கியுள்ளது என்ற கருத்ததை வலியுறுத்துகிறார். எனவே பயனுள்ள, பல்வேறு உணர்வுகளைத் தூண்டும் கலைப்பொருட்கள் சமுதாய வளர்ச்சிக்கும், தனி மனித அறநெறி வாழ்விற்கும் அணி சேர்க்கின்றன.

**முடிவாக**

ஒரு கலைநயமிக்க படைப்பின் மூலம் மனிதன் உண்மையில் தான் யார் என்பதையும், தனக்குள்ளிருக்கும் திறமைகளையும் வெளிக்கொணர்ந்து வைக்கிறான். மனிதர்கள் மட்டுமே உணர்ந்து அனுபவிக்கக்கூடிய உன்னத உணர்வுகளையும், நிறைவையும் கலை எழுச்செய்கிறது. சில வேளைகளில் கலைஞனின் எண்ணத்தில் புதைந்துள்ள வேறு பாட்டையும் கூட நாம் கணடறிய முடியும். ஒரு கலைஞன் தன் உள்ளத்தின் எழும் உணர்வுகளின் வெளிப்பாடாகவும், தான் வாழும் உலகத்தின் பிரதிபலிப்பாகவம் ஒரு படைப்பை உருவாக்குகின்றான். எந்த கலைஞனும் தன் படைப்பான ஓவியத்தையோ அல்லது சிலையையோ மீண்டும் செய்வதில்லை. அவனது படைப்புகள் ஒவ்வொன்றும் தனித்தன்மையைப் பெற்று ஒப்பற்றதாகத் திகழ்கின்றன. எனவே கலை என்பது அடிப்படையில் மனித செயல். அது ஒருபோதும் அதன் மேன்மையான தன்மையை இழக்கக்கூடாது. மனிதனை மனிதனாக வாழ வைப்பது கலை: மனித உணர்ச்சிகளைப் பண்படுத்துவதும் கலை: வெளியிடப்படும் அனைத்தும் ஒரு மனித கற்பனைக்குப் பொருள் வடிவம் மற்றும் வாழ்வு தருவதும் கலையாகும்.

# வைரமுத்து சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

***கு.நித்யா,** *ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, மஹேந்திரா கலை அறிவியற் கல்லூரி, காளிப்பட்டி-637501.*

தனி மனிதர்கள் பலர் ஓர் ஒழுங்கினடிப்படையில் சேர்ந்துள்ள அமைப்பே சமூகம். அதாவது மனிதர்களின் கூட்டம் சமுதாயம் எனப்படும். இத்தகைய சமுதாயத்தினை பாதிப்படையச் செய்யும் அனைத்து சிக்கல்களுமே சமுதாயச் சிக்கல்களாகும். இத்தகு சிக்கல்களை வைரமுத்து அவர்கள் தனது சிறுகதையில் காட்டியுள்ளார். வைரமுத்து சிறுகதைகளில் உள்ள சமுதாயச் சிந்தனைகளை முன் வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சமூகம்**

குரங்கின் பரிணாம வளர்ச்சியாகக் கருதப்படும் மனிதன் படிப்படியாக சேர்ந்து வாழ கற்றுக் கொண்ட அமைப்பே சமூகம் எனப்படும். பல்லாயிரம் ஆண்டிற்கு முன்பே தமிழர்கள் சிறந்த சமூக அமைப்பைக் கொண்டிருந்தனர் என்பதை பல்வேறு ஆய்வுகள் மூலம் நாம் அறிய முடிகிறது. சமூகம் என்பது மக்கள் ஒருவருக்கொருவர் ஏதேனும் ஒரு தொடர்பு கொண்டு ஒரே பகுதியில் சேர்ந்து வாழ்வது எனக் கொள்ளலாம்.

**இலக்கியமும், சமுதாயமும்**

இலக்கியத்தை படைப்பவர் சமூகத்தில் தன்னை ஒரு அங்கமாகக் கருதிக் கொண்டு தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளையோ அல்லது சமூகம் சார்ந்த தனது கற்பனைகளையோ குறித்து எழுதப்படுவனவே சமுதாய இலக்கியங்கள். இன்றைய காலகட்டத்தில் பொருளாதாரம், அரசியல் போன்ற பல சிக்கல்கள் இருப்பினும் இத்தகு சிக்கல்கள் மனிதனின் ஆழ்மனதை பெரிதும் பாதிப்பதில்லை. தன் குடும்பம் சார்ந்த சிக்கல்களே ஒருவனை மிகவும் பாதிப்படையச் செய்கிறது. கவிஞர் வைரமுத்து அவர்கள் தனது சிறுகதைகளுக்கு அரசியல், பொருளாதாரம், குடும்பம் சார்ந்த நிகழ்வுகளை களமாகக் கொண்டுள்ளதால் அவர் நடைமுறை சமுதாயத்தை படம் பிடித்துக் காட்டுபவராகக் கருதலாம்.

**இன்றைய உணர்வற்ற உயிரற்ற உறவுகள்:**

மனிதர்கள் தங்களை மேம்படுத்திக் கொண்டதாகக் கருதும் இந்நூற்றாண்டில் உறவுகளும் உணர்வுகளும் தேவையற்றதாகவே கருதப்படுகிறது. ஒரு பெண் தான் தாயானதை அறிந்ததிலிருந்து கல்லறை செல்லும் வரை தன் கருவறையில் சுமக்கும் குழந்தையை பற்றியே சிந்திக்கிறாள். ஆனால் இக்கால இளைஞர்களோ நாகரிகம் என்ற பெயரில் தன்னை கருவில் சுமந்த தாயிடமும், தோலில் சுமந்த தந்தையிடமும் எவ்வித பாசமுமின்றி உள்ளனர். தூரத்து உறவு என்னும் சிறுகதையில் சிவராமன் தன் தந்தையின் இறுதி சடங்கில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவிலிருந்து இந்தியா வருகிறான். தன் மனைவியின் யோசனையின் படி தன் தாயை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு, வீட்டையும் விற்று விட்டு அமெரிக்கா செல்கிறான். சென்ற பிறகு தன் மனைவி கௌசல்யா கூற 3.00 மணி நேரத்திற்கு

முன் தன் தாய் இறந்ததை அறிகிறான். இருந்தும் இந்தியா திரும்பாமல் முதியோர் இல்லக் காப்பாளரையே இறுதி சடங்கை செய்யுமாறு கூறி அதை ஸ்கைப்பில் காண்கிறான். இக்கதையின் மூலம் சமூகத்தில் உறவுகளும், உணர்வுகளும் ஆடம்பரம், நாகரிகம் என்ற மோகத்தால் எவ்வாறு மோசமாகிக் கொண்டிருக்கிறது என உணர்த்துகிறார்.

**மனித மனங்களைக் கட்டிப்போடும் சாதிச்சண்டை**

**"சாதி இரண்டொழிய வேறில்லை"** என ஔவையும், **"சாதிகள் இல்லையடி பாப்பா"** என பாரதியும் கூறிச் சென்ற நம் நாட்டில் மனிதன் தானே உருவாக்கிக் கொண்ட இழிவான ஒரு சமூக அமைப்பே சாதி. **"எரிதழல் கொண்டு வா"** என்னும் சிறுகதையில் முள்ளுமூக்கன் தான் தோளிலும், மார்பிலும் தூக்கி வளர்த்த தன் செல்ல மகளான செல்லப்பூ வேற்று சாதிக்காரனான மலையாண்டியை காதலித்து திருமணம் செய்து கொண்டதை அறிகிறான். அவளை கண்டு பிடித்து யாருமறியாமல் தன் செங்கல் சூளையில் வைத்து எரித்து விடுகிறான். இக்கதையின் மூலம் தான் பெற்ற மகள் என்ற பாசத்தை விடவும் இந்த சாதி வெறியானது மனிதனின் இரத்தத்தில், சிந்தனையில், வாழ்வில் கலந்து அவனை மிருகமாக்கிக் கொண்டிருப்பதை படம் பிடித்துக் காட்டுகிறார்.

**வறுமையின் கொடுமை**

**"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றான் பாரதி.** உணவின் முக்கியத்துவத்தையும், பசியின் கொடுமையையும் உணர்ந்தே இத்தனை ஆவேசத்துடன் அவன் கவிதை வடித்தான். மனிதனை சிந்தித்து செயல்படவிடாமல் பைத்தியமாக்கும் விஷயமே பசி. பசியால் தவிக்கும் மனிதன் தன் சுயநினைவை இழக்கிறான். இன்றும் பல இடங்களில் நாகரிகம் என்ற போர்வையில் பல உணவுகள் கண்ணுக்கு மட்டுமே விருந்தளித்து வயிற்றுக்கு சரியான விருந்தளிக்காமல் வீணாக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் அதே நிமிடத்தில் பலர் பசியால் வாடுகிறார்கள். **"இப்படியும் ஒருவன் இருந்தான்"** என்னும் சிறுகதையில் அனாதையான, அனைவராலும் பைத்தியக்காரனாக பார்க்கப்பட்ட அரிசியை மட்டுமே உண்பதானல் அரிசிமணி என்றழைக்கப்பட்டவன், பசி பொறுக்காமல் எரிகின்ற பிணத்தின் வாயிலிருந்து அரிசியை எடுக்க முற்படுகிறான். அப்போது பிணத்தில் வாயில் கை மாட்டி அப்பயத்திலேயே இறக்கிறான். இக்கதையின் மூலம் தன் பசியைக் கூட போக்கிக் கொள்ள முடியாத நிலையில் பலர் வறுமையால் வாடும் அவலத்தை கவிஞர் வைரமுத்து எடுத்துரைக்கிறார்.

**அரசியல்**

அக்கால அரசர்கள் தன் மக்களின் வாழ்க்கை நிலை உயர் எவ்வாறு சிந்தித்தனர் என்பதை **"ராஜராஜன்"** என்னும் சிறுகதையின் மூலம் உணரவைக்கிறார். **ராஜராஜ சோழன் தஞ்சை பெரிய கோவிலைக் கட்டியபின்** ஆலயத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்துகிறவர்கள் நேர்த்திக் கடனாக நெய்க்கு பதிலாக கால்நடைகளை வழங்க வேண்டும் எனவும், அதை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்குமாறும் ஆணையிடுகிறார். மேலும், கால்நடைகளை பெற்றுக்கொண்டவர்கள் நெய்யை மட்டும் கோவிலுக்கு செலுத்தவேண்டும் எனவும், மற்ற வருமானம் அனைத்தும் கால்நடைகளை பெற்றுக் கொண்டவர்களுக்கே எனவும் ஆணையிடுகிறார். இதன் மூலம் ஆலய விளக்கும் ஏழைகளின் அடுப்பும் ஒரே நேரத்தில் எரியும் என அரசன் ராஜராஜன் மகிழ்ச்சி கொள்கிறார். இக்கதையின் மூலம் அக்கால அரசர்கள், மக்களின் தரத்தை உயர்த்த மேற்கொண்ட முயற்சிகளை குறித்து அறிய முடிகிறது. இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் நம் நாட்டில் தோன்றுவார்களா? என்பது நமக்கு ஏக்கம் தரக்கூடிய ஒன்றாகவே உள்ளது.

**இரு மனம் இணையும் திருமணம்**

இரு மனங்கள் இணைவதே திருமணம் என்ற நிலை இன்று மாறிவிட்டது. திருமணம் என்பது இன்று பெரும்பாலும் வர்த்தகமாகவே பார்க்கப்படுகிறது. இன்றைய நவநாகரிக பெண்கள் தான் திருமணம் செய்து கொள்ளும் ஆண்குறித்து எவ்வாறெல்லாம் சிந்திக்கிறார்கள் என்பதை "குறை+குறை=நிறை" என்னும் சிறுகதையின் மூலம் விளக்குகிறார். **தியா** என்பவள் மூன்று ஆண்களைக் காதலித்து அதில் தனக்கு

பொறுத்தமானவனாக தோன்றுபவனை திருமணம் செய்து கொள்ள நினைக்கிறாள். அதில் இருவரை இவள் நிராகரிக்க ஒருவன் இவளை நிராகரிக்கிறான். இரண்டாடுகளுக்கு பின் தன் தோழி மனோகரியை சந்திக்கிறாள். கால் ஊனமான அவளோ பார்வையற்ற ஒருவரை மணந்து கொண்டு தன் குழந்தையுடன் நிம்மதியான வாழ்வு வாழ்வதை கண்டு திகைக்கிறாள். இக்கதையின் மூலம் இக்கால பெண்கள் தன் எதிர்காலக் கணவன் குறித்த அதீத எதிர்பார்ப்புகளுடன் அவனை கடையில் பொருட்களை தேர்ந்தெடுப்பது போல தேர்ந்தெடுக்க நினைப்பதையும், திருமணத்தின் அடிநாதமாகிய விட்டுக்கொடுக்கும் பண்பின்றி நீயா? நானா? என்ற போட்டியில் வாழ்வில் தோற்றுப் போவதையும் அழகாக எடுத்துரைக்கிறார்.

## குடும்பம்

**“அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை. அன்பே அதன் பண்பு. அறமே அதன் பயன். இல்வாழ்வாரே அனைவருக்கும் துணை”** என்னும் வள்ளுவரின் வாய்மொழியை உணராத சமூகம் உருவாகிக் கொண்டிருப்பதை **“கணவன்-மனைவி-மகள்”** என்ற கதையின் மூலம் நம்மை உணர வைக்கிறார். திருமணமான பதினைந்து ஆண்டுகள் கழித்து விவாகரத்து பெறும் முடிவை கணவன்-மனைவி எளிதாக எடுக்கிறார்கள். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் மகள் மன்னிக்கத் தெரியாத யாருக்கும் நான் மகளாக இருக்க முடியாது என கூறுகிறாள். இதன் மூலம் இன்றைய காலகட்டத்தில் திருமணம் குறித்த எண்ணங்களும் திருமண உறவுகளும் எவ்வாறு சிதைந்து வருகிறது என்பதையும், அதனால் மனமுடையும் குழந்தைகளின் மனநிலையையும் அறிய முடிகிறது.

## இறுவாய்

கவிஞர் வைரமுத்து அவர்கள் தான் வாழும் சமூதாயத்தை தம் கதைகளின் மூலம் எடுத்துக்காட்டி உள்ளார். உறவுகள், சாதி வெறி, வறுமை, அரசியல், திருமணம், குடும்பம் உள்ளிட்ட பல சமுதாய சிந்தனைகளை தம் கதைகளின் மூலம் சுட்டிக்காட்டியுள்ள பெருமை கவிஞர் வைரமுத்துவையே சாரும். இக்கதைகளின் மூலம் வைரமுத்து அவர்களுக்கு சமுதாயத்தின் மீதுள்ள அக்கறையை நாம் உணர முடிகிறது.

# ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் சமூகச் சிந்தனைகள்

*ரா.தமிழரசன், *ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, மஹேந்திரா கலை அறிவியற் கல்லூரி, காளிப்பட்டி-637501.*

**முன்னுரை**

காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப மக்களின் ரசனைகளும் மாறிக்கொண்டுதான் உள்ளன. பெருங்காப்பிய வகையில் இருந்த தமிழ் இலக்கியம் இன்று **“ஹைக்கூ”** என்ற அளவில் சுருங்கி நல்ல கருத்துக்களை சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லிக் கொண்டேதான் உள்ளன. எத்துணை வகையான இலக்கியப் பிரிவுகள் இருப்பினும், இன்றைய காலகட்டத்தில் புதுக்கவிதையே மேலோங்கி நிற்கிறது. புதுக்கவிதை இந்த அளவிற்கு வளர்ந்ததற்கு காரணமும் உண்டு. **பா** வகையில் கட்டுண்ட தமிழ் இலக்கியத்திலிருந்து மாறுபட்டு எந்த நடையில் வேண்டுமானாலும் எழுதலாம் என்பதே முக்கிய காரணம் ஆகும்.

**புதுக்கவிதைகளில் சமூக சிந்தனை**

கவிதைகளில் சமூக சிந்தனை மரபுக்கவிதையில் பாரதியில் தொடங்கி பின்பு பாரதிதாசனாக வளர்ந்து அவருடைய வழித்தோன்றல்களாக **“பாரதிதாசன் பரம்பரை”** என்ற ஒரு பரம்பரையே உருவானது. பல்வேறு கவிஞர்கள் தங்களுடைய புதுக்கவிதைகள் மூலமாக சமுதாயச் சிந்தனைகளை எடுத்துரைத்திருந்தாலும் அவர்களுள் ஈரோடு தமிழன்பன் மிக முக்கியமானவர் ஆவார். கவிதை என்பது பொழுதுபோக்கும் கலையாக மட்டும் இல்லாமல் சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் பல பிரச்சனைகளையும், அவலங்களையும் சாடும் ஒரு கலையாகும்.

**ஈரோடு தமிழன்பன்**

அரை நூற்றாண்டுக் காலமாக தமிழகத்தின் தனித்து விளங்கிய கவிஞர். சிறந்த சமுதாயச் சிந்தனையுடைய பன்முகத் திறமையாளர். மரபுக்கவிதை எழுதி புதுக்கவிதைக்கு வந்த பேராசிரியர். புதுக்கவிதையின் மாற்றத்தை தன் அழகான வரிகளின் மூலம் பின்வருமாறு நகைச்சுவையுடன் கூறுகிறார்.

**“எதற்கப்பா எதுகை மோனை**
**மின்னலைப் பிடித்து**
**வைக்கவா சட்டி பானை?**

இவ்வரிகளை விட புதுக்கவிதையின் சிறப்புக்கு வேறு சான்றுகளைக் கூறி விட முடியாது.

**ஆய்வு முறை**

சமுதாயத்தில் நிலவும் கொடுமைகளை தமிழன்பன் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளதால் இங்கு விளக்கமுறை ஆய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வின் இன்றியமையாமை**

கவிதைகளின் வலிமை கருத்துக்களே ஆகும். அதிலும் சமுதாயப் பிரச்சனைகளை முன்னிறுத்தும் கவிதை மின்னலினும் சக்தியுடையது தமிழன்பன் தன் கவிதைகளில் ஈழத்தமிழரின் இன்னல்கள், இந்திய உணர்வு போலிக் குருமார்கள், வன்முறை, பொதுவுடைமை, பொருளாதாரம், அதிகாரவர்க்கம் போன்றவற்றை நயமாகச் சாடியுள்ளதை விளக்கும் ஆய்வாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**ஆய்வுப் பகுப்பு**

1.விடியல் விழுதுகள் - 1977

2.நாமிருக்கும் நாடு - 1989

3.ஊர்சுற்றி வந்த ஓசை - 1989

ஆகிய கவிதை நூல்கள் இவ்வாய்வுக்கு முதன்மை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஈழச்சாவு**

ஈழத்தின் கொடுமை ஞாலம் அறியும். இருந்தும் என்ன பயன்? கொத்துக் கொத்தாய் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதையும் வேடிக்கைப் பார்த்த உலகம் தானே இது **“ஆதிக்க வல்லாண்மைகள் இரத்த தாகமுள்ள வரலாற்றின் பக்கங்களில் உள்நாட்டுப் பிரச்சனைகள் இதுவென்று தமிழினப் படு கொலைகளைச் சலனமற்ற எழுத்துக்களால் முடித்துவிடத் தீர்மானிக்கின்றன”** என்ற இவரது வரிகள் தமிழினப் படுகொலைக்கு எதிராக இன்றும் படிப்பவரின் மனதில் ஒரு தாக்கத்தை உண்டாக்க வல்லது.

ஈழத்தில் கடைசியாகப் பிறக்கப்போகும் தமிழ்க்குழந்தை எப்படி அழும்? எதைச் சொல்லி அழும்? தமிழினத்தின் இறுதிச் செய்தியாக அந்தக் குழந்தை எதைப் பெறும்? என்று இவர் கேட்கும் கேள்வியானது கல்நெஞ்சையும் உருக வைக்கும். உலகின் மூத்த குடியாம் நம் தமிழ்குடி ஈழத்தில் படும் துன்பங்களை நேரத்தியாக எடுத்துரைக்கிறார்.

**உழைப்பவன் இந்தியன்**

**“உழைப்பவன் இந்தியன் என்று சொல்**
**உறிஞ்சுபவன் அந்நியன் என்று சொல்”**

ஆங்கில ஆட்சியில் இந்தியர்களின் இன்னல்களை சில வரிகளிலேயே நமயாக எடுத்துரைக்கிறார் தமிழன்பன். வைகறைக்கு வாரிசாக சிலர் மட்டுமே என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களின் எண்ணங்களை மாற்றி வரலாற்று பொய்மையைக் கிழித்தெறிய வேண்டும் என்கிறார் தமிழன்பன். இந்தியர்களின் உழைப்பு சுரண்டப்படுவதை பொறுத்துக் கொள்ள முடியாதவராய் தன்னுடைய கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்.

**போலிருக்குருமார்கள்**

**“குருக்களே தெய்வங்கள் ஆனார்கள்**
**கோயில் இல்லா ஊர்களில்**
**தெய்வங்கள் குடியிருக்கப் போனார்கள்”**

மக்களின் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு சில போலி மதக் குருமார்கள் தங்களை கடவுள் என்றே சித்தரித்துக் கொண்டார்கள். கடவுளுக்கு பதிலாக தங்களையே கடவுளாக நினைத்து மக்களிடம் போலி பிரச்சாரங்களைப் பரப்பி வருவதைச் சாடுகிறார்.

போலிக் குருமார்களை மட்டும் அல்ல போலிப் பக்தர்களையும் இவர் விட்டு வைக்கவில்லை. வெளியில் நல்லவர்களைப் போல அருட்பாக்களை பாடிவிட்டு அவர்கள் தங்களுடைய அன்றாட உணவில் ஆடு, கோழி, மீன், நண்டு என சேர்த்துக் கொள்வதை நயமாக எடுத்துரைக்கிறார்.

**வன்முறை**

உலகை உலுக்கிய உலகப்போர்கள் முதல் இன்றுவரை உலகில் வன்முறைகளும், போர்களும் நிகழ்ந்து கொண்டேதான் உள்ளன. பிணக்குவியல்களை பல நாட்டில் பலமுறை பார்த்த பின்வரும் ஆதிக்க வரக்கத்தினர் இன்னும் திருந்தாதது ஏன்? வன்முறையில் எதையும் சாதித்து விட முடியாது என்பதையும் தமிழன்பன் எடுத்துரைக்கிறார். சமூக மாற்றத்தைச் சாத்தியப்படுத்தும் கல்விக் கூடங்கள் தான் புரட்சிப் படையின் பாசறை என்கிறார். ஏ.கே.47 துப்பாக்கியிலிருந்து செல்லும் ஒரு தோட்டா நிரந்தர உறக்கத்திற்கு காரணமாக அமைகிறது என்பதை தமிழன்பன் உணர்த்துகிறார்.

**பொதுவுடைமை**

**"நான்"** என்னும் அகந்தையை விடுத்து **"நாம்"** என்னும் எண்ணம் தோன்ற வேண்டும். கீழானவர் என்றோ, அடிமை என்றோ எவருமில்லை என்ற நிலையை அனைவரும் பெற வேண்டும். எல்லாரும் எல்லார்க்கும் பொது என்ற சிந்தனை ஒவ்வொருவரிடமும் உருவாக வேண்டும். ஒருபுறம் உழைக்கும் வர்க்கம் ஓடாய்த் தேய்ந்து போவதும், மறுபுறம் செல்வச் செழிப்பில் திளைத்துக் கொண்டிருக்கும் செல்வந்தர்கள் உலாவும் நாட்டில் பொதுவுடைமை என்று தோன்றும் என்பது தமிழன்பனின் கவிதைகளில் புலப்படும்.

**பொருளாதாரச் சிந்தனை**

புதிய பொருளாதாரக் கொள்கையினால் நாட்டுக்கு நன்மையா? தீமையா? என்பதில் தமிழன்பனின் சிந்தனை புதிது. புதிய பொருளாதாரக் கொள்கை உற்பத்திக்கு வழிவகுப்பதா? இல்லை தேசத்தை எழுதிக் கொடுக்கவா? எனக் கேட்கிறார். இந்த சந்தைப் பொருளாதாரத்தில் என்ன சாதனை நிகழப் போகிறது? கங்கை காவிரிக் கரைகளில் டாலர்களும், பவுண்டுகளும் கொழிக்குமோ? இல்லை கரைகளில் எல்லாம் இந்த தேசமே திருவோடு ஏந்தும் நிலை வருமா? இவ்வாறு தமிழன்பன் கேட்கும் வினாக்கள் பொருளாதாரச் சிந்தனையை அனைவரிடமும் தூண்டும் என்பதில் ஐயமில்லை.

**ஆரோக்கியமற்ற அரசியல்**

நீதி, நேர்மை இல்லாத அரசியல்வாதிகளால் இது வசந்த காலம் அல்ல வெப்பம் தகிக்கும் கோடை காலம் என்று அரசியலை காலத்தோடு தொடர்புபடுத்தி எடுத்துரைக்கிறார். நேர்மையற்ற அரசியல்வாதிகள், தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் வாழ்க்கையில் பல்லாங்குழி ஆடுகின்றனர். குழிக்குள் விழுந்த மக்கள் மீண்டு எழ வழியும் பிறக்கவில்லை.

இரத்தப்புற்று நோய் கண்ட இந்திய ஜனநாயகத்தின் கழிப்பிடங்களே கட்சிகள் என்று தைரியமாகச் சாடும் தமிழன்பனின் எழுத்து அவரின் அஞ்சாத தன்மையைக் காட்டுகிறது. ஆரோக்கியமற்ற அரசியல் நமது மார்புக் கூட்டுக்குள் வந்து இருமுகிறது. அயல்நாட்டுக் கடன்கள் நம் சுவாசப்பைக்குள் வந்து நம்மை அதட்டுகின்றன. இது போன்ற வரிகள் நம் இந்திய நாடு அயல்நாடுகளிடம் கடனாளியாக கைகட்டி நிற்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

**முடிவுரை**

சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தும் முனைப்போடு தமிழன்பன் எழுதிய கவிதைகளைக் கொண்டு மேற்கொண்ட இவ்வாய்வு சமுதாயப் பயன்கொண்ட ஒரு ஆய்வாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் எண்ணற்ற கவிஞர்களின் கவிச் சிந்தனைகள் சமுதாயத்தில் அவ்வபோது புரட்சியையும், மாற்றத்தையும் உருவாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

# ஏறுதழுவுதல்

***முனைவர் கோ. வாசுகி,** *உதவிப் பேராசிரியர், டாக்டர் நல்லி குப்புசாமி கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.*

பழந்தமிழர் அகம் என்றும், புறம் என்றும் தமது வாழ்வை இரண்டாகப் பகுத்து வாழ்ந்தனர். அக வாழ்வு அன்பை அடிப்படையாகக் கொண்டும், புற வாழ்வு வீரத்தை அடிப்படையாகக் கொண்டும், இயங்கியது. விற்போர், மற்போர் மூலம் தமது வீரத்தை விளைவித்த தமிழர்கள், "ஏறு தழுவுதல்" மூலமும் தமது வீரத்தை மண்ணில் நிலைநாட்டினர். இவ் ஏறுதழுவுதலை சங்க இலக்கிய எட்டுத்தொகை நூலாகிய கலித்தொகையில் இடம் பெற்றுள்ள முல்லைக்கலி தெளிவாக எடுத்துரைப்பதை இக்கட்டுரையில் காணலாம்.

முல்லை நில மக்களின் ஏறுதழுவுதல் தமிழரின் வீர விளையாட்டுகளில் ஒன்று "ஏறுதழுவுதல்" என்பதாகும். காடும், காடும் சார்ந்தது முல்லை நிலமாகும். இந்நிலத்தில் வாழ்ந்த முல்லை நில மக்களின் முதன்மைத் தொழில் மாடு மேய்த்தலாகும். அதனால் இயல்பாகவே "ஏறுதழுவுதல்" என்னும் நிகழ்வு அவர்களின் வாழ்க்கையில் முதன்மை இடத்தைப் பெற்றதை அறியமுடிகின்றது.

ஏறு தழுவுதல் முல்லை நில மக்களின் வழக்கம் என்பதை,

**"வழக்கு மாறு கொண்டு"**

என்ற வரியால் அறிய முடிகின்றது.

முல்லை நிலத் தலைவன் தாம் விரும்பிய பெண்ணை மணம் முடிக்க வேண்டி, பெண்ணைப் பெற்ற பெற்றோரிடம் சென்று மகட் கொடை நேர்வான். அப்பெற்றோர்கள் ஏறினைத் தழுவியே மணம் முடிக்க முடியும் என்பதனை,

**"இவள். பொருபுகல் நல்ஏறு கொள்பவர் அல்லால்**
**திருமா மெய்தீண்டிலர் என்று கருமமா"**

என வரும் பாடல் வழி அறியமுடிகின்றது.

முல்லை நிலத் தலைவன் தாம் விரும்பிய பெண்ணை மணம் முடிக்க வேண்டி, பெண்ணைப் பெற்ற பெற்றோரிடம் சென்று மகட் கொடை நேர்வான். அப்பெற்றோர்கள் ஏறினைத் தழுவி தமது மகளை மணம் முடிக்க வேண்டுவர்.

**"சீறு அரு முன்பினோன் கணிச்சிபோல் கோடு சீஇ,**
**ஏறு தொழுஉப் புகுந்தனர், இயைபுடன் ஒருங்கு"**

மகட் கொடை நேர்ந்த ஆயர்கள், வலிமையுடைய இறைவனின் குந்தாலிப்படை போலக் கொம்புகள் சீவப்பட்ட பல ஏறுகளை ஒரு சேரத் தொழுவினில் விட்டதை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

தனது மகளை மணம் முடிக்க வேண்டிய தலைவன் மட்டுமல்லாது, இன்னும் வேறு ஆடவர்கள் எவரேனும் இருப்பினும் ஏறு தழுவுதலில் கலந்து கொள்ளுமாறு "பறைக்கொண்டு அறைக" என்று ஆயமகளின் பெற்றோர் அறிவித்ததை,

**"சொல்லுக - பாணிமேம் என்றார்: அறைக, என்றார், பாரித்தார்**
**மாணிழை ஆறாகச் சாறு"**

என வரும் பாடல் உணர்த்துகின்றது.

ஒப்பில்லாத போர்க்குணமுடைய எருதுகளை அடக்குபவன், நீண்ட கூந்தலையும், மான் போன்ற கண்களையும், மூங்கில் போன்ற தோள்களையும் உடைய அழகிய மகளைப் பெறுவான்.

**"அவ்வழி, மன்எயிற்று ஏள் இவளைப்பெறும், இது ஓர்**
**வெள்ஏற்று எருத்து அடக்குவான்**
**ஒள்ளிழை வாருறு கூந்தல் துயில்பெறும், வை பருப்பின்**
**காரி கதன் அஞ்சான் கொள்பவன்"**

என்று ஆயர்கள் முறைப்படி அறிவித்தனர்.

**ஏறு தழுவும் இடம்**

ஏறுகள் இடப்படும் இடத்தினை தொழு என்று முல்லைக்கலி குறிப்பிடுகின்றது,
இதனை

**"ஏறு தொழுஉப் புகுந்தனர்"**
**"புரிபு புரிபு புகுந்தனர் தொழுஉ"**
**"தொழுவினுள் கொண்ட ஏறு எல்லாம் புலம்புக"**

என வரும் பாடலால் அறிய முடிகின்றது.

வலிமையுடைய பல ஏறுகள் நிறைந்திருந்த தொழுவானது, புழுதிப் படலம் போலக் காணப்பட்டது. மழைக் காலத்தில், மலைக் குகைக்குள் வாழும் சிங்கமும், குதிரையும், களிறும், யானையும் ஒருங்கே கூடி இருந்தால் எவ்வாறு இருக்குமோ, அவ்வாறு ஆரவாரத்துடன் தொழு இருந்ததை,

**"படுமழை ஆடும் வரையகம் போலும்-**
**கொடுநறை சூழ்ந்த தொழுஉ"**

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

தொழுவானது, பாண்டவர்களும் நூற்றுவர்களும் போரிட்ட போர்க்களம் போலிருந்ததாக,

**"புரிபுமேல் சென்ற நூற்றுவர் மடங்க,**
**வரிபுனை வல்வில் ஐவர் அட்ட**
**பொருகளம் போலும், தொழுஉ"**

என்று வர்ணிக்கின்றது.

**தெய்வ வழிபாடு**

நல்ல குடியில் பிறந்த ஆயர்கள், தெய்வத்திற்கு சிறப்புகளைச் செய்து வழிபட்டப் பிறகே, ஏறு தழுவுவதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

**"தீது இன்று பொலிக! எனத் தெய்வக்கடி அயர்மார்!**
**வீவு இல் குடிப்பின் இருங்குடி ஆயரும்"**

ஏற்றினைத் தழுவ இருக்கும் இளைஞர்களும் நீர்த்துறையில், ஆலமரத்தின் கீழும், மரங்களின் கீழும் உறையும் தெய்வங்களை முறையாக வழிபட்டு சென்றதை.

**"துறையும் ஆலமும் தொல்வலி மரா அமும்**
**முறையுளி பரா அய், பாய்ந்தனர், தொழுஉ"**

என்ற பாடலாலும்,

இடி போன்ற இசை முழங்க, தொழுவினில் ஏற்றினை புகவிட்டதை,

**"அவ்வழி, பறை எழுந்து இசைப்ப, பல்லவர் ஆர்ப்ப"**

என்ற பாடலாலும் அறியமுடிகின்றது.

**பரண்**

ஏறு தழுவும் ஆடவரைத் தவிர்த்து, மற்ற அனைவரும் பரண் மேல் நின்று, ஏறு தழுவுதல் விளையாட்டினைக் கண்டு களித்தனர்.

ஏற்றினைத் தழுவி வெற்றிப் பெறுபவனுக்கே, தமது மகளை மணம் முடிப்பேன் என்று கூறிய ஆயர்கள் தமது மகள்களுக்கு ஒப்பனை செய்து, அழகுற பரணில் நிறுத்தினர்.

**"நாள்மீன் வாய்சூழ்ந்த மதிபோல், மிடைமிசைப்**
**பேணி நிறுத்தார் அணி"**

இவ்வாறு பெண்கள் எல்லாம் பரணிலே அமர்ந்திருப்பது கண்டு

**"சாற்றுள் பெளட அன்னார் கண்பூத்து, நோக்கும் வாய் எல்லாம்**
**மிடை பெறின், நேராத் திகைத்து"**

என்று பாடுகின்றது முல்லைக்கலி.

**ஏற்றின் வகைகள்**

ஆடவர் தழுவுவதற்காகத் தொழுவினுள் விடப் பெற்ற ஏறுகள் பல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம் உடையது. காரி, குரால், வெள்ளை ஏறு, இளங்காரி, புகர், வெண்காற் சேய், மறு வெள்ளை, சுரி நெற்றிக் காரி, இமில் குரல், செங்காரி என்று ஏறுகள் பலவித பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

பட்டுப் பூச்சியின் நிறத்தை ஒட்டிய, புல்லிய நிறத்தைக் கொண்ட சிவந்த எருதினை,

**“மேற்பாட்டு உலண்டின் நிறன்ஒக்கும் புண்குருக்கண்”**

என்பதாலும்

சந்திரனைப் போன்ற வட்டத்தினை நெற்றியில் உடைய கரிய எருதினை,

**“சுடர் விரிந்தன்ன சுரி நெற்றிக் காரி”**

என்பதாலும்,

செவியில் மறுவினையும், உடலில் சிவந்த புள்ளிகளையும் உடைய வெள்ளை

எருதினை,

**“செவி மறை நேர் மின்னும் நுண்பொறி வெள்ளை”**

என்பதாலும் அறிய முடிகின்றது.

மேலும்,

**“மணிவரை மருங்கின் அருவி போல**
**அணிவரம்பு அறுத்த வெண்காற் காரியும்**
**மீன் புத்து அவிர்வரும் அந்திவான் விசும்பு போல்**
**வான் பொறி பரந்த புள்ளி வெள்ளையும்**
**கொலைவன் சூடிய குழவித்திங்கள் போல்**
**வளையும் மலிந்த கோடு அணி சேயும்”**

என்று காளைகளின் தோற்றத்தினை வர்ணிக்கின்றது முல்லைக்கலி.

**எருதும் இறைவனும்**

இறைவனின் திருவுருவங்களை, எருதோடு ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலம் ஏற்றின் சிறப்பினை அறிந்துகொள்ள முடிகின்றது.

பால் போன்ற நிறமுடைய பலராமனைப் போன்ற வெள்ளை எருது, சக்கரப்படையை உடையவனும் திருமகளை மார்பிலே கொண்டவனும் ஆகிய திருமாலின் நிறத்தை உடைய கரிய எருது, தாழ்ந்த சடையினையும், பிறை போன்ற நுதலையும், மூன்று கண்களையும் உடைய சிவபெருமானின் சிவந்த நிறத்தை ஒத்த கபிலை நிற எருது, வேலினை உடைய முருகனின் நிறம் போன்ற சிவந்த எருது. இவை போன்ற போர்க்குணங்களை உடைய பல எருதுகள் தொழுவில் விடப்பட்டன.

**“பால் நிற வண்ணன் போல்பழி தீர்த்த வெள்ளையும்”**
**“திருமறு மார்பன் போல் திறன் சான்ற காரியும்”**
**“முக்கணான் உருவே போல் முரண் மிகு குராலும்”**
**“வேலவலான் நிறனே போல் வெருவந்த சேயும்”**

என்று இறைவனின் தோற்றப் பொலிவோடு , எருதின் தோற்றத்தினையும் உவமைப்படுத்திக் காட்டியதை காணமுடிகின்றது, மேலும்,

**“நெஞ்சம் பிளந்து இட்டு நேரார் நடுவண், தன் வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்”**

இப்பாடல் துச்சாதனின் நெஞ்சைப் பிளந்து, தன் வஞ்சினத்தை நிறைவேற்றிய வீமனைப் போன்றும்,

**“தாளின் கடந்து அட்டு, தந்தையைக் கொன்றானைத் தோளின் திருகுவான் போன்ம்”**

தன் தந்தையைக் கொன்றவனின் தலையைத் திருகிய அசுவத்தாமனைப் போன்றும் எருதுகள் காட்சியளித்ததாக கலிப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

**எருதும் பொதுவரும்**

தொழுவினில் பாயும் காளையை அடக்கும் காளைக்கு பொதுவர் என்று பெயர். களத்தில் காளைகள் பாய்வதும், அதை அடக்க காளையர்கள் முயல்வதும் இரு பெரு வெந்தர் தம்முள் மாறுபட்டு போரிட்ட போர்க்களம் போலக் காட்சியளிக்கின்றது.

**“ஆங்க ஏறும் பொதுவரும் மாறுற்று, மாறா**
**இருபெரு வேந்தரும் இகலிக் கண்ணுற்ற**
**பொருகளம் போலும், தொழுஉ”**

என்று ஏறுகள் விடப்படும் களத்தினை, போர்க்களத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது முல்லைக்கலி.

அம்பினிலிருந்து விடுபட்ட வில் எவ்வாறு பாய்ந்து வருமோ, அவ்வாறு களத்தில் காளைகள் பாய்ந்து வந்ததை,

**“கொலைமலி சிலைசெறி செயிர் அயர் சினம் சிறந்து,**
**உருத்து எழுந்து ஓடின்று மேல்”**

இப்பாடல் வழி அறியலாம்.

புழுதித் துகள் பறந்த களத்தில் வீரர்கள், மார்பினைக் காட்டி நின்றனர்.

காளைகளும் குத்துவதற்குத் கொம்புகளை கீழே சாய்த்தன.

**"எழுந்தது துகள்**
**ஏற்றனர் மார்பு**
**கவிழ்ந்தன மருப்பு,**
**கலங்கினர் பலர்"**

என்று தொழுவில் காளையின் நிலையையும், காளையரின் நிலையையும் எடுத்துக்காட்டுகின்றது இப்பாடல்.

காளைகள், தம்மை அடக்க நினைத்த காளையரின் மார்பினை குத்தி, குடர்களை கொம்புகளில் சுற்றி வர, அதன் முன்னே நின்ற வீரர்கள், அக்குடரை இரண்டு கையாலும் வாங்கித் தன் வயிற்றிலே இட்ட காட்சி, சிவந்த நூலின் மழியை ஒருவன் இரு கைகளாலும் கைப்பற்ற, அந்நூலை மூன்று நூலாக நூற்கின்றதைப் போலத் தோன்றியதாம்.

**"கோட்டொடு சுற்றித் குடர் வலிந்த ஏற்றின் முன்**
**ஆடி நின்று, அக்குடர் வாங்குவான் பீடுகாண்**
**செந் நூற் கழி ஒருவன் கைப்பற்ற, அந்நூலை**
**முந் நூலாக் கொள்வானும் போன்ம்"**

இப்பாடல் காளையரின் வலிமைக்குச் சான்றாய் அமைந்துள்ளது.

மேலும் சில வீரர்கள், ஏற்றின் கொம்புளைப் பிடித்து மார்பிலே பொருத்தும்படி தழுவினர். சிலர் ஏற்றின் கழுத்தினைக் கட்டி, குட்டேறு முறியும்படி தழுவினர். சிலர் தமது தோளுக்கு நடுவே கழுத்தைப் புகவிட்டு, இறுகப் பற்றிக் கிடந்தனர். இவ்வாறு வீரர்கள் ஏற்றின் கொம்புகள் தம் மீது படுவதை, அஞ்சாது ஏற்றுக் கொண்ட காட்சியை,

**"மருப்பில் கொண்டும், மார்பு உறத் தழுஇயும்**
**எருத்திடை அடங்கியும், இமில் இறப் புல்லியும்,**
**தோள் இடைப் புகுதந்தும், துதைந் துபாடு ஏற்றும்,**
**நிரைபு மேல் சென்றாரை நீள்மருப்பு உறச்சாடி"**

இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு தம்மை எதிர்த்து நின்றவரை மட்டுமே தாக்கிய காளையானது, தம் கொம்புகளைத் தழுவாது, வழுக்கி கீழே விழுந்தவனை தாக்காது மீண்ட காளையின் அரிய குணத்தினை,

**"கோள் வழுக்கித் தன் முன்னர் வீழ்ந்தான் மேல் செல்லாது**
**மீளம்புகர் ஏற்றுத் தோற்றம் காண்"**

என்ற பாடல் காட்டுகின்றது.

**கன்னியர் விரும்பும் காளையர்**

**"கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே, ஆய மகள்"**

கொல் ஏற்றின் கொம்புக்கு அஞ்சுகின்றவனை ஆயமகள், மறுபிறவியிலும் விரும்பமாட்டாள் என்கிறது இப்பாடல், காளையை அடக்கிய காளையரையே, கன்னியர் விரும்பினர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

ஆய மகள் ஒருத்தி, என் கணவன் கொல் ஏற்றினைத் தழுவி வெற்றிப் பெற்றான் என்று ஊரார் புகழ்வதே எனக்கு இன்பமாகும் என்று கூறுவதாக,

**"கொல் ஏறு கொண்டான் இவள் கேள்வன் என்று– ஊரார்**
**சொல்லும் சொல் கேளா, அளை மாறி யாம் வரும்**
**செல்வம் எம் கேள்வன் தருமோ?"**

என வரும் பாடல் உணர்த்துகின்றது.

ஏறு தழுவியோர் பெறும் பரிசுகளாக, தாம் விரும்பிய பெண்ணை மணம் முடித்தலும், நல்லாட்சி பெறுதல் போன்ற கிடைத்தற்கரிய பேற்றினையும் பெறுதலும் என்பதனை முல்லைக்கலி வாயிலாக அறியமுடிகின்றது.

பண்டைத் தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றாக "ஏறுதழுவுதல்" இருந்ததை மேற்கண்ட செய்திகள் வாயிலாக அறியமுடிகின்றது. மேலும், களத்தில் பாய்ந்த ஏற்றின் தோற்றத்தினையும், வீரத்தினையும், காளையை அடக்கிய காளையர்களின் வீரத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கதைக்கருக்கள்

*வ. மணிகண்டன், *முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-113.*

சங்க இலக்கியப் பாடல்கள் மூன்று அடி முதல் எழுநூற்று எண்பத்து மூன்று அடிகள் வரை உள்ளன. கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள பாடல்கள் அனைத்தும் பெரும்பான்மையும் இரண்டு அடிகள் முதல் நான்கு அடிகள் வரை அமைந்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் இயற்றப்பட்டவை அல்ல. எனவே இவற்றின் காலத்தைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுவது இயலாது. இத்தகைய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் புனைகதைக்குச் சிறப்புச் சேர்க்கும் கூறுகளில் ஒன்றான கதைக்கருவைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கதைக்கரு**

கதையின் உள்ளீடு, குவிமையம், கதை நோக்கம், கதையின் அச்சானி என்றெல்லாம் பலபடக்கூறப்படும் கரு புனைகதைக்கு விதை போன்றது. செடியின் தண்டும், இலையும், பூவும் மண்மேல் தலைதூக்கி நின்றாலும் அதன் ஆணிவேர் தன்னை மறைத்துக்கொண்டுதான், தண்டும், இலையும், பூவும் செழிக்கப் பயன்படுகிறது. அதுபோன்றே கதைக்கருவானது புனைகதையில் தன்னை மறைத்துக்கொண்டு ஏனைய பண்புகளைச் செழிக்கச் செய்கிறது. செடி செழிக்க ஆணிவேர் காரணமாவதுபோல் கதை சிறக்கக் கதைக்கரு காரணமாகிறது.

“கதைக்கான கருவைத்தேடி ஒருபோதும் நான் அலைந்ததில்லை. உதறினாலும் விலகாமல் உள்ளத்தில் இறுகப்பற்றிக் கொள்ளும் கருக்களுக்கு என் மனவார்ப்புக்குத் தகுந்தவாறு ஒரு உருவம் அமைக்கிறேன் அவ்வளவுதான்.” (நீல. பத்மனாபன், என் எழுத்து, கசடதபற, ப.5) என்று நீல. பத்பனாபன் விளக்கம் தருகிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உணர்வுகள் சார்ந்த கதைக்கருக்கள், தொன்மம் சார்ந்த கதைக்கருக்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

**உணர்ச்சிப் பதிவுக் கதை**

உணர்ச்சி என்பது உணர்தலின் காரணமாய் எழுவது உணர்தலாவது அறிதல், நினைத்தல் ஆகும். மனம், அறிவு, உணர்வு ஆகியவை உணர்ச்சிக்கு அடிப்படையாகும். மனத்தின் கண் அறிவின் காரணமாய் எழும் உணர்வே உணர்ச்சியாகும். அறிவும் உணர்வும் ஒன்றுக்கூடி உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. இந்த உணர்ச்சியைத் தொல்காப்பியர் மெய்ப்பாடு என்று விளக்குகிறார். உணர்ச்சி வாழ்வின் இலக்கியமாகவும், இலக்கியத்தின் உயிர்நாடியாகவும் விளங்குகிறது. இத்தகைய உணர்ச்சியை “உணர்வைப் பெருக்கி உள்ளத்தை ஈர்ப்பதோடு பண்பால் உயர்வும் செய்யுமாயின் அவ்வுணர்ச்சி தலையாய உணர்ச்சி எனலாம்” (சு.பாலச்சந்திரன், இலக்கியத்திறனாய்வு, ப.87) என்று சு.பாலச்சந்திரன்

கூறுகிறார். இத்தகைய உணர்வானது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காதல், வீரம், அவலம், நிலையாமை, நட்பு போன்ற நிலைகளில் பதிவு செய்துள்ளமையைக் காணமுடிகிறது.

**காதல்**

காதல் என்பது கண்களில் தொடங்கி உள்ளத்தை இணைக்கும் உறவுப்பாலம். இந்த காதலுணர்வு எல்லா உயிரினங்களுக்கும் உண்டு. காதலுக்கு சாதி, மதங்கள் கிடையாது. இந்த உலகம் இயங்க காதலுணர்வு இன்றியமையாததாய் உள்ளது. இங்கு எங்கு பார்த்தாலும் காதல், காதல் என்று தான் பேச்சு. அந்த அளவிற்கு காதல் மனித சமுதாயத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்து பிறந்த பேரின்பம்!

காதல் என்பது உணர்ச்சி, காதல் இல்லாத வாழ்க்கை உயிர் இல்லாத உடம்பு போன்றது. மேலும், பெண்பாற்புலவர் ஔவையார் ‘காதலிருவர் கருத்தொருமித்த ஆதரவு பட்டமே இன்பம்’ என்றும் கூறுகின்றார். மேலும், பாரதியார்,

**“காதல் காதல் காதல்**
**காதல் போயின்**
**சாதல் சாதல் சாதல்”**

என்றும் கூறுகின்றார்.

காதல் என்பது ‘அன்பு வேட்கை’ என்று வ.சுப.மாணிக்கம் கூறுகிறார். காதலாவது நெஞ்சு, அறிவு புலன்கள் என்கின்ற அனைத்தையும் ஒருங்கே தூண்டிவிடும் ஒரு பெரும்வேட்கை. உடலளவும், உள்ளமொன்றிய பின்பும் இணைந்த ஓர் உணர்வு வெளிப்பாடு என்று பெர்ணார்ட் ரஸ்ஸல் கூறுகிறார். பருவமடைந்த ஆண், பெண் அருகருகிருந்தால் ஒருவரையொருவலர் கவர் முயல்கின்ற முயற்சியால் எழுவது என நூல்கள் காதலின் பொருள் வரையறையைக் காட்டுகின்றன.

காதல் மனிதனை மேம்பாடுடையவனாக ஆக்கக்கூடிய சக்தி உடையதாகும். ஒத்த துருவங்கள் விலகும். எதிரெதிர் துருவங்கள் கவரும் என்ற காந்தவிசைப்புலத்தின் அடிப்படையில் மாற்றுப் பலரிடம் ஏற்படுகின்ற ஈர்ப்புச் சக்தியால் காதல் உணர்வு ஏற்படுகின்றது என உளவியலாளர் கூறுகின்றனர். மேலும் காதல் உணர்வுக்கு “காதல், உயிராற்றலை மாட்சிமைப்படுத்தும் பண்பு, எதுவும் அளவோடு பயன்படுத்துங்கால் அது, மருந்தென மதிக்கப்படும். உணவு உயிர் மருந்தாதல் போலக் காதலும் உயிராற்றல் மருந்து. அம்மருந்து அதற்குரியாரிடமும் தகுதியாரிடமும் தானே உருவாகி அளவாகப் பயன்படுகின்றது” (தி.சு.பாலசுந்தரம் பிள்ளை, சங்க இலக்கிய இன்கவித்திரட்டு, ப.121) என்று தி.சு.பாலசுந்தரம் பிள்ளை குறிப்பிடுகிறார்.

மனிதர் ஆண் பெண் ஈர்ப்பில் தோன்றும் விருப்பை வளர்த்துப் பிற உயிர்களிடத்தும் பற்றுவைக்கும் அன்பாக பெருக்கினர், அன்பே மனித இலக்கணம் என்றனர்.

**“அன்பின் வழியது உயிரநிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு”**

***(குறள்.80)***

என்பது திருவள்ளுவரின் அறமாகும். இருவர் சேர்ந்துவாழும் இல்லத்தை மையமாக்கிப் பிறக்கும் அன்பு வளர்ந்து உலகத்துயிர் மீதெல்லாம் பரந்து நலம் விளைக்கும் அருளாகிறது.

**“அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு”**

***(குறள்.757)***

என்ற குறளடிகள் அன்பின் குழந்தையே அருள் என்றும் அதனை வளர்க்கும் செல்வச் செவிலியே பொருள் என்றும் கூறுகிறது. எனவே, மனிதனின் உலகம் இல்லத்திலிருந்து தொடங்குகிறது. அகத்திலிருந்து புறம் விரிகிறது.

**“செல்வம் புலனே புணர்வு விளையாட்டென**
**அல்லல் நீத்த உவகை நான்கே”**

***(தொல்.மெய்.11)***

நுகர்ச்சி, அறிவிலுறும் மனமகிழ்ச்சி, காதல் புணர்ச்சி, விளையாட்டு என்ற நான்கின் வழியே உவகை பிறக்கும்.

**“பிரிந்தவர மேனிபோல் புல்லென்ற வள்ளி**
**பொருந்தினர் மேனிபோல் பொறப்த்-திருந்திழாய்!**
**வானம் பொழியவும் வாரார்கொல் இன்னாத**
**கானம் கடந்துசென் றார்**

***(ஐந். ஐம். பா.8)***

இதில் தலைவனுடன் கூடியிருக்கின்ற தலைவியின் நிலை மழைபொழிதலால் காடுபொலிவு பெறும்படி இருந்தது இந்நிகழ்வு இத்தகைய நிகழ்வு காதல் புணர்ச்சியை விளக்குகிறது. இதே கருத்தை நா.சுப்புரெட்டியார்,

ஓருயிரும் ஈருடலும் போன்று நட்புடையவர்கள் என்றும், பிறவிதோறும் தொடர்ந்து வருவது இவர்களின் அன்பு என்றும் விளக்குகிறது (நா.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப.316) என்று விளக்கம் தருகிறார். மேலும், இதுபோன்ற காதல் உணர்வுகளை திணைமொழி ஐம்பது. 45, 46, நாலடி.207, நான்மணி.7:1-2 ஆகிய பாடலடிகளில் காணமுடிகிறது.

காதல் என்பது மனித இதயங்களில் அரும்பும் ஒரு மென்மையான உணர்வு. இன்ப உணர்வின்பாற்பட்டதே காதல். இன்பமே அதன் நோக்கம் என்பதை பதினெண் கீழ்க்கணக்கின் வழி அறிய முடிகிறது.

**வீரம்:-**

வீரம் என்பதற்கு மக்களைக் காத்தல் பொருட்டு மனிதன் மேற்கொள்ளும் துணிச்சல் மிக்க செயலைக் குறிக்கின்றன. அதாவது நன்மையின் பொருட்டுச்செய்யும் வீரச்செயலின் கண்தோன்றுவது வீரமாகும். வீரம் : வீரியம், வலி, மலை என்று தமிழ் ஆங்கில அகராதி விளக்கம் தருகிறது.

மக்களிடத்தில் வீரம் என்ற பண்பு ஏதாவது ஒரு நிலையில் வெளிப்பட்டுக்கொண்டேதான் இருக்கிறது. வீரம் என்பது வலிமையான உடலைப்பெற்றிருப்பது, தைரியமாகப் பேசுவது, யாரும் செய்யமுடியாத அரிய செயல்களைச் செய்வது எனப் பலநிலைகளிலும் மக்களிடம் காணப்படுகிறது.

மனிதன் அவசியம் பெற்றிருக்க வேண்டிய இயல்புகளுள் ஒன்று வீரம். இது உடல்வீரம், மனவீரம் என இருவகைப்படும். இவ்விருவகை வீரமும் உடையவனே போர்க்களத்தில் புகழ் எய்த இயலும். சங்க இலக்கியம் போற்றிய முதன்மைப் பொருண்மைகளுள் வீரமும் ஒன்று. ஆண்கள் போர்த்தொழிலில் வல்லவராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பெற்றது. பகைவரின் யானைப் படையை வெல்ல வேண்டியது ஆணின் கடமை என்பார் பொன்முடியார்.

மன்னனுக்கு வீரம் அவசியமான ஒன்று என்பதை,

**“மறமிலா மன்னர் செருப்புகுதல் இன்னா**

**வெறும்புறம் வெம்புரவி பேற்றின்னா**
**இன்னாதிறனிலான் செய்யும் வினை”**

***(இன்.நா.பா.38)***

எனும் பாடலில் மக்களை ஆட்சி செய்யும் மன்னனுக்கு அவர்களைக் காக்கும் வலிமை வேண்டும். அவ்வாறு இல்லையாயின் விரைவான ஓட்டத்தையுடைய குதிரையின் முதுகில் சேணம் இல்லாமல் ஏறுவதற்கும், செய்யும் வகை அறியாதவன் செய்யும் செயல் போன்றும் சிறப்புடையதாக இராது என்றும் கூறுகின்றார். இக்கருத்தினை இனியவை நாற்பது, யானைப்படையை ஏற்படுத்திக்கொள்ளுதல் மன்னனுக்கு இன்றியமையாதது என்பதனையும், ஊர் அமைவு காட்டாற்றின் கரையில் இருப்பின் வளமுடையதாய் இருக்கும் என்பதனையும்,

**“யானையுடைய படைகாண்டல் முன் இனிதே**

---- ----- ------ -----

**கான்யாற் றடைகரை யுரஇனி தாங்கினிதே!”**
***(இனி.நா.4)***

என்னும் பாடலில் யானைப்படை மன்னனுக்கு இன்றியமையாதது என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் மன்னனின் கம்பீரமும், போர்க்கள அமைவும் இருக்க வேண்டிய தன்மையை (இனி.நா.8) என்ற பாடல்வழி அறியமுடிகிறது.

**அவலம்:-**

மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறான். பல்வேறு தளங்களில் பயனித்த மனிதன் அவலம் என்ற மெய்ப்பாட்டைச் சாராமல் வளரந்ததில்லை. சிறப்புப்பெற்றதுமில்லை. வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ள அவலத்தை சோகம், துன்பம் என்ற பொருளில் பெரும்பாலான அகராதிகள் விளக்குகின்றன. அவலம் என்பதற்கு ‘வருந்திடக்கூடிய அல்லது இரங்கத்தக்க நிலை’

என நர்மதாவின் தமிழகராதி விளக்கம் தருகிறது. மேலும் அவலத்திற்கு "அழுகையோ தம்பால் தாங்கரும் இழிவு, இழவு, தளர்வு, வறுமைகளால் வருந்துதல் ஆகும்" (நாவலர் சோமசுந்தர பாரதியார், தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் உரைவளம், ப.30) என்று நாவலர் சோமசுந்தர பாரதியார் வரையறை செய்கிறார்.

தாய் இரங்கல் என்பதற்கு தாயார் வருந்துதல் மற்றும் நற்றாய் இரங்கல் என்றும் பொருள்படும். தலைவனுடன் தலைவி உடன்போக்கு மேற்கொண்ட பிறகு நற்றாய் அவள் இங்கு எவ்வளவு செல்லமாக வளர்க்கப்பட்டாள் ஆனால் இப்பொழுது கடத்தற்கும் அரிய பாலை நில வழியில் தலைவனுடன் எவ்வாறு சென்றாளோ என்று வருந்திப்புலம்பும் நிலை காணப்படுகிறது. மேலும் விளையாடிவிட்டுச் சென்ற பொருட்கள் மற்றும் நினைவு தரத்தக்க பொருள்களைக் காணும் தோறும் நற்றாய் புலம்புதல் ஆகிய செயல்கள் பதினெண் கீழ்க்கணக்கு அக இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**"பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியும்**

**ஆயமும் ஒன்றும் இவை நினையாள் - பால்போலும்**

**ஆய்ந்த மொழியினாள் செல்லுங்கொல் காதலன்பின்**

**காய்ந்து கதிர்தெறூஉங் காடு"**

***(ஐந்.ஐம். பா.33)***

தம் வீட்டில் விளையாடற்குரிய பொம்மை, பந்து, கிளி, தோழிகள் கூட்டம் போன்றவற்றை மறந்து காதலனுடன் செல்லும் வன்மையுடையவனாய் இருப்பாளோ? என்று நற்றாய் மகளை நினைத்து கலங்குகின்றாள். மேலும்,

**"ஏற்றிய வில்லின் எயினர் கடுஞ்சுரம்**

**பாற்றினம் சேரப் படுநிழல் கண்டஞ்சிக்**

**கூற்றன வல்வில் விடலையோ(டு) என்மகள்**

**ஆற்றுங் கொல் ஐய நடந்து"**

***(திணைமொழி ஐம்.பா.20)***

நாணை ஏற்றி அம்பு தொடுக்கப்பட்ட வில்லினையுடைய வேட்டுவர் வாழுகின்ற கொடிய பாலை நிலத்தில் எவ்வாறு செல்வாளோ என்று தன் மகளை எண்ணி வருந்துகின்றாள். மேலும்,

"தோழியர்கள் நாற்புறமும் சூழும்படி முற்றமாகிய துறையில் என்மகள் விளையாடும் பொழுதிலும் விழுந்து விடுபவளைப் போன்று தளர்கின்ற அவளுடைய மென்மையான கால்கள், கற்கள் நிரம்பிய வழியான அருஞ்சுரத்தில் தன் தலைவன் பின்னால் ஓய்ந்து போகாமல் செல்லுதலில் வல்லவனோ?" (ஐந்.ஐம். பா.37) என்று உடன்போக்குச் சென்ற தன் மகள் குறித்து நற்றாய் வருந்திக் கூறியதைக் காணமுடிகிறது.

"உடைந்த பரற்களையுடையவனாய், வலிமை அழிந்து காட்டுத் தீ பரவியுள்ள காட்டில் வாழ்க்கைக்குத் தொடர்புடைய பொருளைத் திரட்டச் செல்லும் தலைவரே! செவ்வரி பரந்த மையுண்ட கண்களையுடைய நம் தலைவியின் பிரிவாற்றாமையாகிய துன்பத்தை ஆராயுமிடத்து நும்மைப்போல் ஆராய்ந்து அறிபவர் யார்? நான் இதனை அறியேன்" (திணைமொழி ஐம்.பா.12) என்று பொருள்வயின் பிரிந்த காலத்துத் தலைவியின் துன்ப நிலையை தோழி எடுத்துக்கூறுவதாக அமைகிறது.

ஒரு சமுதாயத்தின் அமைதி என்பது தனிமனித அமைதியைச் சார்ந்துள்ளது. அறநூல்கள் காட்டும் நன்மைகளைக் கடைபிடிக்காவிட்டால் ஏற்படும் துன்பங்களை அறிந்து அவற்றிலிருந்து விலகி நாமும் பயன்பெற்று சமுதாயமும் பயன்பெற்று வாழ்வதற்கு ஐந்.ஐம். முல்லை. 2, 7, குறி.16, மரு.24, பாலை.32, 38, நெய்.47, அரியாமையால் வரும் துன்பம் திரி. 2, 3, 4, இன்.நா.11, 19.3, 20.3, 24.3, 36, 37.4, குறள்.302, 390, 799, 476, 1011, 1163, கல்லாமை துன்பம் தரும் இனி.நா.1:1, ஒற்றுமையில்லா வேற்றுமை துன்பம் தரும். இனி.நா. 2:1-2, நடுவுநிலைமை தவறுதல் துன்பம் தரும் இனி.நா. 5, அன்பின்மை துன்பம் தரும் இனி.நா. 9:3-4, குழந்தையின்மை துன்பம் தரும் இனி.நா. 14:1-2, ஐம்புலன் அடக்காமை துன்பம் தரும் இனி.நா.25.1, இரவுபொழுது நடமாடுதல் துன்பம் தரும் இனி.நா. 34:1 ஆகிய பாடலடிகள் சான்றாக அமைகின்றன.

உடன்போக்குச் சென்ற தலைவியின் நிலையை நினைத்து நற்றாய் புலம்புவதையும், தலைவன் பொருள்வயின் பிரிந்தகாலத்துத்

தலைவியின் துன்ப நிலையைத் தோழி புலம்புவதையும் கதைக்கருவின் கூறுகளில் ஒன்றான அவலம் பயின்று வருவதை பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் வாயிலாகக் காணமுடிகிறது. உடன்போக்கும், பிரிவும் அன்றைய காலம் முதல் இன்றுவரை தொடர்ந்து வருவதைக் காணமுடிகிறது.

**நிலையாமை:-**

'அறம்' வாழ்க்கைக்குரிய அனைத்தையும் கொடுக்கும். நம்மிடம் உள்ள செல்வம், உடம்பு, இளமை, உயிர்யாவும் நிலையானது அன்று. இதனை உணர்ந்து எல்லாம் நம்முடையது என்று வைத்துக்கொள்ளாமல் பிறருக்கு கொடுத்து உதவ வேண்டும். செல்வம், இளமை, இவையாவுமே மின்னல் போன்று நொடிப்பொழுதில் மறையக்கூடியது.

**"உடையான் வழக்கின் தொப்ப முடிந்தால்**
**மனை வாழ்க்கை முன்இனிது மாணாதாமாயின்**
**நிலையாமை நோக்கி நெடியார துறத்தல்**
**தலையாகத் தான் இனிது நன்கு"**

***(இனி.நா.2)***

எனும் பாடலில் ஒத்த கருத்துடைய கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்தல் இன்பம் பயக்கும். அதுபோலவே செல்வம் மிகுதியாக உடையவன் அதன் நிலையாமையை உணர்ந்து தர்மம் செய்வதும், இந்த யாக்கை (உடம்பு) முதலியவற்றின் நிலையாமையை உணர்ந்து அதன்மீது கொண்ட பற்றினை விட்டு வாழ்வதும் இன்பத்தைக் கொடுக்கும் என்கிறது. இதேபோல் நாலடி.1, நான்மணி. 43, இனி.நா.24, இன்.நா.4, திரி.68, முதுமொழிக்காஞ்சி.3, 391, இன்னிலை.45, சிறுபஞ்.24 ஆகிய பாடலடிகள் நிலையாமையை எடுத்துரைக்கிறது. மேலும், செல்வம் நிலையாமை நால.2, 8, இளமை நிலையாமை நால. 11, 20, யாக்கை நிலையாமை நால.21, 23, 24, 29 ஆகிய பாடலடிகள் வாயிலாக நிலையாமையை அறியமுடிகிறது.

நிலையாமையை மனிதரகளாகிய நாம் உணர்ந்து உலகப்பொருட்களின் மீது வைக்கும் பற்றைத் துறந்து அருள் நெறியாலும் அன்பு நெறியாலும் மண்ணுலகில் சிறந்து வாழ்ந்து மறுமையில் வீட்டுலகை அடையவும் சிந்தித்து செயல்படவேண்டும். நாம் கற்பதோடு நில்லாமல் மனதில் இருத்தினால் நாமும் நலமோடும் வளமோடும் வாழ்ந்து வருகின்ற நம் தலைமுறைக்கும் வழிகாட்டியாகவும் திகழலாம் என்பதை எடுத்துரைக்கிறது.

**நட்பு:-**

மனிதன் வாழ்வாங்கு வாழ உதவும் உறவுகளுள் தலையாயது நட்பு. நட்பு என்பதன் வேர்ச்சொல் 'நள்' என்பதாகும். இதற்கு நெருங்குதல் என பொருள் உரைப்பர். நட்பு என்பது உறவு, சிநேகம், சுற்றம் என்று நா.கதிரைவேற்பிள்ளை அகராதி குறிப்பிடுகிறது. உள்ள மொத்த எண்ணமும் உணர்வும் செறிந்து பிணைந்திருத்தலை நட்பு என்கிறோம். இதன் ஆழத்தை உணர்ந்தே ஐந்து அதிகாரங்களாக்கியுள்ளார் வள்ளுவர். நட்பு மிகப்பெரும்பான்மை பழக்கத்தால் வருவது. உதவும் பண்பால் வளர்வது, பொய் கூறாதது, புனைந்துரைக்காதது, எதிர்ப்பார்ப்பில்லாதது, எந்நிலையிலும் உடனிருப்பது, மொத்தத்தில் தன்னையே தருவது தமிழிலக்கியங்கள் அனைத்திலும் நட்பு குறித்த சொல்லாடல்கள் காணப்படுகின்றன.

மக்களுள் அமைதி வேண்டுமென்றால் அவர்களுக்குள் ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமைக்கு அவர்களிடையே நட்பு பாராட்டப்பட வேண்டும். அப்படிப்பட்ட நட்பின் இயல்புகளைக் கூறுகிறது. நட்பினரை நல்லார் உடலாகக் கொள்ளவேண்டும் என்றுக்கூறி நட்பை உயர்வாகக் கொள்பவர் நல்லார் என்பதை,

**"ஒட்டிய காதல் உமையாள் ஒரு பாலக்**
**கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே**
**விட்டாங்கலா முழமெய்யும் கொள்பவே**
**நட்டாரை ஒட்டி"**

***(பழமொழி, பா.125)***

தன்னிடம் அன்புள்ள உமையை சிவபெருமாள் தன் உடலில் ஒரு கூறாகக் கொண்டான் தம்மையடைந்த தாம்வேறு

அவர்வேறு எனும் வேறுபாடு இல்லாதவர் என்று பழமொழி கூறுகிறது. மேலும், எவரையெல்லாம் நாம் நட்பாக்கிக் கொள்ளக்கூடாது என்றும், உண்மையான நண்பர்களின் குணாதிசயங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் இனி.3, 17, 19, 34, இன்.8, 11, 25, 26, நாலடி.22, பழ.124, 129 ஆகிய பாடல்கள் வழி அறியமுடிகிறது.

உலக உயிர்களில் உயர்ந்த தகுதிக்குரியவன் மனிதன். இத்தகைய மனிதன் தான் வாழும் வாழ்க்கையில் பலவிதமான இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறான். இத்துன்ப காலங்களில் துணையாக வரக்கூடிய நண்பனும் அவன் செய்யும் நட்பும் மட்டுமே உண்மையானதாகவும் நம்பிக்கையானதாகவும் அமைவதை எடுத்துரைக்கின்றது.

**தொன்மக் கதைகள்:-**

உலக மக்களிடையே தொடர்ந்து வாய்மொழியாக வழங்கிவந்த தெய்வத்தன்மையுடைய பழங்கதைகளே தொன்மங்கள். அவை ஒரு சமுதாய மக்களின் கூட்டு முயற்சியால் உருவாகி அம்மக்களின் தோற்றம் பற்றிய கருத்துகளையும் இயற்கையிகந்த நிகழ்ச்சிகளையும் மரபுகளையும் கதை வடிவில் நிகழ்ச்சிகளாக எடுத்துரைக்கும்!

“பழமைவாய்ந்த பண்புகள் நிறைந்த நாட்டுப்பாடல்களின் வாய்மொழிக் கதை வடிவமே தொன்மம்” (ந. பிச்சமுத்து, திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ப.173) என்று பேராசிரியர் ந. பிச்சமுத்து கூறுகிறார்.

தொன்மங்கள் மனித இனத்தின் கூட்டு அடிமனத்திலிருந்து வெளிவருவன என்பதால் அவை காலந்தோறும் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலக்கியங்களில் வெளிப்பட்ட தொன்மங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இலக்கியங்களில் வெளிப்படுகின்றன.

சங்கப் பாடல்களின் காலத்திற்குப் பின்னர் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. அவற்றுள் தலையாய நீதிநூல் திருக்குறள். சங்கநூல்கள் இயற்றப்பட்ட காலத்திலேயே திருக்குறளும் இயற்றப்பட்டது. திருக்குறள் காமத்துப்பாலில் ‘அலர் அறிவுறுத்தல்’ என்னும் அதிகாரத்தில்,

**“கண்டது மன்னும் ஒருநாள் அலரமன்னும்**

**திங்களைப் பாம்புகொண் டற்று”**

***(அதி.115, குறள்.6)***

என்ற குறளில் சந்திரகிரகணம் பற்றிய தொன்மம் வந்துள்ளது. காதலர்களின் ‘களவு ஒழுக்கம்’ யாவர்க்கும் தெரியவரலாயிற்று. பற்பல இடையூறுகளாலும் அல்லகுறியானும் தலைவியை எய்தப் பெறாத தலைவன் சிறைப்புறத்தானாக, தலைவி தோழிக்குச் சொல்லி, அதன்வழி அவனை அறிவுறுத்தியது, வரைவுகடாயதுறையின்பாற்படும் இக்குறள். தலைவி தலைவனைக் கண்ணுற்றது ஒருநாள்தான். அதனால் ஏற்பட்ட அலரை அவனுக்கு அறிவுறுத்த வந்த தலைவி வானத்தில் ‘திங்களைப் பாம்பு பற்றிக் கொண்டது’ உலகு எங்கும் பரந்தது போன்று அவ்வூரில் அலர் பரவியது என்று உவமம் வாயிலாகச் ‘சந்திரகிரகணம்’ பற்றிய தொன்மத்தைக் கையாண்டு அதனால் குறளின் பொருளைத் தெளிவாக விளக்குவதனைக் காணமுடிகிறது.

நாலடியாரில் ‘காமநுதலியல்’ என்னும் அதிகாரத்தில் இறுதிப்பாட்டில் தொன்மம் பொதிந்து காணப்படுகிறது. தலைவன் பொருள் தேடத் தலைவியைப் பிரிந்தனன், பிரிவாற்றாமையால் வருந்திய தலைவி, தன் தோழியை நோக்கி, ‘மன்மதன் தன்மேல் மலர் அம்பு விடுத்தும் அவனை எரித்தபின்பும் இரதி அறியும்படி உயிர்கொடுத்த அதையும் வளர்த்த காகமும், சந்திரனை விழுங்கி உமிழ்ந்த பாம்பும், பிறந்தபோதே தன்னைக் கொல்லாமல் வளர்த்த தாயும் குற்றமுடையவர் ஆயினும் குற்றம் அற்றவர்!’ என்று தலைவன் பிரிந்தவழியே தனக்குக் குற்றம் வந்ததாகக் கூறுவாள் தலைவி. தான்படும் பிரிவுத் துன்பத்தைப் பார்க்கும்போது தன் தாய் தன்னை வளர்த்தது தவறு என நயமாகக் கூறியதை,

**“கண்மூன்று உடையானும் காக்கையும் பையரவும்**

**என்ஈன்ற யாயும் பிழைத்தாதென் -**

**பொன்னீன்ற**

**கோங்கரும் பன்னமுலையாய்! பொருள்வயின்**

**பாங்கனார் சென்ற நெறி**

***(நாலடியார், பா.400)***

என்ற பாடலில் தொன்மம் பயின்று அணி செய்தல் கண்டு இன்புறுத்தக்கவையாகும்.

பழமொழியின் ஒரு பாடலில்,

**"ஓட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்**

**கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே**

**விட்டாங் ககலா முழுமெய்யும் கொள்பவே**

**நட்டாரை ஒட்டி யுழி"**

***(பழமொழி, பா.124)***

என்று உமையம்மையை ஒருபாகத்தே கொண்ட சிவபெருமானை உமையொரு பாகனை நல்லநட்பிற்கு உவமமாகக் கூறியிருத்தலைக் காணமுடிகிறது.

ஐந்திணை ஐம்பதில் முல்லைத் திணையைச் சார்ந்த,

**"மல்லரக் கடந்தான் நிறம்போன்(று)**
**இருண்டெழுந்து**

**செல்வக் கடம்பமர்ந்தான் வேல்மின்னி – நல்லாய்**

**இயங்குஎயில் எய்தவன் தார்பூப்ப ஈதோ**

**மயங்கி வலனேரும் கார்"**

***(ஐந்.ஐம்.முல்லை, பா.1)***

என்ற பாடலில் மல்லர்களை வென்ற திருமாலின் கருநிறம் போன்று இருள்பரவ, முருகப்பெருமானின் வேல்ஒள போன்று மின்னல் தோன்றியது. இயங்குகின்ற முப்புரங்களை எய்து அழித்த சிவபிரானின் மாலையான கொன்றைமலர் பூப்பக் கார்மேகம் வலமாகச் சுழன்று எழுந்தன என்று இவ்வாறு 'கார்காலம்' வந்தமையைத் தோழி தலைவனுக்குத் தெரிவித்ததாக வருவது தொன்மங்கள் பயின்று வந்தமைக்கு எடுத்துக்காட்டாகும்.

இதன் வினை இஃதென கதைகளின் மூலம் தொன்மம் கண்டு அதைத் தமது வாழ்வியலோடு விதைத்துக் கொண்டனர் அன்றைய மக்கள். அக்கதைத் தொன்மம் மரமாய் இன்றும் நமக்கு நிழல் தருவது இத்தொன்மங்களே எனில் அது மிகையல்ல.

திருமால், மூன்றடியில் உலகளந்து, மாவலியின் செருக்கடக்கிய கதையை,

**"........... அடியினால்**

**முக்கால் கடந்தான் முழுநிலம்" (நான்மணி, பா.2)**

**"கண்ணகல் பிராளம் அளந்ததூவும்"**
**(திரிகடுகம், கடவுள் வாழ்த்து)**

**"ஆவும் எனக்கு எளிது என்று" என்றும்**

**"மிக்கு நீர் பெய்கிழர் தான்" என்றும்**

**"ஊர்ந்து உலகம் தாவின" (பழமொழி, பா. 183)**

இக்கதையைத் தொன்மமாய் விழாவாகத் தமது வாழ்வியலோடு மக்கள் இன்றும் வழங்கி வருவது நினைக்கத்தக்கது.

நீதியானது எவ்வாறு இருக்க வேண்டும் அது எவ்வழியில் செல்லும் என்பதை மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்காலில் ஊர்ந்த கதையை,

**"கறவைக் கன்று ஊர்ந்து தானைத்**

**தந்தையும் ஊர்ந்தான்"**

***(பழமொழி, பா.242)***

எனவும், கரிகாற்சோழன் நீதி வழங்கியதை,

**"உரைமுடிவு காணான் படும்"**

என்றும், பொற்கைபாண்டியன் கதையை,

**"தவற்றை**

**நினைத்து தன் கைகுறைத்தான்"**

***(பழமொழி. பா.76)***

எனத் தொன்மங்களாய் எண்ணி வாழ்ந்தது இவர்தம் தனிச்சிறப்பு. ஈகை தமிழர் ஈகை ஈகையையும் கதையின் வடிவில் தொன்மங்களாய் மாற்றித் தம் வாழ்வோடு நிலை நிறுத்திக் கொண்டனர் தமிழர், பாரி முல்லைக்குத் தேர்ந்த கதையையும்,

**"முல்லைக்குத் தேரும்"** பேகன் மயிலுக்குப் போர்வை வழங்கிய கதையையும் அறிய முடிகிறது.

**"மயிலுக்குப் போர்வையும்"**

***(பழமொழி. பா.74)***

மக்கள் தம் வாழ்வோடு இரண்டறக் கலந்தது அவர்தம் நம்பிக்கை அன்று முதல் இன்றுவரை சில நம்பிக்கைகள் தொன்மங்கள் நம்மைத் தொடர்ந்து வருவது எண்ணத்தக்கது. அத்தகைய நம்பிக்கை சார்ந்த தொன்மங்கள் இன்னிலை-3, நான்மணி-71, ஐ.ஐம்பது-43, பழ-35, ஆசா-41, ஐ.ஐ.-39, திணை.நூ-80, ஐந்.எழு-39, கைந்நிலை-18 ஆகிய பாடல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

தமிழர் சமூகம் இன்று முதன்மையாய் முன்னிறுத்தப்படுவதற்கு அன்றுமுதல் நம்மைத் தொடர்ந்து வரும் தொன்மங்களே என்பது மறுக்க முடியாத உண்மை. வாழ்ந்த வாழ்விற்கும், வாழும் வாழ்விற்கும், இனி வாழப்போகின்ற வாழ்விற்கும் இலக்கணம் வகுப்பது இத்தொன்மங்களே. இதன்வழி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெறப்பட்ட தொன்மங்கள் மறைந்த ஒரு சமூகத்திற்கும், மலரப்போகும் சமூகத்திற்கும் இடையே இணைப்பாய் இருப்பதைக் காணமுடிகிறது.

இக்காலப் புனிதமான மற்றும் நம்பகத்தன்மை மிகுந்த காதலுக்கு முன்வழிகாட்டியாக, வாழ்வியல் ஆதாரமாக சங்கமருவியகாலக் காதல் விளங்குவதைக் காணமுடிகிறது. நம் நாடு வீரத்தின் விளைநிலமான சங்கமருவியகாலப் போர்வாழ்க்கையை இன்றைய இந்தியாவின் இளையத் தலைமுறையினர் அறிந்து வீரமுடனும், விவேகமுடனும் நம் நாட்டை வெற்றிப் பாதையில் நடத்திச் செல்லவேண்டும் என்பது நோக்கமாக அமைவதை வலியுறுத்துகிறது. அவலத்தின் ஆழத்தை விளக்கும் பகுதியாக பதினெண் கீழ்க்கணக்குப் பாடல்கள் அமைவதைக் காணமுடிகிறது. தொன்மம் என்பது பலரது மீவியல்புக் கற்பனை வளத்தில் பிறந்து, பழஞ்சிற்பத்தில் அவ்வப்போது மாற்றங்களும் பெற்று, நம்பிக்கை வேருடன் காலங்காலமாகத் தொடர்ந்து இன்றும் உயிர்ப்புடன் திகழ்வதைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

**பார்வை நூல்கள்:-**


1. நீல.பத்மநாபன், என் எழுத்து, கசடதபற, டிசம்பர்-1971.
2. சு.பாலச்சந்திரன், இலக்கியத்திறனாய்வு, பாரிநிலையம், சென்னை, 1976.
3. தி.சு.பாலசுந்தரம் பிள்ளை, சங்க இலக்கிய இன்கவித்திரட்டு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
4. நா.சுப்பு ரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், பாரிநிலையம், சென்னை, 1976.
5. ந.பிச்சமுத்து, திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், சக்தி வெளியீடு, சென்னை, 2002.
6. நாவலர் சோமசுந்தர பாரதியார், தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 2003.

# அகத்திணையில் பாணர்

*த.காந்தி கௌசல்யா, *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ந.க.ம கல்லூரி.*

பாணர்கள் என்போர் பாடும் கலைஞர்கள். இவர்கள் பல வகையான இசைக்கருவிகளை முழக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று பாடல்கள் பாடி வாழ்ந்ததை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பாணர்கள் தம் மனக்கருத்தினைப் பாடல்களாகப் பாடுவர். இவர்கள் மனக்கருத்தினைச் செம்மையான முறையில் எடுத்துரைக்கும் சொல்வளமும், பாடல்களை இனிமையுடன் பாடும் இசையறிவும், கருவிகளைத் தக்கவாறு இசைக்கும் திறமையும் கொண்ட பல்துறை அறிவினைப் பெற்றவர்கள் என்பதைச் சக இலக்கியங்களின் வழி காணமுடிகிறது.

**பாணர் சொல் விளக்கம்**

பாணர் என்ற சொல் 'பண்' என்ற வேர்ச்சொல்லிருந்து பிறந்தது. பண் எனும் சொல்லின் முதல் நீண்டு, 'அர்' எனும் பலர்பால் ஈறு பெற்று பாணர் என்றாயிற்று. பண் இசைப்போர் பாணர் எனக் காரணப்பெயர் பெற்றனர்.

"பாணர்கள் ஒரு தனி சாதி. ஊர்கள் தோறும் சென்று வீரர்களையும் மன்னர்களையும் புகழ்ந்து பாடுவது இவர்தம் தொழில்" (www.wikitionary.org) என்று பாணர் என்பதற்கான விளக்கத்தை இணையத்தில் காணமுடிகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, "யாழ் முதலிய இசைக்கருவிகளை இசைத்துப் பாடும் கலைஞன்" (ப.933) என்று பாணன் என்ற சொல்லிற்குப் பொருள் தருகிறது. இச் சொல்லிற்கான பொருளை வாழ்வியல் கலைக்களஞ்சியம், "சககால இசைக்கலைஞருள் ஒருவன் பாணன். இவன் பண் இசைக்க வல்லவன். பாண் என்றும் பாணன் என்றும் பெயர் பெற்றான். சககால மன்னர்கள் பாணர்களைப் போற்றி இசை முதலிய கலைகளைப் பாதுகாத்தனர்" (ப.333) என்றும் "தமிழ்நாட்டில் இசைக்கலையில் பண்டுதொட்டு ஈடுபட்ட மரபினராகப் பாணர் விளகினர். பண் இசைப்பவன் பாணன் எனக் குறிப்பிடப்பெற்றான்" (தொகுதி-12ஃ ப.329) என்றும் விளக்கமாக எடுத்துரைக்கின்றது.

அக இலக்கியங்களில் பாணரின் நிலை சற்று தாழ்ந்ததினை அறியமுடிகின்றது. பாணர்கள் தங்கள் வறுமையின் காரணமாய் புரவலர்களைச் சார்ந்து வாழும் நிலையை அடைந்தனர். புரவலர்களின் மீதுள்ள பற்றுள்ளத்தால் அவர்களின் தவறுகளையும் பெரிதுபடுத்தாது புகழ்ந்து, தவறினை மறைத்துப் பொய்யுரைத்து சமுதாயக் கீழிரக்க நிலைக்கு வந்துள்ளனர் என்பதை சக இலக்கிய அகப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது. அகத்தில் பாணரின் நிலையைப் பற்றி ஆராய்வதற்கு அடித்தளம் இட்டுத் தருபவர் தொல்காப்பியரே.

**அகத்தில் பாணர்கள்**

தொல்காப்பியர் கற்பி கூற்றுக்குரியோர் பன்னிருவரைக் குறிப்பிடும்போது பாணனுக்கே முதன்மை இடம் கொடுத்து கூறியுள்ளார் என்பதை,

**"பாணன் கூத்தன், விறலி பரத்தை**
**யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்**
**பேணுதகு கிளந்த அறுவரொடு தொகைஇத்**
**தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்"**

***(தொல்.பொருள்.செய்.491)***

என்ற நூற்பாவின் வழி அறியமுடிகின்றது. தலைவன் தலைவி இடையே பாணர்கள் ஊடல் தீர்க்கும் வாயில்களாகச் செயல்பட்டுள்ளனர். வாயில்களில் ஒருவராகப் பாணர்கள் குறிக்கப்பெறுவர் என்பதையும்,

**"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பட்டி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"**

***(தொல்.கற்பியல்,52)***

என்ற தொல்காப்பிய நூற்பாவின் வழி அறியலாம். தலைவன், தலைவி உறவிற்குப் பாலமாகப் பாணன் எனும் கலைஞன் பல நிலைகளிலும் துணை செய்துள்ளான்.

பாணர்கள் வள்ளல்களையும், புரவலர்களையும் ஒட்டி வாழ்ந்தனர். இவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாகவும் பாணர்கள் இருந்தனர் என்பதும் உறுதி. வள்ளல்களின் செல்வத்தின் காரணமாக சிலருக்கு பரத்தமை ஒழுக்கம் ஏற்பட்டிருப்பின் அவர்களின் உரிமை மனைவியரின் ஊடலினைத் தீர்க்கும் வாயில்களாகப் பாணர்களைப் பயன்படுத்தியுள்ளனர். பாணர்கள் ஊடல் தீர்க்கத் தலைவர்களால் அனுப்பப்படும்போது அவர்கள் தலைவியிடம் பொய்யும் வழுவும் கலந்து பேசுவர் என்பதை,

**"ஒருநின் பாணன் பொய்யன் ஆக,**
**உள்ள பாணர் எல்லாம்**
**கள்வர் போல்வர், நீ அகன்றி சினோர்க்கே"**

***(குறுந்.127:4-6)***

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன கள்வர் என்றே மகளிர் நினைக்கின்றனர் என்று கூறுகின்றாள்.

ஐகுறுநூற்றில் நெய்தற்திணையின் நான்காம்பத்து 'பாணற்கு உரைத்த பத்து' ஆகும். இப்பத்துப் பாடல்களும் தலைமகனுக்கு வாயிலாகும் பாணனை நோக்கிக் கூறுவதாக அமைந்தவையாகும். இவற்றுள் தலைவனின் குணங்களை எடுத்துரைத்த பாணன் பொய் கூறினான் என்பதால் பாணனை,

**"நாண் இலை மன்ற, பாண!"** ***(ஐ.136:1)***

என்று தலைவி விளிக்கிறாள். மேலும் தலைவி தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைத் தடுக்க முடியாத பாணனை நோக்கி, நீ அன்பற்ற கடிய சொற்களால் இடித்துரைத்து என்னோடு தலைவனைக் கூட்டுவிக்க மறந்தனை எனவே நீ பண்பில்லாதவன் என்கிறாள். இதனை,

**"பண்பு இலை மன்ற, பாண! இவ் ஊர்**
**அன்பு இல கடிய கழறி,**
**மென்புலக் கொண்கனைத் தாராதோயே!"**

***(ஐ.138)***

என்ற பாடல் விளக்குகின்றது. இப்பாடலின் வழி தலைவியிடத்து வாயில் நேர்வதேயன்றி தலைவனிடத்து அவன் தலைவியைப் பிரிந்திருத்தல் தவறென்று எடுத்துரைக்கும் பணியையும் பாணர் செய்திருப்பர் என்பதை உய்த்துணரலாம். அவ்வாறு இடித்துரைக்கும் வகையிலும் ஐகுறுநூற்றின் முல்லைத்திணையின் எட்டாவது பத்தான பாணன் பத்தில் ஒரு பாடல் அமைந்துள்ளது.

**"நினக்கு யாம் பாணரேம் அல்லேம்; எமக்கு**
**நீயும் குருசிலை அல்லை மாதோ**
**நின் வெம் காதலி தன் மனைப் புலம்பி,**
**ஈர் இதழ் உண்கண் உகுத்த**
**பூசல் கேட்டும் அருளா தோயே!"** ***(ஐ.480)***

இப்பாடலில், தலைவன் தலைவியைப் பிரிந்து பாசறைக்கண் உறைகிறான். அவன் பிரிவினால் தலைவியின் வருத்தத்தை அறிந்திருந்தும் அவளுக்கு இரங்கானாய் இருத்தலை கடிந்து

"தலைவ, நினக்கு இனி யாம் பாணராக இருத்தலை விரும்பவில்லை. உன்னை இனி எமது தலைவனாகவும் கருதமாட்டோம்" என்று பாணன் கூறுதைக் காணமுடிகின்றது.

பாணனின் பொய்யுரைக்கும் தன்மையை சில பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**"பாணன் பொய்யன் பல சூளினனே"** ***(ஐங்.43:4)***

என்ற ஐகுறுநூற்று வரி பாணன் பல சூளுரைகளை உரைத்துப் பொய்ப்பவன் என்பதை விளக்குகின்றது.

**"யாரினும் இனியன்; பேர் அன்பினனே**

**.....................................................**

**யாணர் ஊரன் பாணர் வாயே"** ***(குறுந்.85:1-5)***

என்ற குறுந்தொகைப் பாடல் தலைவன் பேர் அன்பினை உடையவன் என்று பாணன் தன் வாயால் பொய் கூறியமையை தோர் கூறுவதாக அமைந்துள்ளது. மேலும், பாணன் பொய் கூறுவன் எனும் கருத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் நற்றிணையும்,

**"கை கவர் நரம்பின் பனுவற் பாணன்**
**செய்த அல்லல் பல்குவ - வை எயிற்று,**
**ஐது அகல் அல்குல் மகளிர்! இவன்**
**பொய் பொதி கொடுஞ் சொல் ஓம்புமின் எனவே"**
***(நற்.200:8-11)***

என்ற வரிகளில் விளக்குகின்றது. பாணனின் பொய்யிலிருந்து மகளிரை ஓம்பும் வகையில் தோழி கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**"யாணர் ஊர! நின் பாண்மகன்**
**யார் நலம் சிதையப் பொகுமோ, இனியே!"**
***(ஐ.49:3&4)***

புதிய வருவாயையுடைய ஊருக்குத் தலைவனே இனி உன் பாணன் யாருடைய நலனைச் சிதைக்கும் வண்ணம் பொய் கூறுவான் என்று தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

பரத்தையருடன் தலைவனை இணைக்கும் பாலமாக பாணர் செயல்படுவதாகக் கருதி பாணனை தலைமகளும் தோர்யும் இகர்ந்து உரைப்பதாகவும் நகையாடுவதாகவும் பாடல்கள் அமைந்துள்ளன.

**"தண்துறை ஊரன் திண்தார் அகலம்**

**வதுவை நாள் அணிப் புதுவோர்ப் புணரிய**

**பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்**

**புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி, யாழ்இட்டு,**

**எம் மனைப் புகுந்தோனே"** ***(அகம்.56:8-12)***

என்ற பாடல் அடிகளில் தலைவனின் மாலையணிந்த வலிய மார்பினில் மணக்கோல கொண்ட பரத்தையரைக் கூட்டுவிக்கும் பொருட்டுப் பாணன் வந்தான். வந்தவன் தெருவில் ஈன்ற அணிமையையுடைய பசு தன்னைப் பாய்தமையாற் கலக்கமுற்று யாழினைக் கீழே போட்டுவிட்டு நம் வீட்டின் கண் புகுந்தான் எனத் தலைவி எள்ளி நகையாடுவதாக விளக்கப்பட்டுள்ளது. பாணனின் வருகையை தலைவியர் விரும்பவில்லை என்பதை,

**"............................நின் பெண்டிர்**

**இல்லின் எழீஇய யாழ்தழீஇ, கல்லா வாய்ப்**

**பாணன் புகுதராக் கால்"** ***(கலி.70:21-23)***

என்ற அடிகள் விளக்குகின்றன. பரத்தையர் இல்லத்திலே வாசித்த யாழைத் தழுவிக்கொண்டு, வாயிலாய் திரிகின்றது தவிர, இசையைக் கல்லாத வாயினை உடைய பாணன் என்று தலைவி பாணனை இகழ்ந்து கூறுகின்றாள்.

இவ்வாறு வாயிலாக வரும் பாணர்களை இகழ்ந்து கூறும் மரபினை பிற்கால சிற்றிலக்கியங்களிலும் காணமுடிகின்றது.

**"ஈட்டு புகழ் நந்தி பாண நீ எங்கையர் தம்**

**வீட்டிலிருந்து பாட விடிவளவும் கேட்டிருந்தோம்**

**பேயென்றாள் அன்னை பிறர் நரியென்றார்**

**தோழி நாயென்றாள் நீ என்றேன் நான்"**

***(நந்தி. 106)***

என்ற நந்திக்கலம்பகப் பாடல் அடிகளும் பாணனின் தூதுரை கேட்டு அவனை இழித்துரைப்பதாகவே அமைந்துள்ளது. ஆகவே அகத்திணையில் பாணரின் நிலை புறத்திணையைக் காட்டிலும் தாழ்ந்திருந்ததை இக்கட்டுரையின் வாயிலாக உணரமுடிகிறது.

# சு. தமிழ்ச்செல்வி புதினங்களில் காணலாகும் வறுமை நிலை

*நெறியாளர், முனைவர் சி. வாசுகி, *தமிழ்த்துறைத் தலைவர், தமிழ் முதுகலை மற்றும் உயராய்வு மையம், அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, சின்னக்கலையமுத்தூர், பழனி - 624615.*
*ஆய்வாளர், மு. வசந்தி , *பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.*

மனித வாழ்க்கையில் மிகவும் கொடிய நோய் வறுமை. வறுமையில் இருப்பவர்கள் வாழ்க்கையின் ஆழத்தையும் அர்த்தத்தையும் நன்கு உணர்ந்து இருப்பார்கள். **“கொடிது கொடிது வறுமை கொடிது”** என்று ஔவையார் குறிப்பிடுகின்றார். அதே போல் வள்ளுவரும்.

**“இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது”** **[குறள் - 1041]**

என்கிறார்.

ஒருவனுக்கு வறுமையைப் போன்று கெடுதல் தருவது எது என்றால் வறுமையே ஆகும். வறுமைக்கு ஒப்பு வறுமையே என்கிறார்.

**வறுமையும் வாழ்க்கையும்:**

மனிதன் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளாக உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகியவை இல்லாத நிலையே வறுமையாகும். “வறுமை தனிமனிதப் பிரச்சனை; அன்று சமூகப் பிரச்சனை” என மா. இராமலிங்கம் குறிப்பிடுகிறார். மக்களிடையே கல்வி, கேள்வி, ஞானம் இல்லாமையே வறுமைக்கு அடிப்படைக் காரணமாகும்.

**“குப்பைக் கீரை கொய்கண் அகைத்த**
**முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு, உப்புஇன்று,**
**நீர் உலையாக ஏற்றி, மோரின்று**
**அவிழ்ப் பதம் மறந்து, பாசடகுமிசைந்து”** **[புறம்-159]**

என்றப் புறப்பாடல் குப்பையில் விளைந்த கீரையைப் பறித்து வந்து உப்பின்றி நீரை உலையாகக் காய்ச்சி, மோரின்றி சோறாகிய உணவை மறந்து பசியில் இலையைத் தின்று வாழ்ந்த வறுமை நிலையைப் புலப்படுத்துகின்றது.

**ஆடுநனி மறந்த கோடுஉயர் அடுப்பின்**
**ஆம்பி பூப்ப, தேம்பு பசி உழவா** **[புறம்-164]**

என்ற புறப்பாடல்.

சமைக்கும் அடுப்பில் காளான் பூத்துக் கிடக்கிறது என்று கூறுவதிலிருந்து மக்களிடையே வறுமைநிலை எந்த அளவுக்கு பாதிப்பை உண்டாக்கியுள்ளது என்பதை அறியலாம்.

சு.தமிழ்ச்செல்வி தம் படைப்பில் புலப்படும் வறுமையைப் புலப்படுத்துகின்றார். மாணிக்கம் புதினத்தில் செல்லாயி கேழ்வரகை மாவாக அரைத்துக் கொண்டிருக்கும் போது குழந்தைகள் பசிதாங்கமுடியாமல் மாவை அள்ளி உண்கின்றனர் அவர்களிடம், "அதான் அரசிடென்ல இன்னஞ்செத்த நேரத்துகுள்ளெ கூழு காச்சிடுவேன். அப்புறம் நீங்க ரெண்டியரும் எவ்வள வேணுன்னாலும் குடிக்கலாம்...." என்று கூறுகின்றார். அக்குழந்தைகள் இப்ப அப்படித்தாஞ் சொல்லுவெ. அப்புறம் இப்ப ஒரு தம்ளாரு போரும்....மீதிய ராவைக்குக் குடிக்கலான்னு மூடி வச்சுருவ..... என்று கூறுகிறார்கள். இதன்வாயிலாக குழந்தைகளுக்கு ஒருவேளை உணவுகூட முழுமையாகக் கொடுக்க முடியாத சூழல் நிலவுவதை செல்லாயி நினைத்து வருந்துகிறாள். இவ்வாறு ஓர் எளிய ஏழ்மைக் குடும்பத்தின் வாழ்வியல் சிக்கலையும் மீனவ மக்களின் வறுமை நிலையையும் எடுத்துக் காட்டுவதாக மாணிக்கம் புதினம் அமைகின்றது. இப்புதினத்தின் மூலம் செல்லாயி தன் குடும்பத்தைக் காப்பாற்றப் பல்வேறு இன்னல்களைச் சந்திக்க நேரிடும் சூழலை அறிய முடிகின்றது.

அளம் புதினத்தில் சுந்தராம்பாள் மூன்று பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு வறுமையில் வாடுகின்றாள் அதனால் காடுகளில் கிடைக்கும் கீரைகள், கிழங்குகள், பழங்கள் ஆகியவற்றை உணவாக உண்டு வாழ்கின்றனர். அதையும் வயிறாரக் கொடுக்காமல் பலவேலைகளைப் பகிர்ந்து கொடுக்கின்றனர். குழந்தைகளுக்கு மேலாடை வாங்கிக் கொடுக்க வசதியில்லாமல் இருக்கின்றாள். இருக்கும் இருப்பிடமும் அடிக்கடி புயலால் அடித்து செல்லப்படுகிறது. அன்றையக் காலகட்டத்தில் பெண்கள் பூப்படைந்தவுடன் சில மாதங்களில் திருமணம் செய்து வைக்கின்றனர். ஆனால் சுந்தராம்பாளின் பெண் குழந்தைகள் மூவரும் கருப்பாக இருப்பதால் யாரும் பெண் கேட்டு வர மறுக்கிறார்கள். சுந்தராம்பாள் வசதியாக இருந்திருந்தால் நிறம் பெரும் குறைவாகத் தெரிந்திருக்காது. அப்பெண்களுக்குத் திருமணம் நடந்திருக்கும். ஆனால் அவர்கள் குடும்பத்தில் வறுமை நிலவுவதால் அவர்கள் பல்வேறு வகையில் இன்னல்கள் அனுபவித்து வருகிறார்கள்.

கண்ணகி புதினத்தில் கண்ணகியிடம் வேலை செய்யும் பெண்கள் வறுமைநிலைக்கு ஆட்பட்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் வேலைக்குச் சென்றால்தான் குழந்தைகளைக் காப்பாற்ற முடியும் என்ற சூழ்நிலையில் இருக்கின்றார்கள்.

வறுமைநிலை காரணமாக மனிதன் சோற்றுக்கு வாடும் நிலையைக் கண்டு பாரதியார்,

**"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்**
**வெறுஞ் சோற்றுக்கோ வந்ததிந்த பஞ்சம்**
**தனியொருவனுக் குணவிலை யெனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்"**

என்று மனம் நொந்து உணர்ச்சி பொங்கப் பாடுகின்றார்.

ஓலைக் குடிசையைப் பார்க்கும் வைரமுத்து,

**"ஏற்றி வைத்த இருட்டின் எச்சம்**
**காற்றில் உதிர்ந்த கனவின் மிச்சம்**
**வெறுமையின் நிறைவிடம் வறுமையின் ரகசியம்"**

என்று வருந்துகின்றார். மேலும், பசியின் கொடுமைதனைச் சித்தரிக்கும் விதமாக,

**"அந்த இரவில் / நேற்று என்னையும் /**
**மனைவி மக்களையும் / வருத்திக் கொன்ற /**
**கொடிய பசிதான் / விடிந்தால் வருமே /**
**என்றே பயந்தான் / ஏழை ஒருவன்."**

என்ற கவிதை வரிகள் அமைந்துள்ளன.

ஏழை மக்கள் விடிந்து விட்டால் உணவுக்காக துன்பப்பட வேண்டும் என நினைக்கிறார்கள். ஒவ்வொரு நாளையும் கழிக்க ஏழை மக்கள் அரும்பாடுபடும் அவல நிலையை இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. இவர்களின் சூழல் போன்றே இன்னும் பல்வேறு குடும்பங்களில் வறுமை நிலவுகின்றது. மக்களிடையே ஏற்றத்தாழ்வு

இல்லாமல் இருந்தாலே சிறிது வறுமை குறையும். சோம்பேறித்தனம் குறைந்தால் வறுமை குறைய வழி ஏற்படும். மனிதன் தன் முகத்திறமையையும் பயன்படுத்தினால் தன் சொந்தக் காலில் நின்று வறுமையைப் போக்கலாம்.

**வறுமையில் செம்மை:**

மக்கள் தான் துன்பப்பட்டாலும் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்கின்றனர். ஒவ்வொருவரும் தான் வறுமையுற்ற காலத்திலும் பிறருக்கு உதவுவதைப் பெரும் பாக்கியமாகக் கருத வேண்டும். வள்ளுவப் பெருந்தகை

**"இலனென்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலனாகும் மற்றும் பெயர்த்து" [குறள்-205]**

என்று கூறுகிறார்.

வறுமை காரணமாக தீய செயல்களைச் செய்யாதீர். செய்தால் மேலும் வறுமையே தொடரும். ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியில்லாதவனும் நெறி தவறி தீயசெயலில் இறங்கக் கூடாது. வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும். அதே போன்று புறநானூற்றுப் பாடல்,

**"வரகும் திணையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்காள் உணக் கொளத் தீர்ந்தெனக்**
**குறித்தமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து" [புறம் - 333]**

என்ற பாடல் மூலம்,

வரகும் திணையும் இரவலர்க்கு ஈந்து தீர்ந்தன. வேறு வகையில் பொருள் பெற வழியில்லை. அந்நிலையில் விதைக்கு இருந்த திணையை உரலில் இட்டுக்குத்தி மகளிர் விருந்தளித்தனர் என்று கூறுகின்றது. வறுமையிலும் மற்றவர்களுக்கு உதவும் நற்குணம் பெற்றவர்களாக அக்கால மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்ற கருத்தை இப்பாடல் உணர்த்துகின்றது.

புறநானூற்றுப் பாடல் குறிப்பிட்டது போன்றே மாணிக்கம் புதினத்தில் செல்லாயிக்கு உணவு சமைக்கு பாத்திரங்கள், உணவுப்பொருட்கள் என இருப்பவை அனைத்தையும் புஷ்பவல்லி கொடுத்து உதவுகிறாள். அவள் வீட்டில் அரிசி இல்லை. இரண்டு நாட்களாக சோளமும், கேழ்வரகும் கொடுத்து களிக் கிண்டி உண்ணச் செய்தாள். தற்ச்சமயம் சோளம் மட்டும் தான் அவளிடம் இருக்கிறது. அதையும் கொடுத்துச் களி செய்து உண்ணச்செய்கிறாள். இவ்வாறு தன் வீட்டில் அடுத்த வேளை உணவுக்கு இருக்கும் சோளத்தைக் கூட பகிர்ந்து கொடுக்கும் நற்குணம் கொண்டவளாகப் புஷ்பவல்லி இருக்கிறாள்.

அதேபோல் அளம் புதினத்தில் சுந்தராம்பாள் திகழ்கின்றாள். மூன்று பெண்பிள்ளைகளை வைத்துக் கொண்டு பொருளாதார ரீதியாகத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அச்சமயத்தில் மீனாட்சி வருகிறாள். "இருக்குறத்த ஆளுக்கு ரெண்டுவா நெறந்து திம்பம் என்று கூறிக்கொண்டே ....பழைய சோத்தை இரண்டு ஆப்பை மோந்து போட்டு உப்பு போட்டுக் கொடுத்தாள்". இவ்வாறு சுந்தராம்பாள் தனக்கு வைத்திருந்த பழைய சோற்றில் தண்ணீர் ஊற்றி இருவரும் பகிர்ந்து உண்கின்றனர். தன் குடும்பம் உணவுக்குக்கூட வழியில்லாமல் இருக்கின்ற சூழ்நிலையில் மீனாட்சிக்கு முகம் சுளிக்காமல் உதவி செய்யும் நற்பண்பைப் பெற்றவளாக சுந்தராம்பாள் திகழ்கின்றாள்.

வறுமையின் பிடியில் வாழும் மக்கள் நல்எண்னங்களைப் பெற்றவர்களாக உள்ளனர். அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது வசதியாக வாழும் மக்களுக்கு ஓர் முன்னுதரணமாக அமைகிறது.

**வறுமையிலும் புகுந்த வீட்டின் பெருமை:**

சமூகத்தில் பல்வேறு தடைகள் ஏற்பட்டாலும் பெண்கள் புகுந்த வீட்டிற்காகத் தங்களின் உடல் உழைப்பை பணயம் வைத்து போராடி பெருமையை நிலை நிறுத்துகின்றனர்.

**"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தாதை கொழுஞ்சோறு உள்ளாள்"**
**[நற்றிணை - 110]**

செல்வக்குடியில் பிறந்த பெண் தான் புகுந்த வீட்டில் காணும் வறுமையைப் போக்கிட வேண்டி பெற்றோரின் உதவியை நாடாது வாழும் திறத்தினள்

என்பதை மேல்வரும் நற்றிணைப் பாடல் மூலம் அறியலாம்.

ஆறுகாட்டுத்துறை புதினத்தில் சமுத்திரவல்லி அருள்தாசுவைப் படிக்க வைப்பத்தற்காகப் பல்வேறு வேலைகளைச் செய்து பணம் ஈட்டி வருகின்றாள். “அப்பன் வீடு அரண்மனையா இருந்துங்கூட யாம் பொண்ணு புந்தவூட்டுக்கு அவர் சொல்ல தேடிறக் கூடாதுன்னு கருவாட்டு கூட தூத்துகுதுடி. ஆளானப்பட்ட ஆம்புளைவொளே பெத்தபுள்ளைவொள படிக்க வைக்க மலைக்கிறானுவொ, ஆம்புளதொணயில்லாத பொம்புளதான நம்ம, நம்மளால எப்படி படிக்க வைக்க முடியுமுன்ன நெனக்காம கொழுந்தன படிக்க வைக்கிறன்னு சொல்லுதுடி யாம் பொண்ணு” என்று பெருமைபட வாழ்கிறாள் சமுத்திரவல்லி. பிறந்த வீட்டில் வசதியாக வாழ்ந்தாலும் அங்கு இருந்து சிறிதும் உதவி கேட்காமல் தானே கடினமாக உழைத்து அருள்தாசைப் படிக்க வைக்கிறாள். ஒவ்வொரு பெண்களும் பிறந்த வீட்டில் உதவி கேட்டால் தன் குடும்பத்தைப் பற்றி தாழ்வாக எண்ணி விடுவார்கள் என நினைத்து புகுந்த வீட்டில் கடினமாக உழைத்துப் புகுந்த வீட்டின் பெருமையை சிறப்படையைச் செய்கின்றனர்; அதேவேளை பிறந்த வீட்டையும் பெருமை படுத்துகின்றனர்.

கண்ணகி புதினத்தில் கண்ணகியின் புகுந்த வீட்டில் ஒருநாள் உணவு இல்லாமல் அனைவரும் தூங்க முற்பட்ட போது அந்த இரவு நேரத்தில் வெகுதூரம் காட்டிற்குச் சென்று பச்சைக்கம்பை பறித்து வந்து உரலில் போட்டு உலக்கையில் இடித்து அதைக் களியாகச் செய்து அனைவருக்கும் பறிமாறுகிறாள். அதோடு ஆசைத்தம்பியின் தங்கை, தம்பியைப் படிக்க வைக்க உதவி செய்கிறாள். சகுந்தலாவின் திருமணத்திற்குத் தன்னால் முடிந்தவரை உழைத்து அவளுக்கு வேண்டியதைச் செய்கின்றாள். புகுந்தவீட்டிற்குத் தேவையானவற்றைத் தன்னால் முடிந்தவரை கடினமாக உழைத்து அக்குடும்பத்தைச் சீரும் சிறப்புமாக நடத்தி வருகிறாள்.

சமூகத்தில் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் பெண்களின் எண்ணிக்கை ஆயிரம் ஆயிரமாக வளர்ந்து கொண்டிருந்தாலும் புகுந்த வீட்டிற்க்கித் தங்களின் பெருமைகளை நிலைநிறுத்திக் கொண்டே இருக்கின்றனர். பெண்கள் வறுமையின் பிடியில் இருந்து விலகி மேலெழ வேண்டும். தங்களை புகுந்த வீட்டிற்காக முழுமூச்சாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்க்கைப் போராட்டத்தினை சு. தமிழ்ச்செல்வி ஆசிரியர் புதினங்களின் மூலம் மேற்கண்டவாறு அறியலாம்.

**பசித்தவர்களுக்கு உணவு இடும் பண்பு:**

மனிதனுக்கு வாழ்க்கையில் எந்த அளவு துன்பம் வந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் பசி என்னும் நிலையில் வருகின்ற பொழுது தன்னுடைய வறுமையைப் போக்க வேண்டிய சூழ்நிலை ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுகின்றது. பசி வந்திட வயிறே பிரதானம் என்ற மொழிக்கு இணங்க மக்களிடையே வறுமை நிலவுகின்றது. வள்ளுவர்,

**“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி” [குறள் – 226]**

என்று கூறுகின்றனர்.

பட்டினி கிடக்கும் ஒருவனது பசியைத் தீர்த்தல் வேண்டும். அதுவே அவனது பொருளைப் பாதுகாப்பாக வைக்கும் பெட்டகம் ஆகும். எல்லா நற்குணங்களையும் பசி அழித்து விடும். அப்பசியைத் தீர்த்தலாகிய அறமே அவனது செல்வத்தை அழியவிடாமல் பாதுகாக்கும் என்பது இக்குறள் தரும் விளக்கமாகும்.

மாணிக்கம் புதினத்தில் மாணிக்கமும் செல்லாயியும் வீட்டை விட்டு வெளியே வந்தபோது தேநீர் கடைக்காரப் பெண் அவர்களுக்குத் தேநீரும் இட்லியும் தங்குவதற்கு இடமும் கொடுக்கின்றாள். கையில் பணம் இல்லை என்றால் கூட தன் சூழலை பொருட்படுத்தாமல் பசி என்று வந்தவர்களுக்கு அவர்களின் பசியைத் தீர்த்து அடைக்கலம் கொடுக்கின்றாள்.

அளம் புதினத்தில் மீனாட்சியின் மருமகள் அவளுக்குச் சோறிடும் போது “மூணு பருக்கையும் மொழங்கா தண்ணியும். அஞ்சி பருக்கயும் அலமலந்த தண்ணியுமா கொணடாந்து வச்சிருப்பா” இங்கு ஒரு வயதானவர்களை

உணவுக்காக கொடுமைப்படுத்துவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஒரு மனிதன் தன் வாழ்வில் இருந்து பசியை அகற்றிக் கொள்ள போராட வேண்டியிருக்கிறது. பசி என வந்தோர்க்கு, உணவளிப்பது ஒரு பெரும் புண்ணியச் செயலாகும்.

**வறுமையில் குழந்தைகளின் ஏக்கம்:**

ஏழைக் குழந்தைகள் எப்போதும் வசதியான குழந்தைகள் உண்பது உடுப்பது என அவற்றைப் பார்த்துத் தனக்கும் வேண்டும் என நினைக்கிறார்கள்.

அளம் புதினத்தில் அஞ்சம்மாள் மற்றவர்கள் வீட்டில் தேநீர் அருந்துவதைப் பார்த்துத் தானும் அருந்த வேண்டும் என நினைக்கிறாள். இதனை "வேதாரணியத்தில வெல்லமும் தூளும் வாங்கியாம்மா? காப்பித்தண்ணி போட தப்புத்தா வூட்டுல நம்ம பெரியப்பா ஊட்டுலயெல்லாம் அடிக்கடி காப்பித்தண்ணி போட்டுக் குடிக்கிறாவொம்மா..." என்ற கூற்று உணர்த்துகின்றது. இதற்கு "காசிபணம் இருக்குறங்வொங் காப்பித்தண்ணி மீத்தண்ணிக்கெல்லாம் ஆசப்படணும் நம்மளுக்கு தெனமும் தெளுவு தண்ணி கெடச்சாப் போறாது?" என்று அம்மாவாகிய அஞ்சம்மாள் வசதி படைத்தவர்களுக்கு கிடைப்பது தங்களுக்கு கிடைக்கவில்லையே என அஞ்சம்மாள் ஏங்குவதை மேற்கண்ட கருத்துக்கள் உணர்த்துகின்றன.

கற்றாழை புதினத்தில் வரும் வளர்மதி பணக்காரவீட்டின் தோப்பில் நாவல்பழம் பறித்து உண்ண ஆசைப்படுகிறாள். அதேபோல் இப்புதினத்திலும் குழந்தைகளுக்கு தேநீர் வேண்டும் என்று நினைக்கும் போது விருந்தாளிகள் வந்தால்தான் கிடைக்கும் என்ற நிலை உருவாகிறது. வறுமையின் காரணமாகக் குழந்தைகளுக்குத் தேநீரும் தோட்டங்களில் கிடைக்கும் பழங்களும் உண்ணக்கூட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதனால் மற்ற குழந்தைகளைப்பார்த்து ஏக்கம் கொள்கின்றனர். சில ஏழைப் பெற்றோர்கள் குழந்தைகள் ஏங்கும் அளவிற்கு விடாமல் தங்களால் முடிந்தவற்றை வாங்கிக் கொடுத்து மகிழவும் வைக்கின்றனர்.

ஓர் எதிர்கால வாழ்வை நோக்கிச் செல்ல மனிதன் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. வறுமை என்னும் புனைவு ஒரு மனிதனின் வாழ்க்கையினை மாற்றமடையச் செய்கின்றது. ஒவ்வொரு நிகழ்விற்கும் அடுத்தபடியாக ஒரு பயனை மனிதன் அடைய முடியும். வறுமையின் பிடியில் வாழும் மக்களின் எண்ணங்கள் யாவும் முன்னேற்றப்பாதையை நோக்கியே செல்கின்றது. இன்றையக் காலகட்டத்தில் வறுமை அறவே அகற்றப்பட வேண்டும்.

சமூகத்தில் உன்னை நிலைநாட்டிக் கொள்ள துணிவுடன் போராடு! உன்னுடைய எதிர்கால வாழ்வை வளமாக்கிக் கொள் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து வந்தால் வாழ்வின் உச்சத்திற்கு உயரலாம்.

# விளிபு நிலை மனிதர்களின் எதிர்பண்பாடு

*முனைவர் கா. காந்தி, *பேராசிரியர் மற்று துறைத்தலைவர், தமிழாய்வுத்துறை, மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), காளிப்பட்டி – 637 501. நாமக்கல் மாவட்ட.*

## 1.0 முன்னுரை

சமூகத்தில் கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கி உள்ளவர்கள் விளிம்புநிலை மனிதர்கள். இவர்கள் தங்களின் வாழ்க்கை அடிமைத் தனத்தை இருப்பது கண்டு, தாங்களும் இந்த அடிமை நிலையிலிருந்து மீள வேண்டும் என்று எண்ணுவதே இவர்களின் நோக்கமாகும். இதனைக் கருதுகோளாகக் கொண்டு பல நாவல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் ‘மலரும் சருகும்’ என்னும் நாவலில் விளிம்பு நிலை மனிதர்களின் பிரச்சினைகளும் அவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள், கதாப்பாத்திரங்களின் பண்பாடு, எதிர்பண்பாடு தெளிவாக இந்நாவலில் விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாக விளிம்பு நிலை மனிதர்களின் பண்பாட்டில் உள்ள கதாப்பாத்திரங்களும், எதிர் பண்பாட்டில் உள்ள கதா பாத்திரங்களும் தெளிவாக இவ்வாய்வுக் கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## 1.1 விளிபுநிலை மனிதர்களின் பண்பாடு

விளிம்புநிலை மக்கள் சமூகத்தில் தாழ்ந்தவர்களாக கருதப்படுகின்றனர். இவர்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ளனர். இதனால் சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் இவர்களை அடிமைப்படுத்தி வைத்துள்ளனர். விளிம்புநிலை மனிதர்கள் பிறப்பால் தீண்டத்தகாதவர்கள் என சமூகம் அவர்களை ஒதுக்கி வைத்துள்ளது. இந்த அடிமை முறையால் இம்மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று, உயர் சாதியினர் வசிக்கும் தெருக்களில் நுழையக்கூடாது என்றும் அவ்வாறு நுழைய முற்பட்டால், காலில் செருப்பு அணியக்கூடாது என்றும் இச்சமூகம் அவர்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கிறது. மேலும் ஊருக்குப் பொதுவான கோவில்களில் அவர்கள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. ஆண்கள் மேலாடை உடுத்தக்கூடாது என்றும் அந்த இன மக்களின் குழந்தைகள் கல்வி கற்காமல் குலத்தொழில்தான் செய்யவேண்டும் என்றும், உயர்சாதியினர் வற்புறுத்துகின்றனர். பொது இடங்களில் உயர் சாதியினருக்கு எதிராக பேசக்கூடாது என்றும் இந்த விளிபுநிலை மனிதர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பலவகையான கட்டுப்பாட்டுக்குள் அடங்கி வாழ்வதே விளிம்பு நிலை மனிதர்களின் பண்பாடாக காணமுடிறது.

### 1.1.1 விளிம்புநிலை மனிதர்கள்

கல்வி, பொருளாதாரம், சமூக மதிப்பில் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் விளிம்புநிலை மனிதர்களை ஒடுக்கி வைத்துள்ளனர். அவர்களின் கட்டுப்பாட்டை மீறி தானு ஒரு மனிதனாக இந்த உலகத்தில் வாழ வேண்டும் என்பதுதான் விளிம்புநிலை மனிதர்களின் நோக்கம். இந்த நோக்கத்தைக் கருவாகக் கொண்டு தமிழ் மொழியில் பல நாவல்கள் படைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ‘மலரும் சருகும்’ என்னு நாவல்

கூலி விவசாயிகள், சிறு நிலக்கிழார்கள், புதிய தலைமுறையைச் சேர்ந்த முரண்பாடுகள் கொண்ட அறிவாளிகள், சமூக உணர்வு பெற்றுவரும் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் மௌனங்களை உடைத்து போராட்ட உணர்வோடு வெளிவரும் பெண்களை காணமுடின்றன.

இந்நாவலில் உயர்சாதிக்காரர்களைப் பார்த்து, அவர்களுக்குப் பயந்து தங்களது பண்பாட்டுச் செயல்களுள் ஒன்றான அடிமை வாழ்வினை வாழ்பவர்களே இங்கு விளிம்புநிலை மனிதர்களாக கருதப் பெறுன்றனர். அவர்களுள்

1. மாடசாமி குடும்பன்

2. ஈசாக்

ஆகிய கதாப்பாத்திரங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

### 1.1.2 மாடசாமி குடும்பனின் அடிமை வாழ்வு

மாடசாமி குடும்பன் நாவலின் தொடக்கத்திலேயே அடிமைத்தனமாக வாழ்வு வாழ்கிறான். உயர்சாதிக்காரர்கள் அடிமையாக இருக்கவேண்டும் என்று, தன்னைப் பார்த்தவுடனே தலைவணங்கி கும்புடு போடவேண்டும் என்று மாடசாமி குடும்பனை வற்புறுத்தி வைத்துள்ளனர். அந்த நிலையில் மாடசாமி குடும்பனைப் பார்த்து மூக்கையாத்தேவர்.

“என்னலே, சுதந்திர வந்திட்டா மேல்குலம், கீழ்குலமிங்கறது எல்லாம் இல்லாமல் போயிருமோ? காலை இணுங்கிக்கையிலே குடுத்துப் போடுவோம். எச்சரிக்கையா புழைச்சுக்கங்க” என்று கூறும் வார்த்தைகளிலிருந்து நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தும் இன்னும் இவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது தெரிகிறது. தான் ஒரு கீழ்சாதியில் பிறந்துவிட்டோம் என நினைத்து அவர்களுக்கு நாம் தான் பணிவிடை செய்ய வேண்டும் என எண்ணி தனது வாழ்க்கையை ஓட்டுகிறான் மாடசாமி குடும்பன். சாதியானது இன்னும் இவர்களின் இரத்தத்தில் புரையோடிக் கிடக்கின்றது. மாடசாமி குடும்பன் தன் பேரன் செய்த தவறுக்காக அந்த மூக்கையாத் தேவரிடம் போய் கெஞ்சும் போது, தேவர் என்ன தெய்வமா? இல்லை மாடசாமி குடும்பன் என்ன மிருகமா? என்பதை அறிய முடிகிறது. என்ன தவறு செய்தாலும் அவர்களிடம் போய் கைகட்டி, வாய்பொத்தி நிக்கணும் என்ற தலை எழுத்து இந்த கீழ்ச்சாதிக்காரர்களின் தலையில் எழுதி உள்ளது.

“எங்க குடுபம் என்னைக்குமே தப்புத் தண்டாவுக்குப் போகாதே சாமி. அப்படியே தெரிஞ்சும் தெரியாமச் செஞ்சிட்டாலும் நாயன்மாரு நீங்க பாத்து மன்னிக்காம. யார் மன்னிப்பாக” என்று கூறும்போது மாடசாமி குடும்பன் மாதிரி எல்லாரும் அந்த சமுதாயத்தில் அடிமைகளாகத்தான் வாழ்ந்திருக்கின்றனர் என்பது உண்மையாகிறது. விளிம்புநிலை மனிதர்கள் பேசும்போது இவர்களை மட்டும் ‘சாமி’ என்று அழைக்கின்றனர். ஆனால், அவர்கள் இவர்களை அழைக்கும் போது ‘என்னலே’ என்று நாயைவிட கீழ்த்தரமாக அழைக்கின்றனர். மாடசாமி குடும்பனுக்கு இந்த வாழ்வு இரத்தத்தில் ஊறிவிட்டது. இதனைப் பறைசாற்றும் வகையில் தன் பேரன் தன்னை எச்சரித்துக் கூறும்பொழுது அதற்கு,

“என்னடா ஐயா, செய்ய மேல குலத்தவங்களை கண்டதுமே என்னை அறியாமலேயே என் தலைத்துண்டு இடுப்புக்கு கீழே வந்திடுது. கை இரண்டும் நெஞ்சிலே குவிஞ்சிடுது. எங்க காலம் வேற. உங்க காலம் வேற. குருடனைப் புடிச்சு ராசா முழி முழிடான்னா முடியுமா? அப்படித்தான் என் நெலமையும்” என்று மாடசாமி குடும்பன் அளித்த பதில் அமைகிறது. தன்னுடைய மகபுள்ள பேரனின் பணத்தேவைக்கு தன் பேத்தியைக் கண்ணாலம் பண்ணிக்கிருவான் என்று நினைத்து நிலத்தை பண்ணையாரிடம் அவன் நடந்து கொள்ளும்முறை அவனின் அடிமைத்தனமான வாழ்வை தெளிவுபடுத்துகிறது. பண்ணையாரிடம் ஒத்திக்கு வைத்த நில கிரையத்திற்கு வந்த போது கீழ்சாதிக்காரர்களுக்கு உரிய பண்பாட்டின் பிம்பமாக மாடசாமி குடும்பன் இருக்கின்றான். அந்த பண்பாட்டை மீறி இவன் செயல்படவே இல்லை. அடிமை வாழ்வுதான் தன்னுடைய தலையெழுத்து என்று நினைத்து தன் வாழ்வை முடித்துக் கொள்கிறான் என்பதை உணரமுடிகிறது.

### 1.1.3 ஈசாக்கின் அடிமை வாழ்வு

தன் தந்தை மாடசாமி குடும்பனைப் போன்றே ஈசாக்கு அடிமை வாழ்வு வாழ்ந்தான்.

ஈசாக் பிறப்பில் ஒரு இந்துவாக இருந்து திருமணத்திற்கு பிறகு கிறிஸ்துவன் ஆனவன். மேல்சாதிக்காரர்களைப் பார்த்தவுடன், அவர்கள் கூறியதெல்லாம் ஒரு கட்டளை என நினைத்து தீயவை என்று தெரிந்தும் அதை, எதிர்த்துக் கேட்காமல் பலிகடா போல் தலை அசைப்பவன். எது சொன்னாலும் ‘சரி’ என்று தலை ஆட்டுபவன். உலகத்தில் எது நடந்தாலும் சரி. தனக்கென வாழ்பவனாக கருதப்படுகிறான்.

மாடசாமி குடும்பனும் சேர்ந்து தன் மகள் திருமணத்திற்கு, காந்திமதிநாதப்பிள்ளையிடம் பணம் கேட்டனர். காந்தமதிநாதப்பிள்ளையைத் தெருக்கோடியில் கண்டதும், மாடசாமி குடும்பன் தன் தலைத்துண்டை அவிழ்த்து இடுப்பில் கட்டி நமஸ்காரம் செய்தான். “இந்த எழவே வேண்டியதில்லை என்று ஈசாக்குத் தலையில் துண்டே கட்டுவது கிடையாது. இருந்தாலும் ஒப்புக்குக் கையை கூப்பி நமஸ்காரம் செய்தான். காந்திமதிநாதபிள்ளை பெஞ்சில் உட்காரச் சொன்னபோது இருவரையும் பார்த்த மாடசாமியோ, தன்னுடைய அந்த பண்பாட்டை மீறாமல் தரையில் உட்கார்ந்தான். ஈசாக்கு மட்டும் பெஞ்சில் அமர்ந்தான். பழக்கவழக்கம் தான் சற்று மாறியதே! தவிர உள்மனதில் சாதி இருவருக்கும் வெறியோடிக்கிடந்தது.”

கீழ்சாதிக்காரர்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்றும் மேல்சாதிக்காரர்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்றும் வரையறை வகுத்துள்ளனர். அப்போது காந்திமதிநாதப்பிள்ளை பணம் இல்லை என்றதும் ‘வளையில் சிக்குண்ட புறாவைப் போல’ இருந்தது ஈசாக்கின் நிலை. மாடசாமிக்குடும்பன் பணத்திற்காக காந்திமதிநாதப்பிள்ளையிடம் கெஞ்சும் போது அவன் எதுவும் தெரியாதது போல் நமக்கு எதுக்கு பெரிய வேலை என்று நினைத்து தெருவில் சண்டை போட்டுக் கொண்டிருந்த இரண்டு சேவல்களைப் பார்த்துக் கொண்டு இருந்தான். தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பது கூட தெரியாமல் என்ன? ஏது? என்று கூட கேட்காமல் இருந்தான். மாடசாமியோ தன் பேரனுக்குப் பணம் கிடைத்த சந்தோஷத்தில் வந்தான். ஆனால் ஈசாக்கோ எழவு வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்புபவனைப் போல் பரிதாபமாகத் தலையைக் குனிந்தவாரே சென்றான். இப்படி எதுவும் பேசாமல் ஏன்? எதற்கு என்று கேள்வி கேட்காமல் எது நடந்தாலும், செய்தாலும் சரி என்று வாழ்ந்தான் என்பதை ஈசாக்கின் வாழ்வு சித்தரிக்கப்படுறது.

### 1.2 விளிம்புநிலை மனிதர்களின் எதிர்பண்பாடு

கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கி உள்ள விளிம்புநிலை மனிதர்கள் உயர்சாதிக்காரர்களைப் பார்த்து நாங்களும் மனிதர்கள்தான் என்று நிரூபிக்கின்றனர். அடிமைமுறையை மீறி தாங்களும் சராசரி மனிதர்களாக வாழ ஆசைப்படுகின்றனர். தாங்களும் கல்வி அறிவு பெறுவோம். பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுப்போம். கோயிலில் சாமி கும்பிடுவோம். தெருக்களில் செருப்பு போட்டு நடப்போம். மேலாடை உடுத்துவோம். இனத்தொழில் தான் செய்வோம் என்று உயர்மட்டத்தில் உள்ளவர்களைப் பார்த்து விளிம்புநிலை மனிதர்கள் தங்களின் எதிர்ப்பினை வெளிக்காட்டுகின்றனர்.

இவ்வெதில் பண்பாட்டைக் கொண்ட விளிம்புநிலை மனிதர்களாக இந்நாவலில்,

1. மோசே
2. பட்டாளத்து ரங்கன்

போன்றவர்கள் வலம் வருகின்றனர். இவர்கள் ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்ட மரபில் தோன்றியவர்கள். ஆனால் இவர்கள் பெற்ற வெளியுலக அறிவு இவர்களது தாழ்ந்த நிலையினை உணர்த்தியது. அந்நிலையிலிருந்து மீண்டுவர இளைய சமுதாயம் போர்க்கொடி தூக்குகின்றது. இதன் மூலமாக இவர்களின் எதிர்பண்பாடு வெளிப்படுகின்றது.

#### 1.2.1 மோசேயின் எதிர் செயல்

மாடசாமிகுடும்பனின் பேரன் மோசே இவன் தனது தாத்தாவுடன் பண்ணையாரின் சவுக்குத் தோப்பைத் தாண்டி ஒற்றையடிப் பாதையில் கனகம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்த போது பண்ணையார் அவர்களின் எதிரே வந்தார். அப்பொழுது மாடசாமி குடும்பன் பண்ணையாரைக் கண்டவுடன் துண்டை எடுத்து இடுப்பில் கட்டி கையைக் கட்டிகொண்டு ‘சாமி’ என்று கும்பிடுவதைப் பார்த்த மோசே கோபத்துடன் தன் தாத்தாவிடம்,

“ஆமா! சீச்சுக்கோ. சீச்சிக்கோ. நீ துண்டை எடுத்து இடுப்பிலே கட்டிட்டு சாமி கும்பிடப் போறவனைப்போல் நினைத்ததைப் பார்த்து எரிச்சல் என்னமா வந்துச்சு தெரியுமா? அப்பனைப் பெத்த தாத்தாவா போயிட்டே இல்லாட்டிக்கு அங்ஙனையே வெட்டிக்காவு கொடுத்திருப்பேன். யோவ், அவனுக என்ன நமக்கு படியளக்கிறானா? இல்லை நம்ம படச்ச ஆண்டவனா? ஆவுக ஆத்தாளும் பத்து மாசம் செமந்து தான் அவனைப் பெத்துருக்கா. நம்மளும் அப்படித்தான் என்னைக்கித்தான் உனக்கு இந்த புத்தி தொலையப் போவுதோ” என்று கூறுகிறான். மேலும்

“செருக்கி மவனே நாளைப் பின்னே என் கண்ணாலே தலைத்துண்டை இடுப்பிலே இறக்கிக் கட்டுறதைப் பார்த்தேன் அவ்வளவுதான்” என்று ஆள்காட்டி விரலைநீட்டி எச்சரித்தான். இதன் மூலம் மோசேயின் எதிர்பண்பாட்டு உணர்ச்சி வெளிப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

### 1.2.2 வீர உணர்ச்சி

மோசேயின் வீரத்தைப்பற்றி மற்ற உயர்சாதிக்காரர்களின் மத்தியில். “என்பேரன்டா ... அவன் என் பேரப்புள்ளடா .... பேரப்புள்ள .... எந்த பயளும் அவன் கிட்ட ஒத்தைக்கு ஒத்தை எதிரிக்கும் எதிரியாய் நிற்க முடியாதுடா” என்று பெருமிதத்துடன் மாடசாமிகுடும்பன் உரைப்பதன் மூலம் மோசேயின் வீர உணர்ச்சி வெளிக்காட்டப்பட்டுள்ளது.

### 1.2.3 எதிர்ப்புக்குணம்

தேவாலயத்தின் முன்பு கூட்டம் கூடுகின்ற போது ஜேஸ் சாபாவின் மகன் இஸ்ரவேல் விவகாரத்தில் மோசே தலையிட்டுப் பேசுகிறான். அவர்களின் கல்யாணம் பற்றி பேசும்போது,

“யோவ் ஒதேசியாரே, அவுகரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டாக. ஒங்களுக்கு என்னய்யா வந்தது? நீரு பாதிரியாரும் சேர்ந்து எங்கள் எடங்கல் மொடங்கலா என்னமும் பண்ணினீங்க. பாதிரியாரும் போயிடுவாரு ஒம்மை இந்த ஊரிலே கால்தரிக்க உடமாட்டோயியோவ். உடமாட்டோம்” என்று உரக்கக் கத்தியதன் மூலம் மோசேயிடம் எதிர்ப்புக்குரிய அச்சம் இல்லை என்பது உணர்த்தப்படுகிறது.

### 1.2.4 சாதிப்பிரச்சனை

வயலில் நெல்லை அளக்கறதுக்கு சர்க்கார் முத்திரை போட்ட மரக்கால் தான் வேண்டும் என்று மோசேயும், மற்ற இளைஞர்களும் சேர்ந்து மூக்கையாத்தேவரிடம் எதிர்த்துக் கேட்டனர். பறையன் சாதி ரெங்கன். மோசே கிறிஸ்டின் மறவான வாலிபர்களைப் பார்த்து மூக்கையாத்தேவர்.

“பறப்பய சொல்லுவதையெல்லாம் கேட்டுப்புட்டு எங்கிட்ட சண்டைக்கெல்லாம் வரப்படாது ஆமா!” என்றதும், ஆத்திரம் அடைந்த மோசே.

“பறையன் கிறையனிண்ணெல்லாம் பேசிக்கிட்டிருந்தே உன் நாக்கே இழுத்து அறுத்துப்போடுவேன். பண்ணையன் காந்திமதிநாதப்பிள்ளைக்கிட்டே எச்சில் சோத்துக்குத் தாளம் போடற பயலுக்குப் பேச்சைப்பாரு” என்று சாதிப்பிரச்சனையை மேற்கண்ட கதைமாந்தர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.2.5 போராட்ட குணம்

சங்கத்தில் இளைஞர்கள் அனைவரும் மோசேயுடன் ஒன்றுகூடி காந்திமதிநாதப்பிள்ளையிடம் நியாயம் கேட்கத் துணிந்தனர். வேலைக்குச் சரியான கூலி தரனம். இல்லை என்றால் வேலை செய்ய முடியாது, என்று எதிர்த்துக்கேட்டனர். காந்திமதிநாதப்பிள்ளை வேறொரு ஊர் கூலிக்காரர்களை விட்டு கதிர்களை அறுக்கப் போகும் பொழுது இந்த இளைஞர்கள் எல்லாரும் எதிர்த்து நின்று கேள்வி கேட்டனர். அப்பொழுது மோசே காந்திமதிநாதப் பிள்ளையிடம்

“இப்போவே உங்க, மகனும் மூக்கையாத்தேவரும் விவசாயிகளைக் கூப்பிட்டு மிரட்டிக்கிட்டிருக்காங்க. அது நல்லதில்லை. மோசமாப் போனாலும் போயிரலாம். அவங்ககிட்டேயும் சொல்லி கலாட்டா பண்ணாம இருக்கச் சொல்லணும்” என்றான். அதற்கு காந்திமதிநாதப் பிள்ளை வயல் எல்லாம் என் வயலுங்ற நினைப்பு இருக்கட்டும் என்று தன் உரிமையை மறைமுகமாக உரைத்தார். உடனே அதைக்கேட்ட மோசே,

‘அந்த வயலிலே பாடுபட்டு பலனை உண்டாக்கினவங்க நாங்கங்கிறதையும் நீங்க கொஞ்சம் நினைவுபடுத்திப் பார்த்துக்கிட்டா நல்லா

இருக்கும் என்று எதிர்வாதம் செய்தான். இதன் மூலம் மோசேயின் போராட்டக் குணம் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது’.

### 1.2.6 தன்மான உணர்ச்சி

மோசே, வள்ளியை பதிவுத் திருமணம் செய்துக் கொண்டு ஊருக்குள் வந்தபோது, ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் கூட்டம் போட்டனர். அப்போது, மோசேயை ‘ஊரை வணங்கு’என்றார் கிழவர் ஒருவர், அதற்கு மோசே,

‘நம்மளாலே எல்லாம் இந்த மாதிரி காலிலே விழ முடியாது’என்றான்.

‘ஊரை வணங்க முடியாதோ’என்றான் கூட்டத்தில் ஒருவன்.

‘சுமா அடிமைக்காரப் பயமாதிரி காலிலே விழுந்து நமஸ்காரம் பண்ணறது என்னாலே முடியாது’ என்று தன்மானம் உணர்வோடு எதிர்த்து கேட்கிறான் மேலும்,

‘நான்தான் மூணு வருசமா அவகூட சுத்திக்கிட்டலைஞ்சேனே ஊர்காரங்களுக்கு இதெல்லாம் தெரியாமலா இருந்திச்சு. இப்போ வந்து வழக்கு வைக்கிறீங்களே’ என்று ஊராரைப் பார்த்த மோசே கேட்டான். ஊரில் உள்ளவர்கள் அனைவரும் ஒருத்தரும் ஒண்ணும் பேசாம உட்கார்ந்திருக்கிறார்கள்.

ரெங்கன், இது சர்க்கார் மூலியமா நடந்திருக்க கல்யாணத்திலே நீங்க தலையிடறது, கல்யாணத்தை முறிச்சுவிட முயற்சி பண்ணறது நல்லா இல்லே. பெருத்த வம்பிலே தான் கொண்டுவிடும் என்றது,

‘பள்ளக்குடி வழக்கிலே பறையனுக்கு என்னய்யா வேலை?’ என்றான் விவகாரி. அதற்கு மோசே, ‘எங்க ஊர் வழக்கிலே உமக்கு என்னய்யா வேலை’ என்று திருப்பிக் கேட்டான்.

‘இது என்ன ஜாதி’ என்றான் விவகாரி.

‘அவன் எங்க விவசாய சங்கத் தலைவர். அவன் பேசாம யாருய்யா எங்க வழக்கை எல்லாம் எடுத்துப் பேசுவா. உன்னை மாதிரி நாரதமுனியா வந்து பேசுவான்’ என்று மோசே வெடுக்கென்று கேட்டான்.

‘பறப்பயல எல்லா கூட்டியாந்து வச்சுக்கிட்டு என்னைய கேவலமா படுத்தறீங்க’என்று சீறினான். அந்த மனிதனர், அதற்கு மோசே,

‘யோவ் மருவாதையாப் பேசு, ஜாதியைக் குறிச்சு எல்லாம் மருவாதைக் கேடா பேசின பல்லைத் தட்டிக் கையிலே கொடுத்திடுவேன் ஜாக்கிரதை’ என்று சீறி இந்த நிகழ்ச்சிகளின் மூலம் மோசேயின் பண்பாட்டிற்கு எதிரான தன்மான உணர்ச்சியைக் காணமுடிகிறது.

### 1.2.7 ரெங்கனின் எதிர்ச்செயல்

பட்டாளத்து ரெங்கன் பட்டாளத்தை விட்டு ஊருக்கு வந்து கூலி வேலை செய்து கொண்டிருந்தான். இவன் கூலி வாங்குவதில் கறாராக இருந்தான். “உடம்பைக் கரும்பாய்ப் பிழிஞ்சு வேலை செஞ்சிருக்கே மிய்யா சுமாவ குடுக்கிறே? நாளைக்கு மணிமணியா நெல் விளையும் போது எங்களுக்கா தரப்போரே? நீதானே அம்புட்டையும் அள்ளிக்கிட்டு போவப்போறே” என்று மேல்சாதிக்காரர்களை எதிர்த்துப் பேசும் திறமை அவனிடம் இருந்தது. பறைசாதிப் பெண்களுக்கு ஏதாவது ஒண்ணு என்றால் போதும் அவன் அந்த மேல்சாதிக்காரனை இழுத்துப்போட்டு இரத்த கக்கும்வரை உதைத்தான். இந்த நிகழ்ச்சிக்குத் தலையாரித்தேவன் மகனை உதைத்தான். அதற்குப் பஞ்சாயத்துக்கு அவனைக் கூப்பிட, ரெங்கன் தைரியமாக

“இங்கே வந்து பேசச் சொல்லுங்க. பட்டாளத்து ரெங்கன் அங்கே வரமாட்டான். சேரியிலே பிறந்த பெண்ணுண்ணா நெனச்சபடி கையைப் புடிச்சு இழுக்கலாமோவ் புடுச்சவனுக்கெல்லாம் பெண்டாட்டியா இருக்கணுமோ” என்று கன்னத்தில் அறைந்த மாதிரி பதில் கூறியது. ரெங்கனின் எதிர் செயல்பாட்டினை எடுத்துக் காட்டுறது.

### 1.2.8 சாதி எதிர்ப்பு

ஊரிலே, அந்த வட்டாரத்திலேயே பயங்கர ரௌடியாகத் தனி ராஜ்ஜியம் நடத்திய மூக்கையாத்தேவரிடம் மோதிக் கொண்ட போது “லே பற பயலுக்குத் தக்கபடியாக நடந்துக்கோ, கொடலை உருவி மாலையாப் போட்டிரப் போறேன்” என்று தன் பாளை அரிவாளை நீட்டி எச்சரித்த வண்ண உறுமிக் கொண்டிருந்தார் தேவர், அதற்கு ரெங்கன்

“யோவ், தேவரே, மருவாதியாப் பேசு, நீ பெரிய போக்கிரிண்ணா வீட்டு மட்டோட வச்சுக்க வேண்டியதுதான். சாதியெல்லாம் குறச்சுப் பேசினாயோ ஒன் தலையைக் கிள்ளி எடுத்துட்டுப் போயிடுவேன்” என்றான். இதைக்கேட்ட மூக்கையாத் தேவர்

“உன்னை விட்டாத்தானலே வாய்க்கொழுப்பாய் பேசுவே” என்று சண்டைக்குச் சென்றார் மூக்கையாத் தேவர், அரிவாளை எடுத்து வீசி எறிந்தார். “வேய் நீ இந்த ஊர் போக்ரி, நான் யார் தெரியுமா? பட்டாளத்திலே துப்பாக்யோட உசிரை வாங்றதுக்காக வார எதிரொளியை சந்திச்சவனய்யா, சந்திச்சவன். ஒ போக்ரித்தனத்தை எல்லாம் நம்மக்கிட்டே வச்சுக்கிடாதே” என்று எச்சரித்தவண்ணம் அரிவாளை எடுத்து எறிந்தான்.

“போ, எடுத்துட்டு தப்பிப் பிழைச்சுப்போ. இனிமே நம்மகிட்டே வந்தே நான் ரொம்பப் பொல்லாதவனா இருப்பேன். பட்டாளத்தான் குணம் திரும்பிடும்” என்று எச்சரித்தது ரெங்கனின் சாதி எதிர் உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**1.3 முடிவுரை**

1. சமுதாயத்தில் தொழில், கல்வி, அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் தன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கல்வி, பொருளாதாரம் கிடைக்கப்பெறாத விளிம்புநிலை மனிதர்களை ஒடுக்கி வைத்துள்ளனர்.

2. ஒடுக்கப்பட்ட வாழ்க்கையே விளிம்புநிலை மனிதர்களின பண்பாடாக இருந்து வருகின்றது. இப்பண்பாட்டினுள் ஊறிய மனிதர்களாக ‘மலரும் சருகும்’ நாவலில் மாடசாமி குடும்பனும், ஈசாக்கு உள்ளனர் என்பதைக் காணமுடிகின்றன.

3. தேவரைக் கண்டவுடன் பயப்படுவது, மரியாதையாகக் கூப்பிடுவது அவருக்கு நேராக மேலே அமர்ந்து பேசாமல் இருப்பதிலிருந்து இவர்களின் அடிமை வாழ்வு தெளிவாகிறது. ஆனால் இந்த அடிமை முறையிலிருந்து மீறி எதிர் பண்பாட்டினை அடைய விரும்புகின்ற மோசேயும், பட்டாளத்து ரெங்கனும் இந்நாவலில் இடம் பெறுகின்றனர்.

4. மோசே தன் தாத்தா மேல்சாதிக்காரர்களைக் கண்டவுடன் கும்புடு போடுவதையும், சாமினு கூப்பிடுவதையும் கண்டு அவரை எதிர்த்துப் பேசியதன் மூலம் இவனின் எதிர்பண்பாடு உணர்த்தப்பட்டுள்ளது.

5. பட்டாளத்து ரெங்கன் உயர்சாதிக்காரரான மூக்கையா தேவரிடம் தெருவில் சண்டை போட்டதன் மூலமும், வயலில் நெல் அளக்கும் போது எதிர்த்துப் பேசியதன் மூலமும் ரெங்கனின் எதிர் பண்பாடு வெளிப்படுகிறது.

6. தலைமுறை இடைவெளியில் பழையத் தலைமுறையான மாடசாமி குடும்பன் விளிம்புநிலை பண்பாட்டினை முழுமையாக ஆதரிப்பதாகவு, இளைய தலைமுறையான ஈசாக்கு, விளிம்புநிலை பண்பாட்டினை, ஆதரிக்கவும் முடியாமல், எதிர்க்கவும் முடியாமல் இருப்பதாகவும், இன்றைய தலைமுறைகளான மோசே, ரெங்கன் போன்றவர்கள் விளிம்புநிலை மனிதர்களின் பண்பாட்டினை எதிர்ப்பதாகவும் வாழ்க்கையின் நிதர்சனங்களை மலரும் சருகும் நாவல் வெளிப்படுத்தியுள்ளது.

# கலித்தொகையில் அறச் சிந்தனைகள்

*க. பூங்கொடி, *கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, சேலம் - 636 008.*

இலக்கியங்கள் காலச் சூழலுக்கேற்ப பாடுபொருள்களைக் கொண்டு இயங்குகின்றன. அவ்வகையில் சங்க இலக்கியங்கள் காதலையும், வீரத்தையும் முதன்மைப் பொருள்களாகக் கொண்டிருந்தன. எட்டுத்தொகையில் கலித்தொகை குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது என்று கூறலாம். எனவே இந்நூலில் இடம்பெற்றுள்ள அறச்சிந்தனைகளை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**கலித்தொகை**

இந்நூல் தொல்காப்பிய மரபைப் பின்பற்றி 'பா' வகையால் பெயர் பெற்றதாகும். கைக்கிளை, பெருந்திணை பாடல்களும், கூனன் - குறளன், ஏறு தழுவுதல் தமிழ்ச்சங்கம் தொடர்பான செய்திகளும் இடம் பெற்றுள்ளன என்பது இதன் தனிச்சிறப்பாகும். இந்நூலின் ஒவ்வொரு கலியையும் தனித்தனி புலவர் பாடியிருக்கின்றனர் என்பது பழைய வெண்பாவால் அறியப்படுகிறது. தொகை நூல்களில் காலத்தால் பிற்பட்டது. இதனை 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி', 'கல்வி வலார் கண்ட கலி', 'பொங்கு கலி இன்பப்பொருள்' என்றெல்லாம் சிறப்பித்துள்ளனர்.

"கலித்தொகைப் பாடல்கள் பல ஓரங்க நாடகம் போல் அமைந்துள்ளன" என்கிறார் வேங்கடராமன்.

மேலும் கலித்தொகை முல்லைப் பாடல்கள் காதலர்கள் களித்திருக்கும் காட்சியைக் காட்டுவது, பிற முல்லைப் பாடல்களில் பெரும்பான்மையாக காணப்படாத சிறப்பாகும் என்பன போன்ற பல தகுநிலைகளை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது.

**அறம்**

சமூகம் மேம்பட்டு சிறப்பாக வாழ வழிவகுப்பது அறமாகும். வள்ளுவர் அறம் குறித்து,

**"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லை கேடு"** **(கு. 32)**

என்று கூறுகிறார். மக்களுக்கு அறத்தைவிட வேறு நன்மை இல்லை. அதனை மறந்தால் தீமையே ஏற்படும் என்பதிலிருந்து அறத்தின் தேவை புரிகின்றது.

"அறு-அம் என்பது அறம் எனல் ஆயிற்று". 'அறு' எனும் பகுதிக்கு 'முடிவு செய்' என்னும் பொருள் உண்டு. ஒன்றன் நன்மை, தீமையை முடிவு செய்து அதற்கேற்ப ஒழுகுதல் என்ற நிலையில் அறம் எனலாயிற்று.

இதிலிருந்து நன்மை, தீமையை ஆய்ந்து நன்மை வழி செயல்படுவதே அறம் என்று அறியப்படுகிறது. அறம் என்பதனை மணிமேகலை,

**“அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியு முடையு முறையுளு மல்லது**
**கண்ட தில்லெனக் காவல னுரைக்கும்”**

மனித வாழ்வின் அடிப்படையான உணவு, உடை, உறையுள் என்பவை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே அறம் என்கிறது.

### கலி – அறச்சிந்தனைகள்

சங்க இலக்கியத்தில் நீதியை – அறத்தை வலியுறுத்துவதற்கான கூறுகள் அகப்புறப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. சங்கப் பாடல்களில் காதலோ, வீரமோ பேசப்பட்டிருந்தாலும் ஒரு கூறாக அறமும் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதிலும் குறிப்பாக கலித்தொகை பல்வேறான அறச்சிந்தனைகளை முன்னிறுத்தியே பேசுகிறது. அவைகள் சிறந்த அறிவுரைகள் – அறவுரைகள் – உணர்வோர் மனதில் பதியக் கூடியவைகளாகும்.

### பொருட்செல்வம் – அறச்சிந்தனைகள்

பொருட்செல்வம் குறித்தான சிந்தனைகள் இருவகைகளில் வெளிப்படுகின்றன. அவை ஈட்டுதலும், ஈகையுமாகும்.

**“செம்மையின் இகந்து ஒரீஇப் பொருள் செய்வார்க்கு, அப்பொருள்**
**இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ?” (கலி.14)**

என்ற வரிகளில் தவறான வழியில் பொருள் சேர்ப்பவரிடம் அப்பொருள் நிலைக்காது. இம்மையிலும், மறுமையிலும் அதுவே பகையாகி துயரைத் தரும் என்பது அறியப்படுகிறது. இதன்மூலம் வாழ்க்கையின் அடிப்படைத் தேவை பொருள் என்பதும், அப்பொருளை நேர்வழியில் ஈட்டினால் மட்டுமே இன்பம் பயக்கும் என்பதும் குறிப்பாக சுட்டப்படுகிறது. இங்கு தீங்கு தரும் செயல்களைக் கூறி அதன் மூலம் நன்மையைக் குறிப்பால் சுட்டியுள்ளனர். இன்றைய சூழலில் கலித்தொகையின் இவ்வரிகள் நினைக்கத்தக்கன.

இதுமட்டுமின்றி, பொருளைத் தன் சுற்றார்த்தார்க்கும், பிறருக்கும் கொடுத்து அவர்களை வாழ வைத்து தானும் வாழ்வதே சிறப்பு என்கிறார் பெருங்கடுங்கோ.

**“கிளை அழிய வாழ்பவன் ஆக்கம்போல் புல்லென்று**
**வளை ஆனா நெகிழ்பு ஓடும் தோள்”**
**(கலி.34)**

இதில் சுற்றத்தார் துன்புறும்படி தான் மட்டும் இன்புற்று வாழ்பவனின் செல்வம் விரைவில் அழிந்துவிடும் என்பதில் குறிப்பாக ஈகை சுட்டப்படுகிறது. மேலும், ‘ஈதல் இரந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்வதலின் சாதலும் கூடுமாம் மற்று’ (கலி.61) என்ற வரிகளும் அறக்கருத்துக்களைப் பதிய வைக்கின்றன. பிற சங்கப் பாடல்களும் ஈதலறத்தை முதன்மையாக கொண்டுள்ளன. ஈகை உடையோனின் செல்வம் பெருகும் என்பதை கீழ்க்கண்ட பாடல் காட்டுகிறது.

**“ஈதலில் குறைகாட்டாது, அறன் அறிந்து ஒழுகிய**
**தீதிலான் செல்வம் போல், தீம் கரை மரம் நந்த” (கலி. 27)**

இவை போன்ற பல பாடல்களும் பொருட்செல்வம் குறித்த பாங்கான சிந்தனைகளைப் பகருகின்றன.

### அறச்செய்கைகள்

ஒரு சமூகம் சிறப்படைய அறச் சிந்தனைகள் – செயல்கள் தேவையாகின்றன. அறமில்லாதவற்றைச் செய்ய நேர்ந்தால் இயற்கைக்கும் பாதகம் விளையும் என்பதை கீழ்க்கண்ட வரிகளில் அறியலாம்.

**“வள்ளி கிழ் விழா வரைமிசைத் தேன்தொடா**
**கொல்லை குரல் வாங்கி ஈனா – மலை வாழ்நர்**
**அல்ல புரிந்து ஒழுகலான்” (கலி. 39)**

மனிதன் மட்டுமின்றி அவனோடு இயைந்த இயற்கையும் செழிக்க அறச்சிந்தனைகள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தைக் குறைக் கூறாது, அடிப்படையில் தான் மாற வேண்டும் என்பதை மேற்கண்ட பதிவு நினைவூட்டுகிறது.

தலைவி தோழியிடம் தலைவன் அறச்சிந்தனையுள்ளவன் என்பதை, 'அஞ்சுவது அஞ்சா அறினிவியல்லன்' (கலி.42). அஞ்சத்தகுந்த நியாயமற்ற செயல்களைச் செய்யமாட்டான் என்று புகழ்ந்து பேசுகைளில் அக்கால சமூக மக்களின் நல்லியல்பும், அறத்தை முதன்மையாக கொண்டமையும் புலப்படுகிறது.

மேலும், 'நெஞ்சத்துக் குறுகிய கா இல்லை' (கலி.125) 'நல்அற நெறி நிறீஇ உலகு ஆண்ட அரசன்' (கலி.129), 'நயனும், வாய்மையும்' (கலி. 130), 'அறம் பொருள் இன்பம்' (கலி. 141), 'பிறர் நோயும் தம்நோய் போல் போற்றி' (கலி.139) போன்ற பாடல்களிலும் அறச்சிந்தனைகள் வெளிப்படுகிறன.

**உலக மெய்மைகள்**

இவ்வாறு கலித்தொகை பல்வேறு அறங்களைக் கூறியிருந்தாலும் ஒவ்வொருவர் வாழ்விலும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய அறக்கருத்துக்களை வழங்கியுள்ள விதம் போற்றுதற்குரியது.

> **"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுல்**
>
> **. . . . . . . . . . . . . . . . . .**
>
> **பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்" (கலி. 133)**

இல்லாதவர்க்கு உதவுவதல், நண்பர்களைக் காத்தல், உலகப்போக்கு அறிந்து ஒழுகுதல், தன் சுற்றத்தாரைச் சினவாதிருத்தல், அறிவற்றோர் சொல்லைப் பொறுத்தல், தான் கூறியதை மறவாது, மாற்றாது இருத்தல், இரகசியத்தைக் காத்தல், தீங்குச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் நடுவு நிலைமையோடு தண்டித்தல், தன்னைப் போற்றாதவரிடமும் பகை கொள்ளாது பொறுமையாக இருத்தல்.

இவ்வரிகள் அறம் என்பதன் வரையறையாக - வழிகாட்டியாக - அங்கீகாரமாக அமைந்துள்ளன. ஒரு மனிதன் நன்முறையில் வாழ்வதற்கு அடிப்படையாக மேற்சொன்னவை தேவையாகின்றன. கலித்தொகை பல கருத்துக்களைக் கூறியிருந்தாலும் மேற்சொன்ன பாடலின் அறவுரைகள் உலகிற்கு - இன்றைய சமூகத்திற்கு இன்றியமையாதவையாகும்.

- கலித்தொகை சில இடங்களில் தீயவை இவை என்பதையும், சில இடங்களில் நல்லவை இவை என்பதையும் பட்டியலிட்டு விளக்குகின்றது.
- அகநூலாக இருப்பினும் பல அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பாலை, நெய்தல் கலிகளில் அறச்சிந்தனைகள் பெரும்பான்மையாக இடம்பெற்றுள்ளன.
- சங்க இலக்கியம் என்றாலே காதலும், வீரமும் மட்டுமே பேசப்பட்டு இருக்கும் என்ற கருத்தை மாற்றுவதில் கலித்தொகையின் பங்கு அளப்பரியது.

வீரமோ, காதலோ சிறப்புற இருக்க வேண்டுமெனில் அதன் அடிப்படை அறமே என்பதை சங்க மக்கள் உணர்ந்துள்ளனர். ஒரு கட்டடத்திற்கு அடித்தளம் நன்கு அமைதல் போல், ஒரு சமூகத்திற்கு அறம் அடிப்படையாக அமைய வேண்டும். சங்கப் பாடல்கள் பலவும் அறச்சிந்தனைகளை நோடையாகவும், இலைமறை காயாகவும் கூறியதெல்லாம் மனிதர்களின் வாழ்வை மேம்படுத்ததான் என்பது திண்ணம்.

**பார்வை நூல்கள்:**

1. கா.கோ.வேங்கட்ராமன், தமிழ் இலக்கிய வரலாறு

2. திருக்குறள் - செ. உலகநாதன் (உ.ஆ)

3. சிவகாமி - இலக்கிய பொருட்பகுப்பாய்வு

4.மணிமேகலை - ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ)

5. கலித்தொகை - அ.விசுவநாதன் (உ.ஆ)

# வாணிகச் செக்கார்களின் வாழ்வியல் சார்ந்த அறிவியல் முன்னேற்றம்

*ர.பிரியா, *முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ந.க.ம.கல்லூரி, பொள்ளாச்சி.*

மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றிவிட்டன. மண்ணில் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்களாகும். இவற்றில் நாட்டுப்புறவிலில் வாணிகச் செக்கார்களின் வாழ்வியல் சார்ந்த அறிவியல் முன்னேற்றம் பற்றி தெளிவாக காண்போம்.

**மனிதனின் வளர்ச்சி நிலை:**

மனித இனம் தோன்றிய காலகட்டத்திலிருந்து இன்றைய கால கட்டம் வரை அவர்களுடைய பேச்சுத்திறன் உருவாகிய நிலையினைப் பற்றியும் அவர்களின் முன்னேற்ற வளர்ச்சியைப் பற்றியும் தெளிவாகக் காண்போம்.

இவ்வுலகில் மனித இனம் தோன்றிய நிலையிலிருந்து அவனுடைய உள்ள உணர்வுகளை குரல்மொழித்திறன் மூலம் வெளிப்படுத்த ஒன்றைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்போது ‘ஆ’ என்றான். பின்பு ஒன்றைப் பார்த்து வியக்கும்போது ‘ஆ’, ‘ஐ’, ‘ஓ’ என்றான் பின்பு ஒருவரை அழைக்கும் போது ‘ஏ’ எனவும் பிறா தன்னை விளக்கும் போதும் ‘ஓ’ ‘உம்’ என்றான். அது மட்டுமல்லாமல் தன்னுடைய துன்பத்தை வெளிப்படுத்த ‘அ’, ‘ஐ’ ‘இம்’ ‘உம்’ என்றான். அதன் பிறகு இன்றைய நிலை வரை தன்னுடைய திறமையாலும் பல வகையான சாதனைகளையும் முன்னேற்றத்தையும் மற்றும் ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்றும் ‘ஒருத்திக்கு ஒருவன்’ என்ற ஒழுக்க நெறியினைப் பின்பற்றி வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். அவற்றில் ஆணுக்கும் பெண்ணுக்கும் விலங்கினம் போல அலைந்து திரிந்த நிலையானது மாறி மனித இனம் தனக்கென்று ஒரு கட்டுப்பாட்டினை வகுத்துக்கொண்டு அதன்படி இன்று வரை வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர்.

**மனித இனக்குழுவும் குலப்பிரிவுகள்**

இவ்வுலகில் மானிடப் பிறவியானது தன்னுடைய தேவைகளை பூர்த்திசெய்து கொள்ளவும், தன்னுடைய வாழ்க்கைக்கு தேவையான பணிகளை அமைத்துக் கொள்ளவும் ஒவ்வொரு தொழில்களை செய்துகொண்டு இருந்தனர். பிறகு அவர்கள் ஒவ்வொரு இனக் குழுக்களாக பிரிந்து நிரந்தர வேலைகளைச் செய்துகொண்டு இருந்தனர். அவையே பிற்காலத்தில் குலத் தொழிலாக செய்து கொண்டு இருந்தனர் என்பதும் இன்றைய நிலையிலும் அறியலாம். இதனையே ஈசுவரபிள்ளை அவர்கள் பக்தி இலக்கிய காலத்தில் அவர்களைப் பற்றி கூறும்போது,

அரசர்

அந்தணர்

ஆதிசைவர்

வேளாளர்

ஏகாலியர் குயவர்

சாலியர்

செக்கான் (எண்ணெய் ஆட்டும் தொழில் செய்பவர்)

வேடர்

குறவர்

பரதவர்

நுழையர்

புலையர்

வண்ணார்

வணிகர்

சூத்திரர்

இடையர்

சிற்றரசர்

பாணர்

பறையர்

பதியிலார்

குக்கர்

போன்ற பல பிரிவுகள் இருந்துள்ளன. இதன் மூலம் மேலே கூறப்பட்டுள்ள அனைத்து இனக்குழப் பிரிவுகளும் இன்றைய நிலையிலும் நிலைத்து இருப்பதை அறிய முடிகின்றது.

**வணிகர்கள்:**

இவ்வுலகில் மனிதர்கள் தோன்றிய போது அவர்கள் வாழ்நாள் தேவைகளை பூர்த்திசெய்து கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். அப்போது அவர்கள் நடக்கும் பாதையில் இலை தழைகள் காய்கறிகள் போன்றவற்றை பார்த்து உண்டு தனது பசியினை தீர்த்துக் கொண்டனர். பிறகு அவர்கள் ஒவ்வொரு நிலையாக வளர்ச்சியுற்று தனக்கென தொழிலை செய்துகொண்டு வாழ்ந்தனர். பிறகு அவற்றை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவ வேண்டும் என்று எண்ணி வணிகத்தை தொடங்கியிருப்பர் என அறியலாம். அதற்கு அந்த பொருள் பரிமாற்றத்தினை செய்பவர்களை வணிகர்கள், வாணிகர்கள், வியாபாரம் செய்பவர் என்றும் வாணிகம் செய்து வந்தவர்கள் வணிகர் அல்லது வாணிகர் என்று அழைக்கப்பட்டனர் என்கின்றனர். வணிகர்களை ஒரு சாதியாகப் பிரித்ததே சிலப்பதிகாரக் காலத்தில்தான். பின்பு தொழில் அடிப்படையில் சாதிகள் உருவாயின என்பதை கூறுகின்றனர். மேலும் அக்காலச் சமுதாயத்தில் வணிகர்கள் அரசனுக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருந்தனர். இதனை அவர்கள் அரசர் பின்னோர், அரைசர் பின்னோர் மன்னர் என்றும் வரப்பெறுவதால் அறியலாம். இவ்வாறு அவர்கள் மன்னர்களுக்கு அடுத்த நிலையில் வைக்கப்பெற்றதற்குக் காரணம் பொருளாதார நிலையில் வைக்கப் பெற்றதற்குக் காரணம் பொருளாதார நிலையில் அவர்கள் உயர்ந்திருந்ததும் ஆகும் எனலாம். சிலப்பதிகாரக் காலத்தில் வணிகர்கள் பெருஞ் செல்வர்களாகவும் மாடமாளிகைகளில் வாழ்ந்து வந்த உயர் குடியினராகவும் திகழ்ந்ததைக் கூறுகின்றனர்.

தொல்காப்பியர் வணிகர்களை 'வைசிகர்கள்' என்று கூறுகின்றனர். இது மட்டுமல்லாமல் இக்காலத்திலும் செட்டி என்ற வகுப்பினருள் பெரும்பான்மையோர் வணிகத்திலேயே ஈடுபடுவதாக கூறுகின்றனர். மேலும் வணிகர்களுக்கு 'எட்டி' எனப் பட்டத்தை அளித்துச் சிறப்பு செய்து வந்தான் மன்னன். அதன்பின்பு 'சாயலன்' என்னும் வணிகன் 'எட்டி' என்ற பட்டத்தைப் பெற்றதால் 'எட்டி சாயலன்' என்று அழைக்கப்பட்டு வந்தான். மேலும் வருணப் பெயர்கள் முதன்முதலில் சிலப்பதிகாரத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை விளக்கும் வகையில் சிரேஷ்டி, சேட்டி, செட்டி, எட்டி என்று வந்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர்.

மேலும் ஒரு நாட்டில் தாழ்விலாச் செல்வர் இருக்க வேண்டுமெனத் திருவள்ளுவர் கூறுகிறார். பிறகு தாழ்விலாச் செல்வர் வணிகர்களே அனைத்து நாடுகளிலும் அரசர்க்கு அடுத்தபடியாக செல்வாக்கு அவர்களுக்கு இருந்தது என்கின்றனர். ஒரு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்திற்கும், நாட்டு பொருளாதார மேம்பாட்டிற்கும் வணிகர்களே காரணமாகும் என்பதை அறிய முடிகின்றது.

**பண்டமாற்று வணிகம்**

பண்டமாற்று (barter) முறை என்பது ஒரு பொருளுக்காக இன்னும் ஒரு பொருளை பரிமாற்றிக் கொள்ளுதல். இது ஒரு பழங்கால செலாவணியாகும். உலகம் முழுவதும் பண்டமாற்றுமுறை புழக்கத்தில் இருந்துள்ளது. அதாவது ஒரு கொத்து அரிசிக்கு பருப்பை பெற்றுக் கொள்வதை எடுத்துக்காட்டாக கொள்ள முடியும். இதுவே ஆரம்ப காலத்தில் பின்பற்றப்பட்ட முறையாகும். இதில் பல வரையறைகள் காணப்பட்டன.

தமிழகத்தில் பழங்காலத்தில் வாழ்ந்த தமிழர் அன்றாட தேவையான அரிசி, பருப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலிய பொருள்களை காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டார்கள். மேலும் தொண்டை நாட்டுப் பரதவர் மீன்களை இடையாக்குக் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து சேவல், கவுதாரி, முதலிய பறவைகளைப் பெற்றனர். நெய்தல் நிலத்தார் கடற்பவளத்தை முல்லை நில இடையாக்குக் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து அவரை, திணைகளைப் பெற்றனர் என்பதையும் இவற்றிலிருந்து அன்றைய காலகட்டத்தில் இருந்த சமுதாயத்தில் பண்டமாற்று வாணிக முறை இருந்ததை உணரமுடிகின்றது.

**வாணியர்**

வாணியர்களைப் பற்றிய செய்திகளும் மற்றும் அவர்கள் தூய்மையான எண்ணையை உற்பத்தி செய்யும் தன்மை பற்றியும் அறியலாம். இதனையே சிங்காரவேலு அவர்கள் வாணியர்கள் எள், நிலக்கடலை முதலியனவற்றை செக்கிலிட்டாட்டி அவற்றிலிருந்து தூய்மையான எண்ணையை எடுத்து விற்பனை செய்து வாழ்கின்றவர்கள். அது மட்டுமல்லாமல் அவர்கள் பூணூலும் அணிந்திருப்பர் என்கின்றனர். பின்பு இவர்களை 'செக்கான்' என்றும் 'வாணிகச் செக்கான்' என்றும் அழைக்கின்றனர். அதோடு தங்களுக்குச் செட்டியென்பது பட்டமாகவும் கொண்டு வாழ்கின்றனர் என்பதையும் தெளிவாக அறியமுடிகின்றது.

**செக்கார் இனம்**

இவ்வுலகில் மனிதர்கள் தோன்றி அவரவர் தேவைக்காக ஒவ்வொரு குழுவாகப் பிரிந்த தன்னுடைய குழுக்கென்று ஒரு தொழிலை அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். பிற்காலத்தில் அவை தன்னுடைய குழுவிற்குக் குலத் தொழிலாகவும் அமைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

இதனையே செக்கார் இன மக்கள் செக்காட்டி எண்ணெய் எடுத்து வாழ்பவர் ஆவர். இவர்களை தயில வினையாளர் என்றும் தயில வினைத் தொழில் செய்பவர் என்றும் கூறுகின்ற நிலையில் தன்மையினைப் பார்க்கும் பொழுது எண்ணையை அன்று தயிலம் என்றும் அத்தொழில் செய்தவர்கள் ஒரு இனமாகவும் கருதப்பட்டனர் எனலாம். மேலும், செக்கின் அமைப்பானது சிவலிங்கத்தைப் போன்றும், அவை சுற்றுவது திருமாலின் சக்கரத்திற்கொப்பாகவும் இருப்பதால் அவற்றைக் காணும்போது சிவ, விஷ்ணுவின் தோற்றத்தைப் பிரதிபலித்துக் கொண்டுள்ளது என்கின்ற நிலையில் அன்றை காலகட்டத்தைப் பார்க்கும் பொழுது மக்கள் செய்யும் தொழிலினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு இனக் குழுக்களாகவும் பிரிந்தனர் எனலாம்.

அவற்றை காணும்பொழுது வேளாண்தொழில் புரிந்தோரை வேளாளர் என்றும், செக்குத் தொழில் புரிந்தோரைச் செக்கர் என்றும் அழைத்தனர் என உணரப்படுகின்றது. அச்சூழல் அறியும்பொழுது செக்கார் இன மக்கள் மரச்செக்கினைப் பயன்படுத்தி அவற்றில் எள், நிலக்கடலை, கொப்பரை தேங்காய், வேப்பங்கொட்டை, கொட்டை முத்து போன்றவற்றை எல்லாம் தனித்தனியாக செக்கிலிட்டு ஆட்டி தூய்மையான எண்ணையை எடுத்து மக்களுக்கு வணிகம் செய்தனர் என்பதையும் இதன்மூலம் புலனாகின்றது.

**தயில வினைத் தொழில் (செக்காட்டல்)**

தயில வினைத் தொழிலான எண்ணெய் ஆட்டும் தொழில் செக்குத் தொழிலைக் குறிக்கும் மற்றும் செக்கு என்பது எண்ணை ஆட்டும்

கருவியைக் குறிக்கிறது. செக்கான் என்பது எண்ணெய் வாணியனைக் குறிக்கின்றது.

மேலும் செக்கு ஆட்டும் கருவியின் சத்தம் பல ஒலிகளில் கேட்பதாக பெரிய புராணம் கூறும் வகையில்,

**"எயிலணையும் முகில் முழக்கும்**
**எறிதிரை வேலையின் முழக்கம்**
**பயில் தருபல் வியமுழக்கும்**
**முறை தொயாப் பதியதனுள்**
**வெயில் அணி பல்மணி முதலாம்**
**விழுப் பொருளா வனவிளக்கும்**
**தயிலவினைத் தொழின் மரபில்**
**சக்கரப் படித் தெரு"**

**- (பெரியபுராணம் செய்யுள் வா - 4031)**

இதனைத் தெய்வச் சேக்கிழார் அவர்கள், மதில்களைச் சூழநிற்கும் மேகங்களின் ஒலியும், வீசும் அலைகளையுடைய கடலின் பயிலப்படும் இசை பொருந்திய பல இயங்களின் ஒலியும் ஆகிய இவ்வொலிகள் இன்ன இன்னதென ஒலி எனப் பிரித்து அறிய இயலாதவாறு ஒலிக்கின்ற அந்நகரத்தில் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழிலானது செக்கார்களுடைய மரபுத் தொழிலாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது என்பதையும் அக்கால கட்டதிலேயே செக்குத் தொழிலானது சிறப்பாக இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

**செக்கு எண்ணெய் ஆட்டும் கருவி**

செக்கு என்பது பெரிய உரல் போன்ற மர அமைப்பின் நடுவில் பொருத்தப்பட்டுள்ள உலக்கை போன்ற தடியை வைத்து மாடுகளைக் கொண்டு வட்டமாகச் சூழலச் செய்வதன் மூலம் வித்துக்களிலிருந்து தூய்மையான எண்ணெய் எடுக்கப் பயன்படும் ஒரு வகைக் கருவி என்பர். அன்றைய காலங்களின் செக்காட்டுதல் ஒரு தண்டணையாகவே மாடுகளுக்கு இணையாக மனிதர்களைப் பயன்படுத்தினர் என்பதையும் அறிய முடிகின்றது.

**செக்கு இயந்திரம்**

இன்றைய காலகட்டத்தில் மக்களினுடைய நிலையினை அறிந்து பல வகையான அறிவியல் பூர்வமான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. அத்தகைய நிலையில் செக்கார்கள் தங்கள் தொழிலுக்குத் தேவையான செக்கு இயந்திரத்தைப் பயன்படுத்தி, அதன்மூலம் எண்ணெய் ஆட்டி தூய்மையான எண்ணெயை மக்களுக்கு விற்பனை செய்து கொண்டு இருக்கின்ற நிலையினையும் காண முடிகின்றது. இதனால் அவர்கள் தங்களுடைய தொழிலுக்கு செக்கு இயந்திரத்தையும், இக்கால கட்டத்திற்கு ஏற்றாற்போல பயனபடுத்திக் கொண்டு வருகின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

அக்கால கட்டத்தில் ஒவ்வொரு மனித இனக்குழுவும் தங்கள் செய்யக் கூடிய தொழில் மூலம் தங்களின் இனக் குழுக்களைப் பிரித்துக் கொண்டனர். அவற்றில் செக்கார் இன மக்களைப் பற்றியும், தயிலவினைத் தொழிலான செக்காட்டல் பற்றிய செய்திகளும், செக்கு என்பது எண்ணெய் ஆட்டும் கருவி என்பது பற்றியும், செக்கு இயந்திரத்தை இன்றைய நிலையிலும் பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றனர் என்பதையும் அறிய முடிகின்றது.

# சங்க இலக்கியத்தில் அருந்ததி நட்சத்திரம்

* **பா.ஷியாமளாதேவி,** *முனைவர் பட்ட ஆய்வாளர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.*

அண்டத்தில் கோள்கள் இருப்பதைப் போலவே தாரகை விண்மீன், நாண்மீன் எனப் பலவாறு அழைக்கப்பெறும் நட்சத்திரங்களும் இருக்கின்றன. இவை வானில் கணக்கிட்டு அறிய முடியாதவாறு கோடான கோடியாக உள்ளன. இருபத்தி ஏழு நட்சத்திரங்களன்றி வீழ்வெள்ளி, வாள்வெள்ளி, அருந்ததி, எழுமீன், அகத்தியன் என்னும் நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்புகளும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவ்வகையில் அருந்ததி நட்சத்திரத்தை வழிபட்ட முறைகளைப் பற்றியும், சங்க இலக்கியத்தில் அருந்ததி நட்சத்திரம் பற்றியும் இக்கட்டுரை ஆயமுற்படுகிறது.

**வசிட்டரும் அருந்ததியும்**

ஒரு காலத்தில் பூமியில் வாழ்ந்ததாகக் கூறப்படும் மிகச்சிறந்த 'பிரம்ம ரிஷிகள்' (முனிவர்கள்) ஏழுபேரும் (சப்த – ஏழு) வானில் நட்சத்திரங்களாக ஒளி வீசுகிறார்கள். ஏழு நட்சத்திரங்களில் ஆறாவதாக இருப்பவர் (நட்சத்திரம்) வசிஷ்டர். இவரின் மனைவி தான் அருந்ததி. மனைவி என்னும் சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். இவரது ஒழுக்கத்தின் மாண்பினால் தீர்க்க சுமங்கலியாக விளங்கும் பாக்கியமும் வானில் நட்சத்திரமாகவும் ஒளிவீசும் பேறும் பெற்றவர்.

**அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்**

அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் வழக்கம் சங்க காலத்தில் இல்லை. பார்ப்பனர்களின் வரவிற்குப் பிறகு, பார்ப்பன சடங்குகளின் படி நடைபெறும் திருமணங்களில் முக்கியச் சடங்கு அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது ஆகும்.

அருந்ததி போல கற்புக்கரசியாக விளங்க வேண்டித் திருமண சம்பிரதாயத்தில் வானத்தில் பெண் நட்சத்திரமாக விளங்கும் அருந்ததியைக் காண வேண்டி மணப்பெண்ணை வானத்தை நோக்கிப் பார்க்கச் சொல்லுவார்கள். இவ்வாறாகத் தான் அருந்ததி பார்க்கும் பழக்கம் ஏற்பட்டது.

பகலில் அருந்ததி நட்சத்திரத்தைப் பார்க்க இயலாது எனினும் மனதில் ஒன்றை நினைத்து வணங்குதல் தான் முக்கியம். மானசீகமாக நினைத்து அருந்ததி நட்சத்திரத்தை வணங்குகிறோம். இரு நட்சத்திரங்களும் (வசிட்டர் – அருந்ததி ஒரு மைய புள்ளியைக் கொண்டு சுழலும். கணவன் மனைவி எவருக்கும் இடைவெளி விட்டுக் கொடுக்காமல் வாழ வேண்டும் என்பதே இதன் நோக்கம். இருவரும் சேர்ந்தே வாழ்க்கையில் உழைக்க வேண்டும் என்று உணர்த்துவதும் எனப் பல்வேறு காரணங்கள் அருந்ததி நட்சத்திர வழிபாட்டிற்குச் சுட்டப்படுகிறது.

கற்புக்கரசிக்குத் தமிழர்கள் கண்ணகியை காட்டுவதைப் போல வடக்கத்தியர்கள் காட்டுவது தான் அருந்ததி. நாத்திக வாதிகள் குறிப்பிடுவது திருமணத்தன்று கண்ணகியை மறந்துவிட்டு அருந்ததியைப்

பார்க்க ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என சுட்டுகின்றனர். எனினும் சங்கப் புலவர்களின் பாடல்கள் வழி வடக்கில் வாழ்ந்த வசிட்ட மாமுனிவன் மனைவி தெற்கில் வாழ்ந்த தமிழர்க்கும் தெய்வம்.

**வானியல் சான்றுகள்**

வானியலில் வசிட்டர் நட்சத்திரம் மிஸார் எனவும் அருந்ததி அல்கோர் எனவும் அழைக்கப்படுகிறது. வசிட்டரும், அருந்ததியும் இரட்டை நட்சத்திரங்கள் அல்ல. ஆனால் ஒவ்வொன்றும் தனித்தனியே இரட்டை நட்சத்திரங்கள். வசிட்ட நட்சத்திரம் தான் வானியல் வரலாற்றில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இரட்டை நட்சத்திரம். 35000 மில்லியன் மைல்கள் இடைவெளியில் மிஸார் ஏ, மிஸார் பி என்ற இரு நட்சத்திரங்களும் ஒன்றை ஒன்று சுற்றிக் கொள்கின்றன.

சப்தாஷி மண்டலத்தில் உள்ள ஏழு நட்சத்திரங்களும் வேறுபட்ட தன்மையுடையன. துபே, அல்கெய்ட், மிஸார், மேராக், ஃபெக்டா, மெக்ரஸ் வாசையில் ஒன்றைவிட ஒன்று மங்கலானது. துபே சற்று செம்மஞ்சள் நிறம் கொண்டதாகும். மற்றவை வெண்மை நிறமுடையவை. ஒவ்வொரு நட்சத்திரமும் வெவ்வேறான திசைகளில் அதிவேகமாகப் பயணம் செய்கின்றன.

**சங்க இலக்கியத்தில் அருந்ததி நட்சத்திரம்**

பிராமணர்கள் நாள்தோறும் மும்முறை செய்யும் அந்திப் பொழுது நீர்க்கடனில் (ஸந்தியாவந்தனம்) இந்த எழுவரையும் தொழுவா. இதைச் சங்க இலக்கிய நூலான நற்றிணைப் பாடலும் உறுதி செய்யும். தமிழர்கள் அனைவரும் இந்த ஏழு நட்சத்திரங்களையும் தொழுததை நற்றிணைப் பாடல் வாயில் காணலாம். இதனை,

**"கைதொழும் மரபின் எழுமீன் போல"**
**(231:2)**

என்ற வா சுட்டுகிறது.

சங்கத்தமிழ் இலக்கிய நூல்கள் அருந்ததியின் புகழ் பாடுகின்றன. அதைத் தொடர்ந்து எழுந்த சிலப்பதிகாரம், திரிகடுகம் போன்ற நூல்களும் அருந்ததியின் புகழை விதந்து ஓதுகின்றன. ஆக 2000 ஆண்டுகளுக்கு முன்னர் எல்லாத் தமிழ்ப் பெண்களும் அறிந்த ஒரே பெண் அருந்ததி.

சிலப்பதிகாரம் வானாளவப் புகழும் கற்புக்கரசியான கண்ணகியின் பெயர் சங்கத் தமிழ் நூல்களில் எங்கும் இல்லை. ஒரே ஒரு மறைமுகக் குறிப்பு மட்டுமே உண்டு.

வான உலகத்தில் திரியும் தெய்வப் பெண்களில் சிறந்தவளான புகழ்மிகு விண்மீன் அருந்ததி நட்சத்திரம். எந்த கற்புக்கரசியைப் புகழ்ந்தாலும் அவளை அருந்ததியோடு ஒப்பிடுதல் தமிழர் தம் மரபு. இதனை,

**"வடமீன் புரையும் கற்பின் மடமொழி அரிவை"**
**(புறம்.122:)**

**"அருந்ததி அனைய கற்பின்"**
**(ஐங்.442:3)**

**"விசும்புவழங்கும் மகளிருள்ளும் சிறந்த**
**செம்முன் அனையள்" (பதிற்.31:28)**

**" பெருநல் வானத்து வடவயின் விளங்கும்**
**சிறுமீன் புரையின் கற்பின் நறுநுதல்"**
**(பெரும்பாண்.302-303)**

**"வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய**
**கற்பினாள்" (கலி.2:21)**

**"கடவுள் ஒரு மீன் சாலினி" (பா.5:44)**

**"மீனொடு புரையும் கற்பின்**
**வாள்நுதல் அரிவையொடு காண் வரப்**
**பொலிந்தே" (பதிற்.89:19-20)**

எனும் இலக்கிய வரிகள் விளக்கிச் செல்கின்றன.

**காதல் பரத்தைக்கு அருந்ததியை ஒப்படுதல்**

தலைவனின் மகனை காதல் பரத்தை கையில் எடுக்க அதனைக் கண்ட தலைவி அவளைத் தழுவினாள். அதற்கு அவள் நாணி நின்றாள். அவளின் நிலையை, வானத்தில் கண்ட அருந்ததி தெய்வத்திற்கு ஒப்பாவாள், அவள் நின் மகனுக்குத் தாய் எனத் தலைவனிடம் தலைவி கூறுவதை,

**"நாணி நின்றோள் நிலை கண்டு யானும்**
**ரேணினன் அல்லெனோ - மகிழ்ந வானத்து**
**அணங்கு அருங் கடவுள் அன்கோள் நின்**
**மகன் தாய் ஆதல் புரைவது ஆங்கு எனவே"**
**(அகம்.16:16-19)**

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன. இங்கு 'வானத்து அணங்கு அரும் கடவுள் அன்னோள்'

என்பது பொதுவாக வருத்தும் தெய்வத்தைக் குறிக்கும். எனவே அது தரும் வருத்தத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள அதை வணங்குகின்றனர். நாளடைவில் வணங்குதற்குரிய பெண் தெய்வங்கள் அனைத்தையுமே அணங்கு என்று அழைப்பது வழக்கமாகிவிடுகிறது. எந்தப் பெண்ணையுமே போற்றிச் சொல்லும் போது அணங்கு என்று அழைப்பதும் வழக்கமாக இருந்தது. இங்கேயும் கிழத்தியை அணங்கு என்கிறாள் தலைமகள். இருப்பினும் அவளுக்கு ஐயம் எழுகிறது. அவ்வாறு கூறுவது அவளை வருத்தும் அணங்கு எனக் கூறுவதாகிவிடுமோ என்று அஞ்சிய தலைமகள் 'வானத்து அணங்கு' என்கிறாள். அத்துடன் நில்லாமல் அவளை 'வானத்து அணங்கு அரும் கடவுள்' என்கிறாள். இவ்வாறு புலவர் குறிப்பிடுவது அருந்ததி என்ற விண்மீனாய் நிற்பது கற்புக்கரசி அருந்ததி என்பது ஒருசாரார் நம்பிக்கை. ஏற்கனவே கிழத்தியை மாசில் குறுமகள் என்று சொல்லியிருப்பதால், இங்கு அவளைக் கற்பில் சிறந்த அருந்ததி போன்றோள் என்று தலைமகள் கூறுவதாகக் கொள்வர். இருப்பினும் அவள் வருத்தும் தெய்வம் போன்று அழகாக இருந்தாள் என்றே அறிஞர் ச.வே.சுப்பிரமணியன் பொருள் கூறுகிறார்.

**பிற இலக்கியங்களில் அருந்ததி**

சிலப்பதிகாரத்தில் கண்ணகியை வருணிக்கும் இளங்கோவடிகள், அவளை அருந்ததிக்கு ஒப்பிட்டுப் பாடிய வரிகளாக,

**"தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்"**
**(மங்கல.27)**

**"வானத்துச் சாலியொருமீன் தகையாள்"**
**(மேலது.51)**

**"அங்கண் உலகின் அருந்ததி அன்னாளை"**
**(மேலது.66)**

ஆகியவை அமைகின்றன. மேலும் அருந்ததியைக் குறிப்பிடும் போது இவர்களுக்கு எல்லாம் ஒருபடி மேலே போய்விட்டான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். அக்ஷமாலா என்னும் கீழ் சாதிப்பெண் வசிஷ்டரைச் சேர்ந்ததனாலேயே உயர்ந்தாள் என்றான் மனு. ஆனால் கம்பனோ வசிட்டனுக்குப் புகழ் கிடைத்து அருந்ததியினாலேயே எனும் தொனியில் வசிட்ட முனிவன் பெயரைச் சொல்லாமல் அருந்ததி கணவன் என்று அருந்ததியை முன்னிலைப் படுத்துகிறார்.

ராமனுக்கும் சீதைக்கும் கல்யாணம் ஆதலால் உலகமே அயோத்தி மாநகரை நோக்கி வெள்ளம் போல நகர்ந்து செல்கிறது. ரகு வம்ச குல குருவான வசிட்ட முனிவன் 2000 பிராமணர்கள் புடை சூழ முத்துப் பல்லக்கில் பிரம்மா போல அயோத்தி நோக்கிப் பவனி போகிறார். அதை வருணிக்கும் கம்பன்,

**"கவிகையின் நீழல் கற்பின் அருந்ததி கணவன் முத்துச்**
**சிவிகையில் அன்னம் ஊரும் திசைமுகன் என்னச் சென்றான்" (கம்ப.801)**

எனக் குறிப்பிடுகிறார்.

**"சீதையை அருந்ததிக்கு ஒப்பிடும் கம்பராமயண வரிகளாக,**
**கன்னி அருந்ததி காரியை காணா**
**நல்மகனுக்கு இவள் நல்லணி என்றார்"**
**(மேலது.1254)**

**"அருந்ததி அனையாளே அமுதினும் இனியாளே" (மேலது.2006)**

ஆகியவை அமைந்துள்ளன. சீதையை ராமன் அருந்ததி என்று போற்றியது இதன் வாயிலாக வெளிப்படுகிறது.

**"அருந்ததி உரைத்தி அழகற்கு அருகு சென்று உன்**
**மருந்தனையை தெவி நெடுவஞ்சர் சிறைவைப்பில்" (மேலது.5350)**

என்று அனுமன் பகாவான். இதுபோல இன்னும் பல குறிப்புகள் அருந்ததியைப் பற்றி உள்ளன.

சங்க இலக்கியத்தில் வலியுறுத்தப்படும் கற்புநெறி ஒருத்திக்கு ஒருவன் என்பதாகும். இந்நியதியை நிலைநாட்டுவதற்காக அருந்ததி ஒரு குறியீடாக பயன்பட்டுள்ளதை மேற்குறித்த சான்றுகளால் நன்குணரமுடிகிறது.

# ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள்

* M.M.**ஷியாமளாவள்ளி,** *முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம், இசைக் கல்லூரி மற்றும் இசை ஆராய்ச்சி மையம், தல்லாகுளம், மதுரை.*

ஞான பூமியாகி நம் பாரத தேசத்தில் தர்மத்தை ஸ்தாபிக்கவும், பக்தி நெறியைப் பரப்பவும் பகவான் மனித தெய்வங்களை அவதரிக்கச் செய்தார். அதன் பிரகாரம் தெற்கே – அழ்வார்கள், நாயன்மார்கள், அருணகிரிநாதர், இராமலிங்க அடிகளார், ரமண மகரிஷி, தூபதீர்த்தார்ய ஸ்வாமிகள், தியாகப் பிருமம், வேங்கடரமண பாகவதர், வேங்கடசூரி, ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகள், ஸ்ரீகோவிந்த தாஸ ஸ்வாமிகள், வடக்கே – துளசிதாஸ். கபீர்தாஸ், புரந்தர தாஸர், துகாரம்,சூர்தாஸ், மீராபாய், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகானந்தார் முதலியவாகள் மனித தெய்வங்களாய் அவதரித்துள்ளார்கள்.

இவர்களில் நாம் சௌராஷ்டிர சமூகத்தில் பிராமண குலத்தில் மதுரையில் தோன்றிய ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிகளை பற்றி கீழ் காண்



| | |
|---|---|
| இவருடைய பெற்றோர் பெயர் | : ஸ்ரீரங்காரியர், ஸ்ரீமதி இலட்சுமி அம்மையார் |
| பிறந்த தேதி | : மார்கழி 22ந் தேதி (9.1.1943) |
| கோத்திரம், நட்சத்திரம் | : ஜபாலி கோத்திரம்,மிருகசீர்ஷ நட்சத்திரம் |

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | ராமபத்ரன் |
| பிறந்த இடம் | : | மதுரை |
| குருமார்கள் | : | பரமக்குடி – நாகளிங்க அடிகளார், ஆழ்வார் திருநகரியில் வடபத்ர அரையர் ஸ்வாமிகள் |
| பட்டங்கள் | : | ஸ்ரீ நடனகோபால நாயகி |
| வேறு பெயர்கள் | : | கொப்பான் சாமியார், எட்டிக்காய் சித்தர், சதாநந்த சித்தர், நடன கோபாலன் |
| வித்தைகள் | : | அஷ்டமாசித்தி மற்றும் மாதவ ராஜயோகம் |
| போதனை | : | குருபக்தி, ஹரிபக்தி, மொழிபற்று, சமூக சிந்தனை |
| இயற்றிய பாடல்கள் | : | கீர்த்தனைகள் – ஸௌராஷ்டிர மொழி, மற்றும் தமிழ் மொழி பிரபந்தங்கள், நாமாவளிகள், கண்ணிகள்,மங்களங்கள் |
| மோட்சம் | : | 08.01.1914 – மார்கழி 25 வியாழக்கிழமை (முக்கோடி ஏகாதசி) |

ஸ்வாமிகளின்

பிருந்தாவனம் : மதுரை,அழகர் கோயில் சாலையில் உள்ள காதக்கிணறு எனும் நடனகோபாலபுரம் மற்றும் ஸ்ரீநாயகி மந்திர் – தெப்பக்குளம், மதுரை.

நாயகி ஸ்வாமிகள் கீர்த்தனைகள், கண்ணிகள், பிரபந்தங்கள், நாமாவளிகள், மங்களங்கள் போன்ற உருப்படிகளை இயற்றியுள்ளார். இவர் நாயக – நாயகி பாவத்தில் பல உருப்படிகளை இயற்றியுள்ளார். கிருஷ்ணனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவித்து உருப்படிகள் இயற்றியது மட்டும்மல்லாமல் பெண்ணாகவே மாறியவர். ஆழ்வார் பாசுரங்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவர்களைப் பின்பற்றி 64 பிரபந்தங்களை இயற்றியுள்ளார். அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ப்ரபந்தங்கள்:**

நாயகி ஸ்வாமிகள் ப்ரபந்து பிரபந்தங்கள் என்ற உருப்படியை இயற்றியுள்ளார். அவை மொத்தம் 64 ஆகும். அனைத்து பிரபந்தங்களும் 4 வரியைக் கொண்டுள்ளது. நாம் நமது வாழ்க்கையில் எதையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சாஸ்திர சம்பிரதாயங்களையும் முழுவதுமாக இப்பிரபந்தங்களில் எடுத்துக் கூறுகிறார் நாயகி ஸ்வாமிகள். அதாவது தினமும் ஹரி நாமத்தைச் சொல்லுங்கள், நாராயணனை பூஜை செய்யாமல் சாப்பிடக்கூடாது, திருநாமத்தை இட்டுக் கொள்ளாமல் சாப்பிடக்கூடாது, வெங்காயம், பூண்டு, முள்ளங்கி போன்றவற்றை அதை தெரிந்தே எடுத்துக்கொண்டு பூஜை செய்தவனுக்கு ஞானம் வராது என்றும், எருமையின் பால் பூஜைக்கு ஆகாது, எருமைப்பாலின் மூலம் கிடைக்கும் எந்தப் பொருளும் உடம்பிற்குச் சேர கூடாது, தீட்டுள்ள இடத்தில் கையை நனைக்கக்கூடாது, காசு பணத்தை புதைத்து வைக்கக்கூடாது, கைங்கர்யம் செய்ய வேண்டும், த்யானம் செய்தவனுக்கு பாபங்கள் இருக்காது, தண்ணீரை உட்கார்ந்து அருந்தவேண்டும், ஒரு நாளில் மூன்று, நான்கு தடைவ சாப்பிடக்கூடாது, பிராமணருக்குரிய சம்பிரதாயத்தை விடக்கூடாது, மூன்று காலம் ஜெபம் செய்ய வேண்டும், சாதாரணமாக வேஷ்டியை கட்டிக்கொண்டு ஜபம் செய்யக்கூடாது, பெரிய மடியைக் கட்டிக் கொண்டு நான் தான் பெரியவன் என்று சொல்லக்கூடாது, அஷ்டாக்ஷரத்தை விடக்கூடாது, இந்த சரீரம் நிலையற்றது, கோவிந்தனை நினை அதுவே மோக்ஷம் கிடைக்கும் என்கிறார். மேலும் மனம் போன போக்கிலே போகக்கூடாது, மீசையை முறுக்கக் கூடாது, பெரியவன், சிறியவன் என்று வேறுபாடு பார்க்கக்கூடாது, மோக்ஷமென்பது நல்ல வார்த்தைகளிலும், எண்ணங்களிலும் தான் இருக்கின்றது, இவை இரண்டும் இல்லாததால் தான் இராவணன் அழிந்து போனான். ஸாத்வீகத்தை கடைபிடிக்க வேண்டும், ஸீதாராமா என்று சொல்லாதவன் இருந்தால் என்ன, போனால் என்ன! ஸீதாராமா என்று கூறினால் மறுபிறவி வாராது என்று கூறுகிறார்.

மேலும் புராணங்களில் உள்ள கதைகளை எல்லாம் நினைவுபடுத்தும் விதமாக ஒவ்வொரு வரிகளில் ஒரு சம்பவத்தை நமக்குக் கூறுகிறார். கிருஷ்ணர் வெண்ணையைத் திருடி உண்டதையும், பால் குடித்து ராட்க்ஷசியைக் கொன்றதையும், கிருஷ்ணனின் வேணு கானம் கேட்டு மாடு தானாக பால் கறந்ததையும், கஜேந்திரனுக்கு மோக்ஷம் அளித்ததையும், சுக்ரீவனுக்கு உதவியதையும், அர்ஜீனனுக்கு கீதா உபதேசம் கொடுத்ததையும், விதுரனுக்கு அருள்புரிந்ததையும், மகாபலிக்கு மோக்ஷமளித்ததையும், தேவர்களுக்கு அமிர்தம் கொடுத்ததையும், பிரம்மனுக்கும் ருத்ரனுக்கும் மூலமே விஷ்ணு என்கிறார். ருத்ரன் கோவிந்தனின் நாமத்தை பாடி ஆடுகின்றனர் என்கிறார். ராமநாமத்தால் பாவங்கள் போகும், இகபர சுகங்களைத் தரும், சொல்லிக் கொண்டே இருங்கள் என்கிறார். வேங்கடாசலபதியை பஜனை செய், ஸ்ரீவிஷ்ணு மார்கத்திலிருந்து விட்டு விலகாதே, துக்கத்தில் மூழ்காதீர்கள் வேலையோடு வேலையாக வடபத்ராரியர் காட்டிய வழியில் சென்று ஹரி நாமத்தை பஜியுங்கள் என்று நமக்கு அருள்வழி காட்டுகிறார் நாயகி ஸ்வாமிகள். ஆழ்வார்களை பின்பற்றியவர் என்பதற்கு இந்தப் பிரபந்தங்களும் ஒரு சான்றாகும்.

**நாயகி ஸ்வாமிகளின் பிரபந்தங்களுக்கு உதாரணம்:**

**“நாம்ஸெரொ ஹரிநமம் ஸொண்ணகன் நிச்சு**

**காம்ஸெரொ ஏ காம் சல்வோ து$_3$க்கும் பு$_3$ண்ணகன்**

**நாம் லெஸல்னாஸ்தக் பா$_4$த் ஜெமன் ஹோனா ஸ்ரீமத்**

**நாராயணா ஹரி புஜெ நீ:ஸ்தக் கா$_2$ன் ஹோனா**

**அம்பு$_3$ட் தெ$_4$ய்ஞ் ஹால் சூக் கொன்னி அவ்னா**

**ஆத்ம ஞான் நஸிதகய் பெ$_4$ய்ஸீ தூ$_3$த் புஜாக்ஹோனா**

**பெ$_4$ய்ஸ் தெ$_4$தெ$_3$ட் பெண்டு$_3$ன் வரொ ஹோனா**

**பெ$_4$ய்ஸு தூப் தூ$_3$த் தெ$_4$ய்ஞ் ஆங்கு$_3$க் ஹோனா**

**தீ$_3$ரேஸ் ஸுக்கி$_3$ரீவுகு ஸேவ**

**தி$_3$வ்ய ஞான தொளொ தீ$_3$ அர்ஜீனுக் தீ$_3$ரேஸ் ஸேவ**

**தீ$_3$ரேஸ் மாய் பா$_3$புனுக் ஸேவ**

**தே$_3$வ்மெனி ஜல்யெ யெமாலாகாருக் தீ$_3$ரேஸ் ஸேவ**

**த$_3$யஹால் தே$_3$வுக் தெ$_3$க்கிரி: யாஸ்**

**தி$_3$க் எனோஸ் மெனி வடபத்ராரியுனு வசிரி:யாஸ்**

**நாம்ஸெர ஹரிநமம் ஸொண்ணகன் நிச்சு**

**காம்ஸெரொ ஏ காம் சல்வோ து$_3$க்கும் பு$_3$ண்ணகன்”**

இவ்வாறு நடனகோபால நாயகி ஸ்வாமிகள் பக்தர்களுக்கு பாக்களின் மூலமே பக்தி உபதேசமும், வைராக்ய வேகமும், சேவை உணர்ச்சியும், சாதன சக்தியும் ஊட்டி அருளியிருக்கிறார். பள்ளி வாசைன அறியாத இவருடைய திருநாவில் கலைமகள் களிநடம் புரிந்திருக்கிறாள், தெள்ளமுதனைய ஸௌராஷ்டிரத்திலும், தித்திக்கும் செந்தமிழிலும் பல பாடல்களைப் பாடிப் பரமனைப் பாடியுள்ளார். பல பாடல்களை நமக்கு அருளிய நாயகி ஸ்வாமிகள் 1914-ம் ஆண்டில் ஜனவரி மாதம் 6ம் நாள் மார்கழி மாதம் 23ம் நாள் அஷ்டமியன்று இரவு பந்தனம் செய்து கண்களை மூடித்தியானத்தில் ஆழ்ந்தார். இரண்டு நாள் கழித்து 8.1.1914 வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு ஆசார்யன் திருவடி அடைந்தார் நாயகி ஸ்வாமிகள். அவர் கூறிய நன்மொழிகளைக் கடைப்பிடித்து நாமும் வாழ்வில் பயன்பெறுவோமாக!

# இயற்கை பற்றிய இறையன்புவின் புலப்பாடு

*முு.ராஜலெட்சுமி, பதிவு எண்: PHDTS2013P005A, பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.

**முன்னுரை:**

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் உயர்ந்த குறிக்கோள் இருத்தல் வேண்டும். அக்குறிக்கோளினை நோக்கி மனிதன் அடியெடுத்து வைத்தல் வேண்டும். பண்டையத் தமிழ் மக்கள் இயற்கைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்ட சீரிய சிந்தனைகளை வளர்த்து வந்தனர் என்பதைப் பல்வேறு இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

நூலறிவும், நுண்ணறிவும் உலகியலறிவும் ஒருங்கே முற்றிய திருவள்ளுவப் பெருந்தகை மாந்தர்க்கு அறங்களும், நெறிகளும் நல்லவைகளும் புகட்டுவதற்கு இயற்கைப் பொருள்களை கூர்ந்து நோக்கி அவற்றின் இயல்புகளைத் தேர்ந்து தெளிந்து மக்கட்கு ஆக்கம் சேர்க்கும் அரிய கருத்துக்களை அறவுரையாக வழங்கியுள்ளார்.

பறவை, விலங்கு, ஊர்வன, மரம், பயிர், செடி, கொடி, மலர், காய், கனி முதலிய இயற்கைப் படைப்புகளைக் கொண்டு எண்ண நினைக்கும் விழுமிய அறங்களைக் கவிச்சுவை பெருகப் பகர்ந்துள்ளார்.

திருவள்ளுவரின் பார்வையில் படும் பாடும் பறவைகளில் காக்கை, ஆந்தை, கொக்கு, மயில் முதலியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

காக்கைப் பற்றி குறிப்பிடும் போது காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்பது ஒரு பழைய நம்பிக்கை. குறுந்தொகையால் காக்கை கரைவதைத் குறித்துப் பாடி பெண்பாற்புலவர் ஒருவர் காக்கை பாடினியார் என்று பெயர் பெற்றிருத்தல் இங்கு சுட்டதக்கது.

**“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**ஆன்னந் ராக்கே உள”** **(குறள் எண் : 527)**

காக்கையின் சிறந்த இயல்புகளில் மிகவும் போற்றத்தக்கது தனக்குக் கிடைத்த இரையினை மறைக்காமல் தம் இனத்தைக் கரைந்து அழைத்துக் கூடி உடன் உண்ணும் உயர் பண்பாடு உடையது. அத்தகைய அன்புணர்வு மாந்தர்களுக்கு அமைய வேண்டும் என்று வள்ளுவர் அறிவுருத்துகிறார்.

இறையன்பு அவர்களும் காகம், புறா, விலங்கு, செடிகள், மரங்கள் போன்ற இயற்கை படைப்புக்களைக் கொண்டு தன்னுடைய கருத்துக்களைப் புலப்படுத்துகிறார்.

**பறவைகள் பற்றிய சிந்தனை:**

காகங்கள் கூடி வாழ்வதற்கு இலக்கணமாக இருந்தாலும், அவற்றின் கண்களில் ஒரு குரோதம் தெரிகின்றது. ஒரு வன்மம் தெரிகின்றது. அவை யாரையும் நம்புவதும் இல்லை.

மனிதனின் காலைச் சுற்றித் திரிகின்ற கோழிகள் மாமிசத்திற்காகப் பலியாகின்றன.

காகம் யாரையும் நம்பி வாழாத காரணத்தால் நீண்ட நாட்கள் உயிர் வாழ்கின்றன. கோழி மனிதனை நம்பி வாழ்வதால் மாமிசத்திற்கு பலியாகின்றன.

இவ்வுலகில் பிறரை நம்பிச் சாவதும் நம்பிக்கையின்மையால் வாழ்வதும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

நமக்கு பொருத்தமானவற்றை தேர்வு செய்து எந்த நேரத்தில் யாரை நம்பி வாழ வேண்டும் எந்த நேரத்தில் யாரை நம்பி வாழக்கூடாது என்பதை அறிந்து விழிப்புணர்வுடன் வாழ வேண்டும்.

வெகுளியும், தந்திரமும் என்றும் கட்டுரையில் பைபிளில் ஒரு வாசகத்தைக் கூறி விளக்குகிறார்.

**“புறகாக்களைப் போல வெகுளியாகவும் பாம்புகளைப் போல தந்திரமாகவும் இருக்க வேண்டும்” (ஏழாவது அறிவு – ஐ பக்.10)**

என்பது தான் அந்த வாசகம் புறாக்கள் மென்மையானவை, வெண்மையானவை அமைதி சின்னத்திற்கு புறாவை கூறுவார்கள் தூது செல்லும் பண்பை உடையது. புறாக்கள் தானியங்களை மட்டுமே உண்ணக் கூடியது. பிற உயிர்களை அடித்து சாப்பிடாமல், பிற உயிர்களை துன்புறுத்தாது வாழக் கூடியது. புறாவைப் போல அன்பு மயமாக மனிதர்கள் இருக்க வேண்டும்.

**“புறாக்கள் அன்பு மயமானவை, வளர்ப்பவர்களை நம்புபவை, அன்பு மயமானவர்களின் தோள்களில் கூட அமரக் கூடியவை யாரையும் காயப்படுத்தாதவை” (ஏழாவது அறிவு – ஐ பக்.10)**

**“பறவைகள் சில தகவல்கள்”** என்னும் கட்டுரையில் பறவைகள் நமக்குக் கற்றுத் தருவதற்கு ஏராளமான தகவல்களைத் தன் சிறகுகளுக்குள் வைத்திருக்கின்றன.

உலகத்திலேயே மிகப்பெரிய பறவை **“ஆஸ்ட்டிரிச்”** என அழைக்கப்படும் நெருப்புக் கோழி. உலகத்திலேயே சிறிய பறவை ஹம்டிங் பறவை.

பின்னோக்கிப் பறக்கக் கூடிய ஒரே பறவையும் **“ஹம்மிங்”** பறவை தான். அவற்றின் எடை இரண்டு கிராம் மட்டும் தான். தலையில் அதிக கனம் இல்லாத காரணத்தினால் தான். அவை தலைகீழாகப் பறக்க முடிகிறது.

மனிதனும் எப்பொழுதும் தலைக்கனம் இல்லாமல் வாழ கற்றுக் கொள்ள வேண்டும். தான் என்ற அகந்தை இருக்கக் கூடாது. இக்கருத்தை

**“பின்னோக்கில் பறக்கக்கூடிய ஒரே பறவையும் அது தான். இரண்டு கிராமம் மட்டுமே அவற்றின் எடை தலைக்கனம் இல்லாத காரணத்தால் தான் அவை தலைகீழாகப் பறக்க முடிகிறது” (ஏழாவது அறிவு ஐ – பகட.35)**

**“பறவைச் சுகந்திரம்”** என்னும் கட்டுரையில் பறக்கிற பறக்காத அனைத்து பறவைகளுமே அழகு என்கிறார்.ஆனால் மனிதன் உணவுக்காகவே வளர்க்கப்படும் பறவைகள் அதிகம்.குயிலைக் கூட மாமிசத்திற்காகக் கொல்கிறான்.

அவன் அகோரப் பசிக்கு இயற்கையின் இனிய பக்கங்களையெல்லாம் கடித்துத் தின்னும் இயல்பு தொடர்கிறது. அதனால் பறவைகளின் எண்ணிக்கை பொதும் குறைந்து கொண்டே வருகிறது. மனிதன் இயற்கையை அழிக்காமல் வாழ்ந்தான் என்றால் மனிதனின் வாழ்க்கையும் மேம்படும்.

**விலங்குகள் பற்றிய சிந்தனை:**

**“விலங்கு”** என்ற கட்டுரையில் விலங்குகளின் இயல்புத் தன்மையை எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர்.புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்பது பழமொழி.

அதாவது புலி மாமிசத்தைத் தவிர வேறு எந்த உணவும் உட்கொள்ளாது என்பது தான் அந்த பழமொழியின் அர்த்தம். ஆனால் அந்த பழமொழி பொய்யானவை என்றும் விலங்குகள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறக்கூடிய தன்மையுடையவை என்ற கருத்தை நிலைநாட்டியுள்ளார்.

ஜார்ஜ் மற்றும் மார்கரெட் ஜோடி கம்பிகளுக்கு அப்பால் நின்று கொண்டிருந்த போது

அந்தப் பெண்சிங்கம் வீசி எறிந்த 3 பவுண்டுகள் எடை கொண்ட சிங்கக் குட்டியைப் பிடித்து டைக் என்ற பெயரிட்டு வீட்டில் வளர்ந்து வந்த பிராணிகளோடு இவற்றையும் வளர்த்து வந்தனர்.

**"டைக் கிற்குத் தானியங்களை பாலுடன் கலந்து கொடுத்து வந்தனர். யாரோ சொன்னது போல் கால்நடையின் ரத்தத்தைப் பாலுடன் கலந்து கொடுக்க முயற்சி செய்தார்கள். வெறும் பாலை மட்டும் விரும்பிச் சுவைத்த டைக் 5 துளி ரத்தத்தைக் கலந்தால் கூட சாப்பிட மறுத்தது" (ஏழாவது அறிவு ஐ பக்.92)**

மாமிசத்தை தவிர வேறு எந்த உணவையும் உட்கொள்ளாத சிங்கக்குட்டி சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன் தாயைப் பிரிந்தும் கூட வேறு உணவு பழக்கத்தையும், இருப்பிடத்தையும் ஏற்றுக் கொண்டது.சமூகத்தில் இன்று பெரும்பான்மையான மனிதர்கள் வசதியாக வாழ்ந்து விட்டு பின்பு பின்னடைவு அடையும் போது மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை செய்யும் முடிவுக்கு வருகின்றனர். இதனால் அவர்களுடைய குடும்பமே மனநிம்மதி இல்லாமல் தவிக்கிறது. டைக்கியைப் போல மனிதனும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டு வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

**மரம்**

**"மரங்கள் மண்ணின் வரங்கள்"** என்னும் கட்டுரையில் மரத்தின் பெருமைகளை கூறுகிறார்.

மரம் மண்ணிற்கு மருதாணி, பூமி போர்த்திக் கொள்ளும் மரகதம். ஒவ்வொரு மரமும் போதிமரம். மரம் மனிதனுக்குக் கற்றுத் தருகிறது

**"அன்பு செய்ய**

**தானம் செய்ய**

**சகிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்ள"**

**(ஏழாவது அறிவு - ஐ பக்.232).**

மரத்திடம் இல்லாத குணம் எதுவும் இல்லை. மனிதன் மரத்திடமிருந்து நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பெரும்பாலான பிள்ளைகள் தன்னுடைய பெற்றோரை முதியோர் இல்லத்திற்கு அனுப்பி விடுவதை பார்க்கின்றோம். அவர்கள் வெட்கப்படும் படியாக ஆலமரத்தின் பயன்களை கூறுகிறார்.

**"விழுது கைகள் ஊன்றி வயோதிகத்திலும்**

**பரந்து விரியும் ஆலம்"**

**(ஏழாவது அறிவு ஐ பக்.232)**

தகப்பன்களை முதியோர் இல்லத்திற்கனுப்பும் குழந்தைகளைப் பார்த்துச் சிரிப்பதை போல இருப்பதாக கற்பனை செய்துள்ளார்.

பனைமரம் யாரும் உதவி செய்யாமலேயே நீர் வார்க்காமலேயே வளர்ந்து கோடையில் குளிர்ந்த நுங்கு தரகிறது. நிமிர்ந்து நிற்கக் கற்றுத் தருகிறது.

இப்படி ஒவ்வொரு மரத்தையும் மனிதன் பார்த்து கற்றுக் கொள்ளுவதற்கு எராளம் உண்டு.

**"இயற்கையோடு இயையும் போது**

**மனித வாழ்க்கையும் மேம்படுகிறது"**

**(ஏழாவது அறிவு ஐ பக்.165)**

எனவே மரத்தை நாம் நடும் பொழுதும் பூமியை நாம் இன்னும் அழகாக்கிறோம். இயற்கையை குளிர்விக்கிறோம். எனவே மரத்தை நடுவோம். வளர்ப்போம். அதனிடமிருந்தும் நற்குணங்களை பெறுவோம்.

**இசை:**

இவ்வுலகில் இசையை விரும்பாத எவ்வுயிரும் இல்லை. இசையை விரும்பாதவர் செவிடனாக மட்டுமே இருக்க முடியும். மூவர் தேவாரத்தில்,

**"ஏழிசையாய் இசைப்பனாய்**

**என்னுடைய தோழனுமாய்.."**

என்று ஞானசம்பந்தர் பாடுவதற்கேற்ப ஆண்டவனே இசையாகவும் அதன் பயனாகவும் இருக்கிறான்.

ஓசை தரும் இன்பத்திற்கு ஒரே ஓர் உவமைதான் உண்டு. ஆண்டவனுக்கு நாதப் பிரம்பம் என்ற பெயருண்டு. உயரிய இசை

இன்பத்தை நுகர்வதால் ஏற்படும் பேரானந்தம் ஆண்டவனின் திருவருளை பெறுவதால் ஏற்படும் பேரின்பத்திற்கு நிகரானது! அதை இன்னதென்று விவரிக்க முடியாது. அதே போல ஓசையும் கட்புலனுக்கு எட்டாதது. ஆனால் அதை உணர முடிகிறது. ஆண்டவனைப் பற்றிக் கூறப்படும் குணங்களெல்லாம் நாதத்திற்குமுண்டு. ஒளயும் ஒலியும் பார்ப்பதற்கு வெவ்வேறாகத் தோன்றிடினும் ஆழ்ந்து கவனித்தால், அவை ஒரே பொருளின் வெவ்வேறு வகையான அசைவுகளால் ஏற்படுபவை என்பது தெரியவரும்.

இயற்கை ஒவ்வொன்றிலும் இசை அமைந்துள்ளது. இயற்கையே இசையாகக் காட்சியளிக்கிறது. விலங்குகளின் ஒலிகள், பறவைகளின் சங்கீதங்கள், இலைகளின் அசைவுகளிலிருந்து எழும் ஒலிகள் ஆகியவற்றில் இசையைக் கேட்கலாம். வாழ்க்கையே இசைமயமாக இருப்பதால் அதைப் பிரதிபலிக்க மனிதன் எடுத்த முயற்சியே சங்கீதமாகப் பிரவாகமெடுத்து இயற்கையிலிருந்து ஏழிசை தோன்றியதை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

**“ ‘ஷாட்ஜா’ என்கிற மயிலின் ஆனந்தம் கூக்குரலே ‘ஸ’ வாகவும் ‘ரிஷபா’ என்னும் பசு கன்றை அழைக்கும் அழைப்பே ‘ரி’ யாகவும் ‘காந்தாரா’ என்னும் ஆட்டின் கூப்பாடே ‘க’ வாகவும் ‘மதியமா’ என்னும் கொக்கின் கூவலே ‘ம’ வாகவும் ‘பஞ்சமா’ என்னும் குயிலின் கனைப்பே ‘த’ வாகவும் ‘தெய்வதா’ என்னும் குதிரையின் கனைப்பே ‘த’ வாகவும் ‘நிஷதா’ என்ற யானையின் பிளிறலே ‘நி’ யாகவும் மருவி சப்தசுரங்களாக வடிவெடுத்ததாக வல்லுநர்கள் கூறுவார்கள். இயற்கையில் அபஸ்வரம் என்பதே கிடையாது”**

**(வாழ்க்கையே ஒரு வழிபாடு ப.154)**

இசை இறைமையோடு தொடர்பு உடையதாக இருக்க வேண்டும். இக் கருத்துக்கு அரணாக ஒரு நிகழ்ச்சியைப் பதிவு செய்கிறார் ஆசிரியர். அக்பர் தான்சேனிடம் உன் குருவின் இசை உன்னுடையதைக் காட்டிலும் உன்னதமாக இருக்கிறதே என்ன காரணம்? என்ற வினவிய போது அவர் இறைமைக்காகப் பாடுகிறார். ஆகவே சிறப்பாக இருக்கிறது நான் உங்களுக்காப் பாடுகிறேன். எனவே சாதாரணமாக இருக்கிறது என்று பதில் தந்தார் தான்சேன்.

நம்முடைய ஒவ்வொரு செயலும் பிறர்க்காக, பிறர் புகழ்வதற்க்காக செய்வதாக இருக்கக் கூடாது. மனிதன் மற்ற உயினங்களைக் காட்டிலும் மேம்பட்டவன். அதனால் எந்த செயலையும் சிறப்பாக செய்ய வேண்டும்.

**முடிவுரை:**

பறவைகளும்,விலங்குகளும் தன்னுடைய எதிர்காலத்திற்கென்று எதையும் சேமித்து வைப்பதில்லை. காக்கையின் சிறந்த இயல்புகளில் மிகவும் போற்றத்தக்கது தனக்குக் கிடைத்த இரையினை மறைக்காமல் தம் இனத்தைக் கரைந்து அழைத்துக் கூடி உடன் உண்ணும் உயர் பண்பாடு உடையது. அத்தகைய உயர்ந்த பண்பாடு மாந்தர்களுக்கு அமைய வேண்டும்.

புறா தானியங்களை மட்டுமே உண்ணக் கூடியது. பிற உயிர்களை அடித்து சாப்பிடாமல், எந்த உயிர்களையும் துன்புறுத்தாது வாழக் கூடியது. அவற்றைப் போல அன்பு மயமாக மனிதர்கள் இருக்க வேண்டும்.

மரங்கள் மண்ணின் வரங்கள். அவற்றிடமிருந்து அன்பு தானம் சகிப்புத்தன்மை போன்ற நல்ல குணங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

இயற்கை ஒவ்வொன்றிலும் இசை அமைந்துள்ளது. இயற்கையே இசையாகக் காட்சியளிக்கிறது. எனவே இயற்கையை பாதுகாக்க வேண்டும்.

# கைக்கிளை

*சா.ஸ்டெல்லா, *பதிவுஎண்: PHDTS2013P001, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்.*

**முன்னுரை:**

ஒத்த காதலராகிய ஒருவனுக்கும், ஒருத்திக்கும் உரிய குடும்பவாழ்வில் அன்பினால் நிகழும் அகத்திணை ஒழுக்கம் அன்பின் ஐந்திணை என்று அழைக்கப்படுகிறது. ஒருதலைக் காமமாகிய கைக்கிளையை தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அன்பின் ஐந்திணையை விரிவாகவும், கைக்கிளைத்திணையினை குறிப்பாகவும் விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் மனிதகுலத்தின் சிறப்புரிமையுடைய ஒழுகலாற்றினை அகம் என்றும் புறம் என்றும் இருகூறுகளாகப் பகுத்து இலக்கணம் குறிப்பிடுகின்றார். பின்னர் வந்த இலக்கணப் புலவர்கள் அகம், புறம் என்பதை அகம், அகப்புறம் என விரித்து இலக்கணம் வகுத்துள்ளனர்.

தொல்காப்பியர் அகம், புறம் என்னும் இருவகைத் திணைப்பகுதியே தொன்மையுடையது என்று குறிப்பிடுகின்றார். அகத்திணை இலக்கணத்தை மயக்கம் கெட அறிந்தோர்க்குப் புறத்திணை இலக்கணம் தெளிவுபடச் சொன்னதை,

**"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**

**புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்"  (தொல்,பொருள்,புறத்.1)**

என்பதைக் காணமுடிகிறது.

ஒருதலைக் காமமாகிய கைக்கிளை, ஒத்த காமமாகிய அன்பின் புறத்திணை, ஒவ்வாக் காமமாகிய பெருந்திணை ஆகிய அகத்திணை ஏழிற்கும், அதனோடு தொடர்புடைய புறத்திணைகள் ஏழு என்பதனை,

**"கைக்கிளை முதலாய்ப் பெருந்திணை இருவாய்**

**முற்படக் கிளந்த எழுதிணை என்ப"  (தொல்,பொருள்,அகம்.1)**

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். இங்கு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்னும் அகத்திணை ஏழிற்கும், அதனோடு தொடர்புடைய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன புறமாக முறைப்படி வகுத்துள்ளமையைக் காணமுடிகின்றது.

தலைவன், தலைவருக்கிடையில் நிகழும் ஒத்த அன்புடைய நிகழ்ச்சிகளை அன்போடு புணர்ந்த ஐந்திணை என்றும், அன்பில் குறையுடைய கருத்துக்களைக் கூறுவது கைக்கிளை, பெருந்திணை என்றும் கூறுவது பொருத்தமாக அமைகின்றன. இதில் ஒத்த காமமாகிய நடுவன் ஐந்திணை என தனியே பிரித்து கூறப்படுவதற்குறிய காரணம் இதில் ஒத்த அன்பு வெளிப்படுகிறது. "அகத்திணையுள் ஐந்திணைப் பாடல்

சான்ற புகழ்த்திணை, பல்துறையுடைய திணை ஆதலின் ஐந்திணைக்குச் சிறந்த தனித்தன்மையுண்டு மிக்க பொதுத்தன்மையுண்டு. ஐந்திணை போலக் கைக்கிளை, பெருந்திணைகள் சிறப்பில்லை. பாடல் பெறவில்லை என்றாலும், அவையும் அகத்திணையின் உட்பிரிவுகள்" என்று குறிப்பிடுகின்றார் வ. சுப மாணிக்கனார்.

தொல்காப்பியர் குறிப்பிட்ட ஐந்திணைகள் மட்டும் நிலப் பின்புலத்தோடு முதல், கரு, உரிபொருளோடு பாடப்படுகின்றன. ஆனால் கைக்கிளையும் பெருந்திணையும் நிலப் பின்புலமின்றி முதல், கரு, உரிப்பொருள்கள் இனத்தால் இவை ஐந்திணையில் இருந்து வேறுபடுவதைக் காணமுடிகின்றது.

**இலக்கணத்தில் கைக்கிளை :**

தொல்காப்பியர் கைக்கிளைத்திணையை அகத்திணையாகக் கருதுகின்றார். புறப்பொருள் வெண்பா மாலை இதைப் புறத்திணையாகக் குறிப்பிடுகிறது. இந்நூல் கைக்கிளைத்திணையை ஆண்பால் கைக்கிளை என்றும், பெண்பால் கைக்கிளை என்றும் இருவகையாகப் பிரிக்கின்றது. புறத்திணையில் கைக்கிளை இடம்பெற்றதற்கான காரணத்தை வ.சுப.மாணிக்கம் அவர்கள் "தமிழ்க் காதல்" என்ற நூலில் "சங்கப்புலமகள் நக்கண்ணையார் ஆமூர் மல்லன்மேற் கொண்ட காதல் கைக்கிளைக் காமமாய் முடிந்தது. இவை பற்றிய செய்யுட்கள் அகத்திணையாகாது புறத்திணையாயின. (புறம் 83,84,85) பருவம் அடைந்த நக்கண்ணையார் ஒத்த இளைஞனான மல்லனைக் காதலித்தும், இருபாற்கும் பருவத்தகுதி இருந்தும், உள்ளப் புணர்ப்பு இல்லாமையால் அகத்தினின்று இப்பாடல்கள் புறத்திற்கு இடம்பெயர்ந்தன" என்று குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியர் புறத்திணையியலில் உள்ள பாடாண்திணைப் பகுதியில் கைக்கிளை, பெருந்திணையை,

**"புரைதீர் காமம் புல்லிய வகையினும்"**
**(தொல்,பொருள்,புறம்.21,2)**

என்று குறிப்பிடுகின்றார். இதைப் போன்று, கைக்கிளை பற்றிய செய்தியை தொல்காப்பியர் அகத்திணையில் குறிப்பிடுகின்றார்.

**"காமஞ் சாலா இளமையோள்வயின்**
**ஏமம் காலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**
**சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
**பில்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"**
**(தொல்,பொருள்,அகம்.53)**

என்று குறிப்பிடுகின்றார். தலைவன் காமவுணர்வு தோன்றாத பெண்ணிடம் தானே காதல் கொண்டு அவளது மறுமொழி பெறாது தானே சொல்லி இன்புறல் கைக்கிளை என்று கூறப்படுகின்றது அடியோர் பாங்கினும் வினைவளர் பாங்கினுங்

**"கடிவரை இலப்புறத் தென்மனார் புலவர்"**
**(தொல்,பொருள்,அகம்.25)**

**"ஏவல் மரபின் ஏனோரும் உரியர்**
**ஆகிய நிலைமை அவரும் அன்னர்"**
**(தொல்,பொருள்,அகம்.26)**

என்று தொல்காப்பியர் அடியோர் ஏவல் மரபினரைக் குறிப்பிடுகின்றார். இங்கு "அடியோர், வினைவளர், ஏவல் மரபினர் ஆகியோர் பக்கத்திலும் அகம் பற்றிய ஒழுகலாறுகள் நீக்கப்படுவன அல்ல" என்று வ.வே சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.

சங்கச் சமுதாயத்தில் உயர்ந்தோரானாலும், தாழ்ந்தோரானாலும் காதல் ஒழுக்கம் ஒத்த தன்மை உடையதாய் இருந்தால் ஐந்திணை என்றும், அவற்றில் அன்பில் குறையிருந்தால் கைக்கிளை, பெருந்திணை என்றும் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கிறது. கலித்தொகை 109 ஆவது பாடலில் கைக்கிளைக் காதல் இடம்பெற்றுள்ளது. இப்பாடல்களை நினைத்துக் கொண்டு வ.வே சுப்பிரமணியன் மேலே உள்ள நூற்பாவிற்கு விளக்கம் தந்துள்ளார் என்பதை அறியமுடிகின்றது.

ஐயனாரிதனார் பாடாண்படலத்தில் கைக்கிளையைப் பற்றி குறிப்பிடுகின்றார். தலைவி, தலைவனது. மாலையைப் பெறவிரும்பிய தன்மையை,

**"தண்டாக் காதல் தளரியல் தலைவன்**
**வண்தார் விரும்பிய வகையுரைத்தன்று"**
**(பு..வெ.மா.பாடாண்,45)**

என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

**இலக்கணத்தில் கைக்கிளைத் துறைகள் :**

தொல்காப்பியர் கைக்கிளைத் திணைக்கு துறைகள் வகுக்கவில்லை. ஆனால் ஐயனாரிதனார் ஆண்பாற்கூற்றுக் கைக்கிளை, பெண்பாற்கூற்றுக் கைக்கிளை என்று இருவகையாகப் பிரித்து, அவற்றுக்கு துறையும் வகுத்துள்ளார். அவை,

**"காண்டல் நயத்தால் உட்கொள் மெலிதல்**
**மெலிவொடு வைகல் காண்டல் வலித்தல்**
**பகல்முனி வுரைத்தல் இரவுநீடு பருவரல்**
**கனவின் அரற்றல் நெஞ்சொடு மெலிதல்**
**பெண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்"**
**(பு.வெ.மா.கைக், நூ:13)**

என்றும்,

**"காட்சி ஐயம் துணிவே உட்கோள்**
**பயந்தோர்ப் பழிச்சல் நலம்பா ராட்டல்**
**நயப்புற் றிரங்கல் புணரா இயக்கம்**
**வெளப்பட இரத்தல் எனஇவ் வொன்பதும்**
**ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை யாகும்"**
**(பு.வெ.மா.கைக்.நூ:14)**

என்பனவாகும். இங்கு காட்சி முதல் வெளிப்பட இரத்தல் வரை கூறப்பட்ட ஒன்பது துறைகளும் ஆண்பாற் கூற்றுக் கைக்கிளையாகவும், காண்டல் முதல் நெஞ்சொடு மெலிதல் வரை சுட்டப்பட்ட பன்னிரெண்டு துறைகளும் பெண்பாற்கூற்று கைக்கிளைத் திணையாவும் அமைந்துள்ளன.

**இலக்கியத்தில் கைக்கிளைத்திணை :**

தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணையை அகத்திணைகளுள் புறமாக குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்களும் கைக்கிளை, பெருந்திணை புறத்திணைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது. ஆனால் புறப்பொருள் வெண்பா மாலை கைக்கிளை, பெருந்திணையை, புறத்திணையாக சுட்டுகிறது. அவை பழிச்சுதல், குறுங்கலி என்பனவாகும்.

புறத்திணைகள் ஏழும் ஒருசில மாற்றத்தால் வேறுபட்டாலும், அகப்பொருள் என்னும் கொள்கையில் இருந்து மாறுபடவில்லை. ஆனால் தொல்காப்பியர் காலத்தில் அகத்திணையாக இருந்தது கைக்கிளை. எனவே, காஞ்சிக்குப் புறனாகக் கைக்கிளையைக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியத்தில் அகப்புறம் சார்ந்த சிந்தனைகள் இருந்திருக்கின்றன. இந்தப் பார்வையே புறப்பொருள் வெண்பா மாலையில் கைக்கிளையைப் புறத்திணையாகப் பார்ப்பதற்கு வித்திட்டுள்ளது எனலாம். சமூதாயத்தில் தோன்றும் மாற்றங்களையும், வளர்சிகளையும் அவை ஏற்று நின்று புதிய மூலங்களையும், பொருளமைவுகளையும் இலக்கணங்கள் பெற்றுத் தருகின்றன. இங்கு கால இடைவெளி ஏற்படும்போது வளர்சியோ, மாற்றமோ உருவாதல் இலக்கண நூல்களிலும் தவிர்க்க முடியாமல் போய்விடுகின்றது.

தொல்காப்பியரைப் போலவே புறப்பொருள் வெண்பா மாலையும் கைக்கிளைத் திணையை ஒரு தலைக் காமமாக குறிப்பிடுகிறது. எனவே, தகுந்த தன்மையிலாத தலைவன், தலைவியிடம் தோன்றிய காதல் உணர்வுதான் கைக்கிளைத்திணைப் பாடல்கள் "மன்னனைக் காதலிப்பது போன்ற பாவணையில் இப்பாடல்கள் பாடப்பட்டன எனலாம்" என்று செயராமன் கூறுகிறார்.

கைக்கிளைத்திணைப் பாடல்களைத் தனித்தனியே ஆய்வு செய்தால் ஒவ்வொரு பாடலிலும், ஒரு மையக்கருத்து அமைந்துள்ளது. கைக்கிளைத் திணைப் பாடல்களில் ஒருதலைக்காமமும் அமைந்துள்ளது.

இந்தத் திணையினை ஆராயும் பொழுதுதான் துறைகளாக அல்லது நிகழ்சிகளாக பகுக்கபட்டுள்ளதை அறியமுடிகிறது. கைக்கிளைத் திணையும், அவ்வவ் திணைக்குறிய துறையும் காணப்படுகின்றது. இனி அவற்றை விரிவாகக் காணலாம்.

**பழிச்சுதல் துறை :**

புறநானூற்றில் மட்டும் தான் கைக்கிளைக்குரிய பழிச்சுதல் துறை இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியமாகிய கலித்தொகையில் குறிஞ்சி, முல்லை ஆகிய இரண்டு திணைகளில் கைக்கிளையைச் சார்ந்த 20,21,22,56,57,58 என்ற ஆறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பழிச்சுதல் என்பதற்கு

“புகழ்தல், வணங்குதல், வாழ்த்துதல்” எனப் பாட்டும் தொகையும் பொருள் தருகின்றன. தொல்காப்பியர் புறத்திணை இயலில் பழிச்சுதல் என்ற துறைக்கு இலக்கணம் வகுக்கவில்லை. ஆனால் புறப்பொருள் வெண்பா மாலை கைக்கிளைப் படலத்தில் “பயந்தோர்ப் பழிச்சல்” என்ற பெயரில் துறை அமைந்துள்ளது. மடந்தையைப் பெற்று வளர்த்தோர் நெடுங்காலம் வாழ்க என்று பாராட்டுகின்றனர். இதனை,

**“இவட்பயந் தெடுத்தோர் வாழியர் நெடிதென**
**இவட்பயந் தோரை ஆனாது புகழ்ந்தன்று”**
**(பு.வெ.மா.கைக்,51)**

என்று ஐயனாரிதனார் தமது நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

இத்துறையில் 83, 84, 85 என்ற மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதை நக்கண்ணையார் பாடியுள்ளார்.

**நக்கண்ணையாரின் ஒருதலைக்காதல் வெளிப்படுதல்:**

தலைவியர் தாம் விரும்பும் தலைவனைக் கூடப்பெறாத பொழுது அவர்களின் வளையல்கள் கழல்தலும், மேனிப் பசப்புறதலும் உண்டு என்பதனை,

**“மன்னர்களும் படரபடப் பசலையால்**
**உணரப்பட்டாள்**
**பொன்னுரை மணியன்ன மாமைகட்**
**பழியுண்டோ” (கலி:48:16-17)**

என்றும்,

**“இலங்குவளை நெகிழச் சாஅய்யானே**
**உளனே வாழி தோழி” (குறுந்:125:1-2)**

என்றும் அகப்பாடல்களில் கூறுவதைக் காணமுடிகின்றது. ஆனால் நக்கண்ணையாரும் தன் தலைவனின் காதலினைப் பெறமுடியாமல் தன் தொடி புலம்புவதாகவும், மேனிபசப்புறுவதாகவும் பாடுகின்றார். இதனை,

**“அடிபுனை தொடுகழன் மையணற்**
**காளைக்கென்**
**தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே”**
**(புறம்:83:1-2)**

**“யாமே புறஞ்சிறை யிருந்தும் பொன்னன்”**
**(புறம்:84,2)**

என்று புறநானூற்று பாடலடிகளில் காணமுடிகின்றது.

நக்கண்ணையார் தன் தலைவன் மீது கொண்ட காதல் நிறைவேறாத நிலையை வெளிப்படையாகக் கூறுகின்றார். கோப்பெறுநாகிள்ளியின் சிறப்பான வெற்றியைச் சிலர் சிறந்த வெற்றி எனக் குறிப்பிடுகின்றனர். சிலர் அனுமதியில்லை என்று கூறுகின்றனர். ஆனால் பிறர் கூற்று எத்தகையாக இருந்தலும் நான் அவனது வெற்றியைக் கண்டேன். எவ்வாறெனில் அவன் மீது தான்கொண்ட காதலால் எனது வளையலும், தோளும் தோற்றன. இதனால் உள்ளத்தால் தோற்குமாறு செய்துவிட்டு, அவன் மட்டும் வெற்றிபெற்று விட்டான். இதை,

**“ஆடன் றென்ப வொருசா ரோரே**
**நல்ல பல்லோ ரிருநன் மொழியே**
**அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்**
**முழாவரைப் போந்தை பொருந்திநின்**
**றியான்கண் டனனவை னாடா குதலே”**
**(புறம்:85:4-8)**

என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு தான் அனுபவித்த கைக்கிளைக் காதலினைத் தானே பாடியவராக நக்கண்ணையார் காட்சியளிக்கிறார்.

**முடிபுகள் :**

நக்கண்ணையாரின் கைக்கிளைப் பாடல்கள் காதல் தன்னுணர்ச்சிப் பாடல்களாகும். அதனால்தான் இவற்றைப் புறநானூற்றில் உள்ள கைக்கிளைத் திணையில் சேர்த்துள்ளனர். அகப்பாடல்களில் தலைவன் ஒருதலைக் காதலுக்குக் காரணமான காமஞ்சாலா இளமையோளின் அழகு வர்ணிக்கப்படுவது போல், புறநானூற்றில் சோழன் பேரவைக் கோப்பெருநற்கிள்ளி, ஆவூர் மல்லனுடன் மற்போர் புரிகின்ற வீரஅழகை கண்ட நக்கண்ணையார் மன்னன் மேல் ஒருதலைக் காதல் கொண்டு வருந்துகிறாள். இங்கு மனைவியின் வீரத்தைச் சொன்னாலும் அவ்வீரத்தைக் கண்ட தலைவியான நக்கண்ணையாரின் ஒருதலைக்காதல் வெளிப்படுதலைக் காணமுடிகின்றது.

# தற்கால தமிழ்ச் சிறுகதைகளில் பண்பாடு எனும் அறிவியல் தொழில் நுட்பம்

***முனைவர் சு. அரங்கநாதன்,** *உதவிப் பேராசிரியர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 15.*

காலம் காலமாகக் கதை சொல்வதும், கதை கேட்பதும் எல்லா நாடுகளிலும், எல்லா மக்களிடையேயும் வாய்மொழி மரபாக இருந்து வந்திருக்கிறது. நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே, மக்கள் இனக்குழுக்களாக இயங்கிவந்த காலத்தில், ஓய்வு நேரங்களில் சக மனிதர்களிடம் தொடர்பு கொள்வதற்கும், குடும்ப உறவினர்களுடன் பொழுதைக் கழிக்கவும் கதை கூறும் மரபைக் கையாண்டு வந்துள்ளனர். கதை கூறுபவர் தன்னுடைய கற்பனை வளத்தாலும், அனுபவத்தின் பயனாலும், தான் கண்டதையும் கேட்டதையும் விரித்துச் சொல்லி கேட்போரின் பொழுது போக்கிற்குத் துணை நின்றனர்.

சின்னதாக அமையும் கதைகளில் பல ரகங்கள் உண்டு. சொந்த அனுபவங்களை டயரியில் பதிவது ஒரு கதை, பயணத்தில் ஏற்பட்ட அனுபவங்களை வருணிப்பது கதை, குழந்தைகள் பேசுவதே ஒரு கதை, இன்னும் காதலன் - காதலி பேச்சு, நண்பர்கள் அரட்டை போன்றவற்றில் கதைகளைப் பெரிதளவில் காணலாம்.

தமிழர்கள் காலந்தோறும் இராமாயணம், மகாபாரதம், புராணக் கதைகள், கிராமியக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், மரியாதை ராமன் கதைகள், தெனாலிராமன் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள் என பல்வேறு கதைகளைச் சொல்லியும் கேட்டும் வந்திருக்கின்றனர். இக்கதைகளின் வழியாக வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்க நெறிகள் அறிவுறுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தாராம் என்று சுவையுணர்வோடு கதைய தொடங்கும் மரபு நம்மிடையே இருந்துவந்துள்ளது. பொய்ம்மொழி, பொய்க்கதை, புனைகதை, கட்டுக்கதை, பழங்கதை என்றெல்லாம் கதைகள் அக்காலத்தில் சுட்டப்பட்டுள்ளன. குடும்பங்களில் சிறு குழந்தைகளுக்குப் பாட்டி கதை சொல்லும் மரபு போன தலைமுறைவரை உண்டு என்று தான் சொல்ல வேண்டும்.

பிறகு பேசிய மொழிக்கு நம் முன்னோர்கள் வரிவடிவம் கொடுத்தனர். அதாவது எழுத்தை அறிமுகப்படுத்தினார். அதன் விளைவாக கதைகள் பெரிய எழுத்துக் கதைகளாக எழுதப்பட்டன. பின்னர், அச்சு இயந்திர வருகையினால் அக்கதைகள் நூல்களாகவும் வெளிவந்தன. தமிழ்ப் புனைகதை மரபுடன், மேலைநாட்டுப் புனைகதை மரபு சங்கமித்ததன் விளைவாக புதிய சிறுகதைள் பிறந்தன. இச்சங்கமம் சிறுகதையைப் பொறுத்தவரை 19 - ஆம் நூற்றாண்டு வரை நிகழவில்லை.

### தொல்காப்பியர் கூறும் கதை மரபு

கதை சொல்லும் மரபு தொன்றுதொட்டு இருந்து வந்த வழக்கம் என்பதைத் தொல்காப்பியர்,

**'பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும்**
**பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்'** **என்று உரைப்பார்.**

பொதுவாக சிறுகதைகளில் பேசப்படும் பண்பாட்டுப் பதிவுகளை இரண்டு விதாமாகப் பார்க்கலாம். ஒன்று அழிந்து வரும் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதற்காக கதைகளின் மூலம் பதவு செய்தல். மற்றொன்று அடக்குமுறையான சாதி, மதம் என்னும் ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிதம் செய்யும் பண்பாடுகளை கேள்விக்குள்ளாக்குவது, அதனை மீறுவது. அல்லது அதை இச்சமூகப் பண்பாட்டிலிருந்து முழுவதும் விலக்கிவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

சிறு கதைகளில் இடம்பெறும் கற்பனைக் கூறுகளையும், பொய்யுரைகளையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் கதை வழங்கும் சமூகத்தில் பண்பாட்டு அடையாளங்களையும், சமூக இயங்கியல் தளத்தையும் பார்க்க முடியும். ஏன்? திறன்மிக்க ஒரு கதையாளி சொல்லும் கதைகளில் உண்மையான சமூக வாழ்வும், வட்டார வரலாறும் சேர்ந்தே சொல்லப்படுவதைப் பார்க்க முடியும். பொதுவாக கதைகளை "அது வாழும் சமூகத்தின் வெளிப்பாடு" என்று சொல்லுவர்.

என். ஸ்ரீராம் எழுதி சமீபத்தில் ஆனந்த விகடனில் வெளியான 'உடுக்கை விரல்' எனும் சிறுகதை பழனி வட்டாரத்தைக் கதைக்களமாகக் கொண்டது. இக்கதையின் தொடக்கமே இதை உறுதிப்படுத்துகிறது. ஒரு கூத்துக் கட்டும் குடும்பம் வறட்சி காரணமாக, வறுமையில் வாடுகிறது. அந்தப் பகுதியோ மழையில்லாமல் காய்ந்து கிடக்க, கூத்து நடத்த யாரும் சம்மதிக்காதவேளையில் கூத்து கட்டுபவன், கூத்துக்கட்டுனா மழைவரும்னு உடுக்கையை எடுத்துக்கொண்டு சண்முகா நதியில இருந்து அண்ணமார் கதைபாடி மழைவர அதன் பிறகு பக்கத்துக் ஊர்க்காரங்க கூத்து கட்ட கூப்பிட்டறது தான் கதை. இக்கதை பழநி வட்டாரப் பகுதியை கதைக்களமாகக் கொண்டது. "தூரத்தில் பழநிமலைப் படிக்கட்டுகளும் உச்சிக்கோபுரமும் மின்சார விளக்கு ஒளியில் ஜொலிப்பது," என்று தொடங்குகிறது.

அண்ணமார்சாமி உடுக்கையடிக் கதைப்பாடல் பாடினால் மழை வரும், குழந்தைப் பேறு கிட்டும் என்ற நம்பிக்கை சார்ந்த பண்பாடாக கொங்குவட்டாரப் பண்பாடு ஆகும். இது வெறும் பண்பாட்டு அடையாளம் மட்டுமல்ல. ஒலி எழுப்பினால் மழை வரும் என்ற ஒரு மரபுரீதியான அறிவியல் தொழில்நுட்பமாக இதைப் பார்க்கலாம். இப்பண்பாடு இன்றும் நடைமுறையில் உள்ளது. ஆனால் இக்கதையின் ஆசிரியர் காலப் பின்னணியை ஆங்கிலேயர் ஆட்சிக் காலமாகக் குறிப்பிடுகிறார்.

> "என் கனவு எல்லாம் பொள்ளாச்சி சென்று மகாலிங்கம் பஸ் கம்பெனியில் கரிப்புகை பஸ் ஓட்ட வேண்டும் என்பதுதான். அதேபோல் பிரிட்டிஷ் துரைக்கு ஜீப் ஓட்ட வேண்டும் என்பதுதான்"

என்பதிலிருந்து கதையின் காலப்பின்னணி தெளிவாகிறது. அதுமட்டுமல்ல கதையின் பிற்பகுதியில்

> "அந்த வருடத்தில் தான் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. வெள்ளைக்காரத் துரையின் குடும்பத்தினர். கீழை நாட்டின் சடங்கு, சம்பிரதாயக் கூத்துக்களைப் பார்க்க ஆர்வம் கொண்டிருந்த துரைசாணி அம்மாவுக்காக, கூத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்."

என்ற வரிகளும் காலப் பின்னணியை உறுதிசெய்கின்றன.

அண்ணமார்சாமி கூத்துக்காரர்களின் கூத்துத் திறமையை வெளிக்காட்ட நினைத்த ஆசிரியர் அண்ணமார் சாமி கதையாடல் குறித்தப் பண்பாட்டுப் பதிவாகவும் இதைச் செய்திருக்கிறார்.

**"ஆட்டக் களத்திலே ஆடும் கலைஞனுக்கும்**

**பார்க்கும் மக்களுக்கும் குத்தம் குறை வராமே**

**தீட்டு தடங்கல் வராமே காத்துக் கருப்பு அண்டாமே**

**கனதிடமாக் காத்து நின்று கூத்து நடக்க வேணுமப்போ..**

**திருக்கோயில்விட்டு மங்கே ஆடிவர வேணுமம்மாஃ**

**தவசுமரம் சோலையிட்டு தானிறங்கி வாருமம்மா..."**

கொங்கு வட்டாரப் பகுதிகளில் அண்ணமார் சாமி கூத்து பண்பாட்டோடு தொடர்புடையது. இப்பண்பாட்டை என். ஸ்ரீராம் அவ்வளவு நேர்த்தியாக தந்திருக்கிறார்.

**“அய்யோ சின்னண்ணா.. பெரியண்ணா.. அருக்கானி.. தங்காயீ.. பெரியகாண்டித்தாயீ.. ”**

என்று வாட்டார தெய்வங்களை அழைப்பதாக வருகிறது. கூத்து போட்டா மழைவரும் என்பது கொங்கு பகுதியில் இன்னும் உள்ள மழைசார்ந்த நம்பிக்கையாகும். இந்நம்பிகையை ஆசிரியர் தெளிவாகப் படைத்துக்காட்டுகிறார்.

**“உடுக்கப் பாட்டுப் பாடினா மழை எறங்குமுன்னு சொன்னீங்களா”**

இதில் மற்றொரு வட்டாரப் பண்பாட்டையும் பார்க்க முடிகிறது. வேப்பிலை என்பது மாரியம்மனுக்கான குறியீடாகவும், பேய் அண்டாமல், நோய் நொடி வராமல் வேப்பிலை பாதுகாக்கும் என்ற பண்பாடு மாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடையது. அதனால் காப்பு கட்டு என்ற பண்பாட்டில் வேப்பிலை முக்கிய இடம்பெறுகிறது.

“அப்படியே ஆராவது ரெண்டு பேர் ஊருக்குள்ள ஒடி, எல்லாவூட்லேயும் நெலவுல வேப்பங்கொலயைச்சொருகி வெச்சு, பொண்டு புள்ளைகளை எல்லாம் ஜாக்கிரதையா இருக்கச் சொல்லுங்க”

அதே போல, தமிழச்சி தங்கபாண்டியன் எழுதிய ‘களவாணி மழை’ எனும் சிறுகதை ஆனந்த விகடனில் சமீபத்தில் வெளியானது. இக்கதை ஆசிரியர் ஊரானா விருதுநகர் மாவட்டத்தைக் கதைக்களமாகக் கொண்டது. இதை இதில் வரும் வட்டாரச் சொற்கள் தெளிவுபடுத்துகிறது. குறிப்பாக, வலையன் குளம் சுற்றிய பகுதியே கதைக்களமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

“கோயில் பந்தக்கால் பிடிச்சுவரும் சுந்தரேசன் என்கிற சுண்டுவை வலையன்குளம் கூட்டிப்போய் சாராயம் ஊத்துக்கொடுத்துக் கூட்டுவந்து, அக்ரகாரமே ராசு மகனைத் திட்டித்தீர்த்தது. மில்லில் வேலைபார்க்கிற தவக்களை யண்ணன் வாயக் கட்டி வயித்த கட்டிச் சேத்த பணத்தை இடம் வ ா ங் கி த் தாரேன்னு ஏப்பம் போட்டதற்கு அருப்புக்கோட்டை போலீஸ் ஸ்டேசனில் அத்தனை அடி, ஒதை வாங்கினான்.”

இப்படி விருதுநகர் வட்டாரத்தைக் கதைக்களமாகக் கொண்ட இக்கதையில் ‘களவாணி மழை’ எனும் தொழிற்சார்ந்த வழக்காறு குறித்தப் பதிவு கவனிக்கத்தக்கது.

‘இந்தப் படப்பு போடற வேலையைக் கெடுக்கன்னே பிசுபிசுன்னு வந்துடுதுத்தா இந்த மேனாமினுக்கி மழை ’

‘கழுதை.. இன்னிக்கும் படப்பைக் கட்டவிடாதுபோல’ என்கவும், மழை மறுபடியும் தூற ஆரம்பித்தது.

தை மாச அறுப்பு முடிந்ததும், மாசித் தொடக்கத்தில் கதிரடிச்சுக் காய்ந்ததைப் பெரிய படப்பாகச் சேர்த்துக் கட்டிவைப்பது வழக்கம் தான், ஆனாக்க, அப்படிக் கட்டவிடாமல் பிசுபிசுன்னு தூறல் மழை மாசி பிறந்தவுடனே ஆரம்பிச்சு, படப்பு கட்ற மழையைக் கெடுக்கும். அதுக்கு களவாணி மழைங்கிற பேர் வந்த கதையைப் பாட்டையா சொல்லக் கேள்வி பெரியாம்பளைக்கு.

“லேய்.. களவாணித்தனம் என்னிக்கும் ஆகாதுங்குறதில்ல. அதுலயும் ஒரு நேர்க்கோடு இருக்கணுமப்பு. இந்த மழை, படப்பு போடறவன் பொழப்பக் கெடுக்கிற களவாணி. சும்மா மொறச்சுக்கிட்டே இருக்கிறவன் கிட்ட வீரம் இருக்காதுங்கிற மாறி, நாம நல்லா மாசி வெயில் தொடங்கிடுச்சின்னு இருப்போம். அம்புட்டுக் காஞ்ச வைக்கலையும் அம்பாரியாச் சேத்து வெச்சுகிட்டுக் கஞ்சி குடிச்சிட்டு இறுக்கப் பிரிமேல கட்டுவோம்னு வீட்டுப் பக்கம் ஒதுங்கியிருப்போம். நடு மதியம் மூணு மணிக்குத் திடீர்னு பொசபொசன்னு தூத்தல் போடும். அட ஓலையில ஒண்ணுக்குப் போன மாதிரி ஒரு சத்தம் கேக்குதே? னு ஓடிவந்தா பிலுபிலுன்னு பிடிச்சுக்கும். அய்யோ அப்பே னு கித்தானைப் போட்டு மூடி, மூலைக்குச் செங்கல்லு வெச்சு நிமிருறப்பச் சுள்ளுன்னு வெயிலடிக்கும். நல்லா வாயில வரும் பார்த்துக்க அப்போ னு தொடரும் பாட்டையாவை மறித்து, அதுக்கு எதுக்குக் களவாணிங்கனும் அத? னு பெரியாம்பளை கேட்பான். நம்ம பொழப்பக் கெடுக்கிறதால, அதுலயும் க ள வ ா ணி ப் பயலுகளுக்குச் சகாயம் செய்யறதால படப்புக் களவாணி மழைல்லா அது. நாம கித்தானப் போட்டு வெச்சுட்டு மறுநா வந்து பாத்தா,

மொந்தை கலையாத மாதிரி தெரியும். ஆனாக்க சல்லுசா ஊடாவுல ஒரு சாக்கு அள்ளிட்டுப் பொயிருப்பானுக.”

என்று களவாணி மழை குறித்த வழக்காறு கதையாக மாறி அவர்கள் மரபு ரீதியான அறிவியல் தொழில் நுட்பமாகும். அது பண்பாடாக நிலைபெற்றிருப்பதையே இது காட்டுகிறது.

“பாண்டிமுனி கோயிலுக்கு மொட்டை போட்டு, முடி ஈறக்கிய வள்ளிமயிலின் பால்வாடை வாயும் சந்தன மொட்டை மணமும் நாசிக்குள் மீண்டும் வந்தது.”

“பாண்டிமுனி கோயிலுக்குக் கெடா நேந்து பொம்பளப்பிள்ள பொறந்த அன்னிக்கு”

குலதெய்வக் கோயிலுக்கு கெடா நேந்துவிட்டது, பிறந்த குழந்தைக்குப் குலதெய்வக் கோயிலில் மொட்டையடிக்கும் பண்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

பண்பாட்டுக் கூறுகளின் உயிர்த்தன்மை (இயங்கியல்) அது வழங்கும் வட்டாரப் புனைவுகளுடனும் வட்டார வழக்குகளுடனும் வழக்கில் இருப்பதில் அமைந்திருக்கிறது. நிறையக் கதைகளில் கதை வழங்கும் வட்டாரத்தின் இடப்புனைவுகள், ஊர்ப்பெயர்கள் திரும்பத் திரும்பச் சொல்லப்படும்.

கதைக்கு உயிரளிப்பது அந்தந்த வட்டார பகுதியில் வழங்கும் பேச்சு வழக்கே ஆகும். இந்த வட்டார வழக்குதான் கதை வழங்கும் பகுதியில் உள்ள மக்களின் சமூக மொழியும் ஆகும். அதுமட்டுமல்லாமல் ஒரு சொல் ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக இருப்பதையும், ஒரு சொல் ஒரு சாதியம் சார்ந்த உணவு, தொழில் சார்ந்த பண்பாட்டு அடையாளமாக இருப்பதையும் பார்க்கிறோம்.

தமிழச்சி தங்கபாண்டியன் எழுதிய ‘களவாணி மழை’ எனும் சிறுகதை ஆனந்த விகடனில் சமீபத்தில் வெளியானது. இக்கதை ஆசிரியரின் வாழும் விருதுநகர் மாவட்டத்தைக் கதைக்களமாகக் கொண்டது. இதை இதில் வரும் வட்டாரச் சொற்கள் தெளிவுபடுத்துகிறது. குறிப்பாக, வலையன் குளம் சுற்றிய பகுதியே கதைக்களமாக அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது.

“கோயில் பந்தக்கால் பிடிச்சுவரும் சுந்தரேசன் என்கிற சுண்டுவை வலையன்குளம் கூட்டிப்போய் சாராயம் ஊத்துக்கொடுத்துக் கூட்டுவந்து, அக்ரகாரமே ராசு மகனைத் திட்டித்தீர்த்தது.”

“மில்லில் வேலைபார்க்கிற தவக்களை யண்ணன் வாயக் கட்டி வயித்த கட்டிச் சேத்த பணத்தை ‘இடம் வாங்கித் தாரேன்னு’ ஏப்பம் போட்டதற்கு அருப்புக்கோட்டை போலீஸ் ஸ்டேசனில் அத்தனை அடி, ஒதை வாங்கினான்.”

“அப்பே யார வையிற?”

“ஏ வள்ளி.. மசமசன்னு கெடக்காத. எந்திரி சுலுவாக் கௌம்பணும்ல”

ஒரு சமூக மக்களின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குவது நம்பிக்கைகளும், சடங்குகளும், பண்பாடும் ஆகும். கதை சொல்லி தன்னையும் அறியாது தாம் வாழும் சமூகப் பண்பாட்டு மரபைக் கதையினூடே பண்பாட்டு அடையாளங்களாகப் பதிவு செய்துவிடுகின்றான் என்றே சொல்லலாம். அதனை வட்டாரப் பண்பாடு, சாதியப் பண்பாடு, மதம் சார்ந்த பண்பாடு, என்று பார்க்க முடிகின்றது. அதையும் தாண்டி அவர்களின் நிலம் சார்ந்த அறிவியல் தொழில் நுட்பமாகவும் இதை கவனிக்கவேண்டியிருக்கிறது. இது இம்மக்களின் வாழ்வியல் மற்றும் நில அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதையும் பார்க்க முடிகின்றது. என். ஸ்ரீராம் எழுதி ஆனந்த விகடனில் பிரசுரமான உடுக்கை விரல் சிறுகதையை எடுத்துக்கொள்வோம். இதில் கூடை முறம் பின்னும் குறவர்கள் மேற்கொள்ளும் மருத்துவக் குறிப்பு என்று எடுத்தாளப்படுகிறது. இது குறவர்கள் தொழில் செய்யும் போது ஏற்படும் கத்திக் காயத்துக்கு செய்யும் வைத்தியமாகும். இதனை,

“நாங்க மூங்கில் சீவும் போது விரல்ல கத்தி பட்டா வேலாம்பட்டையும் , வெட்டுக் கட்டாந்தழையும் தான் வெச்சுக் கட்டுவோம். சீக்கிரத்திலேயே புண் ஆறிடும். உங்களுக்கும் அதைத்தான் வெச்சுக் கட்டியிருக்கேன்.”

இது நாட்டுப்புற மக்கள் தங்களுக்கு தாங்களே வைத்தியம் பார்த்துக்கொள்ளும் பண்பாட்டுக் கூறாகும். இதில் வேலம்பட்டையின் மருத்துவ குணமும், வெட்டுக் கட்டாந்தழையின் மருத்துவ குணமும் மரபு ரீதியான அறிவியல் கண்ணோட்டம் உடையது என்பதில் ஐயமில்லை.

என். ஸ்ரீராமின் கருட வித்தை எனும் கதையில் நாட்டுப்புற பண்பாடு தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதாவது பாம்புப் பாடம் போடுதல் எனும் பண்பாடு இன்றும் கிராமப்புறங்களில் நடைமுறையில் உள்ளது. மனிதர்களுக்கு தேள்கடி, பாம்பு கடி பாடம் மட்டுமல்ல, ஆடு, மாடுகளுக்கும் பாடம் போடும் பண்பாட்டை கொங்கு வட்டாரங்களில் இன்றளவும் மிகுதியாகப் பார்க்க முடிகிறது. மருத்துவத் துறையில் பெரும் வளர்ச்சி கண்டிருந்தாலும் இந்தப் பண்பாடு இன்றும் தொடர்கிறது என்று தான் சொல்லவேண்டும். ஒரு கிராமத்தில் இந்தப்பாட முறையை அனைவரும் தெரிந்திருக்க மாட்டார். யாராவது ஒருவருக்குத் தான் தெரியும். என்ன பாடம் சொல்லனும் என்பதை அவரது இறப்புக் காலம் நெருங்கும் வரை யாருக்கும் சொல்லித் தரமாட்டார்கள். இதனை, கருட வித்தை சிறுகதையில் என்.ஸ்ரீராம் அழகாகப் பதிவு செய்துள்ளார்.

> "பூச்சி தொட்டிருச்சுடா.. கட்டுவிரியன், ஊருக்கு ஓடி அப்பாவை பாம்புப் பாடம் போடுற அய்யனைக் கூட்டிட்டு வரச் சொல்லு.."

> "பாம்புப் பாடத்து அய்யன் சித்தப்பாவின் நாடியைப் பார்த்துவிட்டு வேப்பங்குழாய் ஒடித்து வந்து பாம்புப் பாடத்தைப் போட்டார்."

அதோடு ஒரு நாட்டுப்புற வழக்காறையும் பதிவு செய்து இருக்கிறார்.

> "விதி முடிஞ்சாதான் விரியன் கடிக்கும்"

இப்பழமொழி ஒரு சமூகத்தின் பன்னெடுங்கால அனுபவத்தின் வெளிப்பாடாகும். இன்றும் கிராமப் புறங்களில் இப்பழமொழி வழக்கில் உள்ளது. மேலும், இக்கதையில் மற்றொரு வழக்காறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும், கவலை ஓட்டுதல் எனும் வேளாண் பண்பாட்டு மரபு, ஆழ்துளைக் கிணறு முறை வந்த பிறகு குறைந்து விட்டது. இதை இக்கதையில் ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார். மறுதினம் பொழுது கிளம்பும் முன்னே சித்தப்பா கிணற்று தொலைவாரியில் கவலை பூட்டினார். வடத்தில் இருந்து நீர் இறைக்கும் சால்பறிக்குப் பதிலாகக் குடைசீத்தை சிமிரால் பின்னப்பட்ட கல் சுமக்கும் கொறக்கூடையை மாட்டி கிணற்றுக்குள் விட்டார். ஏற்கனவே கவலை ஓட்டி பழகிய எருதுகள் பின்னோக்கியும் சாதுவாகவே வந்தன. நான் கிணற்றுக்குள் இறங்க முடியாமல் தவித்தபோது சித்தப்பா என்னை தூக்கி இந்தக் கொறக்கூடையில் உட்காரவைத்து கிணற்றுக்குள் இறங்கச் செய்தார். கூடையில் கல் ஏற்றிவிடும் பெருமாள் போயரும் எல்லம்மாவும் எனக்கு நிறைய விடுகதைகளையும் ராஜா– ராணி கதைகளையும் சொன்னார்கள். நான் பசி மறந்து நாள் எல்லாம் கேட்டுக்கொண்டே இருந்தேன். அப்பா வந்து தொளைக்காலைப் பிடித்துக்கொண்டு சத்தம் போட்டாலும் மேலே ஏற மனசு கேட்காது.

> "எழுபத்தைந்து அகலப்படிகள் கொண்ட அகலமான சதுரக் கிணறு. பட்டுவரிக்கற்கள் அடுக்கிக் கட்டிய நாலு திசை பாம்பேறி"

எனும் வரிகள் நீண்ட நெடிய வேளாண் பாரம்பரியத்தைக் கொண்ட கொங்கு மக்களின் வேளாண் தொழில் நுட்ப பண்பாடு ஆகும். கல்லு ஒட்டன், மண்ணு ஒட்டன் எனும் சாதியப் பண்பாட்டையும் இக்கதை பதிவுசெய்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஒட்டர் சாதிக்குள் இருக்கும் இருபிரிவினைகளையும், அவர்களுக்குள் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளையும் ஆசிரியர் விளக்குகிறார்.

> "எல்லம்மாவ.. நான் கலியாணம் மூச்சுக்கலாம்னு இருக்கிறேன்.. நீ.. கல்லு ஒட்டன். நான் மண்ணு ஒட்டன். மண்ணு ஒட்டனை கல்லு ஒட்டன் மதிக்க மாட்டான். மதிக்காத கூட்டத்துக்கு நான் என் பொண்ணைக் குடுக்கச் சொல்றியா?"

> "பாம்புப் பாடம் போடுறவங்க குடும்பம் விருத்தியாகாதுன்னு சொல்லுவாங்க"

என்ற வழக்காறும் காணப்படுகிறது.

அடுத்து க.சீ.சிவக்குமார் எழுதிய ரசாயனக் கலப்பை எனும் சிறுகதை 23-9-2015 ஆனந்த விகடன் இதழில் வெளியானது. இக்கதையும் கொங்கு வட்டாரப் பகுதிகளைக் கதைக்களனாகக் கொண்டது. வெள்ளக்கோவில், இலுப்பைக்கிணறு, வடுகப்பட்டி, வெள்ளியணை, இடையன் கிணறு போன்றவை கதைநிகழ்வுக் களங்களாகும். இக்கதை கொங்கு வட்டாரத்தின் முந்தைய வேளாண் அறிவியல் தொழில் நுட்பம் பண்பாடாக இருப்பதை அதன் மொழியிலேயே தந்திருக்கிறார்.

“மாமா கவலை ஓட்டுவதை, அதன் ஏற்றுவாரியில் இருந்தவாறு சிறுவனாக இருந்த நாட்களில் பல நேரம் கண்டிருக்கிறேன். எருதுகளின் பின்நடையின்போது, சால்பரி துலாக்கல் ராட்டை வழியயேப ய ணி க் கு ம் . பின்னர் கயிறு தன் முடுக்கத்தைக் கைவிட்ட தருணத்தில் கிணற்றில் புகுந்து நீர் முகக்கும். எருதுகளை முன்னோக்கி ஓட்டிக்கொண்டு வாரியின் விளிம்புக்கு வந்ததும் சால்பரியின் தோல்பையைப் பின்னி இருக்கும் சூட்டிக்கயிற்றைத் தளர்த்துவார் மாமா. பலகைக் கற்களால் தொடங்கப்பட்டு மண்ணால் வரம்புகொண்டு தொடரும் வாய்க்காலில் தண்ணீர் மொடோச் எனச் சரியும். நீண்ட முக்கோணமாகத் தோற்றம் காட்டும் வாரியின் நீளத்துக்கும் கிணறுகளின் ஆழத்திற்கும் ஒருங்கிசைவு உண்டு. கிணற்றில் தண்ணீர் அதிகமானால் கயிற்றின் நீளம் குறைந்து மாடுகளின் நடைதூரம் மிச்சமாகும். வாரியில் கயிறுகள் அனுமதிக்கும் கடைப் பகுதிக்கும், கிணற்றின் சில த ப் ப டி க ளு க் கு முன்பாக ஆரம்பிக்கும் மடைப் பகுதிக்கும் இடையிலாக மாடுகளின் தடையறாத போக்குவரவின் நடை இருக்கும்.

எருதுகள் நடந்த இரட்டைத் தடம், தனித்த தண்ணீர் வாய்க்கால் போல் இருக்கும். இடைப்பட்ட திரட்டின் மையத்திலும், கிணற்று விளிம்பிலும் சால்பரியின் கயிறுகள் உருண்டு போகத் தோதாக, கற்களில் காடியிடப்பட்டுப் பொருத்திவைத்த உருளைகள் இருக்கும். உருளைகளில் கயிறு தோய்ந்த பகுதிகளோ கண்ணாடி போன்ற பளபளப்பை அடைந்திருக்கும்.

சால்பரியில் நீர் முகக்கப்பட்டதை உணர்ந்ததும் எருதுகளின் தலைக் கயிற்றை உதறுவார் மாமா, அவற்றின் கீழ்நோக்கிய நடை ஆரம்பித்ததும் மாமா சட்டென வடக்கயிற்றின் மீது அமர்ந்து விடுவார்.

உட்காரும் இடத்தின் அடையாளமாக ஈரிழைத் துண்டு சுற்றப்பட்டிருக்கும்.

“மாடுகளின் தலைக்கயிறு, வடக்கயிறு, வால்கயிறு, சால்பரியின் குடாப்பைக் கட்டவும் கவிழ்கவுமான சூட்டிக்கயிறு இதுவும் போதாது என, எருதுகளை ஊக்குவிக்கும் சாட்டைக்கயிறு இவ்வளவோடும் ஏகப் பரிச்சயம் கொண்டிருப்பார்” மாமா .

மேலும், இதில் உணவுப் பண்பாடும் பேசப்படுகிறது.

“அந்த உணவில் ராகிக் களியும் ரக்கிரி மசியலும் பல நாள் இருக்கும். தட்டிப்போட்ட கொத்த மல்லியின் வாசமும் இடையீடுமாகக் கமழும் ரக்கிரிக் கீரை.”

கொங்குப் பகுதிகளில் குறிப்பாக, வெள்ளக்கோயில், கரூர் வட்டாரப் பகுதியில் ராகிக்களிக்கு புளிச்சக் கீரையும், நிலக்கடலைச் துவையலும் இன்றும் வழக்கத்தில் உள்ள உணவு முறையாகும்.

“அந்த நேரங்களில் மாமாவோ, எருதுகளுக்கு இடறாத பூவரச மரத்தின் வேர் ஓரத்தில் என்னை அமர்த்திவிடுவார். மரத்தின் கீழ் இருந்த பலகைக் கல் ஒன்றில் பூவரசு ஈந்த பச்சைப் பம்பரங்களைச் சுழலவிட்டுக்கொண்டிருப்பேன்.”

இது நாட்டுப்புற விளையாட்டுப் பண்பாடு ஆகும்.

பண்பாடு என்பது தொடர்ந்து வரும் பழக்கத்தின் நிலைபேற்றினால் குறிப்பிடப்படுவது அல்ல. அதையும் தாண்டி ஒரு அறிவியல் முறையிலான தொழில் நுட்பம் சமயம், தொழில், வழக்காறுகள் என பல நிலைகளில் நேரடி மற்றும் மறைநிலையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. எந்த ஒரு துறையும் தனித்து இயங்க முடியாது என்பது நாம் அறிந்ததே. அப்படித்தான் அறிவியலும் பண்பாடும் கலந்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

**பயன்கொண்ட நூற்கள்**


1. ஆனந்த விகடன்

2. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, புதுடெல்லி.

3. கைலாசபதி. க. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்., குமரன் பப்ளிசர்ஸ், சென்னை.

4. டாக்டர் இல.செ. கந்தசாமி, தமிழர் வேளாண்மை மரபுகள், கலைச்செல்வம் பதிப்பகம், கோயம்புத்தூர்.

# மருதக் கலியில் பண்பாட்டுக் கூறுகள்

*ஆ.மனோகரன், *முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.*

**முன்னுரை**

பண்டையத் தமிழ்ச் சான்றோர்கள் மக்களின் வாழ்க்கையை ஆராய்ந்து தெளிந்து அகம், புறம் என இருவகைப் படுத்தினர். வாழ்க்கைக்கு இன்றியமையாத காதல் ஒழுக்கத்தை அகம் எனவும், வீரம், போர், வெற்றி, கொடை முதலியவற்றை புறம் என்னும் பெயரால் வழங்கினர். இதனைச் சங்க இலக்கியத்தின் வழி நன்கு அறியலாம். அகவொழுக்கத்தைப் பற்றி பேசப்படும் சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான கலித்தொகை ‘கற்றிந்தோர் ஏத்தும் கலி’ என அடைமொழி பெற்று விளங்குகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கலித்தொகையில் பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தல்கலி என ஐவகை கலிகளுள் மருதக் கலியில் சுட்டப்பெற்றுள்ள மாந்தர்களின் வாழ்வியல் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**பண்பாடு**

“பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்” (கலி. 133-8) என்று கலித்தொகை பண்பு என்ற சொல்லிற்கு விளக்கம் தருகின்றது. பண்பாடு என்பது மக்களின் நடத்தை முறைகளும், மரபு சார்ந்த பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் அடங்கிய தொகுப்பே பண்பாடு எனலாம். இத்தகைய பண்பாடு தமிழர்களுக்கே உரிய தலையாய பண்பாகவும் விளங்குகிறது. இப்பண்பாடு மருதக் கலியில் கையாளப்பட்ட விதத்தினை பின்வருமாறு அறியலாம்.

**பழக்க வழக்கம்**

தனிமனித நடத்தையை பழக்கம் எனவும், குழுவாகவுள்ள பலருடைய மன எழுச்சி, உணர்ச்சி போன்றவற்றுடன் இணைந்து நிற்பது வழக்கம் எனவும் கொள்ளப்படுகிறது. பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். இவ்வழக்கம் சமூகம் சார்ந்த ஒன்றாகும். இப்பழக்க வழக்கம் என்பது முன்னோர்களின் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் முதலியவற்றைப் பிரதிபலிப்பதாக உள்ளது. பழக்க வழக்கத்தை அறிந்து கொள்வதன் மூலம் தமிழ்ச் சமுதாய மக்களின் வாழ்க்கை முறையினையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**பண்பாட்டில் உள்ளுறை**

தமிழர் தம் பண்பாட்டினை எடுத்துரைப்பதாக உள்ளுறை மருதக்கலியில் இடம்பெற்றுள்ளது. காம உணர்வு மிக்க தலைவன் பரத்தையரிடம் சென்று இன்பம் அடைகின்றான். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் பண்பாட்டை மீறும் வகையில் மருதநிலத் தலைவன் செயல்படுகின்றான் என்பதனை மருதக்கலிப் பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

**பண்பாட்டு உணர்வுகள்**

தலைவன் தனக்கே உரியவன் எனும் உடைமை உணர்வு தலைவியிடம் பண்பாட்டு உணர்வாகக் காணமுடிகிறது. தலைவன் மார்பைத் தானே தழுவிக் கிடக்க வேண்டும் எனத் தலைவி எண்ணுகிறாள். தலைவன் மார்பில் பரத்தையர் பூசிய சந்தனம் கண்டு உளருகிறாள். மேலும், பரத்தை மகளிர் ஊடிய காரணத்தால் என்னிடம் திரும்பி வந்தாய் என்கிறாள். இதனை,

**"தாழ்ந்தாய் போல்வந்து தகவில் செய்யாது**

**சூழ்ந்தாவை செய்து மற்றுஎம்மையும் உள்ளுவாய்**

**வீழ்ந்தார் விரும்பு அற்றக்கால்"**

**(மரு.கலி.69)**

என்ற அடிகளில் தலைவன் தனக்கு மட்டுமே உரியவனாக அல்லாமல் பரத்தைக்கும் உரியவன் என்று மனவருத்தத்துடன் தலைவி பேசுவதை அறியமுடிகிறது.

**விருந்தோம்பல் பண்பு**

சங்க கால மக்கள் விருந்தோம்பல் பண்பாட்டினை பெரிதும் போற்றினர். எத்தகைய சூழலிலும் விருந்தோம்பலைத் தவறாது கடைபிடித்தனர் என்பதையும் கலித்தொகையின் வழி அறியலாம். இதனைத் தலைவி மனையிலிருக்கப் பரத்தையருடன் கூடியிருந்து விட்டு பின்னர் வீடு திரும்பும் தலைவன் தன்னுடன் விருந்தினரையும் அழைத்து வருவதையும் காணலாம். இவ்வாறு விருந்தினரை அழைத்து வருவதால் மனைவியானவள் அவனோடு ஊடல் கொள்ள முடியாது. வரும் விருந்தினர்களை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் கவனம் கொண்டு கணவனின் தவறான செயலை மறந்து விடுவாள். இதனை,

**"விருந்து எதிர்கொள்ளவும் பொய்ச்சூள் அஞ்சவும்**

**அரும்பெற்ற புதல்வனை முயங்கக் காணவும்**

**மாய மகிழ்நன் பரத்தமை நோவேன்"**

**(மரு.கலி. 10)**

மேலும், செல்வம் மிகும் வீடுகளில் பலரும் உண்ணும் பொருட்டுச் சமைத்து வைத்து விருந்தினரை எதிர்பார்க்கும் சூழலும் இருந்துள்ளதை,

**"பெருந்திரு நிலைஇய வீங்குசோற்று அகன்மனைப்**

**பொருந்துநோன் கதவு ஒற்றிப் புலம்பி, யாம் உலமர**

**இளையவர் தழூஉ ஆடும் எக்கர்வாய் வியன்தெருவில்" (மரு.கலி. 18)**

இப்பாடல் வழி அறிய முடிகின்றது. மேலும், விருந்தோம்பல் பண்பாடானது தமிழர்களின் தலைசிறந்த பண்பாகக் கருதமுடிகிறது.

**துணங்கைக் கூத்து**

பழந்தமிழர்களின் பண்பாட்டுக் கலைகளுள் ஒன்றாக விளங்குவது கூத்துக் கலையாகும். கூத்துக் கலைகளுள் துணங்கைக் கூத்து பற்றிய செய்திகள் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது. மகளிர் ஆடும் கூத்து துணங்கைக் கூத்தாகும். இது ஆடவருக்கும் உரியது. இது கிங்கிக் கூத்தென்று சொல்லப்படும் மக்களின் மகிழ்ச்சி காலத்திலே ஆடப்படுவதாகும்.

**"தணந்ததன் தலையும் நீ தளர் இயல் அவரொடு**

**துணங்கையாய் எனவந்த கவ்வையின் கடப்பன்றோ**

**ஒளிபூத்த நதலாரோடு ஓரணிப் பொலிதலின்**

**களிதட்ப வந்த கிக் கவின் காண இயந்ததை"**

**(மரு.கலி.1)**

என்னை நீ பிரிந்ததனால், நான் வருந்திக் கிடந்தபோது பரத்தையரோடு நீ துணங்கைக் கூத்தாடிக் கொண்டிருந்த செய்தியைக் கேட்டபோது என் மனம் வருந்தியது என்று தலைவி கூறியதன் மூலம் துணங்கைக் கூத்தானது மருதக் கலியில் பண்பாட்டுக் கூறாக விளங்கியதை இப்பாடல்வழி அறியமுடிகின்றது.

**தீயினை வலம் வருதல்**

சங்க இலக்கியங்களில் திருமண நடைமுறை பற்றிய செய்திகள் அரிதாகவே காணப்பெறுகின்றன. தீயினை வலம் வரும் செய்தி கலித்தொகையில் இந்த ஒரு பாடலில் மட்டுமே

சுட்டப்பெற்றுள்ளது. மணமக்கள் திருமணத்தின் போது தீவலம் வருதலை முதலாவதாகச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடக் காணலாம்.

**"காதல்கொள் வதுவைநாள், கலிங்கத்துள் ஒருங்கிய**
**மாதர்கொள் மானநோக்கின் மடந்தைதன் துணையாக**
**ஓத்துடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்" (மரு.கலி.4)**

காதலர் இருவரும் விரும்பும் திருமண நாளில், அந்தணன் இருவரையும் தீயை வலம் வருமாறு சொல்லத் தலைவனும் தலைவியும் எரிவலம் வருவர்.

**சிறுவர் விளையாட்டுக்கள்**

சங்க இலக்கியங்களில் சிறுவர் விளையாட்டுக்கள் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணக்கிடக்கின்றன. இம்மருதக் கலிப்பாடலில் மகன் யானைப் பொம்மையைச் சக்கரத்தில் பொருத்தி இழுத்து வந்தான் என்ற செய்தி கூறப்படுகிறது.

**"பவழம் புனைந்த பருதி சுமப்பக்**
**கவழம் அறியாநின் கைபுனை வேழம்**
**புரிபுனை பூங்கயிற்றில் பைபய வாங்கி**
**அரிபுனை புட்டிலின் ஆங்கண் ஈர்த்து**
**ஈங்கே வருக! எம் பாக மகனே!" (மரு.கலி. 15)**

பவளத்தால் செய்யப்பட்ட சக்கரங்கள் சுமக்க, கவழம் அறியாத கையால் செய்த யானைப் பொம்மையை பூங்கயிற்றினால் மெதுவாக இழுத்துக் கொண்டு இங்கே வரும் என் மகனே என்று இப்பாடல் விளக்குகிறது. இவை தமிழர் தம் பண்பாட்டின் கூறுகளாகும்.

**சிறுதேர் உருட்டல்**

புதல்வன் பால் குடித்தலையும் மறந்து சிறுதேர் உருட்டி நடைபயிலும் காட்சியும் சிறுவர் விளையாட்டாக இப்பாடலில் இடம்பெற்றுள்ளது.

**"பாலோடு அர்ந்த முலைமறந்து, முற்றத்துக்**
**கால்வல் தேர்கையின் இயக்கி, நடைபயிற்றா**
**ஆலமர் செல்வன் " (மரு.கலி. 16)**

**பெயர் வைத்தல்**

பேரன்-பெயரன்-பெயரினை உடையவன். தந்தையின் பெயரை மகனுக்கு வைத்தல் இன்றும் தமிழகத்தில் மரபாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

**"மேத்தக்க எந்தை பெயரினை யாம்**
**கொள்வோம்" (மரு.கலி. 16)**

பெயரிடும் பண்பாடு தமிழர்களின் தலைசிறந்த பண்பாடாக விளங்குவதை இப்பாடல் வரியின் மூலம் அறிய முடிகின்றது.

**பட்டப் பெயர் வைத்தல்**

ஏனாதி என்பது அமைச்சர் மற்றும் சேனாதிபதியர் ஆகியோரில் தலைசிறந்தோர்க்கு அரசன் வழங்கும் பட்டப் பெயர் ஆகும்.

**"ஏனாதிபாடியம்" (மரு.கலி. 16)**

இதன் வழி பெயரிடும் பண்பினை அறியமுடிகிறது.

**விழாக்கள்**

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும், மகிழ்ச்சியும், மலர்ச்சியும் ஊட்டுவன விழாக்களே. இவ்விழக்கள் சடங்குகளின் அடிப்படையில் தோன்றிச் சமுதாய நம்பிக்கையின் காரணமாகச் செல்வாக்குப் பெற்று வளர்ந்தும் வருகிறது. இனி மருதக் கலியில் சுட்டப்படும் விழாக்கள் குறித்துக் காண்போம்.

**புதுப் புனலாடும் விழா**

புனலாட்டு என்பது நீரில் குளித்தல் எனப் பொருள்படும். இதனை நீராடல் எனவும் சுட்டுவர். பருவமாற்றங் காரணமாக மழை பொழிந்து ஆற்றில் நீரோட்டம் ஏற்பட அதனை வரவேற்கும் நோக்கில் மகிழ்ச்சிப் பெருக்கால் நீராடி வழிபடுவது புதுப்புனலாடலின் நோக்கமாகும். புதுப்புனலாடும் விழா மருத நிலத்து மக்களுக்குரிய சிறப்பு விழாவாகக் கலித்தொகையில் சுட்டப்படுகிறது. வையை ஆற்றில் பெருகி வரும் புது வெள்ளம் கண்டு நீராடி மகிழும் வழக்கத்தை மருதக்கலிப் பாடல் 33 வழி அறியலாம். மேலும், தலைவியும் தோழியும் இணைந்து புதுப் புனலில் நீராடியதையும் அவர்களுக்குக் காவலாகத் தலைவன் இருந்ததையும் மருதக்கலிப் பாடல் சுட்டுகின்றது.

**“புனை இழை நோக்கியும், புனல் ஆடப் புறம் சூழ்ந்தும்”　　(மரு.கலி. 11)**

**சூழுரைத்தல்**

சூளுரைக்கும் போது தெய்வத்தின் மீது சூளுரைத்தல் உண்டு. தலைவன் நின்மெய் தொட்டுச் சூளுரைப்பேன் என்றான்.

**“போற்றிய நின் மெய் தொடுகு”**
**(மரு.கலி. 30)**

சூளுரைத்தல் என்பது சத்தயம் செய்தல் ஆகும். இன்றைய மக்களிடம் தலையில் அடித்துச் சத்தியம் செய்தலும், கையில் அடித்து சத்தியம் செய்தலும் பண்பாட்டு வழக்கமாக உள்ளது.

**பெருமணம்**

தலைவன் தலைவியை மணப்பது ஐந்திணைப் பாற்பட்ட மணம். காமக் கிழத்தியையும் தலைவன் மணந்து கொண்டது மருதக்கலிப் பாடலில் இடம்பெற்று உள்ளது. இதைச் சமுதாயமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

**“பெருமணம் பண்ணி, அறத்தினிற் கொண்ட பருமக் குதிரையோ அன்று; பெரும! நின்”**
**(மரு.கலி. 31)**

இப்பெருமணமானது அறநூல் வழிபட்டது என்றும், ஆதலின் காமக் கிழத்தியோடு நிகழும் திருமணம் அறநூல் வழிப்பட்டது என்றும் ஆசிரியர் கூறுகிறார்.

பரத்தையையும் குதிரையையும் தலைவி ஒப்பிட்டுப் பேசும் போது பல்வேறு அணிகலன்கள் சுட்டப் பெறுகின்றன. மகளிர்க்கான அணிகள் புல்லிகை, உத்தி, துஞ்சு, மேகலை, முக்காழ், சதங்கை, சிலம்பு, நீலமணிக் கடிகை ஆகும். குதிரைக்கு அணிவிக்கும் அணிகள் வல்லிகை, துஞ்சு, கன்ன சாமரை, கண்டிகை ஆகும். குதிரையை மூங்கில் உழக்காலும், நாழியாலும் வண்ணங்களைக் கொண்டு குதிரையை அழகுபடுத்தியுள்ளனர்.

**நிறைவுரை**

கலித்தொகையில் இடம்பெற்றுள்ள மருதக் கலியில் மக்களின் குடும்ப வாழ்க்கை, மனைவியின் குடும்பப் பற்று, கணவனின் பரத்தையர் பற்று போன்றவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பெண் தனது உரிமையை நிலைநாட்டும் பண்பும், பரத்தைவீடு சென்று வந்த கணவனைக் கண்டிக்கும் பண்பும், கணவன் அவள் முன் கெஞ்சி மண்டியிடும் பண்பும், அவனது மதிப்பைக் குறைக்காமல் அவன் செய்த தவறையே சுட்டிக் காட்டும் பண்புகளும் வளம் பொருந்திய நிலமும் கவலையற்ற வாழ்க்கையும் நடத்திய மருதநில மக்களின் உயர்ந்த பண்பானது அன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் முன்னோடிகள் காண்பித்த பண்பாடாக உணர முடிகின்றது.

**துணைநின்ற நூல்கள்**


1.புலியூர்க்கேசிகன் (உ.ஆ), கலித்தொகை, பாரி நிலையம், சென்னை, பதிப்பு - 2005.

2.கழக வெளியீடு, கலித்தொகைச் சொற்பொழிவுகள், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதிப்பு - 2001.

3.முனைவர். இரா.ஜெகதீசன், கலித்தொகை ஆய்வுக்கோவை, விழிச்சுடர்ப் பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2009.

4.முனைவர் மணிமாறன் சுப்பிரமணியன், கலித்தொகை, கலைஞன் பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2014.

# கர்நாடக இசை வளர்ச்சியில் சபாக்களின் பங்கு

*தி.சங்கர நாராயணன், *முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம், இசைக் கல்லூரி மற்றும் இசை ஆராய்ச்சி மையம், தல்லாகுளம், மதுரை.*

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் நமது இசைக்கலையும், நாட்டியக்கலையும் அடைந்திருக்கும் வளர்ச்சியும் அவற்றுக்குக் கிடைத்து வரும் உலகளாவிய வரவேற்பும் ஆச்சிரியப்பட வைக்கிறது.

உலக சாத்திரத்திலேயே இசை விழா என்கிற பெயரில் ஒரு நகரமே விழாக்கோலம் பூணும் அதிசயம் நமது தமிழகத்தின் தலைநகராம் சென்னைக்கு மட்டுமே உரித்தான பெருமை. ஊலகெல்லாம் பரந்து வாழும் கர்நாடக இசை ஆர்வலர்களும், கலைஞர்களையும் மார்கழி மாதம் பிறந்து விட்டால் - சென்னையைத் தஞ்சம் புகும் இந்த அதிசயத்தைப் பார்த்து மேல்நாட்டினர் பலரும் வியப்பில் ஆழ்ந்து போகின்றனர்.

இதற்கு காரணம் சபாக்கள் தான் என்று பெருமையாகச் சொல்லலாம். கர்நாடக இசை வளர்ச்சியில் சபாக்களின் பங்கு பற்றி விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சபாவின் தோற்றமும் வளர்ச்சியும்**

பிரிட்டிஷ் ஆட்சி சென்னையில் வேரூன்றுவதற்கு முன்னால், தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களும், ராமநாதபுரம், எட்டயாபுரம், புதுக்கோட்டை, திருவிதாங்கூர் போன்ற சமஸ்தான அதிபதிகளும் கலை, இலக்கியம், இசை போன்றவற்றின் புரவலர்களாக இருந்தனர். தஞ்சைத் தரணியில் இருந்த நிலச்சுவான்தாரர்களும் பெரிய அளவில் இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகளையும், கலைஞர்களையும் ஆதரித்தனர். ஆதனால் தானோ என்னவோ, தஞ்சையும் நெல்லையும் கலை மற்றும் இலக்கியங்களின் தாயகமாகத் திகழ்ந்தன.

**ஜுபினி ஞானசமாஜம்**

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் தலைமையிடமான சென்னையை நோக்கித் தஞ்சை மற்றும் நெல்லையிலிருந்து இசை ஆர்வலர்கள் இடம் பெயரத் தொடங்கினர். ஜமீன்தாரர்களும், சமஸ்தான அதிபர்களும் தங்களது செல்வாக்கை இழந்துவிட்டநிலைமை, இசையும், நடனமும் புரவலர்களை இழந்து தவித்தன. ஆர்வலர்களோ, சென்னையில் தங்களது விழிகளுக்கும், செவிகளுக்கும் விருந்தின்றி வாடினர்.

சென்னையில் இருந்த இசை ஆர்வலர்கள் இணைந்து 1883-ல் மெட்ராஸ் ஜுபினி ஞானசமாஜம் என்கிற அமைப்பை உருவாக்கினார்கள். ஆனால் அந்த அமைப்பால் அதிக காலம் தாக்குப்பிடிக்கவோ, எந்தவொரு தாக்கத்தை ஏற்படுத்தவோ முடியாமல் போனது. அதற்கு முக்கியக் காரணம் தஞ்சையிலிருந்து இசைவாணர்களைச் சென்னைக்கு வரவழைக்க முடியவில்லை என்பதும் ஒரு முறையான அமைப்பாக ஞானசபை இயங்கவில்லை என்பதும்தான்.

### ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபா

தனது 108-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் ஸ்ரீ பார்த்த சாரதி சுவாமி சபா, மௌனி திருமச்சாரியார் என்பவரால் 1900-ல் 50 உறுப்பினர்களுடன் பஜனை மற்றும் கதாகாலட்சேபங்களை நடத்துவதற்காகத் தொடங்கப்பட்டது. பார்த்தசாரதி சபா இசை, நாட்டியம் என்று தனது நிகழ்ச்சிகளை பிரிவுபடுத்தியது மட்டுமல்லாமல், இன்று வரை தொடர்ந்து சிறப்பாக நடத்தப்பட்டு வரும் முதுபெரும் சபாவாகத் திகழ்கிறது.

### தென்னிந்திய மியூசிக் அகாதமி

1926-ல் தென்னிந்திய மியூசிக் அகாதமி என்கிற அமைப்பு ஒரு சில இசைப்பிரியர்களால் தொடங்கப்பட்டது. சென்னையில் இருந்த முன்னணி வழக்கறிஞர்கள், அரசு அலுவலர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் போன்றவர்கள் தான் இந்த அகாதமி தொடங்குவதற்கு காரணகர்த்தாக்கள். இவர்களில் பலரும் சுதந்திரப் போராட்ட அனுதாபிகளாகவும், காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருந்தனர் என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

1927 டிசம்பர் மாதம் சென்னையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கூடியது. அந்த மாநாட்டை ஒட்டி இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களுக்கும் தென்னிந்திய இசை விருந்தும் படைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. மாநாட்டுப் பந்தலில் தென்னிந்திய இசையைப் பற்றிய விவரங்கள் அடங்கிய ஒரு அரங்கமும் ஏற்படுத்தப்பட்டது.

1927- ஆம் ஆண்டு டிசம்பரில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாநாட்டுத் திடலில் அமைந்த இசை அரங்கத்தில் தென்னிந்திய மியூசிக் அகாதமியின் சார்பில் இசை எட்டு நாட்கள் நடந்தது. இசைக்கருவிகள், இசை சம்பந்தப்பட்ட புத்தகங்கள், ஓசைச் சுவடிகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் போன்றவை அந்த அரங்கத்தில் கண்காட்சியாக வைக்கப்பட்டன. ஆராய்ச்சிக் குறிப்புகள் வாசிக்கப்பட்டு. இசை பற்றிய விவாதங்களும், சர்ச்சைகளும் நடைபெற்றன. கர்நாடக மற்றும் ஹிந்துஸ்தானி சங்கீத விற்பன்னர்களின் நிகழ்ச்சி நடந்தன. பின்னாளில் பிரபலமாக ஆண்டுதோறும் சென்னையில் அரங்கேறும் இசைத் திருவிழாவுக்குப் பிள்ளையார் சுழி போட்ட பெருமை, 1927- ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டை ஒட்டி நடந்த அந்த எட்டு நாள் இசை விழாவுக்கு உண்டு. 1926- ல் தொடங்கப்பட்டு விட்டது என்றாலும் மியூசிக் அகாதமி 1928-ல் தான் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. அது மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் மாநாடு நடத்தி இசைவிழாவுடன் ஒரு தலைசிறந்த இசைக் கலைஞருக்கு **“சங்கீத கலாநிதி”** பட்டம் வழங்குவது என்று முடிவு எடுக்கப்பட்டு, இன்று வரை அந்த வழக்கம் தொடர்கிறது.

### இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி

1932-ல் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி தொடங்கப்பட்டது. அகாதமி, அரசு மேலதிகாரிகள், வழக்கறிஞர்கள் போன்றவர்களின் நிர்வாகத்தில் இயங்கியது என்றால் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டிக்கு அன்றைய சென்னையிலிருந்து பெரும் தனவணிகர்கள், அதிலும் குறிப்பாக ஆந்திர மாநிலத்தவர்கள் புரவலர்களாக இருந்தனர். அன்றைய சென்னை ராஜதானி வணிகர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்த சின்னி லெமண்ட் செட்டி குடும்பத்தினர் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டியைத் தொடங்குவதிலும் அதன் வளர்ச்சியிலும் பெரும் பங்கு வகித்தனர்.

### ராஜா அண்ணாமலை மன்றம்/தமிழிசை சங்கம்

தமிழ்ப் பாடல்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்பதை முன்னிறுத்தி ஓர் இயக்கம் தொடங்கியது. இந்த இயக்கத்தின் முன்வரிசையில் இருந்தவர்கள். ராஜாஜி, எழுத்தாளர் கல்கி, மற்றும் ரசிகமணி டி.கே.சி போன்றவர்கள். ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் முழு ஆதரவும் இந்த இயக்கத்துக்குக் கிடைத்தது. அவரது தலைமையில் தமிழிசை இயக்கம் இசை மேடையில் ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியது என்பது சரித்திரமாகும். தமிழிசை இயக்கத்தை முன்னின்று நடத்துவதுடன் நின்றுவிடாமல் தமிழிசையை வளர்க்கவும், முழுக்க முழுக்க தமிழ் சாகித்யங்கள் மட்டுமே பாடப்படும்

கச்சேரியை ஊக்குவிக்கும் பொருட்டு சென்னையில் சர் ராஜா அண்ணாமலை செட்டியர் ராஜா அண்ணாமலை மன்றத்தை உருவாக்கினார். 1942-ல் தமிழிசைச் சங்கம் தொடங்கப்பட்டது.

**பிற சபாக்கள்**

மியூசிக் அகதாமியையும், இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டியும் தொடர்ந்து கலாசேத்ரா பவுண்டேசன், தமிழ் இசைக்கழகம், பார்த்தசாரதி சுவாமி சபா, கிருஷ்ணகான சபா, தியாக பிரம்ம கான சபா, ஆர்.ஆர்.சபா, கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ், பாரத் கலாச்சார், நுங்கம்பாக்கம் கல்சுரல் சொசைட்டி என்ற எண்பதுக்கும் அதிகமான சபாக்கள் தோன்றி ஆண்டுதோறும் இசை நிகழ்ச்சிளை நடத்தி வருகின்றன.

முப்பது வருடங்களுக்கு முன்னால், உறுப்பினர்களின் சந்தாவை அடிப்படையாக வைத்து, சபாக்கள் உருவாக்கப்பட்டன. அந்த சபாவின் நிகழ்ச்சிகளுக்கு மாத சந்தா அல்லது வருட சந்தா அளிக்கும் உறுப்பினர்கள் தவறாமல் வந்தனர் என்பதாலும், அத்தனை நிகழ்ச்சிகளுமே ரசிகர்களுக்காக நடத்தப்பட்டன. கலைஞர்களும் ரசிகர்கள் அமர்ந்திருக்கும் உற்சாகத்தில் தங்களது திறமையை உற்சாகமாக வெளிப்படுத்தினர்.

இப்போது ஒரு சபா தொடங்குவதற்கு உறுப்பினர்கள் அவசியமில்லை என்கிற நிலைமை, பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுடன் வங்கிகள் மற்றும் அரசு நிறுவனங்களிடமும் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்கள் யார் வேண்டுமானாலும் சபா தொடங்கி நிகழ்ச்சிகளை நடத்தலாம் என்கிற நிலைமை ஏற்பட்டு விட்டது. தொழில் நிறுவனங்களும், வங்கி மற்றும் அரசு நிறுவனங்களும் ஸ்பான்சர்கள் என்ற பெயரில் நிதியுதவி அளித்து வருகின்றன. அதற்குப் பிரதியுபகாரமாகத் தங்களது விளம்பரங்களை இந்த சபாக்களில் பேனர்களாகத் தொடங்கவிடும் போக்கு காணப்படுவதை நாம் காணமுடிகிறது.

# பாரதியும் பெண்மையும்

*முனைவர் ஆ. அறிவுமொழி, *உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி மகளிர் கல்லூரி, சென்னை - 15.*

இலக்கியம் என்பது வெறும் கற்பனையைச் சொல்வதல்ல. கற்பனை வழி கருத்தையும், இன்பத்தையும் தரவல்லது. கருத்து என்பது சமூகத்தின் தேவையை விடுதலையை முன்னிறுத்துவது ஆகும். ஒரு படைப்பாளி தன் கருத்தை படைப்பின் வழி முன்மொழியும் போது உணர்ச்சி பெருக்கோடு அடுத்த கட்ட நகரவை அடைகிறது. ஒரு படைப்பு வெறுமனே முளைத்து விடுவதில்லை. அதற்கான விதை, ஊட்டம், போன்றவை சமூகத்தின் அன்றாடச் செயல்பாடுகளில் இருக்கிறது. அதனால் தான் காலம் முழுவதும் ஒரே இலக்கிய வகையை கையாளுவதில்லை. மாறாக காலத்தின் தேவைக்கேற்ப, சமூகத்தின் தேவைக்கேற்ப இலக்கிய வடிவங்கள் தேவையாகிறது. தவிரக்க முடியாததாகிறது.

தமிழ் இலக்கிய வடிவம் என்பது ஒரே மாதிரியானது அல்ல. காலத்தின் தேவையும் சமூகத்தின் அன்றாட நிகழ்வும் பன்முக இலக்கிய வடிவங்களை தமிழ் ஏற்றுக்கொண்டுள்ளது எனலாம். சங்ககாலத்தில் திணை இலக்கியங்கள், அதன் தேவை குறைந்து அறத்தின் தேவை அதிகரிக்கின்ற போது அற இலக்கியங்கள், அதுவும் தேய்ந்து பக்தி எனும் சமூக நிகழ்வு பக்தி இலக்கியத்தை படைக்கிறது. அதன் தொடர்ச்சியாக, சிற்றிலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் (கவிதை, கட்டுரை, நாவல், சிறுகதை, உரைநடை, போன்றன.) பின்நவீன இலக்கியங்கள், தலித் இலக்கியங்கள், பெண்ணிய இலக்கியங்கள் என பன்முக இலக்கிய வடிவங்கள் தோற்றம் கொண்டன.

இந்த மாற்றத்தில் பாரதிக்கும் மிக முக்கியப் பங்குண்டு. வசன கவிதை, நவீன கவிதை என தன் இலக்கிய வடிவத்தை பாரதி நிர்மாணம் செய்து கொள்வது அன்றைய சமூகத்தின் அன்றாட நிகழ்வின் வெளிப்பாடே தவிர வேறொன்றும் இருக்க வாய்ப்பில்லை. இவர் வடிவத்தை மட்டும் மாற்றிக் கொள்ளவில்லை. பாடுபொருளையும் தன் சமூகத்தேவைக்காகத் தேர்ந்தெடுத்துக்கொண்டுள்ளார். விடுதலை, சாதி எனும் வரிசையில் பெண் விடுதலையும் அவரது பாடுபொருளாகிறது. பெண்ணுக்கு விடுதலையும் வாழ்வும் வேண்டும் என்று உரக்கு முழக்கம் இட்ட பெண்ணின் பெருமை பேசிய கவிஞர்களுள் பாரதி முதன்மைபெறுகிறார். பாரதி மட்டுமல்ல, அறிஞர்கள் அனைவருமே பெண் விடுதலையை விரும்பிப் பாடியவர்கள்.

மங்கையராகப் பிறப்பதற்கே பெரும் மாதவம் செய்திட வேண்டும் என்றார்கள். பாரதியார் தமிழ்ப் பண்புடையவர். தமிழ் மொழியின் உயர்வே தன்னுடைய உயர்வு என்ற எண்ணம் கொண்டவர். எனவே பெண்கள் மதித்துப் போற்றப்பட வேண்டும் என்ற விரும்பினார். அதனால் தான் பெண் மதித்துப் போற்றும் தமிழர் நாகரிகத்திற்குப் புத்துணர்வு கொடுக்கும் படைப்புகளை சமூகத்தின் மீது படைத்துத் தொடுத்தார்.

**“கண்க ளிரட்டெனவே வ – வீரக்**

**காளைக ளோடிளங் காதல் மயிலெனப்**

**பெண்கள் தலைநிமிர - ஜய**

**பேரிகை கொட்டியிவ் வூரை எழுப்பினை"**

எனப் போற்றுகின்றார்.

**"துன்பம் தீர்வது பெண்மையிலடா**

**உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா**

**ஆணினும் பெண் சிறந்ததன்றோ?**

**தையலை உயர்வு செய், பெண்**

**விடுதலை வேண்டும்"**

என்று விடுதலை முழக்கம் செய்தார் பாரதி. பெண் ஆணின் அடிமையல்ல என்பதை இந்தச் சமூகத்திற்கு உறக்கச் சொன்னார். பெண் விடுதலைக்கு ஆன வழிவகைளையெல்லாம் ஆராய்ந்து மாதர் என்ற பகுதியில் தெளிவாக விளக்கியும் உள்ளார் என்பது யாவரும் அறிந்ததே. நாணமும் அச்சமும் நங்கையருக்கு வேண்டும் என்று வற்புறுத்துவதை பாரதி வெறுத்து எதிர்க்கிறார். இவ்வாறு சொல்பவர்களைக் காணும்போதே கனலை உமிழ்கின்றன பாரதியின் கண்கள். ஆம், நெஞ்சு பொறுக்கவில்லை அவருக்கு அதனால் தான் நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் என்று ஆத்திரப்படுகிறார். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய குணங்கள் பெண்களிடம் தற்போதுள்ள அளவு போதும், மேலும், வேண்டுமென வலியுறுத்துவது அவசியமற்றது. அறிவுடைமையாகாது என்பது அவரது எண்ணம். எனவே தான்,

**"ஞான நல்லறம் வீர சுதந்திரம்**

**பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்."**

என்கிறார். ஞானம் வேண்டும், நல்லறம் வேண்டும், வீரம் வேண்டும், சுதந்திரம் வேண்டும் நற்குடிப் பெண்ணின் குணங்கள் இவைதாம் என்று ஆணித்தரமாக வலியுறுத்துகிறார்.

கற்பு மேலானது என்று எப்பொழுதுமே பெண்களுக்கு மட்டுமே உபதேசம் செய்கின்றனர் அது தவறு. ஆண்களும் நேர்மையோடு இல்லறத்தைக் கடைபிடித்தல் அவசியம் என்பதனை மிகுந்த கோபத்தோடு பின்வருமாறு பாடுகின்றார்.

**"ஆணெல்லாங் கற்பை விட்டுத் தவறு செய்தால்**

**அப்போது பெண்மையுங் கற்பழிந் திடாதோ?**

**நாணற்ற வார்த்தையன்றோ வீட்டைச்சுட்டால்**

**நலமான கூரையுந்தா னெரிந்திடாதா**

**பேணுமொரு காதலினை வேண்டியன்றோ**

**பெண் மக்கள் கற்புநிலை பிறழுகின்றார்**

**காணுகின்ற காட்சியெலா மறைத்து வைத்துச்**

**கற்புக்கள் பெண்ணுலகோர் கதைக்கின்றாரோ"**

இதன் வழியாக ஆண்கள் எல்லாம் கற்பை விட்டுத் தவறுகள் புரிந்தால் பெண்மையின் கற்பும் அழியத்தானே செய்யும் என்றும் வீட்டைச் சுட்டால் கூரை மட்டும் எரியாமலிருக்குமா? என்ன பைத்தியக்காரத்தனமான அடக்குமுறை என்கிறார். அதோடு ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்வில் நல்லொழுக்கம் என்பது இருவருக்கும் பொதுவானது, தனிஒருவருக்கானது அல்ல என்கிறார். உலகம் அறியாமை என்ற இருளில் இருந்து அறிவொளி பெற்றுத் திகழ வேண்டுமானால் பெண்களின் அறிவினை முதலில் வளர்க்க வேண்டும் என்கிறார் பாரதி.

**"பெண்க ளறிவை வளர்த்தல் - வையம்**

**பேதைமை யற்றிடும் கண்டீர்"**

என்று பாடுகின்றார். மேலும், பெண்களுக்கான அறிவும், ஞானமும் இயற்கையிலேயே உண்டு. அது வளர்த்தெடுக்கப்படுதல் அவசியம் என்றும் அதை அதிகாரம், அடக்குமுறை, அறியாமையால் வீணடித்து விடுதல் கூடாது என்பதனையும் பாரதி,

**"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**

**பேணி வளர்த்திடும் ஈசன்**

**மண்ணுக்குள் ளேசில மூடர் - நல்ல**

**மாதரறிவைக் கெடுத்தார்"**

என்று பாடுகின்றார். பெண்கள் அறிவோடு கலந்த வீரமும், விசாலமான உலக அறிவும் வேண்டும், அதற்கு பெண்கள் பலதுறை சார்ந்த நூல்களைப் படித்து அறிவினைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று பாடியிருப்பதனை,

**"உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேறவும்**

**ஓது பற்பல நூல்வகை கற்கவும்**

**இலகு சீருடை நாற்றிசை நாடுகள்**

**யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே**

**திலகவா ணுதலார் தங்கள் பாரத**

**தேமோங்க உழைத்திடல் வேண்டும்."**

என்கின்றார். நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்குமே அஞ்சாத நெறிகளும் இவற்றினுக்கு மேலாக, முதிர்ந்த நிமிர்ந்த ஞானச் செருக்கும் உடைய பெண்கள் செம்மை மாதர்கள் நல்ல வாழ்வு வாழ்வதில் வியப்பொன்றுமில்லை. இயல்புதானே, இதனை,

**"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"**

என்று பாடுகின்றார். அடுப்புதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு, வெளி விவகாரங்களில், சமூக நிகழ்வுகளில் அவர்களுக்கு என்ன வேலை, கணவனின் இன்பம். குழந்தைகளின் நலம் இவற்றைத் தானே கவனித்துக் கொண்டு வீட்டில் கிடக்க வேண்டும் என்கின்ற கருத்தை தகர்த்து எரிய வேண்டும் என்பது பாரதியின் பெருவேட்கை. இதனை,

**"ஏட்டையும் பெண்கள்**
**தொடுவது தீமையென்**
**றெண்ணி யிருந்தவர்**
**மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள் ளே பெண்ணை**
**பூட்டி வைப்போ மென்ற**
**விந்தை மனிதர்**
**தலை கவிழ்ந்தார்"**

என்று தனது புதுமைப் பெண் என்ற பாடல் பகுதியில் மிகவும் தெளிவாக்கிக் காட்டியிருக்கின்றார். புாரதி காட்டும் புதுமைப்பெண் உரிமை பெற்றவள். அறிவில் திளைத்தவர், ஆணுக்கு நிகரானவள் எனினும் ஆணும் பெண்ணும் இணைந்ததே மானிடம் என்ற பாரதியின் புதுமைப் பெண் மறுக்கவில்லை, இதற்கு மதிப்புத் தரவும் தவறவும் இல்லை.

**"காதலொருவகைக் கைப்பிடித்தே - அவன்**
**காரியம் யாவிலும் கைகொடுத்து**
**மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்**
**மாட்சிபெறச் செய்து வாழ்வோமடி"**

என்று கூறுகின்றாள். அறியாமை என்ற பழமையைக் காட்டிலும் புதுமை செய்து குடும்பத்தையும், மானுடத்தையும் புத்துயிர் பெற்று எழச் செய்குவோம் என்று உற்சாகத்தோடு பாடியிருக்கும் பாரதியினைக் காணமுடிகின்றது. பாரதி தனது மனைவியைப் பற்றிக் கூறும்பொழுது கூட மனைவி என்ற வார்த்தையை விட ஆருயிருக் காதலி, அன்புக்காதலி செல்லம்மா, என்றுதான் அழைத்து பெண்மைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

**"பெண்மை வாழ்கவென்று**
**கூத்திடுவோமடா**
**பெண்மை வெல்கமென்று**
**கூத்திடு வோமடா"**

ஏன்று ஆனத்தக் கூத்தாடும் பாரதியோடு நாமும் பெண்மையை வாழ்த்துவோம், வணங்குவோம்.

பாரதி விடுதலைக் கவிஞன். தேசத்தின் விடுதலை மட்டும் விடுதலையல்ல என்பதை உணர்ந்த கவிஞன். அதனால் தான் புரையோடிப் போன சமூகத்தின் விரிசல்களை கண்டறிந்து கவிதை படைத்தான். படைப்பில் மட்டும் சமூகத்தை நேசித்தவன் அல்ல. வாழ்ந்தும் காட்டியவன். பாரதியின் படைப்புகள் முழுவதும் சமூகத்தின் தேவையை பாடுபவை. அதில் மாற்றுக்கருத்தில்லை. அந்த வரிசையில் பெண் விடுதலையும் சமூகத்தின் அவசிய அவசரத் தேவை என்பதை தெளிவாக உணர்ந்து படைப்பின் வழி பெண்மையைப் போற்றினான். பாரதி பெண்ணுக் எந்த மாதிரியான விடுதலை தேவை என்பதை உணர்ந்ததனால் தான் பெண்ணுக்கு கல்வி வேண்டும், பெண்கள் சமூக நிகழ்வுகளில் பங்கெடுக்க வேண்டும். பெண்களின் அறிவை விரிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை சமூகத்தின் மீது வைத்தான் என்பதை அறியமுடிகிறது.

**பயன்கொண்ட நூற்கள்**


1. பாரதியார் கவிதைகள் - பூம்புகார் பதிப்பகம், 127 (ப.எண்-63), பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை.-18

2. தொல்காப்பியம் தெளிவுரை- முனைவர் ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர தெரு, பாரிமுனை, சென்னை - 08

3. திருக்குறள் - பரிமேழலகர் உரை பூம்புகார் பதிப்பகம், 127 (ப.எண்-63), பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை.-18

# முல்லைப்பாட்டும் மனிதநேயமும்

*முனைவர் ப.இராஜேஷ், *இணைப்பேராசிரியர் / துறைத்தலைவர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.*

**முன்னுரை:**

மனிதனின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தை அடையாளமிட்டுக் காட்டுவது இலக்கியம். இவ்விலக்கியத்தை அக இலக்கியம், புற இலக்கியம் என்றும் வகைப்படுத்தலாம். அகம் என்பது உள்ளத்தில் நிகழ்வது என்றும், தலைவன், தலைவியின் உள்ளங்களால் இணைந்த ஒழுக்கத்தைக் கூறுவது என்றும், அது மனத்தினால் அறியும் மாண்புடையது எனலாம் மனிதனின் அக வாழ்க்கையில் உட்படாத பிறநிகழ்வுகள், உணர்வுகள் அனைத்தும் புறமாகின்றது. அதாவது போர், தலைவனின் வீரம், கொடை முதலிய புகழ்ச்சிக்குரிய பண்புகள் புறம் எனலாம். ஆக'மனிதன்' என்ற சொல் 'மனம்' என்ற சொல்லின் அடிப்படையாக வருகிறது. மனத்தையுடையவன் மனிதனாகக் கருதப்படுகிறான். அவன் எது சரி என மனத்தால் தீர்மானிக்கிறானா அவனே மனிதநேயம் கொண்டவன். அந்நிலையில் சங்க இலக்கிய தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமான முல்லைப்பாட்டில் மனிதநேயத்தை எடுத்தியம்புவது சிறப்பிற்குரியதாகும்.

**மனிதநேயம்:**

சங்கத்தமிழ் இலக்கியங்கள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கேற்ப உலகமாந்தர் அனைவரையும்'மனிதன்' என்ற ஒரே தளத்தில் ஒருங்கிணைத்து பறைசாற்றி வருகின்றன. இந்த மனிதநேய உணர்வு அறிவிலார்ந்த இன்றைய போராட்டத்திற்கு மிகவும் தேவையாகிறது. "உலகிலேயே மிகவும் வல்லமை வாய்ந்த சக்தி அன்பு ஒன்றே. அதனை விடப் பணிவினைத் தரவல்லதென வேறெதனையும் கற்பனைக்கூட செய்து பார்க்க முடியாது" என்கிறார் காந்தியடிகள். மனிதநேயம் என்பது பிற உயிர்களின் துன்பத்தைக் கண்டு இரங்குதல், அதைச் சரி செய்து பேணிக்காத்தல், அதாவது மக்கள் அறிவுபெற்ற தன் பயன் பிற உயிர்படும் துன்பத்தை அறிந்து உதவுதல் எனலாம். மனிதநேயம் எனும் சொல் 'றெயுமன்ஸ்' என்ற லத்தீன் சொல்லிருந்து பிறந்ததாகும். மனித ஜீவன்களிடமிருந்து இரக்கம், அனுதாபம், பரிவுக்காட்டும் மனிதனது இயல்பு என்பது பொருளாகும்.

**"மகாகவி பாரதியார் தன்னுடைய படைப்பில்,**

**உயிர்களிடத்தில் அன்புவேணும் -- தெய்வம்**

**உண்மை யென்று தானறிதல் வேணும்**

**வயிரமுடைய நெஞ்சு வேணும் -- இது**

**வாழும் முறைமை யடிபாப்பா"**

என்னும் கவிதை வரிகள் உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றார். மேலும், இராமலிங்கவள்ளலார்,

**“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்”**

என்னும் பாடலடி உலக அளவிலான மனிதநேயத்தை வெளிப்படுத்துகிறது. இதனைப் போன்று கவிமணி அவர்கள்,

**“இடர் வரும்போதும் -- உள்ளம்**
**இரங்கிடும் போதும்**
**உடன்பிறந்தவர் போல் -- மாந்தர்**
**உறவுகொள்வர் அப்பா” ( ஆசிய ஜோதி)**

என்ற மனித நேயத்தை ஆசியஜோதியில் வெளிப்படுத்துகின்றார். அதாவது, மனிதநேயம் என்பது ஒவ்வொரு மனிதனும் பிறமனிதர்களைத் தன்னைப் போல் கருதுவதும் அவர்கள் மீது அன்பு செலுத்துவதுமான சிந்தனைகளாகும். சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு சகிப்புத் தன்மையுடன் செயல்பட்டு பண்பட்ட மனிதனாகச் செயல்படுவதே மனிதநேயம். மனிதப் பண்பாட்டின் பிரதிப்பலிப்புகளான இலக்கியங்களும் கலைகளும் மனிதநேயம் குறித்து எடுத்துக்கூறுகின்றன. மனிதாபிமானம் என்பது துன்பத்தில் உழலும் மக்கள் மீது வெறுமனே கருணைக் காட்டுவதோ, அவர்களுக்காகப் பரிந்துரைப்பதோ அல்ல. பிரச்சனைகளையும், துன்பங்களையும் நீக்குவதற்கான ஒப்பற்ற ஆற்றலை அம்மக்களுக்கு வழங்குவதாகும். இத்தகைய நிகழ்வுகளை முல்லைப்பாட்டு செய்கிறது.

பழங்காலம் தொட்டு இக்காலம் வரை எத்தனையோ இலக்கியங்கள் தோன்றி மலர்ந்துள்ள இவ்விலக்கியங்கள் அனைத்தும் காலத்திற்கேற்றாற் போல் பல மாற்றங்களுக்கு உட்பட்டு வளர்ந்துள்ளன. அவ்வகையில் அக்காலம் முதல் இக்காலம் வரையிலும் தமிழர்களிடம் நிலைப்பெற்று இருப்பது முல்லைப்பாட்டு இலக்கியமாகும். இவற்றிற்குக் காரணம் அக்கால மனிதநேயமாகும். ஆக முல்லைப்பாட்டில் மனிதநேயத்தை ஆராய்வது சிறப்பிற்குரியதாகும்.

**முல்லைநிலமக்கள்:**

ஐந்திணைகளில் சிறப்பிடம் பெறும் திணை முல்லையாகும். முல்லைப்பூ சிறந்ததால் முல்லைநிலம் எனப் பெறுகிறது. முல்லை நிலமக்களை ஆயர், ஆய்ச்சியர், இடையர், இடைச்சியர். அண்டர், பொதுவர், கோவலர் முதலிய பெயர்களாலும் அழைக்கப்படுகின்றனர். முல்லைப்பாட்டில் கோவலர் எனும் இடைக்குல மக்களைச் சுட்டிக்காட்டுகின்றார். இதனை,

**“கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர**
**இன்ன வருகுவர் தாயார் என்போள்”**
**(முல்லை.பா.15-16)**

என்னும் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும், சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பால் உண்ணாமையால் அடைந்த துயரத்தால் தாய்ப் பசு வரும் என்று இடையர் குடியில் உள்ள பெண் கையகத்துக் கோலையுடைய இடையர் பின்னே நின்று செலுத்துதலால் இப்போது வந்து விடுவர் நும்தாயர் என்பவளின் நல்ல மொழியைக் கேட்டோம் என்னும் சொற்கள் இம்மக்களின் மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றன.

சங்க இலக்கியங்களில் அதிகமான இடங்களில் முல்லைப்பூ பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றது. சங்க இலக்கியமான குறுந்தொகையில்,

**“கோடலெதிர் முகைப் பசுவீ முல்லை”**
**(குறுந்.62.1)** என்றும்,

**“முல்லை ஊர்ந்த கல் உயர்வுஏறி”**
**(குறுந்.275.1)**

என்றும் குறிப்பிடுகின்றன. சிறந்த மணமுடையதாகவும் தூயதாகவும் காணப்படுவதால் முல்லை மலரைக் கற்புக்கு அடையாளமாகப் பூவாகப் பழந்தமிழர் கொண்டனர். முல்லை நிலமக்களில் பெருமுது பெண்டிர் (வயது முதிர்ச்சியடைந்த இடைக்குலப் பெண்) முல்லைப் பூக்களை நாழியில் நெல்லோடு சேர்த்து மலர்தூவி தெய்வத்தை (கண்ணபிரான்) வணங்கி நற்சொல் கேட்டதை,

**“நாழிகொண்டநறுவீமுல்லை**
**அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது**
**பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப”**
**(முல்லை.பா.09--10)**

என்னும் பாடலடிகளில் இறைவழி பாடலோடு மனிதநேய உணர்வும் வெளிப்படுகின்றன.

முல்லலை நிலமக்களின் வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் கூட்டாகவாழும் வாழ்க்கை எனலாம். எனவே கூட்டத்தினரிடையே ஏற்படுகின்ற ஒரு செயலாகிய பழக்கம் காலங்காலமாகப் பழக்கமாகப் மாறுகிறது எனலாம். மக்கள் அன்றாடம் வாழ்வில் கொள்ளும் பழக்கங்கள் வழக்கங்களாக அமைந்து, பின்னர் அவையே நாகரிகப் பண்பாடுசெயல் முறையாக மாறிவிடுகின்றன. அவை உயர் பண்பாட்டிற்குரியனவாய் உள்ளன. காலவெள்ளத்தைக் கடந்து நிற்கும் பழமை பாராட்டும் மக்கள் இயல்பாலும், மூடநம்பிக்கைகளாலும், காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும் இப்பழக்க வழக்கங்கள் ஒரு குறிப்பிட்டக் காலத்தில் நிகழ்வதாய் அமையும். மேலும், ஒரு கூட்டத்தாரின் பண்பாடுகளும், பழக்க வழக்கங்களும் அவரவர் வாழும் இடம், சுழல் அவர் செய்யும் தொழில் பிறரோடு கொள்ளும் தொடர்பு ஆகியன தொல்லிலக்கியங் கொண்டு நாம் வரையறை செய்யமுடியும். அவ்வகையில் முல்லைப்பாட்டில் முல்லைநில மக்களின் பழக்கங்களாகப் பூவைப் பறித்து பூவோடு நெல்லையும் தூவி இறைவனை வழிப்பட்டதும், நற்சொல் கேட்டு நின்றதும் மனிதநேயத்திற்குச் சான்றாக அமைகிறது. இதனை,

**"நன்னர் நன்மொழிகேட்டனம் அதனால்**
**நல்லநன்மொழிகேட்டனம் அதனால்**
**நல்லநல்லோர் வாய்ப்புள் தெவ்வர்**
**முனைகவர்ந்துகொண்டதிறையர் வினைமுடித்து**
**வருதல் தலைவர் வாய்வதுநீநின்"**
**(முல்லை.பா.16--20)**

என்னும் பாடலடிகளால் அறியலாம். அதாவது பிறர் வாழ்வதற்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டனர் என்பதனின் மூலம் மனிதநேய உணர்வு மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது.

போர்ப்பாசறையில் அரசன் நாளைக்குச் செய்யவேண்டும் போரினை மிக விரும்பி அதனால் படுக்கையில் உறக்கங் கொள்ளாதவனாக முன் நாட்களில் நடந்த போரில் புண்பட்ட யானைகளை நினைத்தும், பகைவருடைய யானைகளை வெட்டி வீழ்த்தி இறந்து போன வீரர்களை நினைத்தும், அம்பு அழுத்திய வருத்தத்தால் தீனி கொள்ளாமல் காதைச் சாய்த்துக் கொண்டு கலங்குங் குதிரைகளை நினைத்தும் கொண்டு, மனிதநேயத்தோடு இருந்ததை,

**"எடுத்துஎறி எ..கம் பாய்தலின் புண் கூர்ந்து**
**பிடிக் கணம் மறந்த வேழம் வேழத்துப்**
**பாம்பு பதைப்பன்ன பருக்கை துமியத்**
**தேம் பாய் கண்ணிநல் வலம் திருத்திச்**
**சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல் துமியு**
**வைந் நுனைப் பகழி மூழ்கலின் செவிசாய்த்து**
**உண்ணாது உயங்கும் மாசிந்தித்தும்**
**ஒரு கை பள்ளி ஒற்றி ஒரு கை**
**முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைத்து"**
**(முல்லை.பா.67--75)**

என்னும் பாடலடிகளால் மனிதநேய உணர்வினை அறியமுடிகிறது.

**முடிவுரை:**

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள முல்லைப்பாட்டில் மனிதநேய சிந்தனைகள் வெளிப்படுகின்றன. மனிதன் சில காரணங்களுக்குக் காரணம் கூறும்போது சில உணர்வுகள் அவர்களை ஒருநிலைப்படுத்துகின்றன. அந்த உணர்வுத் தன்மையே நம்பிக்கைகளாக வெளிப்படுகின்றன எனலாம். மனிதனின் தன்னல உறவும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. முல்லைப்பாட்டில் நம்பிக்கைகளாகத் தெய்வத்தை ஊர்ப்புறத்தே சென்று வழிப்பட்டால் தலைவியைப் பிரிந்தால் தலைவன் வருவான் நம்பிகையோடு கூடிய மனிதநேயமும், பெண்ணானவள் தன்னைப் போன்ற இன்னொரு பெண்ணுக்கு மனிதநேயத்தோடு உதவி செய்ததையும் அறியமுடிகிறது.

**துணைநின்ற நூற்கள்:**


1.மறைமலையடிகள், முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பூம்புகார் பதிப்பகம், சென்னை- 08.

2.மாணிக்கனார்.அ, பத்துப்பாட்டு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17

3.சுப்பிரமணியன்.ச.வே. பத்துப்பாட்டு மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம். சென்னை.108

# அற இலக்கியங்களில் கல்வி

*து.விஜயராணி, *முனைவர் பட்ட ஆய்வாளர், பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*

மனிதனை மனிதனாக வாழவைப்பது கல்வி. அது மனிதனின் வாழ்க்கையை தீர்மானிப்பது, கற்பது, படித்தல், கற்றல், அறிவாற்றல் ஆகிய மூன்றினையும் கல்வி என்பதன் படிநிலையாகக் கொள்ளலாம். இம்மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது எனினும், அவை முறையாக இல்லாதபோது அதனால் எந்த வகையான பயனும் இல்லை. ஆகவே கல்வியை முழுமையாக உணர்ந்து செயல்பட வேண்டும். அப்போதுதான் அதன்பயனை முழுமையாக நாம் அடையமுடியும்.

**தொல்காப்பியர் கூறும் கல்வி**

இலக்கண நூல்களுள் மிகவும் பழமையானதாக கருதப்படும் நூல் தொல்காப்பியம். மற்ற மொழிகள் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் கூறுகையில் வாழ்வியலுக்கும் சேர்த்து இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர். அவர் கல்வியைப் பற்றிக்கூறும் பொழுது ஒருவன்தன்னை உயர்த்திகொள்ள அடிப்படையாக அமைவது கல்வி ஒன்றே ஆகும். இதனை,

**“ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன**
**உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான”**

என்று எடுத்தியம்புகின்றார்.

ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் உயர்கல்வியைக் கற்றனர். என்பதனை இதன் மூலம் அறியலாம் ஒருவன் சமூதாயத்தில் உயர்ந்து விளங்க வேண்டுமெனில் அவன் கல்வி அறிவோடு பிற பண்புகளையும் பெற்றிருக்க வேண்டும் என்பதனை,

**“கல்வி தறுக்கண் இசைமை கொடையெனச்**
**சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே.”**

என்று எடுத்தியம்புகின்றார்.

**திருக்குறளில் கல்வி**

கல்வி என்பது மனிதனுக்கு அறிவைக்காட்டிலும் அனுபவத்தினையும், உலக அறிவினையும் பெற்றுத்தருவது ஆகும். கல்வியை குற்றமற கற்க வேண்டும். கற்றறிந்த பிறகு அதன்வழி நடக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். இதனை,

**“கற்க கசடற கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்கு தக”**

என்ற குறள் வழி அறியமுடிகிறது.

**“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு”**

மணற் கேணியானது தோண்டத்தோண்ட நீரைப்பெருக்குவது போல் கல்வி கற்கக் கற்க அறிவானது பெருகும் என்று கூறுகிறார்.

மேலும் ஒருவன் சிறந்த மனிதனாக விளங்க வேண்டுமெனில் அவன் ஒழுக்கத்தில் சிறந்தவனாக விளங்க வேண்டும் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானாதாக கருதவேண்டுமென்பதனையும்

**“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்”**

என்ற குறள் மூலம் உணரமுடிகிறது.

இக்கருத்து முதுமொழிக்காஞ்சியிலும் இடம் பெற்றுள்ளது.

**“ஆர்கலி உலகத்து**
**மக்கட்கு எல்லாமல்**
**ஓதலின் சிறந்தன்**
**ஒழுக்கமுடைமை”**

ஆரவாரமுடைய உலகத்தில் மக்கள் வாழ்க்கையில் ஒழுக்கத்தினை பேணி வாழ்வது சிறந்த வாழ்க்கையாகும். இது கல்வி கற்பதனை விட சிறந்தது என வலியுறுத்துகின்றது.

அவ்வாறு கற்ற கல்வியை தன் வாழ்நாள் முழுவதும் மறக்காமல் வாழ்தல் வேண்டும் அவ்வாறு வாழும்போது அவன் பல நற்காரியங்களை செய்ய இயலும். இதனை,

**“மேதையின் சிறந்தன்று**
**கற்றது மறவாமை”**

என்று முதுமொழிக்காஞ்சி விளக்குகின்றது.

இதனையே வள்ளுவரும்,

**“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து”**

ஒருவனுக்கு ஒருபிறப்பில் அவன் கற்ற கல்வியானது அவனுடைய ஏழு பிறப்பிலும் அவனுடன் வந்து அவனைக் காப்பாற்றும் என்பதின் மூலம் அறியமுடிகின்றது.

### கல்வியின் மேன்மை

கல்வி என்பது மனிதனின் ஆளுமையையும், வளர்ச்சியையும் தீர்மானிப்பதாகும். கல்வியின் ஆழத்தை அறிந்த சான்றோர்கள் அதன் பெருமையினை அறிந்து கல்வியினால் ஒரு சமுதாயத்தை உயர்த்தமுடியும் என்பதை அறிந்து கல்வியின் சிறப்பினை எடுத்து இயம்பியுள்ளனர். புறநானூற்று பாடல் ஒன்றில்,

**“மரைபிரித்த உண்ட நெல்லிவெலிப்**
**பரல் உடை முற்றில் அம் குடிச்சீறூர்**
**எல்அடிப்படுத்த கல்லாக் காட்சி**
**வில் உழுது உண்மார் நாப்பண், ஒல்லென**
**இழிப்பிறப் பாளன் கருங்கை சிவக்க”**

என்று கூறப்பட்டுள்ளது.

இப்பாடல்வழியாக கல்வில்லாதவரின் நிலையை அறியலாம். கல்வியின் சிறப்பை உணர்ந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் கல்விகற்பதின் அவசியத்தையும் கல்வி கற்பதன் மூலம் ஏற்படும் உயர்வினையும் கூறும் விதமாக

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!**
**பிறப்பு ஓர்அன்ன உடன் வயிற் றுள்ளும்**
**சிறப்பின் பாலால்தாயும் மனம் திரியும்**
**ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்**
**மூத்தோன்வருக என்னாது அவருள்**
**அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்,**
**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்**
**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே”**

என்னும் பாடல் அமைந்துள்ளது. இதன் வாயிலாக பெற்றெடுத்த தாய் தன்னுடைய பிள்ளைகளை ஒன்றாக பார்க்க கூடியவள் ஆவாள். அத்தகைய தன்மை கொண்டதாய்கூட கல்வியின் தன்மையால் மாறுபாடு அடையக்கூடும் என கல்வியின் சிறப்பு பற்றி எடுத்தாளப்பட்டள்ளது.

ஒரே குடியில் பிறந்த அண்ணன் தம்பிகளாக இருந்தபோதிலும் மூத்தவனை அழைத்து முடிவெடுப்பது என்பது தமிழர்களின் மரபாக பின்பற்றப்பட்டது. இன்ப துன்பங்களையும் இலாப நட்டங்களையும் குடும்பப் பொறுப்புகளையும் உணரும் பக்குவம் மூத்தவனுக்கு அதிகமாக உண்டு. ஆனாலும் இளையவன் கல்வி

அறிவுயுடையவனாக இருந்தால் அவனிடமும் ஆலோசனைக்கேட்டு செயல்படுவர் என்பதனை மேற்கண்ட பாடல் வழியாக அறியமுடிகின்றது.

**பழமொழியில் கல்வி**

முன்றுறை அரையனார் கல்வியின் சிறப்பைப் பற்றி எடுத்துரைக்கும் போது கற்கவேண்டிய நூல்களை நிறைவாகக் கற்றவர் அறிவுடையவர் ஆவார். கற்றவர்களின் புகழ் நான்கு திசைகளிலும் பரவியிருக்கும். அவர்களின் புகழ் பரவாத நாடுகள் இல்லை என கூறியுள்ளார். அவர்கள் செல்லாத நாடு இல்லை. அவர்களுக்கு எல்லா நாடுகளும் தன்னுடைய சொந்த நாடுகளே ஆகும் வேற்றுநாடு ஆகாது. அதனால் அவர்களுக்கு செல்லும் இடமெல்லாம் உணவுக்காக எடுத்துச்செல்லும் கட்டுச்சோறு வேண்டுவதில்லை என்று கல்வியின் பெருமையினை கூறியுள்ளார்.

**"ஆற்றவும் கற்றார் அறிவுடையார்**
**அஃதுடையார்**
**நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு**
**வேற்றுநாடு ஆகா தமவேயாம் ஆயினால்**
**ஆற்றுணா வேண்டுவது இல்."**

என்ற இப்பாடல் அதற்கு சான்று பகர்வதாய் உள்ளது.

இதனை வள்ளுவரும்,

**"யாதானும் நாடாமல் ஊராமால் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாதவாறு"**

என்ற குறளின் மூலம் விளக்கியுள்ளார்.

**ஔவையார் கூறும் கல்வி**

உலகத்தில் கற்க வேண்டியது நிறைய உள்ளது ஒவ்வொரு மனிதனும்தான் கற்றவை மிகபெரிது என்று நினைத்து ஆணவத்துடன் நடந்துகொள்ளுகின்றனர். அவற்றை மற்றவர்களுக்கு உணர்த்துவதற்காக,

**"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது**
**உலகளவென்று**
**உற்றகலைமடந்தை ஓதுகின்றாள்-மெத்த**
**வெறுப்பந் தவம்கள் வேண்டா புலவீர்**
**எறும்புந்தன் கையால் எண் சாண்"**

எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும் தன்னுடைய கையால் அளந்தால் எட்டுசாண்தான் அதுபோல்தான் கற்றதும் கை மண்ணளவு என்ற ஔவையார் கூற்று சிந்திக்கத்தக்கது ஆகும்.

**நாலடியார் காட்டும் கல்வி**

**"ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி "**

என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வாக்கின் அடிப்படையில் நாலடியார் அழகு என்பது வெளிப்புறத் தோற்றத்தினால் ஒருவருக்குத் தோன்றுவது கிடையாது கல்வியினால் ஒருவருக்குத் தோன்றுமழகு தான் சிறந்தது என்கிறார். இதனை,

**"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சளழகும் அழகல்ல -நெஞ்சத்து**
**நல்லனயாம் என்னும் நடுவுநிலைமையால்**
**கல்வி அழகே அழகு"**

என்ற நாலடியார் பாடல் வரிகள் மூலம் உணரமுடிகிறது.

அற இலக்கியங்கள் ஒவ்வொன்றும் நீதிக்கருத்துகளை வலியுறுத்துவதோடு வாழ்க்கையை வழி நடத்திச்செல்வதற்கும் இன்றியமையாததாக உள்ளது என்பதனை புலவர்களின் பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

கல்வியின் சிறப்பினை அறஇலக்கியங்கள் மட்டும் இல்லாமல் புறநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் உட்பட அனைத்து இலக்கியங்களும் கல்வியின் சிறப்பினை எடுத்து இயம்புவது கல்வியின் பெருமையினை உலகம் அறியும் வகை உள்ளது என்பது போற்றுதற்குரியது.

# நச்சினார்க்கினியரின் குறிக்கத்தகுந்த சில இலக்கணக்கூறுகள்: பத்துபாட்டினை முன்னெடுத்து

***முனைவர் கி. சங்கர நாராயணன்,** *உதவிப் பேராசிரியர், தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகைத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம், சென்னை - 600005.*

பத்துப்பாட்டிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியரின் உரையிலுள்ள குறிக்கத்தகுந்த சில இலக்கணக் கூறுகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆகுபெயர்**

தொல்காப்பியம் (தொல்.114-117), ஆகுபெயர் என்பதற்கான இலக்கணத்தைச் சுட்டாமல், அதன் வகைகளைச் சுட்டுகிறது. மேலும், ஆகுபெயர் தற்கிழமையாகவும் பிறிதின் கிழமையாகவும் வரப்பெறும் என்கிறது. 1. முதலாகுபெயர் 2. சினையாகுபெயர் 3. இடவாகுபெயர் 4. பண்பாகுபெயர் 5. காரணவாகுபெயர் 6. இருபெயரொட்டாகு பெயர் 7. கருத்தாவாகு பெயர் என்ற ஏழினைச் சுட்டுகிறார்.

**"கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை" (திரு.7)**

கார் முகக்கப்படுதலின் கடல் கார்கோளென்று பெயர் பெற்றது ஆகுபெயர்

**"தொடையமை கேள்வி யிடவயிற்" (பெரும்.16)**

கேள்வி என்பது ஆகுபெயர். பொன் கம்பியாய் ஒழுகினலொத்த முறுக்கடங்கின நரம்பின் கட்டமைந்த யாழை.

**"முகை வா யவிழ்ந்த தகைகூ ழாகத்து" (திரு.139)**

கட்டுதலந் நகையென்றாள், மாலையை, ஆகுபெயர்

**"முருகுறழப் பகைத்தலைச் சென்" (மதுரை.181)**

முருகு - தெய்வத் தன்மையானது ஆகுபெயராய் உள்ளது.

முருகன் பகைவாமேற் செல்லுமாறு போலத் தடையறப் பகைவாடத்தே சென்று.

**"பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல" (முல்லை.85)**

பொற்பாவை ஏந்தி நின்ற தகழியிலே பரியவிளக்கு. விளக்கு என்பது இங்கு ஆகுபெயர்

**"தொன்றொழுகு மரபினும் மருப்பிகுத்துத் துணைமின்" (மலை.391)**

மருப்பு என்பது ஆகுபெயர்

**மூவகை இடங்கள்**

தொல்காப்பியம் யான், யாம், நாம் என்ற தன்மைப் பெயர்களைக் குறிப்பிடுகின்றது (தொல்.162).

தாம் என்னும் விரவுப்பெயர் இருதிணைச் சார்ந்த படர்க்கை பன்மைக்கு உரியது (தொல்.184) எனவும், தான் என்னும் விரவுப்பெயர் இருதிணை சார்ந்த படர்க்கை ஒருமைக்கு உரியது (தொல்.185) எனவும், எல்லாம் என்பது இருதிணைக் கண்ணும் பன்மையைக் குறித்து வரும் (தொல்.186) எனவும், நீ என்னும் விரவுபெயர் முன்னிலை ஒருமைக்கு உரியது (தொல்.189) எனவும், நீயிர் என்னும் விரவுப்பெயர் முன்னிலைப் பன்மைக்கு உரியது (தொல்.190) எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

**"பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி"**
**(குறிஞ்சி.60)**

இதில் பிழிவனம் என்பது தன்மைப்பன்மை

**"மான விறல்வேள் வயிரிய மெனினே"**
**(மலை.164)**

வயிரியம் என்பது தன்மைப்பன்மை

**"கொடியோள் கணவாற் படர்ந்திகு மெனினே"**
**(மலை.424)**

படர்ந்திகும் என்பது தன்மைப்பன்மை

**முன்னிலை அசைச்சொல்**

தொல்காப்பியம் மியா, இக, மோ, மதி, இகும், சின் என்ற ஆறினையும் முன்னிலை அசைச்சொற்களாகக் குறிப்பிடுகின்றது.

**"போற்றிக் கேண்மதி புகழ்மேம் படுக"**
**(பொருந. 60)**

**"செப்ப லான்றிசிற் சினவா" (குறிஞ்சி.34)**

மதி, சின் என்ற சொற்கள் ஓரசைச்சொற்களாகும்.

**உவமை**

அணிகளுக்கெல்லாம் தாய் அணியாக அமைவது உவமையாகும். பண்பு, தொழில், பயன் இவற்றோடு ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் இயைந்து ஒப்பமை தோன்றும்படியாகக் கூறவது உவமையாகும் என்கிறது தண்டி.

**"உண்டென உணரா உயவு நடுவின்**
**வண்டிருப் பன்ன பல்காழ் அல்குல்"**
**(பொருந.38-39)**

நிரல்படக்கோத்த மேகலை மணிகட்கு நிரல்பட இருந்த வண்டின் ஒழுங்கு உவமை.

**"வருமுலை அன்ன வண்முகை உடைந்து**
**திருமுகம் அவிழ்ந்த தெய்வத்தாமரை"**
**(சிறுபா.72-73)**

முலை, தாமரை முகைக்கும், திருமுகம் தாமரை மலர்க்கும் உவமையான.

**"காந்தளஞ் சிலம்பிற களிறுபடிந் தாங்குப்**
**பாம்பணைப் பள்ளி யமாந்தோ னாங்கண்"**
**(பெரும்.372-373)**

ஆயிரம் தலைகளையுடைய அரவப்பாயற்கு நீண்ட பூங்கொத்துக்களையுடைய காந்தளடர்ந்த பக்க மலை உவமை. திருமாலுக்குக் களிறு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**"அயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை"**
**(மலை.373)**

கதிரவன் வெப்பம் ஏறிய கூர்ங்கற்களுக்கு உவமை.

**"சாறயர் மூதூர் சென்றுதொக காங்கு"**
**(பட்டி.215)**

சாறயர் மூதூர் - பட்டினத்திற்கு உவமை.

**"புகரிணர் வேங்கை வீ கண் டன்ன" (பெரும்.194)**

வேங்கைப்பூ, அவரைப் பருப்பினால் ஆகிய சோற்றிக்கு உவமையானது.

**"மழைவிளை யாடுங் கழைவள நடுக்கத்து**
**அணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்**
**கணஞ்சால் வேழங் கதழ்வுற்றா அங்கு"**
**(பெரும்.256-258)**

மலைச்சாரலிலே யாளியாற் தாக்குண்ட போது யானைக்கூட்டம் கலங்கிக் கதறும் ஆரவாரம் எண்ணிறந்த ஆலைகளும் ஒருங்கே ஆடுதலிற் எழுந்த ஆரவாரத்திற்கு உவமையானது.

**தொழிலுவமை**

**"அரவுறழ் அஞ்சிலை கொளீஇ நோய்மிக்கு"**
**(குறிஞ்சி.158)**

அரவு ஈண்டு வடிவினானும் கொலைத்தொழிலானும் வில்லுக்கு உவமையானதால் இது தொழில் உவமையானது.

**உவம உருபு**

**"செறியிலைக் காயா அஞ்சன மலர" (முல்லை.93)**

அஞ்சனம்-மை. மைப்போலப் பூப்பஎன்பதுஉவமவுருபு.

**“பெயலுறழக் கணைசிதறி” (மதுரை.183)**

உறழ என்பது உவமவுருபு

**“முழுமுதற் கமுகின் மணியுறழ் எருத்தில்” (நெடு.13)**

இதில் உறழ் என்ற உவமவுருபு பயின்றுவருகின்றது.

**“துகளறத் துணிந்த மணிமருள் தெண்ணீர்” (மலை.250)**

மருள என்ற உவமவுருபு இதில் வந்துள்ளது.

**அன்மொழித் தொகை**

**“கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கு” (பட்டி.221)**

கொடுவரி - வளைந்த கோடு- அன்மொழித் தொகையாய் புலியை உணர்த்தும். புலியின் உடவினமைந்த கோடென்க.

**உம்மைத் தொகை**

**“வளாபுஞ்சால்புஞ் செம்மை சான்றோர்” (மதுரை.764)**

செம்மையும் எனுமிடத்து உம்மை தொக்கது.

**பண்புத் தொகை**

**“குமிழி சுழலும் குண்டுகய முடுக்கர்” (மலை.4)**

கயம் என்பது பண்புத்தொகை

**“பொதிமூடைப்போரேறி” (பட்டி.137)**

பொதிமூடை என்பது பண்புத்தொகை.

**வேற்றுமைத் தொகை**

**“நறுவீ உறைக்கு நாக நெடுவழி” (சிறு.88)**

நாகநெடுவழி என்பது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் தொக்க தொகை.

“செல்புனல் உழந்த சேய்வரற் கான்யாற்று” (சிறு.3)

வரல்கான்யாறு என்பது இரண்டாவதன் உருபு தொக்கி நிற்கின்றது

**வினைத் தொகை**

**“வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாள்” (பெரும்.120)**

இதில் வடிமணி என்பது வினைத்தொகை ஆனது.

**“புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்” (மலை.299)**

வளைப்பூசல் என்பது வினைத்தொகையானது.

**உரிச்சொல்**

**“வாம்பரிய கடுந்திண்டேர்” (மதுரை.51)**

கடுந்திண்டேர் என்பதில் வரும் கடி என்பது உரிச்சொல். இது விரைவுப் பொருளை உணர்த்துகிறது.

**“பிறபிறவு நனிவிரைஇ” (பட்டி.181)**

நனி என்னும் உரிச்சொல் மிகுதிப் பொருளை உணர்த்தியது.

**எச்சங்கள்**

தொல்காப்பியம் பெயரெச்சத்திற்கான இலக்கணத்தைக் குறிப்பிடாவிடினும், செய்யும், செய்த என்னும் இரு பெயரெச்ச வாய்ப்பாடுகளைக் குறிப்பிடுகின்றார். இவ்வாய்ப்பாடுகள் நிலன், பொருள், காலம், கருவி, வினைமுதற்கிளவி, வினை என்ற ஆறனுள் ஒன்றினைக் கொண்டு முடியும் என்கிறார் (தொல்.234). செய்யும் வாய்ப்பாட்டுச் சொற்கள் செய்ம் என்று வழங்குவதையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (தொல்.240). இதற்குச் சான்றாகத், தொல்காப்பியர் இடையியலில் உம் உந்தாகும் இடனுமார் உண்டே என்ற விதியினைக் கூறுகின்றார் (தொல்.294).

**“பைத்த பாம்பின் துத்தி யேய்ப்ப”(பொருந.69)**

பைத்த என்பது பெயரெச்சம் (படம் விரித்து).

தொல்காப்பியர் (தொல்.228), செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என்ற ஒன்பதினை வினையெச்ச வாய்பாடுகளாகக் கூறுகிறார். மேலும், பின், முன், கால், கடை, வழி, இடத்து போன்ற சொற்களும் வினையெச்சங்களாக எடுத்துரைக்கின்றன (தொல்.229-233).

**“இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி” (பெரும்.149)**

ஞெகிழி என்பது வினையெச்சம்

**“புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளி” (மலை.404)**

புலியுற – புலி வருதலான் எனச்செய என்னும் எச்சம்

**“நோயின் றியன்ற யாக்கையா மாவின்” (திரு.143)**

நோயின்று என்பதன்கண் இன்றி என்னும் குறிப்பு வினையெச்சம் உகரமாய் இன்று என்றாயிற்று.

பத்துப்பாட்டுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் அவர்களின் உரைகளின் வழி வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை, உவமஉருபு, முன்னிலை அசைச்சொல், பெயரெச்சம், வினையெச்சம், ஆகுபெயர், உரிச்சொல், மூவகை இடங்கள போன்ற குறிக்கத்தகுந்த சில இலக்கணக் கூறுகளையும் அவற்றின் பொருட்புலப்பாட்டு முறையினையும் காணமுடிகின்றது. நச்சினார்க்கினியர் அவர்களின் உரைத்திறன்களுக்கு இந்த இலக்கணக் கூறுகள் வலுசேர்க்கும் காரணியாக அமைவதை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

**துணைநின்ற நூற்கள்**

1. அரவிந்தன்.மு.வை., 2008, உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

2. சுப்பிரமணியன்.ச.வே.சு, 2003, தமிழ் இலக்கியவரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

3. சிற்பி பாலசுப்பிரமணியன், நீல பத்மநாபன், 2013, புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதெமி, புதுதில்லி.

4. நச்சினார்க்கினியர் (உ.ஆ.), பத்துப்பாட்டு மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை.

# பத்துப்பாட்டில் இயற்கை வளங்கள்

*முனைவர் சி.யோகலாவண்யா, *தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர்.*

**முன்னுரை**

இயற்க்கை என்பது இயல்பான தன்மை உடையது என்றும் நிலையானது. மனித சக்தியாலன்று உலகில் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தையுமே இயற்கை என்பர். இயற்கை என்று சொல்லக்கூடிய ஐம்பூதங்களும் ஒவ்வொரு இயல்பு உண்டு. நீர்க்குத் தன்மையும் தீயிற்கு வெம்மையும் காற்றுக்கு வலிமையும் நிலத்திற்கு அகலமும் வானத்திற்கு எல்லையின்மையும் இயல்பாகும். இவ்வைந்தும் கலந்தது தான் உலகம் என்று தொல்காப்பியர் கூறுவது எண்ணத்தக்கது.

**“நிலம்நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்”**

இத்தகைய இயற்கை தமது இயல்பான தன்மையினின்றும் என்றும் மாறாததாகும்.

**இயற்கை மிகப்பெரிய சக்தி**

எவ்வளவு தான் அறிவியல் தொழில் நுட்பம் தெரிந்தனவாக மனிதன் இருந்தாலும் இயற்கையை ஒரு போதும் வெல்லமுடியாது. இயற்கை என்பது மிகப்பெரியசக்தி அதனோடு போராடினால் வெல்வது இயற்கை என்பது தான் உண்மை. இரவி நுழைய முடியாத இடத்தில் கவிநுழைவான் என்பார்கள். கவிஞன் நுழைந்தாலும் இயற்கையின் அழகில் மயங்கி தமது மனத்திரையில் ஊடுருவ வைத்துப் பின் அதன் அழகைப் பாடலாகப் படைக்கின்றான்.

**திருமுருகாற்றுப்படையில் இயற்கை**

நக்கீரர் திருமுருகாற்றுப்படையின் தொடக்கத்தில் இயற்க்கையின் அழகை நன்கு புணைந்துள்ளார். காலையில் கடலில் தோன்றும் கதிரவனின் தோற்றமும் முருகப் பெருமானோடு தொடர்புடையதாக அமைத்துள்ளார். ஞாயிறு தோன்றும் காட்சியை முருகனோடு ஒப்புமைபடுத்தி

**“உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு**
**ஓவற இமைக்கும் சேண்விளங்குவிரொளி”**

என்று காட்டியுள்ளார். இது போன்றே மாலையில் மறையும் கதிரவன் காட்சியும் முருகப்பெருமானையே நினைவூட்டுகின்றன.

அது மட்டுமன்று இருஞ்சேற்று அகல்வயல் மலர்ந்த செந்தாமரை மலர்கள் மாலை நேரம் வர தாமரை மலர்கள் குவிகின்றன. அம்மலர்கள் தேனுண்ட வண்டுகள் மலர்களிலேயே உறங்கிவிடுகின்றன. வைகறை புலர்கின்றது தாமரையின் இதழ்கள் விரிகின்றன.

துயில் நீங்கிய வண்டுகள் அம்மலர்களினின்றும் புறப்பட்டு நெய்தல் மலரை நாடுகின்றன. நெய்தல் மலரின் தேன் மணம் வண்டுகளை ஈர்க்க வைகறைப்பொழுதில் அவ்வண்டுகள் நெய்தல் மலரில் விருந்து உண்கின்றன. பொழுது விடிந்தபின் கண்போல் மலர்ந்த காமரு சினை மலர்களில் தேனை நாடி அவ்வண்டுகளின் கூட்டம் ஒலி எழுப்புகின்றது என்று நக்கீரர் புனைந்துரைப்பதை,

**“இருஞ்சேற்றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த**

**முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைப்**

**குன்றமர்ந் துறைதலும் உரியன்”**

என்ற பாடலடிகளால் அறியலாம்.

**மலைபடுகடாமில் இயற்கை**

இயற்க்கையின் அழகை பெருங்கௌசிகனார் மலைபடுகடாமில் பரந்து செல்லும் பகுதியில் மலையில் கேட்கும் பல்வேறு ஒலிகளைப்பற்றி விரிவாக எடுத்துரைகின்றார். அவர் தம்முடைய ஆழ்ந்தகன்ற கற்பனையால் மலைக்கு யானையை உவமித்துப் பாடுங்கால் மலையோசைகள் யாவும் யானையிடத்து மலைபோல தோன்றுவன ஆகி சொல்லோவியத்துக்கு எழிலூட்டுகின்றன. எழில் மிகுந்த இச்சொல்லோவியத்தின் சிறப்பால் பாடலுக்கே மலைபடுகடாம் எனப்பெயராயிற்று. இங்கு ஆகுபெயராய் பிறந்த ஓசையை உணர்த்திற்று.

நச்சினார்க்கினியார் மலைக்கு யானையை உவமித்து அதன்கட் பிறந்த ஓசையைக் காடமெனச் சிறப்பித்தவதனால் இப்பாட்டிற்கு மலைபடுகடாம் என்று பெயர் கூறினர் என்பர் நச்சினார்க்கினியர்.

பெரிய பலாப்பழமொன்றை ஆண்குரங்கு ஒன்று கைகளால் துளாவிகின்றது அப்போது அந்தப் பழத்திலேயிருந்து சொட்டுகின்ற தேன் மலை முழுவதும் மணம் பரப்பி அருவியிலே விழிகின்றது தேவமகளிர் அந்த அருவியிலே நீராடிகின்றார்கள். பாணர்களின் வாத்தியங்களிலிருந்து வரும் இன்னிசைபோலக் கேட்கின்ற அவர்கள் நீராடும் ஓசை.

**நெடுநல்வாடையில் வாடைக்காற்று**

நெடுநல்வாடையில் கூதிர்பருவத்தினைக் குறிப்பிடுவதால் அப்பாடல் புறப்பொருளில் கூதிர்ப்பாசறை துறை அமைந்த வாகைத்திணை என்கிறார் நச்சினார்கினியர். முல்லைத்திணைக்குரிய காரும் மாலையுமாகிய கால முதற்பொருள் நெடுநல்வாடையில்,

**“வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**

**பொயா வானம் புதுப்பெயல் பொழிந்தென”**

என்று தொடங்குகிறது.

**மழைவளம்**

மனிதச் சமூகத்தின் இயற்கைச்சார்புத் தன்மையில் மழை இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. திருக்குறளில் மழை இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. கடவுள் வாழ்வைத் தொடர்ந்த முதல் அதிகாரமாக இது அமைந்திருப்பது இதன் இன்றியமையாமையை உணர முடிகிறது. இவ்வதிகாரத்தில் அமைந்துள்ள பத்துக் குறள்களும் மழை இல்லாமல் எவ்வுயிர்களும் வாழ முடியாது என்பதை அறிய முடிகிறது.

**“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**

**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று”**

எல்லா உயிர்களுக்கும் மழையே உணவு என்பதை இக்குறள் வலியுறுத்துக்கின்றது.

ஒருநாடு சிறக்க வேண்டுமானால் இயற்கை வளம் சிறந்து விளங்கவேண்டும். இயற்கை வளம் சிறக்க மழை முக அவசியம். மழைவளத்தை நெடுநல்வாடையில் நக்கீரர் மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். முதலடியே குளிரின் மிகையைக் கூற வேண்டியிருப்பதால் வையகம் பனிப்ப என்று தொடங்கி ஆநிரை மேய்க்கும் கோவலர் தமது ஆநிரையைக் காக்கும் பொருட்டு வேறிடத்தை நோக்கிச் செல்லும் அளவிற்கு

மலையை வளமாகச் சூழ்ந்து எழுந்த மேகம் பெருமழையைப் பெய்கிறது.

கூதிர்கால மழைத்துளியும் குளிர்வாடையும் இயற்கையை எழிலுறச் செய்கின்றன. முசுண்டைக் கொடியின் வெண்ணிறப் பூக்கள் மலர்ந்துள்ளதையும் மஞ்சள் நிறப் பீர்க்க அவரைப் பொன்போல் பூத்திருப்பதாகத் காட்டுகிறார் நக்கீரர்.

**முடிவுரை**

சங்ககாலத் தமிழர்கள் தங்கள் வாழ்வியலை இயற்கைச் சூழலுடன் இணைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர் என்பதும் இயற்கையைப் போற்றி வாழ்ந்து வந்த காரணத்தால் இயற்க்கைச் சீற்றம் முதலான நிகழ்வுகள் நிகழவில்லை என்பதையும் அறிய முடிகிறது. சங்ககாலத் தமிழர்களது வாழ்க்கை முறைமை சீரழிந்து வரும் இன்றைய சமுதாய மக்கள் யாவரும் பின்பற்றி வாழ்வதற்கான முன்னுதாரணமாக விளங்குகிறது என்பது உறுதி.

# அகநானூற்றுப் பாடல்களில் கற்பு நிலை

*முனைவர் பொ.செந்தில்குமார், *தமிழ் உதவிப்பேராசிரியர், பெரியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் உறுப்புக் கல்லூரி, பாப்பிரெட்டிபட்டி - 636905, தருமபுரி மாவட்டம், அலைபேசி : 9865414549.*

தாமே எதிர்ப்பட்டு பழகிய தலைமக்கள் இருமுதுகுரவரும் உவப்ப ஊரறியத் திருமணம் செய்து கொண்டு வாழ்வதைக் கற்பு வாழ்வெனக் குறிப்பர்.

**"கற்பெனப் படுவது காரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"**

**( தொல் பொருள் இளம் 140)**

என்பர் தொல்காப்பியர்.[1]

தமிழ்ச் சமுதாயத்தின் தொடர் வரலாற்றில் பெண் நான்கு நிலைகளில் ஒரு நிலை சார்ந்தவளாக விளங்குகிறாள். அவை 1. கன்னி , 2. குடும்பத் தலைவி , 3. விதவை , 4. பரத்தை என்பன. இன்றும் தொடர்ந்து வரும் இந்த நான்கு பிரிவினரும் சங்க இலக்கியத்திலும் காட்டப்படுகின்றனர். பெண்ணை நான்கு நிலைகளிலும் வேறு வேறாகப் பிரித்துப் பார்க்க வைப்பது கற்பு என்னும் கோட்பாடு தான். தந்தை வழிச் சமுதாயம் கற்புக் கோட்பாட்டில் வலுவடைகிறது. பரத்தமை, கைம்மை இரண்டும் கற்பின் அடிப்படையில் ஆதிக்கம் பெறுகிறது. இந்த ஆதிக்கத்திற்கேற்ப பெண்ணைச் சமூகம் அடையாளப்படுத்துகிறது.

**கற்புப் பற்றி சமூகவியலாளர் கருத்துக்கள்**

ஒருதார மணக் குடும்பத்தில் குழந்தைகள் உரிய காலத்தில் தனது தகப்பனாரின் இயற்கையான வாரிசுகள் என்ற முறையில் அவருடைய சொத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காகத் தந்தை முறை அவசியமாயிற்று. பெண் பண்டைக் காலப் பாலியல் முறையை நினைவுப்படுத்திக் கொண்டு அதை மீண்டும் உயிர்ப்பிக்க விரும்பினால் அவர் முன்னெப்போதையும் விடக் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறாள். தன்னைப் பொறுத்தவரை கற்புடனும் தாம்பத்திய ஒழுக்கத்துடனும் இருக்க வேண்டும் ( எங்கெல்ஸ் , குடும்பம் தனிச் சொத்து , அரசு ஆகியவற்றின் தோற்றம் பக். 101 – 103 மொ.பெ.நா.தர்மராசன்)

இணைக் குடும்பத்தில் ஒருவன் ஒருத்தியுடன் வாழ்கிறான். இதில் பல தாரமணமும் , சோரம் போவதும் ஆணின் உரிமை என்னும் வகையில் வாழ்க்கை நடைபெறுகிறது. அதே சமயத்தில் இணைந்து வாழும் வாழ்க்கை காலத்தில் பெண் கற்புடன் இருக்க வேண்டும் என்பது மிகவும் கண்டிப்பாக வற்புறுத்தப்படுகின்றது ( மேலது பக் 77 – 78 ) என்றும் , எங்கெல்ஸ் கருத்துரைக்கின்றார்.

தந்தை வழிக்குடும்ப முறை நிலைத்து நிற்கக் காக்கப்பட வேண்டியது கற்பு. அவ்வாறு காக்கப்படா விட்டால் உறுதியாக இவர்தான் தந்தையென்று சொல்ல இயலாமல் போய்விடும் (பெர்ட்ரண்டு ரஸ்ஸஸ்,

திருமண முறைகள் பக் 6 - 7) என்றும், மனைவியின் கற்பைப் பற்றிய நம்பிக்கைகளுக்கும் தந்தை சேய் உறவுக்கும் பிணைப்பு இருப்பதால் அது அறிவாற்றலுக்குரிய செய்தியே தவிர இயல்புணர்ச்சியில் ஏற்படுவதாகாது (மேலது அ.ப) என்றும் குறிப்பிடுவார் ரஸ்ஸஸ்.

பொதுக் கணவர்களைக் கொண்ட பழைய முறையிலிருந்து விடுபட்டுத் தன்னை ஒருவருக்கு மட்டுமே ஒப்படைக்கின்ற உரிமையைப் பெறுவதற்காகச் செய்யும் தவமே கற்புரிமை (எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்.பக்.84) என்று உரைப்பதாக எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்.

தந்தைவழிக் குடும்பம் தோன்றிய காலமே கற்புக் கோட்பாடு எழுந்த காலமாகும். சொத்து, பரம்பரை வழி மகனுக்குச் சேர வேண்டும் என்ற காரணத்தால் கற்பு பெண்ணுக்கு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. (Narendra Nath Battacharya , Ancient Indian Rituals and their Contents, ப.25. ச.சிதம்பரம் பிள்ளை, மு.நூ அடிக்குறிப்பு 25). என்பார் நரேந்திநாத் பட்டாச்சாரியா.

பொருளாதார நிலையில் பெண் ஆணைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையில் உருவானது கற்பு என்ற கருத்துடையவர் சட்டோபாத்யாயா.

ஆனிரைகள் வழியே தனியுடைமை தோன்றவே அங்கு தலைமைப் பதவியும் , அதனை வகுத்துச் செல்ல வாரிசுரிமையும் தோன்றலாயின. வாரிசுரிமையை நிலைநாட்ட ஒரு தார மணமும் அதில் தோன்றும் வழுக்களைக் களையக் கற்புக் கோட்பாடுகளும் உருவாயின. ( சங்கத் தமிழர் , நா. செல்வராசு. கற்பு ஒரு மீள் பார்வை , தேடல் பக். 157) என்பார் செல்வராசு.

ஒரு பெண் ஆண் ஒருவனுக்கு மட்டுமே உரியவள் என்ற ஒருதார மணத்துக்கு மாறிச் சென்ற காலகட்டத்தில் எழுந்ததே கற்பு கோட்பாடு (கே.எம்.கே.கோமதி சங்கர். சமூகவியல் நோக்கில் நீதி இலக்கியம். பக்.13) என்றுரைக்கின்றார். கோமதி சங்கர்.

கற்பு என்ற சொல் இளம் ஆணோ பெண்ணோ பால் உறவில் அறியாமையைக் காப்பாற்றுவதைக் குறிக்கும். இந்தியாவைப் பொறுத்தவரை சமூகத் தூய்மைக்குப் பெண் தூய்மையாக இருக்க வேண்டும். அவளே உறுப்பினரை உற்பத்தி செய்பவள். அதனால் குழு பெண்ணின் தூய்மையைத் திருமணம் வரை பாதுகாக்கிறது. அக்கட்டுப்பாட்டை மீறும் நிலையில் அவளைக் கொல்லவும் தயங்குவதில்லை. (The Encyclopedia of Region. Vol.15.278) என்றும் , கற்பு என்பது ஒருவருடைய நடவடிக்கைகளில் பால் உறவில் தன்னைக் கட்டுப்படுத்துவதைக் குறிப்பதாகும். உடல் தூய்மை என்பது திருமணப் பிணைப்பிற்கு வெளியே பாலுறவு நடவடிக்கையில் கட்டுப்பாட்டுடன் செயல்படுவதைக் குறிக்கும் என்றும் குறிப்பிடுகின்றது கலைக்களஞ்சியம்[2].

## சங்க இலக்கியத்தில் கற்பு

தொன்மைக்காலத் தமிழர் கற்பினை, இருத்தல் என்று கூற இயலும். கணவன் மனைவியாகிய இல் வாழ்வில் கணவன் பிரிந்திருந்த காலத்து அவன் வருமளவும் தன் உணர்வுகளை அடக்கி ஆற்றியிருத்தலே இருத்தல் என்பதன் பொருளாகும். ( நா. செல்வராசு, சமூகவியல் நோக்கில் தமிழ் மரபுகள் பக். 16) என்று கூறுவார் செல்வராசு.

சங்க இலக்கியத்தில் கற்பு என்ற சொல் 46 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதில் 43 இடங்கள் பெண்களோடு தொடர்புடையதாக அமைய மூன்று இடங்கள் மட்டுமே ஆடவரின் கல்வித்திறம் பற்றிக் கூறுவனவாக அமைகின்றன.

பெண்களோடு தொடர்புடைய சொல்லமைப்புக்கள் மூன்று நிலைகளில் அமைந்துள்ளன. அதில் பொதுப் பொருளாகப் பயன்படுத்தப்படும் இடங்களில் நன்றி, அறம், மறுவறு தன்மை, உவர் நீக்கிய தன்மை, ஆன்ற, மறங்கடிந்த, நாண், நிலை இய என்ற சொற்கள் அடைமொழிகளாகின்றன. இவ்வடை மொழிகள் பெண் , மேற் பண்புகளைக் கொண்டவளாகத் திகழ வேண்டும் என்பதும் அப்பண்புடையவளே கற்புடையவள் என்ற கருத்தும் குறிப்பால் உணர்த்தப் பெறுகின்றன. இவற்றுடன் “அறிய”, “அடங்கிய” ஆகிய சொற்களும் அடை மொழிகளாக இருப்பதால் மேற்பண்பு நிலையில் எதிர்ப்பாளராகச் செயல்படாது அறிய தன்மையும், அடக்கும் உணர்வும் கொண்டவளாகச் செயல்பட வேண்டும் என்பது குறிப்பாக

உணர்த்தப்படுவதாகக் காணப்படுகின்றது. இப்படிப்பட்ட கற்பு நிலையில் பெண்ணை உயர்த்தும் போக்கில் "கற்பிறை கொண்டவன்", "கற்பு மேம்படுவி" என்ற சொற்கள் காணப்படுகின்றன. அதாவது கற்புத் திண்மை நிலையில் அவள் மேம்பட்டவளாக கருதப்பட்ட நிலை அழுத்தம் உடையதாகின்றது.[3]

சங்க இலக்கியப் பெண்கள் அனைவரும் பொருளாதாரத்திற்கு ஆணைச் சார்ந்து வாழ்ந்ததாகச் செய்திகள் இல்லை. அதற்காகக் கற்புடன் திகழ வேண்டும் என்பதும் பதிவாகவில்லை.[4]

**கற்பு**

சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் கற்பெனும் சொல் முல்லை, கல்வி, கற்பனை, மதில் , மகளிர் நிறை, பயிற்சி போன்ற பல பொருட்களில் வழங்கப்பட்டாலும், பெருமளவில் பெண்களுடன் தொடர்பு படுத்தியே பேசப்படுகிறது. அதுவும் குறிப்பாக இல் வாழ்வில் ஈடுபட்ட பெண்களுடன் தொடர்பு படுத்தி – சிறப்பாக அவர்கள் ஒரே ஆடவனுக்கு உள்ளத்தாலும் உடலாலும் உண்மை உடையவர்களாக வாழ்வதைக் குறிக்கிறது.

தொடக்ககாலப் பாடல்களான சங்கப் பாடல்களில் கற்பு என்ற சொல் பெரும்பாலும் குலப்பெண்களாக விளங்கும் இல்லறப் பெண்களுடன் தொடர்புபடுத்தியே கையாளப்பட்டுள்ளது. இந்தச் சொல் "கல்" என்ற வினையடியாகப்பிறந்து "ப" என்ற வினைப் பெயர்ப்பினையைக் கொண்டு அமைகிறது. இச்சொல் ஆண்பால், பெண்பாற் சொற்களுடன் மட்டுமின்றி இரண்டுமல்லாத பால் குறிக்காத சொற்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

**அகநானூற்றில் கற்பு**

கற்பு என்ற சொல் பயிற்சி என்ற பொருளில் அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது.

**"ஒளிறுவாட் தானைக் கொற்றச் செழியன்**
**வெளிறு இல் கற்பின் மண்டு அமர் அருதொறும்"**
**( அகம் 106 : 10 – 11)**

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகள், வெற்றி பொருந்திய பாண்டிய மன்னன் ஒருவன், விளங்கும் வாட்படையுடன், குற்றமில்லாத பயிற்சியுடன் போரில் சமர் புரிவதைக் கூறுகின்றன. இங்கு கற்பின் என்ற சொல் பயிற்சியைக் கூட்டுவதைக் அறிய முடிகிறது.

இது போன்ற பின்வரும் அகநானூற்று அடிகளிலும் கற்பு என்ற சொல் பயிற்சி என்ற பொருளில் கையாளப்படுவதைக் காணலாம்.

**"பொலம் பூண் நன்னன் புன்னாடு கடிந்தென**
**யாழிசை மறுகிற் பாழி ஆங்கண்**
**அஞ்சல் என்ற ஆஅய் எயினன்**
**இகல் அடு கற்பின் மிஞிலியொடு தாக்கி**
**தன்னுயிர் கொடுத்தனன்" ( அகம் 396 : 2 – 6 )**

இங்கு இகல் அடு கற்பின் என்பது மிஞிலி என்ற மன்னனின் போர்ப் பயிற்சி மிக்க தன்மையைச் சுட்டுகின்றது.[5]

நாணமில்லாக் கற்பு, பொறையொடு மலிந்த கற்பு, செயிர்தீர் கற்பு, வடமீன்புரையுங் கற்பு, பன்மாண் கற்பு, மறங்கடிந்த கற்பு, கடவுட் கற்பு, அணங்குறு கற்பு, இறந்த கற்பு, நிலைஇய கற்பு, வான்தருங்கற்பு, அடங்கிய கற்பு, ஆறிய கற்பு, வயங்கிய கற்பு, அறஞ்சால் கற்பு, மறக் கற்பு, நாணொடு மிடைந்த கற்பு, மனைமான் கற்பு, உவர் நீங்கு கற்பு, ஆன்ற கற்பு, அருங் கற்பு, முல்லைசான்ற கற்பு போன்ற பல்வேறு வகை அடைகளுடன் சங்கப் பாடல்களில் கற்பு என்ற சொல் வழங்கி வந்துள்ளது.

**மனைமாண் கற்பு**

தலைவன் ஒருவன் வினைவயிற் பிரிய எண்ணுகின்றான். ஆனால் அவனுக்கோ தன் மனையாளைப் பிரிந்து செல்ல முடியவில்லை. தன் நெஞ்சத்தையே – அதாவது தனது மனைவியைப் பிரிந்து செல்லவேண்டுமென முடிவெடுத்த நெஞ்சத்தையே கடிந்து பேசுகின்றான். "எனது இல்லத்திற்கு மாட்சிமையை அளிக்கும் தகைமை வாய்ந்த கற்புடைய மனைவியை விட்டுப் போக நினைத்தாயே" என நெஞ்சிடம்.

**"வினை நன்றாதல் வெறுப்பக் காட்டி**
**மலைமாண் கற்பின் வாணுதல் ஒழிய"**
**( அகம் 33 : 11 – 12)**

என்று பேசுகிறான். இங்கு பெண்ணின் கற்பு மனைக்கு மாட்சிமையை அளிக்க வல்லது, என்பதுடன் கணவன் பிரிந்து சென்ற போதும், அவனுக்கு உண்மையுடையவளாக வீட்டிலேயே அவள் காத்திருக்க வேண்டும் என்பதும் இதனால் பெறப்படுகிறது[6].

**செயிர்தீர் கற்பு, மாசில் கற்பு**

செயிர்தீர் கற்பு என்பதனால் குற்றமற்ற கற்பு நிலை எதிர் பார்க்கப்படுகிறது. இதுவே மாசில் கற்பு என்றும் கூறப்படுகிறது. செயிர்தீர் கற்பு என்பதும் மாசில்கற்பு என்பதும் பொருளளவில் ஒன்றாகவே கொள்ளக்கிடக்கின்றன. வினைவயிற் பிரிந்து சென்ற தலைவன் தன் மனைவியைக் காணும் ஆவலுடன் வரும்போது,

**"அருங்கடிக்காப்பின் அஞ்சுவரு மூதூர்த்**
**திருநகர் அடங்கிய மாசில் கற்பின்**
**அரிமதர் மழைக்கண் அமைபுரை பணைத்தோள்**
**அணங்குசால் அரிவையைக் காண்குவம்"**
**(அகம் 114 : 11 - 15)**

என்கிறான். இங்கு அவன் இல்லாத காலத்தும் அவள் தன்னுடைய கற்பிற்கு ஊறு விளையாது வாழ்வதை அவள் கணவன் எதிர்ப்பார்ப்பதுடன் அது குறித்துப் பெருமையும் கொள்வது புலனாகிறது. தன்னை நினைந்தே. அவள் வாழ்வதால் பின்னர் வரும் அடிகளில் "அணங்குசால் அரிவை" என்கிறான் ஆடவன் இங்கு அணங்கு என்பது தெய்வம் எனக் கொண்டு அருந்ததி போன்ற கற்புடையவள் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பெண்ணிடம் மட்டுமே எதிர்பார்க்கப்படும் இப்பண்பு குறித்து , பரத்தையிடம் சென்று வந்த தலைவன் ஒருவனை அவன் மனைவி கடிந்து கொள்ளும் நேரத்தில், அவள் பேசுவதிலிருந்தும் அறியமுடிகிறது. பரத்தையிடம் போய் வந்த கணவன் மனைவியை நோக்கி,

**"மாசு இல் கற்பின் , புதல்வன் தாய் - என ,**
**மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றி , எம் ,**
**முதுடை எள்ளல்; அஃது அமைகும்தில்ல"**
**(அகம் 6 : 13 - 15)**

என விளிக்கிறான். அவளோ நீ இவ்வாறு பொய்மொழி பேசி எனது முதுமையைக் குறித்து ஏளனம் செய்யாதே என்கிறாள். பெண்ணிற்குக் கொடுக்கக் கூடிய உயர்ந்த அடைமொழியான "குற்றமற்ற கற்பினையுடைய என் புதல்வனின் தாயே"என்பது, தன் மனைவியை மதியாது பரந்தையிடம் சென்று வந்த கணவனின் கூற்றாக அமைவது அக்காலத்தில் பெண்ணிடம் எதிர்பார்க்கப்பட்ட பொறையைத்தான் எடுத்துக் காட்டுகிறது போலும். பெண்ணிடம் குற்றமற்ற கற்பை எதிர்ப்பார்க்கிறான் ஆடவன். அதே நேரத்தில் அத்தகைய பண்பு ஆடவனுக்கும் இருக்க வேண்டும் என்ற ஒரு எதிர்பார்ப்பு அக்காலச் சமுதாயத்தில் இருக்கவில்லை என்பது தெளிவாகப் புலனாகிறது[7].

**நாணொடு மிடைந்த கற்பு**

வினையிற் பிரிந்த தலைவன் தலைவியைச் சேரத் திரும்பி வருகிறான். தலைவியோ அவன் வரவை எதிர்நோக்கி வாழ்கிறாள். சுவரிலுள்ள பல்லி நல்ல பக்கத்தில் ஒலித்ததால் கணவன் வரப்போகிறான் என எண்ணி அதை வாழ்த்துகிறாள். இத்தகைய பெண்ணை அடையத் தலைவனின் நெஞ்சம் அவனது தேரை விட விரைந்து செல்கிறது. தனது நிலையை அவன் தனது தேர்ப் பாகனிடம் எடுத்துக் கூறுகிறான். "நாணொடு செறிந்த கற்பினையும், ஒள்ளிய நெற்றியினையும் அழகிய இனிய சொல்லினையும் கொண்ட இளையவளுடைய மெல்லிய தோளினை அடைய விரும்பி என் நெஞ்சம் மிக விரைந்து சென்று அவளைத் தழுவிக் கொண்டது" என்கின்றாள். இங்கு தலைவன் அவளைச் சேரும்போது அவள் கற்புத் தவறாது அவனை நாணத்துடன் நோக்குவாள் என்ற பொருள் கருதி,

**"நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல்**
**அந்தீங் கிளவிக் குறுமகள்"**
**(அகம் 9 : 24 - 25)**

எனக் கூறுகிறான்.[8]

**உவர் நீங்கு கற்பு**

தமிழ் மரபுப்படி திருமணத்தைத் தெளிவுடன் விரிவாகக் கூறும் ஓர் பாடல் அகநானூற்றில் உள்ள நூற்றுமுப்பத்தாறாவது பாடல். திருமண நிகழ்ச்சிகள் எல்லாம் முறைப்படி முடிந்த பின்னர் தலைநாள் இரவு வருகின்றது. அந்த இரவில் புதிதாகத் திருமணமான பெண் உடல் முழுவதும் புத்துடையால் மூடிய வண்ணம் படுத்திருக்கின்றாள். அவளை அணுகிய ஆடவன் அவளிடம் "காற்றுப் போவதற்காகக் கொஞ்சம் திறவாய்" எனக் கூறி அப்புத்தாடையை எடுத்து விடுகிறான். இதனால் நாணமுற்ற பெண் தனது மறைத்தற்குரிய உறுப்புகளை விரைந்து தலைமயிரைக் கொண்டு மறைத்துக் கொண்டு தன் கணவனிடம் இறைஞ்சி நிற்கிறாள். இந்த நிகழ்ச்சியைக் கூறும் ஆடவன்,

**"தமர் நமக்கீத்த தலைநாள் அரவின்**
**உவர் நீங்கு கற்பின்எம் உயிருடம்பு"**
**(அகம் 136 : 18 – 19)**

எனக் கூறித் தலைவி வெறுப்பு நீங்கிய கற்பினையுடையவள் என்கிறான். அத்துடன் தனது உயிர்க்கு அவளே உடம்பாகத் தன்னை அடுத்துள்ளாள் என்றும் கூறுகிறான். இங்கு உவர் நீங்கு கற்பு என்பதன் பொருள் தெளிவாக இல்லை. எனினும் பெண் வெறுப்பில்லாது தான் பெற்ற நல்ல பயிற்சியினால் தலைவனை நெருங்கியுள்ளாள் என்றே கொள்ள வேண்டும்[9].

திருமண நிகழ்ச்சியில் நடைபெறும் ஒவ்வொரு செயலையும் எடுத்துக்காட்டி திருமண விழாவைக் கண் முன் நிறுத்துகிறது அகநானூற்றின் மருதத்திணைப் பாடலான எண்பத்தாறாவது பாடல். நல்லாவூர்க்கிழார் என்ற புலவர் செல்வச் செழிப்புள்ள ஒரு திருமணத்தைப் பாடுகிறார். பந்தலில் வெண்மணல் பரப்பப்பட்டுள்ளது. வந்த விருந்தினருக்கு உணவு படைக்கப்படுகிறது. திருமணப் பெண்ணை உரோகிணி திங்களைக் கூடிய நாளில் நீராட்டுகின்றனர். மங்கல மகளிர் முன்னும் பின்னுமாகக் கலங்களில் நீர் கொடுக்கின்றனர். அந்நீரைப் புதல்வரைப் பெற்ற நான்கு மகளிர் வாங்கி மணப்பெண்ணைச் சூழ்ந்து நின்று நீராட்டுகின்றனர். நீரில் நெல்லும் அலரியும் போடப்பட்டுள்ளன. இவ்வாறு நீராட்டும் போது அவர்கள் நால்வரும்,

**"கற்பினின் வழாஅ நற்பல உதவிப்**
**பெற்றோன் பெற்கும் பிணையை ஆகென"**
**(அகம் 86 : 13 – 14)**

என்று பெண்ணை வாழ்த்துகின்றனர். திருமணமான பின்னர் ஒரு பெண்ணிடம் சமூகம் எதிர்பார்ப்பதை இவர்கள் வாழ்த்து வாயிலாக வெளிப்படுத்துகின்றனர். "கற்பினின்றும் வழுவாது, கணவனுக்குப் பல நல்ல உதவிகளைச் செய்து, அவன் உன்னை விரும்பிப் பேணும் விருப்பத்தை அவன் மனத்தில் ஏற்படுத்தக் கூடியவளாக இருக்க வேண்டும்" எனப் பாராட்டுவதில் கற்பு என்ற பண்பு திருமணத்தில் இன்றியமையாத தன்மை பெறுவதைக் காணமுடிகிறது[10].

தலைவன் வினைவயிற் பிரிந்து விட்டான். திரும்பி வர நாட்கள் பலவாகிவிட்டன. பெண் அவனை எண்ணித் துன்புற்றிருக்கும் வேளையில் அவன் திரும்பி வந்ததைக் கண்ட தோழி அவனின் வருகை தலைவிக்கும் தனக்கும் நன்மை பயந்தது என்கிறாள். இங்கு தலைவியின் கற்பு, கடவுட்கற்பாகக் கொள்ளப்படுவதுடன், அவளைப் புதல்வன் பயந்த புகழ் மிக்கவள் என்றும் கூறப்படுகிறது.

**"கடவுட் கற்போடு குடிக்கு விளக்காகிய**
**புதல்வன் பயந்த புகழ்மிகு சிறப்பின்**
**நன்ன ராட்டிக் கன்றியும் எனக்கும்**
**இனிதா கின்றால் . . . . "** **(அகம் 184 : 1 – 4)**

என்ற அகநானூற்றடிகள் இதனை விளக்குகின்றன.[11]

விதிகளுடன் கூடிய திருமணத்தைக் குறிக்கத் தொல்காப்பியர் கூறும் கற்பு, ஏனைய சங்கப் பாடல்களில் பெண்ணிற்குரிய ஒரு பண்பாகவே குறிப்பிடப்படுகிறது. பெண்ணிற்குக் கற்புப் பெருமளவில் திருமணத்தின் பின்னரே வற்புறுத்தப்பட்டாலும் திருமணத்திற்கு முன்பு கூட இது பெண்ணுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளமையைப் பின்வரும் பாடலில் காணமுடிகிறது.

**"கூறுவம் கொல்லோ, கூறலம் கொல்லெனக்**
**கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது**
**நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி**
**அரைநாள் யாமத்து விடுமழை கரந்து**
**கார்விரை கமழும் கூந்தல் தூவினை**
**நுண்நூல் ஆகம் பொருந்தினன் வெற்பின்**
**இளமழை சூழ்ந்த மடமயில் போல**
**வண்டுவழிப் படரத் தண்மலர் வேய்ந்து**
**வில்வகுப் புற்று நலிவாங்கு குடச்சூல்**
**அஞ்சிலம் பொடுக்கி அஞ்சினள் வந்து**
**துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்**
**"ஆன்ற கற்பில் சான்ற பெரிய"**
**அம்மா அரிவையோ அல்லள் தெனாஅது**
**ஆஅய் நன்நாட்டு அணங்குடைச் சிலம்பில்**
**கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்**
**நேர்மலர் நிறைசுனை உறையுஞ்**
**சூர்மகள் மாதோ என்னும் நெஞ்சே"**
**(அகம் 198 : 1 – 17)**

மேற்கூறிய அகநானூற்றுப் பாடல், களவில் ஓர் ஆணும் பெண்ணும் உடலால் ஒன்று சேர்ந்தமையைக் கூறுகிறது. சொல்லவா, விடவா என எண்ணிய ஆடவன் காமம் பொறாது பெண்ணிடம் நள்ளிரவில் வரும்படி கூறுகிறான். அவளும் அவன் கேட்டதற்கிணங்க வருகிறாள். பெண் அவள் வரும்போது காலிலுள்ள சிலம்பு ஒலித்து விடுமோ என அச்சமுற்றுச் சிலம்பின் ஒலி கேட்காதபடி மெதுவாக அடி எடுத்துவைத்து வருகின்றாள். வந்து கூடிய பின்னர் மீண்டும் தனது இல்லத்திற்குச் செல்கிறாள். அவ்வாறு சென்றவளை இவள் ஆன்ற கற்பில் சான்ற பெரிய என ஆடவன் பாராட்டுவதுடன், இவள் பெண்ணா அன்றேல் சூர்மகளா என வியந்து நிற்கின்றான்.

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை (ஔவையார், கொன்றை வேந்தன், நீதி நூற்கொத்து, சென்னை கழக வெளியீடு 1973.பக் 14) என்ற ஔவையாரின் சொற்றொடர்ப்படி இங்கு தலைமகள் தலைமகனின் சொல் தவறாது வந்து அவனைச் சேர்ந்து சென்றதையே கற்பு என்ற சொல் குறிக்கிறது எனலாம்[12].

சங்க பாடல்கள் அனைத்திலும் மேற்கூறிய பாடல் ஒன்றில் மட்டுமே கற்பு என்ற சொல் திருமணத்திற்கு முன்னர் ஆணும் பெண்ணும் சேர்ந்த நிலையைக் குறித்துக் கையாளப்பட்டிருப்பது நோக்கத்தக்கது.

**அடிக்குறிப்பு நூல்கள்**


1.தமிழ்ப் பெருங்காப்பியங்களில் சங்க இலக்கியத்தின் செல்வாக்கு. முனைவர் மு. இளமுருகன், வெளியீடு - கலையகம், முதற்பதிப்பு டிசம்பர் - 1999. பக்.141

2.சமூக நோக்கில் சங்க மகளிர் முனைவர் கேபி. அழகம்மை, மணிவாசகர் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு ஆகஸ்ட் - 2001. பக். 183 - 186

3.மேலது பக் 186 - 187

4.மேலது பக் 193

5.தமிழக மகளிர் முனைவர் ர. விஜயலட்சுமி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை, முதற்பதிப்பு 1997. பக் 80 - 82

6.மேலது பக் 87 - 88

7.மேலது பக் 89

8.மேலது பக் 95

9.மேலது பக் 96 - 97

10.மேலது பக் 98 - 99

11.மேலது பக் 102

12.மேலது பக் 85 - 86

# சங்ககால தொழிற்நுட்பக் கலைச்சொற்கள்

***கா. சௌந்தரராஜன்,** *முனைவர் பட்ட ஆய்வாளர், அகராதியியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 10.*

## முன்னுரை

உலகின் மூலமொழியாம் நம் தமிழ்மொழி. அம்மொழி உலகின் உயர்தனிச் செம்மொழியாய் இன்று பரிணாமம் பெற்று விளங்குகிறது எனில் அது மிகையன்று. ஒவ்வொரு மொழியிலும் புதிய புதிய சொற்கள் காலந்தோறும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. மக்கள் புறச் சூழலுக்கு ஏற்பவும், தாங்கள் மேற்கொள்ளும் தொழிலுக்கு ஏற்பவும் பல்வேறு வகையான புதிய சொற்களைப் பயன்படுத்துகின்றனர். அச்சொற்களே கலைச்சொற்களாகும். அக்கலைச்சொற்கள் மக்களிடமிருந்தே பெறப்படுகின்றன.

குறிப்பாக ஒவ்வொரு தொழிலில் ஈடுபடும் மக்களும் அவர்களுக்குள் வழங்கும் சொல்லாகவே கலைச்சொற்களை பயன்படுத்துவதை அறியமுடியும்.

**"எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே"** என்ற தொல்காப்பியரின் வாக்கிற்கிணங்க ஒவ்வொரு சொல்லும் ஒரு பொருளை குறித்தும், அச்சொல்லை பேசும் பண்டைய மக்களின் வரலாற்றையும் நாகரீகத்தையும், சமூக பின்புலத்தையும் வெளிக்கொணரும் காலப்பெட்டகமாகும்.

விலங்கு நிலையிலிருந்து மாந்தன் முழுமையான மானிட நிலையை அடைவதற்குரிய மாபெரும் திறனாய்வு மொழியே அமைந்தது எனலாம். நான்கு கால் பிராணியில் இருந்து இரண்டு கால்களாய் மாற்றம் பெற்ற மாந்தரின் இனம் ஒரு சமூகமாய் ஒன்றுகூடி வாழும் நிலையை உருவாக்கி கருத்துப் பரிமாற்ற கருவியாகவும் பல வளர்ச்சி படிநிலையாக மொழியே தோற்றுவாயாக அமைந்தது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த மொழி நம் தமிழ்மொழி. இம்மொழியின் சொல்லாய்வுகள் நொடிப்பொழுதும் ஆராய்ந்து வரபெறுகின்றன. இவ்வாய்வுகள் யாவும் நிகழ்கால தமிழ்ச் சமூகத்தினை ஆய்ந்தறிய உதவுகிற களமாக அமைகிறது. இந்நிலையில் சொற்கள் புதிது புதிதாக தோற்றம் பெறுகின்றன. இப்புதிய சொற்களையே திறனாய்வாளர்கள் கலைச்சொற்கள் என்றுரைக்கின்றனர்.

## தொழிற் கலைச்சொற்களும் அகராதிகளும்

தற்போதைய நிலையில் உலகில் நாள்தோறும் பல தொழிற்கருவிகளும், கண்டுபிடிப்புகளும் தோற்றம் பெற்று உலக மொழிகளால் வட்டாரத்திற்கு ஏற்றவாறு மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. தொழிற்புரட்சியின் காரணமாகப் பல தொழில்கள் படிப்படியாகக் குறைந்தும், புதிய தொழிற்நுட்பக் கருவிகள் பெருக்கத்தால் தொழிற் கருவிகளின் பயன்பாடு குறைந்தும், அவை மறைந்தும் வருகின்றன.

தமிழர்களின் முக்கிய தொழில்களாக வேளாண்மையே முதன்மையாக விளங்குகின்றன. மேலும் சங்க இலக்கியங்கள் காணும் தொழிற் சார்ந்த கலைச்சொற்களும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

என பாகுபாடு செய்து அவற்றின் திணைகளின் அடிப்படையில் கலைச்சொற்களை சேகரிக்கும் நோக்கிலும் அமைகின்றன.

**கலைச்சொற்களின் வளர்ச்சி**

ஒவ்வொரு துறையிலும் வழங்கும் கோட்பாட்டுக்கான சொல், துறைச் சிறப்புச் சொல் என்று க்ரியா அகராதி விளக்கம் அளித்துள்ளது. கலைச்சொல் என்பது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட பொருளைத் தருவதாக ஒரு குழுவால் பேசப்படும் சொல், கலைச்சொற்கள் என்பதனைக் குறிக்கும், ஆங்கில வார்த்தைகள் Terminology, Technical term என்பனவாகும். இவற்றுள் Terminology என்பதற்குக் குறியீட்டுச் சொற்கள் என்பது பொருள். Technical term என்பதற்குத் தொழில்நுட்பம் சார்ந்த வார்த்தை என்பது பொருள் என்றாலும் இவை இரண்டும் கலைச்சொற்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

அகராதி வரலாற்றை எடுத்துப்பார்த்தால், பொது அகராதிகள் பலவற்றிலும் கலைச்சொற்கள் கணிசமான அளவு இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இதற்கு பொது அகராதிகளைப் பயன்படுத்தும் அளவிற்குக் கலைச்சொல் அகராதிகளை எல்லோரும் பயன்படுத்தாமைதான் முக்கிய காரணமாக விளங்குகிறது. தமிழில் கலைச்சொற்களைப் படைக்கும்போது மொழித் தூய்மையை மட்டும் கருத்திற்கொள்ளாமல் மொழிபெயர்ப்பு, ஒலிப்பெயர்ப்பு இவற்றில் எந்தெந்த இடங்களில் எது பொருத்தமாக விளங்குகிறதோ அவற்றைப் பயன்படுத்தி ஒரு மொழியின் தேவைக்கேற்பத் தோற்றுவிக்கப்படும் புதிய சொற்கள் அந்த மொழிக்கு ஆக்கமாக அதிகரிக்கும் விதமாக அமைகின்றன.

**தொழிற் கலைச்சொற்கள்**

தொழிற் கலைச்சொற்கள் என்பது ஒவ்வொரு தொழிலிலும் பயன்படுத்துகின்ற சிறப்புச் சொல்லாகும். வேளாண்மைத் தொழில், மீன்பிடித் தொழில், உப்பளத் தொழில், தச்சுத் தொழில், மண்பானைத் தொழில், பொற்கொல்லர் தொழில், செங்கல்சூளைத் தொழில் போன்ற பழைய, புதிய துறைகளான கணிப்பொறித்துறை விதமான கலைச்சொற்களை பயன்படுத்துகின்றனர்.

பொதுவாக ஒரு மொழியைப் பேசும்போது இவ்வகையான கலைச்சொற்களைத் தவிர்த்தும், இத்துறை சம்பந்தப்பட்ட சூழல் வரும்போது இக்கலைச்சொற்கள் தொடர்பில்லாத ஒருவருக்கு புரியாதபோது பொருள் புரிவதில் தடுமாற்றமும், மொழித் தொடர்பின்மையும் ஏற்படுகின்றது.

புதிய தொழில் உற்பத்தி பெருகுவதால் மொழிக்கு புதிய சொற்கள் கிடைக்கின்றன. புதிய கருவியும், சொல்லாக்கமும் பிறக்கின்றபோது அக்கருவி அனைத்து இடங்களிலும் ஒரே வடிவமாக இருந்தாலும் மக்கள் அதன் சொற்களை உள்வாங்கி திரும்பி கூறுகின்றபோது அவர்களுக்கு இருக்கின்ற மொழி சூழல் தன்மைப் பொருத்தே வெளிப்படுத்துகின்றார். தொழிற் கலைச்சொற்களை அந்தந்த சூழலுக்குத் தக்கவாறு பயன்படுத்துகின்றனர். மேலும் ஒருசொல் ஒவ்வொரு துறை சேர்ந்தவர்கள் எடுத்துக் கையாளும்போது வேறுவேறு பொருளைக் கொடுக்கின்றது. தொழிலினை விரைந்து முடிக்கும் நோக்கில் பல கலைச்சொற்களை அவர்களின் வழக்குச் சொற்களுக்கேற்ப கருவிகளைப் படைத்துக் கொண்டதோடு அவற்றைப் பயன்படுத்தும் நுட்பத்தையும் அறிந்திருந்தனர். பழந்தமிழர்களின் தொழில்நுட்பத்திறனையும், தொகைநூல்களின் தொழில்கள் பற்றியும் ஆராயப்படுகின்றன.

**வேளாண் கலைச்சொற்கள்**

வேளாண்மைத் தொழில் பன்னெடுங்காலமாகத் தமிழரது தொழிலாக அமைந்தது, எனினும் இதற்கான முதல் சான்றினைத் தருவது பழந்தமிழ். இலக்கண நூலாகிய தொல்காப்பியமாகும். அக்காலத்தில் உழவர்கள் வேளாண் மாந்தர் எனப்பட்டனர். அவர்களது அடிப்படை பயிர்களைக் காத்து ஓம்பி விளைவினைப் பெருக்குவதாகும். இதனை,

> **“வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது**
>
> **இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி”**
>
> **- (தொல்.பொருள்.மரபு.81)**

என்று குறிப்பிடப்படுவதால் அறியலாம். வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சங்ககால மக்களின் பொருளியல் வாழ்க்கை

அமைந்திருந்தது. இதனாலேயே சங்க காலத்தை வேளாண்மையின் பொற்காலம் என்று கூறுவர்.

வேளாண் தொழில் செய்வோரை உழவர், வாழ்நர், ஏராளர், களமர், தொழுவர், வன்கை வினைஞர் என்ற வேறு கலைச்சொற்களாலும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

**“உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினை”**

**- (குறுந். 10:3)**

**“தண்டலை உழவர் தனிமட மகளே” - (நற். 97:9)**

**“ஏரின் வாழ்நர் பேர்இல் அரிவையர்”**

**- (புறம். 33:4)**

**“பல்விதை உழவின் சில் ஏராளர்” - (பதிற். 76:1)**

**“களமர்க்கு அரித்த வினையல் வெங்கள்”**

**- (புறம். 212:2)**

**“நெய்தல் அம்கழனி நெல்அரி தொழுவர்”**

**- (புறம். 209:2)**

என்று சங்க நூல்கள் குறிப்பிடுவதால் அறியலாம். மேலும், இவர்களில் செல்வமும் செல்வாக்கும் பெற்று உழுதுண்டோரின் செல்வ வளமைக்கேற்ப கலைச்சொற்களால் வேறுபடுத்திப் பண்டைத் தமிழர் கூறியுள்ளனர். இதனை,

**“மைஆடு சென்னிய மலை கிழவோனே”**

**- (அகம். 108:18)**

**“கழனி காவலர் சுரிநந்து உடைக்கும்**

**தொன்று முதிர்வேளிர் குன்றூர் அன்ன”**

**- (நற். 280:7-8)**

என்றுக் கூறுகின்றனர்.

**நிலப்பிரிவுகள்**

வேளாண் தொழில் செய்வதற்கு அடிப்படையாக அமைவது நிலமாகும். நிலம் (பொதுவாக நிலப்பகுதி புலம், பால் (பயன்பாட்டுக்குரிய குறுநிலப்பகுதி), பயம்பு (பள்ள நிலம்), துருத்தி (நீர்சூழ் நிலம்), சுவல் (மேட்டு நிலம்), பார் (வலிய பாறை நிலம்) என்பன நிலத்தைக் குறித்தக் கலைச்சொற்களாகும். இதனை,

**“நிலம் நீர் ஆர, குன்றம் குழைப்ப” - (நற். 5:1)**

**“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று”**

**- (குறுந். 3:1)**

**“நீர்பரந்து ஒழுகலின் நிலம் காணலரே”**

**- (குறுந். 355:2)**

**“வம்பு விரித்தன்ன செம்புலப் புறவில்”**

**- (நற். 221:5)**

**“மென்பாலான் உடன் அணைஇ” - (புறம். 384:1)**

**“பழங்கன்று கறித்த பயம்பு அமல் அனுகை”**

**- (அகம். 136:11)**

**“வமலி கான் யாற்றின் துருத்தி குறுகி”**

**- (பரி. 10:30)**

**“முதைச்சுவற் கலித்த முற்றா இளம்புல்”**

**- (குறுந். 204:3)**

**“பார் உடைத்த குண்டு அகழி” - (புறம். 14:5)**

என்பதன் மூலம் அறியலாம்.

**உழவுக் கருவிகள்**

உழவுக் கருவியைப் பண்டைக்கால மக்கள் பயன்படுத்தினர். இவ்வுழவுக் கருவியை “நாஞ்சில்” என்னும் கலைச்சொல்லால் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**“களிறு ஆடிய புலன் நாஞ்சில் ஆடா”**

**- (பதிற். 26:2)**

மேலும், இதனைக் “கொழு” என்ற கலைச்சொல்லாகவும் சங்கத் தமிழ் குறிப்பிடுகின்றது.

**“கொல்லை உழுகொழு ஏய்ப்ப”**

**- (பெரும். 117)**

**“மலங்கு மளிர் செறுவின் தளம்பு தடித்து இட்ட” - (புறம். 61:3)**

என்ற பாடல் சமன்படுத்தும் கருவியையும்,

**“வினைப்பகடு ஏற்ற மேழி கிணைத்தொட”**

**- (புறம். 388:11)**

என்பன நீர் இறைப்பொறியையும் குறிப்பிடுகின்றன. பத்தர் என்பதனை சங்க நூல்களில்,

**“வேட்டச் சிறுார் அகன் கண் கேணிப்**

**பயநிரைக்கு எடுத்த மணிநீர்ப் பத்தர்”**

**- (நற். 92:5-6)**

என்ற அடிகளால் அறியலாம். மேலும், புன்செய் நிலத்தில் வளர்ந்த களைகளை நீக்க ஒருவகைக்

கருவியைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தியுள்ளனர்.

**"கோடுடைக்கையர துளர் ஏறி வினைஞர்"**
**- (அகம். 184:13)**

என்ற பாடல் மூலம் துளர் என்கிற கருவியை பயன்படுத்தியமையை அறியலாம்.

**ஆடை தொழிற்நுட்ப கலைச்சொற்கள்**

மனிதன் தன் நுண்ணறிவினால் பருத்தியின் பஞ்சினை நூலாக நூற்று ஆடையாக அணியத் தொடங்கினான். இப்புதிய முயற்சியின் விளைவால் தோன்றியதே ஆடைத் தொழில் நுட்பமாகும். பருத்தி, பட்டு ஆகியவற்றில் துணி நெய்தலும், தைத்தலும், சுமந்து சென்று விற்றுலுமாகிய இத்தொழிலைக் "காருகத் தொழில்" என்ற கலைச்சொல்லாலும், இத்தொழில் செய்வோரைக் "காருக வணிகர்" என்ற கலைச்சொல்லாலும் குறிப்பிடுகின்றனர். இவ்வகையில் ஆடை சார்ந்த கலைச்சொற்கள் சங்க இலக்கியத்தில் பின்வருமாறு பயின்று வந்துள்ளது.

**"பண்ணியம் மாசுஅறு பயம்தரு காருகப்**
**புண்ணிய வணிகர் புனை மறுகு ஒருசார்"**
**- (பரி. திரட்டு. 1:24-25)**

**"கார்தலை மணந்த பைம்புதல் புறவின்**
**வில்லெறி பஞ்சியின் வெண்மழை தவழும்"**
**- (அகம். 133:5-6)**

**"துகிலாய்ச் செய்கைப் பாவிரிந்த தன்ன**
**வெயில் அவிர்பு துடங்கும் வெவ்வெங் களரி"**
**- (அகம். 293:4-5)**

**"துன்னர் சிதார் துவர நீக்கி" - (பொருந. 81)**

**"அரைச் செறி கச்சை யாப்பு அழித்து அசைஇ" - (நற். 21:2)**

**"பாய்ந்து ஆய்ந்த தானைப் பரிந்து ஆனாமைந்தினை" - (கலி. 96:2)**

**"சீரை தைஇய உடுக்கையர்"- (திருமுரு. 126)**

**"ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்"**
**- (அகம். 136:23)**

**"படாஅம் மஞ்ஞைக்கு ஈந்த அம்கோ்"**
**- (புறம். 141:11)**

**"பொருகணை தொலைச்சிய புண்தீர் மாப்பின்**
**விரவுவரிக் கச்சின் ...... ...... ......"**
**- (பெரும். 69-71)**

**"புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்"**
**- (பரி. 12:17)**

என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுவதைக் காணலாம்.

பண்டைத் தமிழரின் பல்வேறு தொழில்நுட்பத்திறனை விளக்கும் வகையில் சங்க இலக்கியங்களில் கலைச்சொற்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. மக்கள் நிலத்தின் அமைப்பு, மண்ணின் வளம், அதற்கேற்ப விளையும் பயிர்கள் ஆகியவற்றைப் பற்றி நன்கு அறிந்து அதற்கேற்ப நிலங்களுக்கும் மண்ணிற்கும் நுட்பமான கலைச்சொற்கள் வழங்கியுள்ளனர்.

# சைவசித்தாந்த நெறி

*'சித்தாந்த ரத்தினம்' **முனைவர் இராம.மோகன்,** *உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி-622 403.*

சைவசித்தாந்த நெறிபற்றி அறிய வேண்டுமெனில் இறை, தளை, உயிர் ஆகிய முப்பொருள்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இவற்றை வடமொழியில் பசு, பதி, பாசம் என்பர். இம்மூன்றும் (என்றும் உள்ள பொருள்) அநாதியாகும். 'சைவ சித்தாந்த முடிபே' பேரின்பப் பொருளுக்கு விளக்கமாகும். இறை, உயிர், தளை பற்றிய உண்மைகளை 13ஆம் நூற்றாண்டு வாக்கில் தோன்றிய சிவஞானபோதம் முதலான சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் விளக்குகின்றன.

**இறைவன்**

இயல்பாகவே மும்மலக் குற்றங்கள் பாசங்கள் அற்றவனும் கருணைத்திறம் உடையவனும் ஆகிய இறைவன் முற்றறிவு உடையவன். இத்தகு குணத்தை உடைய இறைவனை 'வாலறிவன்'(குறள்.2) என்பார் வள்ளுவர். முற்றறிவு என்பது உணர்த்த உணராமல் இயல்பாகவே உணரும் பேரறிவாகும். உயிர்கள் மீது கொண்ட பெருங்கருணையால் இறைவன் படைத்தல், காத்தல், அருளல், அழித்தல், ஒடுக்குதல் ஆகிய ஐந்தொழில்களை 'சதா நிகழ்த்திக் கொண்டுள்ளான்'. அறிவற்ற சடமாகிய உலகை இறைவன் தொழிற்படுத்துவது உயிரின் பொருட்டேயாகும். "தன்வயமுடைய தலைவன் ஞாலத்தை இயக்குதல் தன்பொருட்டு அன்று என்பது தெளிவு. ஞாலத்தின் பொருட்டென்றலும் கூடாது. அறிவும் நுகர்ச்சியும் அதற்கின்மையின் இதனால் இறைவன் உலகைத் தொழில் படுத்துவது உயிரின் பொருட்டென்பது முடிகின்றது"[3] என்னும் மெய்யறிஞர் கூற்று இறைவன் இலக்கணத்தை இயம்புகிறது.

**உயிர்**

உயிர் சிற்றறிவு உடையது. அதாவது உணர்த்த உணரும் இயல்புடையது. "உணர்த்த உணர்தலின் ஆன்மா"[4] எனக் குறிப்பிடுகிறது சிவஞானபோதம். மும்மலக்குற்றமுடைய உயிரானது சார்ந்ததன் வண்ணமாகத் திகழும். செம்பில் களிம்பு இருப்பது போல இயல்பாகவே ஆணவமலத்தைக் கொண்டு உயிர் விளங்குகிறது. இக்கருத்தை "பளிங்கொன்று தன்னை அடுத்த நிறம் யாதாயினும் அந்நிறமே தன் நிறமாகக் கொள்ளும் இயல்பினது அதுபோலவே இவ்வுயிரும் எவ்வெப்பொருளைச் சார்கின்றதோ அவ்வப் பொருண்மயமாகவே தோன்றும் இஃது அறிவித்தால் அறியும் இயல்பானது....... பெருமான் அறிவிக்க அறியும் இயல்பினதாகிய இவ்வுயிர் தன்னியல்பையும், பேரறிவுப் பிழம்பாக உள்ள தலைவன் இயல்பையும் அறிதற்குத் தடையாகத் தன் மாட்டு உள்ளது யாதென ஆராயப்புகின், அஃது அநாதியே தன்னைப் பற்றி நின்றுத் தன் அறிவை மறைத்து நிற்கும் அழுக்கு ஒன்று என்பது போதரும் அவ்வழுக்கையே ஆணவமலம், என்ப"[5] என்னும் பண்டிதமணியாரின் மெய்யுரை வழி உணரலாம்.

**பாசம்**

உயிர்களின் மூலமலமாகிய ஆணவமலத்தோடு கன்மம், மற்றும் மாயை ஆகியனவும் சேர்த்து மூன்றும் 'பாசம்' எனக் குறிக்கப்படுகிறது. 'யான்' 'எனது' எனும் செருக்கே ஆணவமாகும்.

**"யான்எனதுஎன்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு**

**உயர்ந்த உலகம் புகும்"[6]**

என்பது வள்ளுவர் வாக்கு. இச்செருக்கினை 'அறியாமை'[7] எனக் குறிப்பிடுகிறது உண்மை விளக்கம். உயிர்களின் குற்றமாகிய ஆணவமலத்தால் அவைகள் கன்மமலத்தைச் சேர்க்கின்றன. கன்மம் என்பது நல்வினை, தீவினை ஆகிய இருவினையாகும். பிறப்புக்கு இவ்வினைகளே வித்தாக அமைகின்றன. எனவே, இதனை 'இருள்சேர் இருவினை' (குறள்.5) என்பார் வள்ளுவர். நல்வினை, தீவினையாகிய கன்மம் (கர்மா) மூன்று நிலைகளில் அமையும். அவை 1.பிராப்தம் (ஊழ்) 2.ஆகாமியம். 3.சஞ்சிதம் என்பனவாகும். பிராப்தம் (ஊழ்) என்பது ஒரு பிறப்பிற்கு உரிய வினைத் தொகுதி, ஆகாமியம் என்பது பிறவி பெற்று வாழும் காலத்தில் உயிர்கள் சேர்த்த வினைப்பகுதி, சஞ்சிதம் என்பது பலபிறவிகளிலும் உயிர்கள் சேர்த்த வினைத் தொகுதி ஆகும். கன்ம வினைகளை உயிர்கள் போக்கிக் கொள்ளும் பொருட்டு இறைவன் மாயையில் இருந்து உயிர்களுக்கு தனு (உடல்), கரணம் (உள் உறுப்புகள்), புவனம் (உலகம்), போகம் (நுகர்ச்சி) ஆகியனவற்றைப் படைத்துத் தருகிறான். எனவே படைப்புக்கு உரிய சூக்குமப் பொருளாக மாயை உள்ளதால் இதுவும் அனாதியேயாகும் (என்றும் உள்ள பொருள்).

**"ஆறு கோடி மாயாசக்திகள்**

**வேறுவேறு தம் மாயைகள் தொடங்கின"[8]**

என்பார் மாணிக்கவாசகர்.

"சைவ சித்தாந்தம் மூன்று மலங்களைப் 'பாசம்' எனக் கூறும். பாசம் என்பதற்குக் 'கட்டுவது' என்பது பொருளாகும். 1.ஆணவமலம். 2.கன்மமலம் 3.மாயாமலம் இம்மூன்றில் உண்மையாக நமக்கு பாசமாக இருப்பது ஆணவமலமே. இப்பாசத்தை நீக்குவதற்காகவே இறைவன் மாயாமலம் கன்மமலமாகிய பாசங்களை ஊட்டுகிறான். பாச நீக்கத்துக்காகவே இம்மலங்கள் ஊட்டப்படுவதால் உண்மையான பாசம் 'ஆணவ மலமே' "[9] என்னும் மெய்யறிஞர் கூற்று மும்மலம் பற்றி எளிமையாக விளக்குகிறது.

**"உளது இல என்றலின் எனதுடல் என்றலின்**

**ஐம்புல ஒடுக்கம் அறிதலின் கண்படில்**

**உண்டி வினை இன்மையின் உணர்த்த உணர்தலின்**

**மாயா இந்திரத் தனுவினுள் ஆன்மா"[10]**

எனும் சிவஞானபோத சூத்திரம் உயிர் இலக்கணத்தையும் உயிரானது, மாயையால் ஆன உடலில் ஒடுங்கியிருக்கும் உண்மையினையும் விளக்குகிறது.

**சைவ சித்தாந்தச்சாரம்**

1. பசு, பதி, பாசம் மூன்றும் என்றும் உள்ள பொருள்களாகும். (அநாதி)

2. பசுவாகிய உயிர் உணர்த்த உணரும் இயல்புடையது. அதாவது சிற்றறிவு உடையது. ஆணவம் முதலான மலங்களை உடையது. வினையால் பிறப்புக்கு உட்படுவது சார்ந்ததன் வண்ணமாக இருப்பதே உயிரின் குணம்.

3. பதியாகிய இறைவன் முற்றறிவு உடையவன். இயல்பாகவே மலங்களில் இருந்து நீக்கமுடையவன்.

4. பாசம் என்பது மும்மலங்களைக் குறிக்கும். (ஆணவம், கன்மம், மாயை) ஆணவம் இயல்பாகவே உயிரில் கலந்துள்ளது. கன்மம் உயிர்களின் வினைத்தொகுதி, மாயை நுண்சடப்பொருள். இறைவன் உயிர்களின் மீது கொண்ட கருணைத்திறத்தால் மாயையில் இருந்து உலகைப் படைத்து தருகிறான்.

5. முப்பொருள் தெளிவே ஞானமாகும். பாசமாகிய மும்மலக் குற்றங்களில் இருந்து உயிரானது திருவருள் துணையால் நீங்கி நிலையான இன்பத்தை (சிவகதி) பெற விழைவதே உயிரின் கடமையாகும்.

மேற்கண்ட சைவசித்தாந்தக் கருத்துக்களைத் திருக்களிற்றுப்படியார் எனும் சாத்திரநூலை அடிப்படையாக வைத்து அமைக்கப்பெற்ற கீழ்காணும் வரைபடம் தெளிவுபடுத்துகிறது.



## உயிரின் கடமை

உயிர்களின் கடமை பிறப்பின் அருமை அறிந்து ஞானவழியில் இறைவனின் திருவடிகளைப் பற்றி நற்கதியை அடைவதே ஆகும். இக்கடமை அறியாத உயிர்கள் நிலையில்லா உலக வாழ்வில் பற்றுக்கொண்டு பிறவியின் பயனை அறியாமல் பயனற்று மடிந்து போகின்றன. இத்தகு மக்கள் வறட்டுப் பசுக்களுக்கு ஒப்பாவர் என்பதை,

**"காயத்துள் மெய்ஞ் ஞானக்கள் உண்ணமாட்டாதே**
**மாயக்கள் உண்டார் என்று உந்தீபற**
**வறட்டுப் பசுக்கள் என்று உந்தீபற"**[11]

என்னும் திருவுந்தியார் பாடல் உணர்த்துகிறது. மேலும் இப்பாடல் பேரின்பம் என்பது உடலில் இடம் கொண்ட இறைவனை உணர்ந்து ஞானமாகிய அமுதைப் பருகுவதாகும் என்பதையும் உணர்த்திக் காட்டுகிறது.

**"இறைவனே நீஎன் உடலிடம் கொண்டாய்"**[12]

எனும் பாடல் அடியும்,

**"மாய வாழ்க்கையை மெய்யென்று எண்ணி மதித்திடா வகைநல்கினான்**
**வேயதோள் பங்கன்எங்கள் திருப்பெருந்துறை மேவினான்**
**காயத்துள் அமுதுஊற ஊறநீ கண்டுகொள் என்றுகாட்டிய**
**சேயமாமலர்ச் சேவடிக்கண் நம்சென்னி மன்னித்திகழுமே"**[13]

என்னும் திருவாசகப் பாடலும் ஒப்ப நோக்கத்தக்கன. எனவே 'பேரின்பம்' என்பது இறைவனின் திருவடிகளைப் பற்றிப் பிறப்பறுத்து நிலையாகப் பெறும் 'இறையின்பம்' ஆகும். இவ்வின்பத்தைப் பெற விழைவோர் இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் முதலான பக்குவ நிலைகளைப் பெற வேண்டும்.

## இருவினை ஒப்பு

நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளையும் சமமாகப் பாவிக்கும் பக்குவநிலை இன்ப துன்பத்தால் பிறழ்ச்சி கொள்ளாத சமநிலை எனலாம். இந்நிலையை,

**"ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவர்**
**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்"**
**(திருத்தொண்டர்புராணம், திருக்கூட்டச்சிறப்பு.8)**

எனக் குறிப்பிடுவார் சேக்கிழார். "இன்ப துன்பத்தைச் சமமாகக் கருதி அவற்றின் மேல் பற்றுக் கொள்ளாதிருக்கும் இயல்பு வருவதே இருவினைஒப்பு" எனப்படும். இப்பக்குவ நிலையே மலங்களை விட்டு நீங்குவதற்கான முதல் படிநிலையாகும்.

## மலபரிபாகம்

குற்றமாகிய மலங்களில் இருந்து பற்று நீங்கிய நிலையினை மலபரிபாகம் என்பர். ஆணவம் முதலிய மலங்களில் இருந்து உயிர் விடுபடுதல்.

## சத்திநிபாதம்

மலபரிபாகம் பெற்ற நிலையில் திரோதான சத்தியும் (மறைப்பாற்றல்) விலகி அருட்சக்தி

உயிருக்கு உதவுகிறது. அதாவது திருவருள் கிடைத்தல் ஆகும். "உலகியல் நாட்டம் சிறிது சிறிதாக குறைந்து... சிவப்பரம்பொருளை வழிபட வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக ஏற்படும் சூழல் அமைந்தால் அதுவே சத்திநிபாதம்"[14] என்னும் மெய்யறிஞர் விளக்கம் பொருத்தமுடையதாகும். மேற்கண்ட நிலைகளைப் பெற சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான சாதனங்கள் துணை செய்கின்றன. இவற்றுள் ஞானம் என்னும் பக்தி நெறியே மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

"சரியை முதலிய நான்கு வழிகளையும் ஒன்றுக்கொன்று சாதன சாத்திய முறையில் வைத்து இறுதியிலுள்ள ஞானத்தால் வீட்டின்பம் அடையலாமென உணர்த்தப்பட்டது"[15] என்பார் பண்டிதமணியார்.

**முடிவுரை**

பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருளும் ஆநாதியாகும். பதியாகிய இறைவன் உயிர்கள் மீது கொண்ட கருணையால் உயிர்கள் தம் ஆணவத்தால் சேர்த்த கன்ம மலத்தை நீக்கும் பொருட்டு உடல் உலகம் ஆகிய பொருள்களை மாயையில் இருந்து தோற்றுவித்துத் தருகிறான். சிற்றறிவு உள்ள உயிர்கள் அறிவற்ற சடமாகிய உலகப்பொருள்களில் நாட்டம் கொள்ளாமல். பேரறிவுடைய இறைவனின் திருவடிகளைப் பற்றி வாழ்ந்து, பிறப்பின் பயனாகிய வீடு பேற்றை பெற விழைய வேண்டும்.

**சான்றெண் விளக்கம்**


1. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (நான்காவது மாநாடு பதிப்புரை - ப.4
2. மேலது - ப.4
3. கா.சுப்பிரமணியபிள்ளை, சைவசித்தாந்த வரலாறு -ப.8
4. மெய்கண்ட தேவர், சிவஞானபோகம் - சூத்.3
5. மு.கதிரேசஞ்செட்டியார், உரைநடைக் கோவை பக்-84-85
6. குறள் - 346
7. திருவதிகை மனவாசகங் கடந்தார், உண்மை விளக்கம் சூ - 22
8. திருவாசகம், திருஅகவல் - 45-46
9. சி.ராம.நாகப்பச்செட்டியார், சைவசித்தாந்தம் இரத்தின விளக்கம் - ப.67
10. மெய்கண்ட தேவர், சிவஞானபோதம் - சூத்.3
11. திருவுந்தியார் - சூத்.43
12. திருவாசகம், கோயில் திருப்பதிகம் - பா.5
13. மேலது, சென்னிப்பத்து பா-5
14. சி.ராம.நாகப்பச் செட்டியார், சைவசித்தாந்தம் இரத்தின விளக்கம் - ப-79
15. மு.கதிரேசஞ்செட்டியார், உரைநடைக் கோவை ப.86

# அகிலனும் இலக்கியப் படைப்பும்

*மா. புவனேஸ்வரி, *ஆய்வியல் நிறைஞர் ( பகுதிநேரம் ), மகேந்திரா கலை அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி ), காளிப்பட்டி, நாமக்கல்.*

**முன்னுரை**

தமிழ் எழுத்தாளர் அகிலன் யதார்தமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட படைப்புகளுக்குச் சொந்தக்காரர். சமுதாய வாழ்வின் ஒழுக்கக் கேடுகளை துணிவோடு வெளிப்படுத்தும் திறன் மிக்கவர். சமுதாயத்தில் ஏற்படும் சிக்கல்களை வெளிப்படுத்தி, அதற்கு தீர்வு காணும் வழிமுறைகளை தன்னால் இயன்றவரை எடுத்துக் கூறுபவர்.

**இளமைக்காலம்**

அகிலன் 1922ல் ஜூன் 27ல் புதுக்கோட்டை மாவட்டத்தில், பெங்களூரில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் வைத்தியலிங்கன் பிள்ளை, அமிர்தம் அம்மாள் ஆவர். இவரின் அகிலாண்டம். அகிலன் என்ற புனைப்பெயரில் எழுதி வந்தார்.

இவர் சிறு வயதிலேயே தந்தையை இழந்தவர். இவருடைய வாழ்க்கையை எழுத்தாளராக வடிவமைத்தத்தில் இவருடைய தாயாரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் கல்லூரியில் படித்து வந்த போது காந்திக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கல்லூரி படிப்பை பாதியில் துறந்தவர். விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டவர். இந்திய நாட்டின் விடுதலைக்குப்பிறகு இரயில்வே அஞ்சல் துறையிலும் பின்னர் அகில இந்திய வானொலியிலும் பணியாற்றினார். அதன் பின்னர் முழுநேர எழுத்தாளராக வாழ்ந்தார்.

அகிலன் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனையை கலந்து எழுதுபவர். “ஒருபுறம் அழகும், வனப்பும், நிறைந்த இயற்கை உலகம் மற்றொருபுறம் வேற்றுமையும், வெறுப்பும் நிறைந்த மனிதர்கள் இதையே என் கதைக்கருத்து என்று சொல்லலாம்” என்று கூறுகிறார் அகிலன். இவர் சிறுகதை, நாவல், நாடகம், உரையாடல் என்று பலவடிவங்களில் எழுதும் பன்முக எழுத்துத் திறமை கொண்டவர்.

**படைப்புகள்**

இவர் படைத்த படைப்புகள் வேங்கையின் மைந்தன், சித்திரப்பாவை, கயல்விழி, வாழ்வு எங்கே, பெண், பாவை விளக்கு, நெஞ்சின் அலைகள், துணைவி, பால்மரக்காட்டினிலே, பொன்மலர், புதுவெள்ளம், சினேகிதி, வானமா பூமியா முதலியன. இவருடைய சிறுகதைத் தொகுப்புகள் அகிலன் சிறு கதைகள் (இரண்டு தொகுதி ) மற்றும் கொம்புத்தேன் கொலைக்காரன் ஆகும்.

**வேங்கையின் மைந்தன்**

இவரது “வேங்கையின் மைந்தன்” என்னும் வரலாற்றுப் புதினம் கற்பனையோடு கலந்து எழுதப்பட்டிருந்தாலும் அது நிகழும் காலக்கட்டத்தில் வாழ்ந்த வரலாற்றுக் கதாபாத்திரங்களை சுற்றிச் சுழல்கிறது. இந்நூல் சோழ அரசர்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இராஜேந்திர

சோழன் பாண்டிய நாட்டு முடியை ஈழத்திலிருந்து மீட்டு வந்த நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு அதற்கு முன்னும், பின்னுமாக இப்புதினத்தின் கதை பின்னப்பட்டுள்ளது. பல ஆயிரக்கணக்கான தமிழர்களால் படிக்கப்பட்ட நூல். இதை நடிகர் சிவாஜிகணேசன் நாடகமாக மேடையில் அரங்கேற்றி வெற்றிப்பெற்றார்.

**பொன்மலர்**

இவரது பொன்மலர் ஒரு சமூக நாவல். அன்றாடம் சமூகத்தில் நிகழும் மாற்றங்களைத் தெள்ளத் தெளிவாக எழுதுவதில் இவருக்கு நிகர் இவரே. நம் சமூகத்தில் காணப்படும் வறுமை என்ற ஒன்றை அற்புதமாக இந்நாவிலில் பதிவு செய்துள்ளார். இச்சமுதாயத்தில் நடக்கும் அவலங்களைச் சுட்டிக்காட்டுவதோடு மட்டுமல்லாமல், அதனைத் தீர்ப்பதற்கான வழியையும், சமுதாய அவலங்கள் என்னும் நோய்க்கு ஊசியையும், பொன்மலர் புதினத்தின் மூலம் அகிலன் போட்டுள்ளார். பொன்மலரான டாக்டர் சங்கரி இன்றைய உலகத்தில் பொன்னுக்குள்ள சக்தியை நன்கு உணர்ந்தவள். பணிக்கு முதலிடமும், பணத்திற்கு இரண்டாவது இடமும் கொடுத்து, பணியை மிகவும் ஆர்வத்துடன் செய்து வருபவள் டாக்டர். சங்கரி, இந்நாவலில் வரும் திருமூர்த்தியும், குருமூர்த்தியும் சகோதரர்கள் மற்றும் செல்வந்தர்கள். சங்கரியை அவளது பள்ளிப் பருவத்திலேயே ஏமாற்றிவிட்டு ரூபாய் ஆயிரம் கொடுக்கிறான் குருமூர்த்தி. அவனது சகோதரனான திருமூர்த்தியோ டாக்டர் சங்கரி ஏமாற்ற முன் பணமாக ஆயிரம் ரூபாய் கொடுக்கிறான். கல்வி என்னும் கேடயம் பெண்களின் கையில் இருந்தால் மன்மதராசாக்களின் மன்மதபானங்கள் மக்கிப் போய்விடுகின்றன என்ற கருத்தினை டாக்டர் சங்கரியின் பாத்திரத்தின் மூலமாக அகிலன் சுட்டிக் காட்டியுள்ளார்.

**விருதுகள்**

இவரது **“சித்திரிப்பாவை”** என்னும் சமூக நாவல் தமிழுக்கு முதன் முதலில் 1975ல் மதிப்புமிக்க ஞானப்பீடப் பரிசை பெற்றுத் தந்தது. இந்நாவல் இந்திய மொழிகள் பலவற்றில் மொழிப் பெயர்க்கப்பட்டது. இவரது சரித்திர நாவல் **“வேங்கையின் மைந்தன்”** 1963-ல் சாகித்ய அகாடமிப் பரிசு பெற்றது. **“எங்கே போகிறோம்”** என்ற இவரது நாவல் அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளைப் பரிசை 1975-ல் பெற்றது. **“கண்ணான கண்ணன்”** என்ற குழந்தைகள் நாவல் தமிழ்நாடு கல்வித் துறையின் சிறப்பு விருதினைப் பெற்றது. **“நெஞ்சின் அலைகள்”**, **“கயல் விழி”** **“நிலவினிலே”** மற்றும் **“நல்ல பையன்”** போன்ற நாவல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசுப் போட்டியில் பரிசுகள் பெற்றன.

**சிறப்புகள்**

இவரது படைப்புகள் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், கனடா மற்றும் அமெரிக்காவிலும் மேலும் பல நாடுகளிலுள்ள பல பல்கலைக் கழகங்களிலும், சுய நிதிக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாடநூலாக நடத்தப்பட்டு வருகின்றது.

இவர் ரசியாவிற்கு 3 முறையும், மலேசியா, சிங்கப்பூருக்கு 2 முறையும் இலங்கைக்கு 1 முறையும் சென்று தமிழ் இலக்கிய மாநாடுகளிலும், எழுத்தாளர் சங்க மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்.

1974ஆம் ஆண்டு இவரது நூல்களையும் படைப்புகளையும் ஆராய மதுரைப் பல்கலைக்கழகம் 4 நாள் கருத்தரங்கு நடத்தியது.

**அகிலன் வரிகள்**

“அழகாக வாழக் கற்றுக் கொள் முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து, முடியாவிட்டால் அதை அசிங்கப்படுத்தாமலாவது இரு”.

“நம்பிக்கையை மட்டும் இழக்காதீர்கள், உயிருள்ள வரையில் நம்பிக்கையும் அதோடு ஒன்றியிருக்க வேண்டும். நம்பிக்கை மட்டும் இருந்தால் நாம் இழந்த அனைத்தையும் மீட்டு விடலாம்”.

“நம்முடைய மக்களுக்கு முன்பாகவே நாம் நமது உரிமையை அழித்துக் கொண்டு மானத்தை அழித்துக் கொண்டு, பெயரை அழித்துக் கொண்டு வாழ்வதை விட அழிந்துவிடுவது மேல்”.

இதுபோன்ற அழகான வரிகள் மூலம் நாட்டு மக்களுக்கு புதிய சிந்தனைகளை தோற்றுவித்தார்.

**முடிவுரை**

அகிலனின் புதின இலக்கியமானது கலைத் துறையில் நீண்ட ஒரு வகை சுவை மிகுந்த இனிப்பாக விளங்குகின்றது. இவரது படைப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் முனைவர் பட்ட ஆய்வுக்காகப் பல மாணவர்கள் ஆராய்ந்து பெற்று வருகின்றனர். இவர் 1988 ல் இயற்கை எய்தினார்.

# மானிடவியல் நோக்கில் ஐங்குறுநூற்றுத் திருமணம்

*தா.ரா.ராமலட்சுமி, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி -24.

உலகில் தோன்றிய பல்வேறு மொழிகளில் பன்னெடுங்காலமாய் பேச்சுவழக்கிலும், எழுத்துவடிவிலும் இயங்கிவரும் மொழிகளில் முதன்மையானதும் சிறப்புப் பொருந்தியதுமான மொழி தமிழ்மொழி ஆகும். பல்வேறு இலக்கண இலக்கியங்கள் தோன்றி வளம் சேர்த்தாலும் பல நூற்றாண்டுகளைக் கடந்து தமிழ்மொழியின் பெருமையையும் தமிழரின் பெருமைகளையும் அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச்செல்பவை சங்க இலக்கியங்கள். அவற்றுள் சொல்லாலும் பொருளாலும் வைப்பு முறையினாலும் சிறப்பிடம் பெறுவது ஐங்குறுநூறு. அவ்ஜங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ள திருமணமுறைகளை மானிடவியல் நோக்கில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மானிடவியல்-விளக்கம்**

மானிடவியல் என்பது மனிதனைப் பற்றிய அறிவியல். இதனை ஆங்கிலத்தில் “Anthropology” என்பர். “Anthropos” என்னும் கிரேக்கச்சொல் மனிதனையும் “Logos” என்னும் சொல் அறிவியலையும் குறித்து முறையே மனிதன் அறிவியல் என்னும் பொருளைத்தருகிறது.

மனிதனைப் பற்றியும் அவனது ஆக்கங்களைப் பற்றியும் ஆராயும் அறிவியல் துறையே மானிடவியல் என்கிறார் சண்முகதாஸ் (ஆக்க இலக்கியமும் அறிவியலும், ப.1).

மனிதக்குழுக்களின் நடத்தைகளையும் விளைவுகளையும் மானுடவியல் என்பர் என்கிறார் குரோபர். “மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆராயும் ஓர் அறிவியல் துறையே மானிடவியல்” எனப் பொருளுரைக்கிறது வாழ்வியற்களஞ்சியம் (வாழ்வியற்களஞ்சியம், ப.795)

**திருமணம்**

திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காகச் சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட சடங்கு முறை ஆகும்.

“திருமணம் என்பது ஒரு குழுவிலுள்ள மணத்துணையை வேறொரு குழுவினர் பெறுவதைக் குறிக்கிறது” என்று கூறுகிறார் பக்தவத்சல பாரதி (தமிழர் மானிடவியல், ப.35).

திருமணம் பற்றி தொல்காப்பியர் கற்பியலில்,

**கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே (தொல். கற்பு.1088)**

என்று குறிப்பிடுகிறார்.

திருமணம் பற்றி சி.என். நடராஜன் குறிப்பிடுகையில் ''திருமணம் இரண்டு தனிப்பட்டவர்களுக்கிடையே நடைபெறும் உடன்படிக்கையன்று. இரண்டு குழுக்களுக்கிடையே இணைப்பை நெருக்கத்தை ஏற்படுத்தும் உறவுத்தளை என்பது நியதி'' என்கிறார். (இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் முதலாவது கருத்தரங்கு. ப.286).

**திருமணத்தின் தோற்றம்**

திருமணத்தின் தோற்றம் குறித்து பல்வேறு அறிஞர்களும் பல்வேறு கருத்துக்களைப் பற்றிக் குறிப்பிட்டாலும் க.ப. அறவாணன் அவர்களின் கருத்து பொருத்தமானதாக உள்ளது. கூட்டமாகப் பழகிப்போன மனிதன் மானுடத்தலைமைச் சுகத்திற்கு மேலும் உடைமைச் சுகம் இருப்பதைக்கண்டு கொண்டிருத்தல் வேண்டும். தனக்குப் பிறகு தன்னிடம் உள்ள தலைமைப்பதவியும் கால்நடை உடைமையும் தனக்குப்பின்வரும் தன் சந்ததிகளுக்கே சேருதல் வேண்டும் என்ற விழைவின் விளைவுதான் திருமணம் என்ற சடங்கு (க. ப. அறவாணன், தமிழர் தம் தலைமை பழிபாடு, பக்.3-4).

இவ்வாறு திருமணம் மனிதனின் வாழ்வுக்க இன்றியமையாதது என உணர்த்தப்படுகிறது. சங்ககாலத்தில் பல்வேறு வகையிலான திருமணமுறைகள் இருந்திருக்கின்றன என்றபோதிலும் மானிடவியலறிஞர்கள் திருமணத்தை அகமணம், புறமணம் என இரண்டாகப் பாகுபடுத்தியுள்ளனர்.

**அகமணம்** (Endogamy)

அகமணம் என்பது ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் அக்குழுவினருக்குள்ளேயே மணஉறவு வைத்துக்கொள்வதே ஆகும். தன்னுடைய சாதி அல்லது குழுவிற்குள் மட்டும் மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற வரையறையைச் சுட்டிக்காட்டுவது அகமண முறையாகும். எனினும் நேரடியாக இரத்த உறவுடையோருடன் மணம் கொள்வதை அகமணம் என்கிறார் பால்சம் (எடுத்தாளப்பட்டது: பண்பாட்டு மானிடவியல், பக்.389-390).

இந்தியச்சூழலைப் பொருத்த வரை சாதி என்பது ஓர் அகமணக்குழுவாகும். ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் அவர்தம் சாதிக்குள் மட்டும்தான் திருமணம் செய்து கொள்கிறார்கள். வேற்றுச்சாதியினரோடு பெரும்பாலும் திருமணம் செய்வதில்லை.

சங்ககால மக்களும் திணைச்சமுதாயமாக வாழ்ந்தனர். அவர்கள் வாழும் திணையில் உள்ளவர்களே தத்தமக்குள் திருமணம் செய்யும் அகமண முறையையே கடைபிடித்தனர். ஐங்குறுநூற்றிலும் ஒரு திணையைச் சார்ந்த தலைவனும் தலைவியும் இளம்பருவத்தில் ஒன்றாகக்கூடி விளையாடியவர்கள். தாங்கள் விளையாடுவதற்காகச் செய்த பைஞ்சாய்க் கோரையால் செய்த பாவையைக் குளிப்பாட்டியும் பாலூட்டியும் விளையாடியிருக்கின்றனர். பின்னர் பருவம் வந்ததும் அவர்களே மணமுடித்திருக்கின்றனர். இது ஓர் அகமண முறையாகும்.

**..... .... ததைந்த நெய்தல் தழிய**
**ஓதமொடு பெயரும் துறைவற்குப்**
**பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே**
**(ஐங்.155: 3-5)**

என்ற பாடலில் அலைகளையுடைய தடற்கரைத் தலைவனுக்குப் பேதைப் பருவத்திலேயே பைஞ்சாய்க் கோரையாகிய மகவை ஈன்று கொடுத்தேன் என்று தலைவி கூறுவதிலிருந்து அவர்கள் இருவரும் ஒரே ஊரினர் என்பது புலனாகிறது. தொல்காப்பியரும்,

**தலைவியும் தலைவனும் ஓர் ஊரினர்**
**(தொல்.கள:23)**

என்ற நூற்பாவின் வழி சங்ககாலத்தில் அகணமுறை இருந்ததை உறுதிப்படுத்துகிறார்.

**புறமணம்- Exogamy**

புறமணம் என்பது ஒருவர் அவர்சார்ந்த குழுவுக்குள் திருமணம் செய்து கொள்ளாமல் வேற்றுக்குழுவினருடன் மட்டும் திருமணம் செய்வதாகும். அகமணம் ஒரே சாதிக்குள் நடப்பது. எனவே அச்சாதி அமைப்பிற்குள் உள்ளவர்கள் ஒரே இரத்தவழி உறவுடையவர்கள். அவர்கள் ஒரே குலம், கோத்திரம், பரம்பரை, வம்சம், பங்காளி, வகையறாவைச் சேர்ந்தவர்கள். எனவே அவர்கள் தங்களுக்குள் மணந்து கொள்ளாமல் வேறொரு

குழுவினரிடமிருந்து மணத்துணையைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இவ்வாறு இரத்த உறவில்லாத குலங்களிடையே நடக்கும் திருமணங்கள், உடலிலும் உள்ளத்திலும் மேலும் வலிமைமிக்க மக்களைப் படைப்பதற்கு உதவின. வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற இரு இனக்குழுக்கள் ஒரு மக்களினமாகக் கலக்கின்ற பொழுது பதிய மண்டையும் மூளையும் அவ்விரண்டு இனக்குக்களின் திறமைகளின் மொத்தத்துக்கு ஏற்ப விரிவடையவும் நீளவும் செய்யும் என்கிறார் எங்கெல்ஸ் (குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் ப.71).

சங்ககாலத்தில் அகமணக்குழுக்கள் இருந்த போதிலும் புறமணங்களும் நிகழ்ந்தேறின. ஐங்குறுநூற்றின்

**அன்னாய், வாழி வேண்டு அன்னை! என்னை**
**தானும் மலைந்தான், எமக்கும் தழை ஆயின**
**பொன் வீ மணி அரும்பினவே-**
**என்ன மரங் கொல், அவர் சாரலவ்வே**
**(ஐங்-201)**

என்ற பாடலில் தலைவன் தலைவிக்குக் கையுறையாகத் தந்த தழையாடை பொன்னைப் போன்றும் மணியைப் போன்றும் காணப்பட்ட பலவகை மலர்களால் உருவாக்கப்பட்டிருந்தது. அவ்வகை மரங்கள் புதியன. நம் நாட்டகத்தில் இல்லாதவை. எனவே இம்மரங்கள் எவ்வகையைச் சார்ந்தவை,? என்று தலைவி வினவுவதிலிருந்து தலைவன் வேறுநாட்டைச் சார்ந்தவன் என்பதும் அவன் நாட்டில் விளைந்த மலர்கள் அவை என்பதும் புலனாகிறது.

எனவே தலைவனும் தலைவியும் வெவ்வேறு நிலத்தைச் சேர்ந்தவர்கள் எனத்தெளிவாகிறது. இது இருவேறு குழுவைச் சேர்ந்தவர்களுக்குள் மணஉறவு கொள்ளும் புறமணக்குழுவைச் சுட்டுகிறது.

### திருமணத்தின் வகைகள்

திருமணம் ஒரே மாதிரியாக நிகழ்வதில்லை. பலவகைகளில் நடைபெறுகிறது. ஒருவன் எவரை மணந்து கொள்கிறான் என்பதைப் பொறுத்தும், எத்தனை பேரைமணந்து கொள்கிறான் என்பதைப் பொறுத்தும் திருமண வகைகள் மாறுபடுகின்றன. இவற்றுள் ஒரு துணைமணம் (Monogamy), பலதுணைமணம் ((Polygamy), குழுமணம் (Group marriage) ஆகிய மூன்று வகைகள் முதன்மையானவை. இவை தவிர வேறுசில மணமுறைகளும் உள்ளன.

- ஒரு துணைமணம்
- பல துணை மணம்
- ஏற்பு மணம் அல்லது உடன்பாட்டு மணம்
- பலரறி மணம் அல்லது உடன்போக்கு மணம்
- உயர்குடி மணம்
- பரியம்பொடுத்து மணம்
- வலிய மணம்

### ஒரு துணைமணம் - (Monogamy)

ஒருவன் அவனது சமுதாய மரபுப்படி ஒருத்தியை மட்டும் மணந்து வாழும் முறை ஒரு துணைமணமாகும். இது குறித்து எங்கெல்ஸ் கூறுகையில், “உடைமையைப் பாதுகாத்து வாரிசிடம் விட்டுச் செல்வதற்காகவே ஒருதாரமணமுறையும் ஆண்ஆதிக்கமும் நிலைநாட்டப்பட்டன” என்கிறார் (மேலது. ப.112). அதாவது “ஓர் ஆணின் கையில் கணிசமான அளவிற்குச்செல்வம் குவிந்ததிலிருந்துதான், அந்தச்செல்வத்தைப் பிற குழந்தைகளுக்கல்லாமல் தன் சொந்தக் குழந்தைக்கு விட்டுச்செல்ல வேண்டும் என்ற விருப்பத்திலிருந்துதான் ஒருதாரமணம் தோன்றியது” என்கிறார் (மேலது, ப.120).

ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ள

**அன்னை, வாழி! வேண்டு அன்னை!- நம்ஊர்ப்**
**பலர் மடி பொழுதின், நலம் மிகச் சாஅய்**
**நள்ளென வந்த இயல் தேர்ச்**
**செல்வக் கொண்கன் செல்வனஃது ஊரே**
**(ஐங்.104)**

என்ற பாடலில் களவுக்காலத்தில் பல்வேறு துன்பங்களுக்கிடையில் தலைவியைச் சந்தித்து வந்த தலைவன், அவளை மட்டுமே மணந்தான்.

பல்வேறு வகை செல்வங்களையுடைய கடற்கரை நாட்டின் தலைவனான அவனது செல்வங்களுக்கு வாரிசாக ஒரு புதல்வனையும் பெற்று வாழ்ந்தான் என்பதிலிருந்து, தன் சொத்திற்கு வாரிசாகப் புதல்வனைப் பெற ஒரு தார மணமுறை இருந்தது புலனாகிறது.

**பல துணை மணம்– ( Polygamy)**

பலதுணை மணம் என்பது ஒருவன் ஒருத்தினை மட்டுமே மணந்து வாழும் நிலையன்றி, ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவரை மணந்து கொண்டு வாழ்வதாகும். "உலகில் பல நாடுகளில் இந்தப் பழக்கம் பரவலாக இருந்திருக்கிறது. தற்போதும் சில கலாச்சாரங்களில் தொடர்ந்து காணப்படுகிறது. சமூக அந்தஸ்தையும் பொருளாதார பலத்தையும் ஒரு மனைவி கருவுற்றிருக்கும் போதோ, பாலூட்டும் போதோ பாலுறவுத் துணைனையும் பலதார மணத்தால் கணவன் பெறுகிறான். மனைவியருக்குத் தம் உழைப்பைப் பகிர்ந்து கொள்ள ஒரு துணை வேறு கிடைக்கிறது. ஆண்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள சமூகங்களில் பல பெண்களுக்குத் திருமணமாகாமல் போகும் நிலையும் தவிர்க்கப்படுகிறது" என்று பிரிட்டானிகா தகவல் களஞ்சியம் குறிப்பிடுகிறது. பல துணை மணம் பற்றி ஐங்குறுநூற்றிலுள்ள

**அவரை அருந்த மந்தி பகர்வர்**
**பக்கின் தோன்றும் நாடன் வேண்டின்**
**பசுப்போல் பெண்டிரும் பெருகுவன்**
**தொல் கேள் ஆகலின், நல்குமால் இவட்கே**
**(ஐங்.271)**

என்ற பாடல் குறிப்படுகிறது. செல்வவளம் மிகுந்திருந்த குறிஞ்சி நிலத்தலைவன் விரும்பினான் எனில் தன்னை விரும்பி வரும் குலமகளிர் பலரையும் மணந்து வாழ்வான் என்கிறது. இது பல மணமுறை சங்ககாலத்தில் வழக்கிலிருந்தமையைப் புலப்படுத்துகிறது.

**ஏற்பு மணம்– Marriage by Negotiation**

மணமக்களின் காதல் நிலையை அறிந்த பெற்றோரே பேசி முடிவெடுத்து நடத்திவைக்கும் திருமணம் ஏற்புத்திருமணமாகும். தலைவனால் காதலிக்கப்பட்ட தலைவியை, தலைவனின் பெற்றோரே முன்வந்து பெண் கேட்க, அப்பெண் வீட்டாரும் மனமுவந்து பெண்கொடுக்க இருவீட்டாரின் இசைவுடன் அவர்களின் களவு வாழ்க்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடக்கும் திருமணம் ஏற்புத்திருமணமாகும்.

**கொடிச்சி கூந்தல் போலத் தோகை**
**அம் சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்**
**வந்தனன் எதிர்ந்தனர் கொடையே**
**அம் தீம் கிளவி பொலிக, நின் சிறப்பே**
**(ஐங் -300)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலில் அழகிய கூந்தலையுடைய குறவர் இனப்பெண்ணை, குறிஞ்சி நிலத்தின் செல்வவளம் மிக்க தலைவனின் பெற்றோர் தம் சுற்றத்தாருடன் முறைப்படி பெண்கேட்டு வந்தனர். அப்பெண்ணின் வீட்டாரும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று, அவர்களுக்குப் பெண்கொடுக்க முன்வந்தனர். இது இருவீட்டாரும் ஏற்க நடைபெற்ற திருமணத்தைக் குறிப்பிடுகிறது.

**முடிவுரை**

ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ சமூகத்தால் ஏற்படுத்தப்பட்ட சடங்கு முறையே திருமணம். ஐங்குறுநூற்றில் பல்வேறு வகையான திருமண முறைகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இக்காலத்தில் பெரும்பான்மையாகக் காணப்படும் முறை ஒரு தார மணமுறையாகும்.

சங்ககாலச் சமுதாயத்தில் தங்கள் குழுவிற்குள் மட்டுமே திருமண உறவு வைத்துக்கொள்ளும் அகமணமுறையும், அவர்களின் குழுவைத் தவிர மற்ற குழுவினரை மணக்கும் புறமணமுறையும் இருந்துள்ளன.

பெற்றோர் உடன்படாத நிலையில் உடன்போக்கின் வழி தலைமக்கள் இருவரும் மணந்து கொள்ளும் பலரறி மணமும் இருந்தது.

தலைமக்களின் களவொழுக்கத்தை ஏற்றுக்கொண்டு பெற்றோரே செய்துவிக்கும் ஏற்பு மணமும் இருந்தது.

அகமணம் புரிவதன் வழி அக்குழுவினரின் குடும்பத்தின் சொத்தும் குலப்பெருமையும் பரியப் பணமும் வெளியில் செல்லாமல் அக்குழுவிற்குள்ளேயே காக்கப்பட்டது.

புறக்குழுமணத்தின் வாயிலாகப் பெறும் குழந்தைகள் குறைபாடற்றவர்களாகவும் அறிவாளியாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் அறிவுத்திறன் மிகுந்தவர்களாகவும் திகழ்கின்றனர்

தன் வாரிசுக்கே தன் சொத்து முழுவதும் சென்றடைய வேண்டுமென்பதற்காகவே ஒரு தார மணமுறை தோன்றியது.

**சான்றெண் விளக்கம்**

1. சண்முகதாஸ், ஆக்க இலக்கியமும் அறிவியலும், ப.1.
2. வாழ்வியற் களஞ்சியம், ப.795.
3. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், ப.35.
4. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் உரையும் நூ.1088.
5. நடராஜன், இ.ப.த. முதலாம் கருத்தரங்கம், ப.286.
6. அறவாணன், தமிழர் தம் தலைமை வழிபாடு, பக்.3-4.
7. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.389-390.
8. தமிழண்ணல், மு.நூ. நூ.23
9. எங்கெல்ஸ் (குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் ப.71).
10. மேலது, ப.112.
11. மேலது, ப.120.
12. எங்கெல்ஸ் (குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் ப.71)
13. தமிழண்ணல், மு.நூ. நூ.189
14. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், பக்.65-66.
15. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.411.

# தமிழ் இலக்கியங்களில் கூத்துகள்

***முனைவர் வீ.ஜோதிமணி,** *உதவிப்பேராசிரியர், பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்-14.*

தமிழ் இலக்கிய வரலாற்றில் பலவகை இலக்கியப் பிரிவுகள் தோன்றின. அப்பிரிவுகளில் ஒன்றான நாடக இலக்கியத்தையும் வரலாற்று அடிப்படையில் காணவேண்டும். தமிழ் இலக்கண இலக்கியங்களில் நாடகக் கலை பற்றிய குறிப்புகள். செய்திகள், கூறுகள், அமைப்புகள், உருப்பெற்று வளர்ந்த பரிணாமம் போன்றவை அறிய வேண்டும். நாடகக் கலை வரலாற்றையும் தொல்காப்பியக் காலம், சங்க காலம், சங்கம் மருவிய காலம் ஆங்கிலேயர் காலம், விடுதலைக்குப் பிற்பட்ட காலம் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கலாம். அகத்தியர் கால நாடகம் நாடகத்தமிழ் பற்றி கூறுகிறது.

**கூத்து வகைகள்**

கதையைத் தழுவி வரக்கூடிய கூத்தே நாடகம் எனப்படும். நாடகம் என்னும் சொல் சங்க இலக்கியத்தில் பட்டினப்பாலையில் மட்டும் இடம் பெறுகின்றது.

**"பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்**

**வெண் நிலவின் பயன் துய்த்தும்" (பட்டினப்பாலை 113-114)**

சங்க இலக்கியங்களில் நேரடியாக நாடகம் என்ற சொல்லை எடுத்தாளாமல் கூத்து என்ற சொல்லையே எடுத்தாண்டுள்ளனர். குதித்து ஆடும் தன்மையை 'கூத்து' என்றும் நகர்வுகளின் தன்மையை 'ஆட்டம்' என்றும் வகுத்தனர்.

**"வாழ்க்கை அதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்**

**வீழ்க்கைப் பெருங்கருங்கூத்து" (கலித்தொகை 65:28-29)**

சங்கஇலக்கியத்தின் மூலம் கூத்தினை அகக்கூத்து, புறக்கூத்து என இருவகையாகப் பிரிக்கலாம்.

பண்டைய தமிழகத்தில் கூத்துக்கள் பலவகையாக நிகழ்த்தப்பட்டன. குரவைக்கூத்து, அமலைக்கூத்து, வள்ளிக்கூத்து, குறவர் கூத்து, துணங்கைக்கூத்து போன்ற கூத்து வகைகள் இருந்துள்ளன.

**குரவைக்கூத்து**

பண்டையக் காலத்தில் தமிழகத்தில் பெருஞ் செல்வாக்கோடு இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படும் கூத்துதான் குரவைக்கூத்து. இக்கூத்து ஆடப்பட்ட முறையெல்லாம் முன்பே விளக்கப்பட்டுள்ளது. சங்க நூல்களில் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூத்துகள் குரவைக் கூத்தின் தொடக்க நிலை ஆட்டமாகும்.

பதிற்றுப்பத்து பாடலில் பாணர், கூத்தருடன் சேர்ந்து அரசரும் வெற்றிக்களிப்பில் வீரர்களுடன் இணைந்து ஆடுகின்றான் என்று குரவைக்கூத்து பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**"விழவுவீற்றிருந்த வியலுள்ள ஆங்கண்**
**கோடியர் முழவின் முன்னர் ஆடல்**
**வல்லான் அல்லன் வாழ்க அவன் கண்ணி**
**— — — — — —**
வீந்துகு போர்க்களத்து ஆடுங்கோவே"

என்ற பாடல்வரிகள் இதனை விளக்குகின்றன. வெற்றியைக் கொண்டாடும் மகிழ்வில் தோன்றிய களிப்புத்துள்ளலே நாளடைவில் குரவைக் கூத்தாக வளர்ந்தது எனலாம். முலைநாட்டு மக்கள் வேலமா் கடவுளுக்குக் குரவையாடிப் பரவினா் என்னும் செய்தி நற்றினையில் இடம்பெற்றுள்ளது. பிரிந்த தலைவனும் தலைவியும் சோ்வதற்காக, வரையுறை தெய்வத்தைத் தோழியா்கள் குரவையாடி வேண்டினாா்கள் என்னும் செய்தியைக் கலித்தொகை,

**"வரையுறை தெய்வம் உவப்ப உவந்து**
**குரவை தழீஇயாம் ஆட"**

என்ற வரிகளில் விளக்குகின்றது.

**முன்தோ்க்குரவை** : பகைவரை வென்று மகிழ்ச்சி எய்திய அரசன் அவ்வெற்றிக் களிப்பினால் தோ்த்தட்டிலே நின்று போா் வீரருடன் கை பிணைத்துத் தேரின் முன்பாக ஆடுவது.

**பின்தோ்க்குரவை** : வெற்றி கொண்டு வீரத்தை நிலை நாட்டிய மன்னா்களைப் பாராட்டி அவனது தேரின் பின் கூழுண்ட கொற்றவை கூளிச் சுற்றம் ஆடுவது.

**குன்றக்குரவை** : குறிஞ்சி நிலத்தாா் நறவை அருந்தித் தன் மனைவியருடன் குறிஞ்சிக் கடவுளை வழிபட்டு ஆடும் ஆட்டம்.

**ஆய்ச்சியா் குரவை** : முல்லை நிலத்து ஆய நங்கையா் கூடி முல்லை நிலத்துக் கடவுளை வழிபட்டு ஆடும் கூத்து.

**பரதவா் குரவை** : மணல் குன்றுகள் நிறைந்த கடற்கரையில் பரதவ மகளிா் வருணனை வழிபட்டு ஆடும் ஆட்டம்.

**அமலைக்கூத்து**

வாட் போரை வருணித்துப் போ் வெற்றியை வீரா் போற்றி ஆடும் கூத்து.

தொல்காப்பியா் கூறிய ஒள்வாள் அமலைக் கூத்தினை,

"— — களிற்றொடு
பட்டவேந்தனை அட்டவேந்தன்
வாளோா் ஆடும் அமலை" (தொல்-பொருள். 72)

அகநானூறு போ்க்களத்தில் பகை மன்னன் முன் ஆடும் கூத்தாக அமலை குறிப்பிடப்படுகின்றது.

**"வெள்ளத்தானை அதிகற் கொன்று வந்து**
**ஒள்வாள் அமலை ஆடிய ஞாப்பின்"**

என்னும் வரிகள் மேற்கூறிய கருத்தினை விளக்குகின்றது. எட்டுத்தொகை பரிபாடல் இசைப்பாடல்கள் நிறைந்து தெய்வ மனங்கமழ நிற்கிறது.

**வள்ளிக் கூத்து**

"வாடா வள்ளி" என்று தொல்காப்பியரால் சிறப்பிக்கப்பட்ட வள்ளிக் கூத்து பல சிற்றூா்களிலும் நடத்தப்பட்டு வந்ததென்பதை,

**"வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்**
**நாடு பல கழிந்த பின்றை"**

என்று பெரும்பானாற்றுப்படை கூறுகின்றது.

**வெறியாடல்**

சங்க இலக்கியங்களில் துணங்கை, குரவைக் கூத்தைவிட மிகவும் அதிகமாக வெறியாடலை குறிப்பிடுகின்றது. வெறியாட்டு குறிஞ்சி நிலத்திற்கு உரிய கூத்தாகும். வெறியாட்டு அகம், புறம் என இரு திணைகளுக்கும் பொருந்தும்.

**காதல் வெறியாட்டு** : தலைவனின் பிரிவுத்துயரால் அல்லது தலைவன் நினைவால் தலைவி உடல் மெலிவாள். துன்மகளின் உடல் மெலிவினைக் கண்டு மனம் வருந்தி தாய் வெறியாட்டிற்கு ஏற்பாடு செய்வாள்.

**காந்தள் வெறியாட்டு (புறம்) :** புறத்தினைக்குரியது காந்தள் வெறியாட்டு. குறிஞ்சி நில மக்கள், வீரம், வெற்றி இவைகளின் பொருட்டு நிகழ்த்தப்படும் வெறியாட்டு காந்தள் வெறியாட்டு எனப்படும். இதனைத் தொல்காப்பியா் 'வெறியாட்டு அயா்ந்த காந்தளும்' எனக் குறிப்பிடுகின்றாா்.

**வாளமலைக்கூத்து**

வாள் + அமலை எனப் பிரிக்கலாம். அமலை என்பது போா் என்று பொருள். போ் நிகழ்த்த உதவும் முக்கிய கருவியாக 'வாள்' கொண்டு நிகழ்த்தப் பெறும் கூத்து வாளமலைக் கூத்து எனப்பட்டது.

**கழல்நிலைக் கூத்து**

கழல் என்பது வீரத்தின் அடையாளம். இவ்வணிகலனை வீரமறவா்கள் அணிவா். பகை வீரா்களுக்குப் புறங் கொடுக்காமல் போ்ட்டுச் சாதனை புரிந்த வீரா்களுக்கு மன்னன் கழல் அணிவிக்கும் நிகழ்ச்சி 'கழல்நிலை' எனப்படும். இது வீரா் வெற்றி

விருது பெற்றதற்கு ஒப்பாகும். அந்த மகிழ்ச்சியின் காரணமாக நிகழ்த்தப்படும் கூத்து கழல் நிலைக் கூத்து எனப்படும்.

**கருங்கூத்து**

பேரில் வென்ற வீரர்கள் தம் அடையாளப்பூச்சூடி ஆடும் கூத்து கருங்கூத்து எனப்படும்.

**பிள்ளையாட்டு**

காளைப் பருவத்தான் ஒருவன் பேரில் வெற்றியுறின் அவனுக்கு நாட்டின் பகுதியைப் பறைகள் கொட்டி ஆரவாரித்து மகிழ்வர்கள். இது பிள்ளையாட்டு என்பட்டது என்பதை,

**"வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து**

**பறைதூங்க**
**நாடவற்கு அருளிய பிள்ளையாட்டு"**

**(தொல்.பொருள்.62)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**துடி நிலை**

மறவர்கள் துடி என்னும் பறையை முழக்கிக் கொற்றவையை வழிபட்டுப் பேர் வெற்றியருளுமாறு வேண்டுவது.

**"மறங்கடைக் கூட்டிய துடி நிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே"**

**(தொல்.பொருள்.62)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

**கொற்ற வள்ளை**

பேர் வெற்றியில் பூரித்து ஆடும் கூத்து. இதனை 'உரல் பாட்டு' என்பர்.

**"குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை" தொல். பொருள்.65)**

என்று தொல்காப்பியத்தில் சிறப்பிக்கப்படுகிறது.

**விளக்கு நிலை**

விளக்கினை ஏற்றி வைத்து வேலை நிறுத்தி வழிபட்டு ஆடும் கூத்து. இதனைத் தொல்காப்பியம்

**"வேலின் நோக்கிய விளக்கு நிலையும்" (தொல்.பொருள்.87)**

என்று குறிப்பிடுகிறது.

**துணங்கைக் கூத்து**

திருமுருகாற்றுப்படையில் வேலவன் சூர்களை வென்ற போது பேய் மகள் ஆடிய துணங்கைக் கூத்து கூறப்பட்டுள்ளது. வெற்றியைப் பேய்க்குழுவினர் ஆடியதாக,

**"வென்றடு விறற்களம் பாடித் தோள் பெயரா**
**நிணத்தின் வாயன் துணங்கை தூங்க"**

என்னும் வரிகள் விளக்குகின்றன. இக்கூத்தின் சிறப்பை, 'கொன்றுதோளோச்சிய வென்நாடு துணங்கை' என்னும் வரி உணர்த்துகிறது. துணங்கையில் ஈடுபாடு கொண்ட கொற்றவையைத் 'துணங்கையர் செல்வி' என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது. மன்னர்களும் துணங்கைக்கு முதலிடமளிததனர் என்பதை 'தலைக்கை தருதல்' என்பதால் அறியலாம்.

**சிலப்பதிகாரத்தில் கூத்துக்கள்.**

சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை. குன்றக் குரவை, ஆகிய மூன்று காதைகளும் கூத்தால் பெயர் பெற்றவையாகும்.

**"இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து**
**பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்ந்து"**
**(சிலம்பு. அரங்.பா.12-13)**

என்னும் பாடல் அடிகளால் இருவகைக் கூத்தினையும், பலவகைக் கூத்தினையும் அறிய முடிகின்றது. இருவகைக் கூத்து என்பது அகக் கூத்து என்பது அக உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியது. இது மன்னர்கள் முன்பே நிகழக் கூடியது. புறக்கூத்து என்பது பொதுமக்கள் மத்தியில் நிகழ்த்தக் கூடியது. சிலப்பதிகாரத்தில் பல்வேறுவகையான கூத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்பதை அடியார்க்கு நல்லார் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**வசைக் கூத்து**

வசைக் கூத்து என்பது அறுவகை நிலை, ஐவகைப்பாதம், அங்கக்கீரியை பதினாறு, வருத்தனை நான்கு, நிருத்தக்கை முப்பது ஆகிய பகுதிகளைக் கொணடது. இதனைப் பின்வரும் பாடல் புலப்படுத்தும்.

**"அறுவகை நிலையும் மைவகைப் பாதமும்**
**ஈரெண் வகைய வங்கக் கிரியையும்**
**வருத்தனை நான்கு நிருத்தக்கை முப்பதும்**
**அத்தகு தொழில்வாகுமென்ப"**

**புகழ்க் கூத்து**

பொதுமக்களிடம் அரசனின் புகழினைப் பரப்புவதற்காக நடித்துக் காட்டுவது புகழ்க் கூத்தாகும்.

**வேத்தியல் கூத்து**

மன்னன் முன்பாக ஆடக்கூடிய கூத்து வேத்தியலாகும். இது அகக் கூத்து வகைப்படும்.

**பொதுவியல் கூத்து**

மக்கள் முன்பாக பொது இடங்களில் நிகழ்த்தக் கூடிய கூத்து பொதுவியல் எனப்படும். இது புறக்கூத்து வகையாகும்.

**வரிக்கூத்து**

வரியாவது அவரவர் பிறந்த நிலத்தின் தன்மைக்கும். பிறப்பின் தன்மைக்கும். தொழிலின் தன்மைக்கும் ஏற்ப நடித்தல்.

**"வரியெனப்படுவது வகுக்குங் காலைப்**
**பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும்**
**அறியக் கூறியாற்றுழி வழக்கல்"**

என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றார். வரிக்கூத்து, கண்கூட்டு, பாண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தோச்சிவரி, காட்சிவரி, எடுத்தக்கோள்வரி என்று எட்டு வகைப்படும்.

**வரிசாந்திக்கூத்து**

வரிசாந்திக்கூத்தினை வாள் கூத்து என்றும் அழைப்பர். தேர்ந்தெடுத்த பொன்னாலான அரிச்சிலம்பும், சூடகமும் மேகலையும் ஒலியெழுப்ப, மாயங்கள் செய்யும் வாளாற்றலுடைய அவுணர்களை அழிக்க, நங்கை மரக்கால்மேல் நின்று ஆடக்கூடிய கூத்து வாள் எனப்படும். இதனை,

**"ஆய்பொன் அரிச்சிலம்பும் சூடகமும் மேகலையும்**
**ஆர்ப்ப ஆர்ப்ப**
**மாயஞ்செய்வாள் அவுணர்வீழ நங்கை மரக்கால்மேல்**
**வாளமலை ஆடும் போலும்"**
**(சிலம்பு. வேட்டுவ வரி. பா. 11)**

என்கிறது சிலப்பதிகாரம்.

**சாந்திக்கூத்து**

சாந்தி என்றால் அமைதி என்று பொருள். அருள், அமைதி, சமாதானம், பரிகாரம், ஆகிய பொருள்களில் நிகழக்கூடியது சாந்திக் கூத்து. இக்கூத்தினைப் 'பரவிய சாந்தி' என்றும் அழைப்பர். பரவுதல் என்றால் போற்றுதல், வழிபடுதல் என்று பொருள் போற்றுதல் என்பது மன்னனுக்கும் தெய்வத்திற்கும் உரியது.

மதுரையில் கோவலன் கொலையுண்ட பிறகு கண்ணகிமதுரையைத் தீக்கிரையாக்கினாள். மதுரையில் மழை அருகியது. வெப்பம் பெருகியது. நாட்டில் வெப்பமும் குருவும் தோன்றியது. கண்ணகியின் நியாயமும் கோபமும் மக்களுக்குத் தெளிவாகிறது. அதனால் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் என்பவன் பொற்கொல்லர் ஆயிரம் பேரைக் களப்பலி கொடுத்து. கண்ணகியைச் சாந்தி செய்தான் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

சாந்தி என்பது சாந்தி எடுத்தல், சாந்திவேட்டல், சாந்தி ஆடுதல் எனமூவகைப்படும். கண்ணகியைச் சாந்தி செய்ய விழா எடுத்தல் இவ்விழாவில் ஆயிரம் பொற்கொல்லர்களை வேள்வித் தீயின் முன்பலி, கொடுத்துச் சாந்தி வேட்டல் பிறகு கண்ணகியின் மனம் சாந்தி அடைந்து அருள் தர வேண்டி சாந்திக் கூத்து ஆடினர். இச்சாந்திக் கூத்து உயர்குலத்தோர் வாழிடங்களிலும் கோயில்களிலும் அரண்மனைகளிலும் ஆடக்கூடியது. இது சொக்கம், மெய், அவிநயம், நாடகம் என நான்கு வகைப்படும்.

**விநோதக்கூத்து**

சாதாரண மக்களின் வாழ்வியல் நிகழும் கூத்து வகை விநோதக்கூத்து எனப்படும். இவை குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என ஆறுவகைப்படும்.வடக்கு திசையின் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்களில் சிலர் கழைக்கூத்தாடிகளாக ஆடிப்பாடி பிழைத்து வந்தனர். கழைக்கூத்து என்பது இருபக்கமும் மூங்கில் குச்சிகளை நடுவர். மூங்கில்களின் இரண்டு மேற்புறங்களையும் இணைத்து கயிறு கட்டப்படும். கீழே பெண்கள் பறை ஒலியினை எழுப்புவர். மூங்கிலின் மேலே உள்ள கயிற்றில் ஆரியன் தன் கவனத்தை முழுவதும் ஒருமுகப்படுத்திக் கயிற்றின் ஒருமுனையிலிருந்து மறுமுனைவரைக் கீழே விழாமல் கைகளை விரித்து உடலைச் சமனிலைப்படுத்தி நடந்து சென்று ஆடுவது கழைக்கூத்து எனப்படும். இதனை ஆரியர்கள் ஆடியதால் ஆரியக்கூத்து என்பர்.

"ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டிலும்
ஆதிக் கதையை யவற்றிற் கொப்பச்
சேதித் திடுவது சேதிமென்றாகும்"
(சிலம்பு. அரங்கேற்றுகாதை.பா.12)

ஆரியக் கூத்து பெரும்பாலும், குறிஞ்சி நிலத்தில் ஆடக்கூடிய கூத்தாகும். கழைக் கூத்தாடுவது

என்பது எளிமையானதல்ல. மிகவும் கடினமான செயல். கயிற்றின் மேல் நடந்தும் துள்ளியும் கைகளால் அசைத்தும் இசைக்கு ஏற்றார்போல ஆடும் போது நிலை தளராமல் இருத்தல் அவசியம். ஆரியக் கூத்திலே இருக்க வேண்டிய மிகுந்த திறமையையும், அருமையையும் நோக்கியே நம்மிடையே 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலே கண்' என்ற பழமொழி வழக்கத்தில் இருந்து வருகிறது.

**தமிழ்க்கூத்து**

தமிழின் மரபினைப் பின்பற்றி நடிக்கக்கூடியக் கூத்தைத் தமிழ்க்கூத்து என்பர்.

**இயல்புக் கூத்து**

மக்களின் நடைமுறை வாழ்க்கையைப் புனைவின்றி எதார்த்தமாக நடித்துக் காட்டுவது இயல்புக் கூத்து எனப்படும்.

**தேசிக்கூத்து**

வடமொழியின் மரபினைப் பின்பற்றி நடிக்கக் கூடியக் கூத்தினைத் தேசிக்கூத்து என்பர்.

**வென்றிக்கூத்து**

குமரிப்பெண்கள் கொன்றையும் துவளமும் ஒரு சேர தொடுத்த மாலையை தோளில் அணிந்துக் கொண்டு அசுரர்களை மயக்குவதற்காக ஆடக்கூடியக் கூத்து வென்றிக் கூத்து ஆகும்.

இதனை,

**"ஆங்குத்**
**துன்று மலர்ப்பிணையல் தோளமேல் இட்டு-ஆங்கு**
**அசுரர்வாட, அமரர்க்கு ஆடிய குமரிக் கோலத்துத்**
**கூத்தள் படுமே"**
**(சிலம்பு.வேட்டுவவரி, பா.10)**

எனக் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

பழங்காலத்தில் இவ்வாறான கூத்தும் கலையும் நாடகமும் மக்களோடு ஒன்றிணைந்துள்ள நிலையை அறியமுடிகின்றது. இத்தகைய கூத்துகலையும் கூத்து முறையும் மறைந்து வருகின்றன என்பது அனைவரும் அறிந்ததே. இத்தகைய கலைகளின் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பது நம் பண்பாட்டைக் காப்பதாக அமையும்.

**பயன்பட்ட நூல்கள்**


1. சிலப்பதிகாரம் மூலமும் உரையும்
2. தொல்காப்பியம் பொருளதிகாரம்
3. எட்டுத்தொகை நூல்கள் (உரையுடன்)
4. பெரும்பாணாற்றுப்படை